# Font Name - Baamini

முனைவர் சு.சு. ீபா

இணைப் பேராசிரியர்

தமிழ்த்துறை

நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி

மார்த்தாண்டம் - 629 165

குமரிமாவட்டம்

**Sub Code- ESTA31**

# மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

# திருநெல்வேலி

# MANONMANIAM SUNDARANAR UNIVERSITY

# THIRUNELVELI

## தொலைநிலை தொடர் கல்வி இயக்கம்

# DIRECTORATE OF DISTANCE AND

# CONTINUING EDUCATION

**B.A.** தமிழ் இரண்டாமாண்டு

நான்காம் பருவம்

**B.A. Tamil SEC - 5**

## பாடம் - போட்டித்தேர்வுகளும் தமிழும்


**முனைவர் சு.சு. ீபா**

இணைப் பேராசிரியர்

தமிழ்த்துறை

நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி

மார்த்தாண்டம் - 629 165

குமரிமாவட்டம்

| Learning Objectives | |
|---|---|
| The Main Objectives of this Course are to : | |
| • **தமிழ் இலக்கிய வரலாற்றைப் பற்றிய ஒரு பொது அறிவுப் புலமைக்காக இப்பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.**<br>• **தமிழ் இலக்கிய வரலாற்றின் பொதுப்போக்குகளை அறிந்துகொள்ள வாய்ப்பளித்தல்.**<br>• **தமிழ் இலக்கிய வரலாற்றில் பல்வேறு இலக்கிய வகைகள், கருத்தியல், படைப்பிலக்கியக் கோட்பாடுகளைக் கற்றறிந்துக் கொள்ளப் பயிற்சி தருதல்.**<br>• **தமிழ் இலக்கிய வரலாற்றின் பாடுபொருள், உள்ளடக்கம், இலக்கியத்திறன் தொடர்பான மதிப்பீட்டுக்கட்டுரைகளை எழுதப் பயிற்சி தருதல்.** | |

**B.A. தமிழ் இரண்டாமாண்டு**

**நான்காம் பருவம்**

## பொருளடக்கம்


| எண் | பாடங்கள் | பக்க எண் |
|---|---|---|
| அலகு 1 | **காலந்தோறும் இலக்கிய இலக்கணங்களும் திறனாய்வுகளும்**<br>**பழந்தமிழ் இலக்கியங்கள் (**சங்க இலக்கியங்கள், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள், சித்தர் பாடல்கள், சிற்றிலக்கியங்கள், தனிப்பாடல்கள் **இலக்கணங்கள்:** வகைகள், கோட்பாடுகள், நூல்கள், உரைகள், நிகண்டுகள், ஒப்பிலக்கியம், ஒப்பிலக்கணம் **இலக்கியத் திறனாய்வு:** இலக்கிய வகைமைக் கோட்பாடு, உருவம், உள்ளடக்கம், உத்தி, திறனாய்வு அணுகுமுறைகள், இலக்கியக் கொள்கைகள் | 6-45 |
| அலகு 2 | **மொழி, கலை, பண்பாட்டு வரலாறுகளும் தனித்துவங்களும்**<br>**ஐ மொழி வரலாறு:** வரலாறு மற்றும் மொழியியல் நோக்கு, சொற்களஞ்சியங்கள், பொருட்களஞ்சி யங்கள், அடைவுகள், அகராதியியல், நோக்கு நூல்கள், மொழிக்குடும்பம், திராவிட மொழிகள், பிறமொழிக் கலப்பு, கிளை மொழிகள், தமிழின் தனித்தன்மை, பிறமொழிகளில் தமிழின் செல்வாக்கு **ஐஐ தமிழக வரலாறு:** சங்க காலம் தொடங்கி சமகாலம், வரையிலான வரலாற்றுப் பொதுப் பார்வை **ஐஐஐ தமிழகப் பண்பாடு:** தொல்லியல், நாணயவியல், கல்வெட்டியல், சுவடியியல், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், உணவு, உடை, திருவிழா, விளையாட்டு, வழிபாட்டு நெறி, சிந்தனை நெறி, அறிவியல் நெறி, தமிழர் மருத்துவம் **ஐஏ நாட்டுப்புறவியல்:** பாடல்கள், கதைகள், கதைப்பாடல்கள், சடங்குகள், நாட்டார் நடனம், நாடகங்கள், வழிபாடுகள், திருவிழாக்கள், பெருங்கோயில் **ஏகலைகள்:** கட்டடம், சிற்பம், ஓவியம், இசை, ஆடல் **ஏஐ நாடகங்கள்:** கூத்து வகைகள், நாடக இயக்கங்கள், **ஏஐஐ இயக்கங்கள்:** தேசியம், திராவிடம், பொதுவுடமை, தனித்தமிழ், சுயமரியாதை, **ஏஐஐஐ** இசங்கள் (தத்துவங்களும், கொள்கைகளும்): ரியலிசம், ஸ்டக்சுரலிசம், எக்ஸிஸ்டென்சியலிசம், யோஸ்ட் மாடர்னிசம், கியூபிசம், மாக்சியம், சோசலிசம், பெண்ணியம், தலித்தியம் | 46-96 |
| அலகு 3 | **இக்கால இலக்கியங்களும் ஊடகங்களும்**<br>**ஐ** இக்கால இலக்கியங்கள், கவிதை, புதினம், சிறுகதை, நாடகம், கட்டுரை **ஐஐ அயலகத் தமிழ்** | 97-146 |

| | | |
|---|---|---|
| | **இலக்கியங்கள்:** இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், தன் வரலாறு, வாழ்க்கை வரலாறு, கடித இலக்கியம், சுற்றுலா மற்றும் பயண இலக்கியங்கள், நவீனத்துவம் **ஐஐஐ பிற துறைகள்:**மொழிபெயர்ப்பு, பேச்சுத் தமிழ், மேடைத் தமிழ், அயல் நாட்டாரின் தமிழ், அறிவியல், ஊடகங்கள், இதழியல், திரையியல், வானொலி, தொலைகாட்சி, கணினி, செல்பேசி, இணையம், பிற மின்னணுக் கருவிகள், ஆளுமைகள், வல்லுநர்கள், விருதுகள், விருதாளர்கள், படைப்புகள், விருது வழங்கும் அமைப்புகள் | |
| **அலகு 4** | **தேர்வுத் திட்டமும் பாடத்திட்டமும்**<br>தற்கால நிகழ்வுகள், சமுதாயப் பிரச்சனைகள், சுற்றுச்சூழல் தொடர்பான தலைப்புகள், இந்தியப் பொருளாதாரம் தொடர்பானத் தலைப்புகள், அறிவியலும் தொழில் நுட்பமும், கலையும் பண்பாடும், பகுத்தறிவு இயக்கங்கள், இக்காலத் தமிழ்மொழி, தமிழ் நாட்டின் சமூகப் பொருளாதார முன்னேற்றம் மற்றும் தமிழக அரசின் நலத்திட்டங்கள், சமூக நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதலில் சமூக சீர்திருத்த இயக்கங்களின் பங்கு, தமிழ் நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சியில் சமூக நீதி மற்றும் சமூக ஒற்றுமையின் பங்கு, சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக, பொருள் வேறுபாடு அறிதல், பிரித்தெழுதுதல், எதிர்ச்சொல் , எதிர்மறை வாக்கியம், பிழை நீக்கி எழுதுதல், கொடுக்கப்படும் தலைப்புகளில் கட்டுரை எழுதுதல் (எ.கா.) திருக்குறள், மதச்சார்பற்ற தனித்தன்மை யுள்ள இலக்கியம், ஆ) அன்றாட வாழ்வியலோடு தொடர்புத் தன்மை, இ) மானுடத்தின் மீதான திருக்குறளின் தாக்கம், ஈ) திருக்குறளும் மாறாத விழுமியங்களும், உ) சமூக அரசியல் பொருளாதார நிகழ்வுகளில் திருக்குறளின் பொருத்தப்பாடு, ஊ) திருக்குறளில் தனித்துவக் கோட்பாடுகள் | 147-194 |
| **அலகு 5** | **வினா வகைகளும் - மாதிரி வினாத் தாள் பயிற்சியும்**<br>போட்டித் தேர்வுகளுக்கான தமிழ் வினா வங்கி: பிரித்து எழுதுதல், சேர்த்து எழுதுதல், எதிர்ச்சொல்லை எடுத்தெழுதுதல், பொருந்தாச் சொல்லைக் கண்டறிதல், பிழைதிருத்தம், சந்திப்பிழைகள், மரபுப் பிழைகள், வழுவுச் சொற்களை நீக்குதல், பிறமொழிச் சொற்களை நீக்குதல், ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லைக் கண்டறிதல், ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான பொருளையறிதல், ஒரு பொருள் தரும் பல சொற்கள், வேர்ச்சொல்லைத் தேர்வு செய்தல், வேர்ச்சொல்லைக் கொடுத்து, வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம், வினையாலணையும் பெயர், தொழிற்பெயர் - உருவாக்கல், அகர வரிசைப்படி சொற்களைச் சீர்செய்தல், சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடராக்குதல், இருவினைகளின் பொருள் வேறுபாடு அறிதல், விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்தல், எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல், உவமையால் விளக்கப் பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெழுதுதல், பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைக் கண்டறிதல், ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுதல், நிறுத்தற் குறிகளை அறிதல், பேச்சு வழக்கு – எழுத்து வழக்கு, சொற்களை இணைத்துப் புதிய சொல் உருவாக்குதல், பொருத்தமான காலம் அமைத்தல், சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடுத்தல், சரியான இணைப்பு சொல் தேர்ந்தெடுத்தல், அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்த்தல், இருபொருள் தருதல், குறில் - நெடில் மாற்றம், பொருள் வேறுபாடு, கூற்று, காரணம் - சரியா? தவறா?, கலைச் சொற்களை அறிதல், பொருத்தமான பொருளைத் தேர்வு செய்தல், சொற்களின் கூட்டுப் பெயர்கள், சரியான தொடரைத் தேர்ந்தெடுத்தல், பிழை திருத்துதல், சொல் பொருள் - பொருத்துதல், ஒருமை – பன்மை பிழை, பத்தியிலிருந்து வினாவிற்கான சரியான விடையைத் தேர்ந்தெடுத்தல், விரித்துரைக்கும் வகை வினாவிற்கான தலைப்புகள், மொழிபெயர்த்தல், சுருக்கி வரைதல், பொருள் உணர்திறன், சுருக்கக் குறிப்பிலிருந்து விரிவாக்கம் செய்தல், கட்டுரை வரைதல், கடிதம் வரைதல் (அலுவல் சார்ந்தது), தமிழ் மொழி அறிவு | 195-254 |
| | **மாதிரி வினாத்தாள்** | 255-256 |

## பாடநூல் மற்றும் மேற்பார்வை நூற்கள்

**வுநஒவ டீழழமள**

- **புதிய இலக்கிய வரலாறு** – சிற்பி பாலசுப்ரமணியம், நீல பத்மநாபன், சாகித்ய அகாதமி.
- **தமிழ் இலக்கியத் தகவல் களஞ்சியம்** - தேவிரா, ஸ்ரீ நந்தினி பதிப்பகம், சென்னை.
- **நாட்டுப்புற இயல் ஆய்வு** – சு. சக்திவேல், மணிவாசகர் பதிப்பகம் சென்னை

**சுநகநசநஉெந டீழழமள பார்வை நூல்**

- **தமிழ் இலக்கணம் -** தேவிரா, ஸ்ரீ நந்தினி பதிப்பகம், சென்னை.
- **தமிழ் மொழியும் இலக்கியமும்** - தேவிரா, ஸ்ரீ நந்தினி பதிப்பகம், சென்னை.
- **தமிழ் இலக்கியத் திறனாய்வும் பண்பாடும்** - தேவிரா, ஸ்ரீ நந்தினி பதிப்பகம், சென்னை.
- **வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு** – பூவேந்தன் பதிப்பகம், சென்னை.
- **இலக்கியத் திறனாய்வு - இசங்கள், கொள்கைகள்** - அரங்க சுப்பையா பாவை பப்ளிகே'ன்ஸ், சென்னை
- **மொழி சார்ந்த இயக்கங்கள்** - பொற்கோ, பூம்பொழில் வெளியீடு, சென்னை.

# பொருளடக்கம்

## அலகு –1 (ருஜேவு – ஐ)

### காலந்தோறும் இலக்கிய இலக்கணங்களும் திறனாய்வுகளும்


**1. பழந்தமிழ் இலக்கியங்கள்**

1. சங்க இலக்கியங்கள்
2. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்
3. காப்பியங்கள்
4. பக்தி இலக்கியங்கள்
5. சித்தர் பாடல்கள்
6. சிற்றிலக்கியங்கள்
7. தனிப்பாடல்கள்

**2. இலக்கணங்கள்**

1. வகைகள்

2. கோட்பாடுகள்

3. நூல்கள்

4. உரைகள்

5. நிகண்டுகள்

6. ஒப்பிலக்கியம்

7. ஒப்பிலக்கணம்

**3. இலக்கியத் திறனாய்வு**

1. இலக்கிய வகைமைக் கோட்பாடு
2. உருவம்
3. உள்ளடக்கம்
4. உத்தி
5. திறனாய்வு அணுகுமுறைகள்
6. இலக்கியக் கொள்கைகள்

# அலகு – 1

## காலந்தோறும் இலக்கிய இலக்கணங்களும் திறனாய்வுகளும்

## ஐ பழந்தமிழ் இலக்கியங்கள்

### 1. சங்க இலக்கியங்கள்

**சங்கம் என்பது என்ன?**

சங்கமம் என்றால் ‘ஒன்றாதல்’ என்று பொருள்படும். சேர, சோழ, பாண்டியர் எனும் மூவேந்தர்களும் தமிழ்ச் சங்கங்களைத் தோற்றுவித்து தமிழ் ஆய்வுகள் நடத்தியதாகச் சங்க இலக்கியப் பாடல்களும் இறையனார் களவியல் உரை போன்ற நூல்களும் தெரிவிக்கின்றன. சங்கத்தில் அரசர்களும் புலவர்களும் சரிசமமாக இருந்து தமிழ் ஆய்வுகள் நடத்தியதை அறியமுடிகிறது.

**மூன்று சங்கங்கள்:** முதல், இடை, கடை என்று மூன்று சங்கங்கள் இருந்தன.

**முதற்சங்கம்**

கடல் கொண்ட தென் மதுரையில் முதற் சங்கம் இருந்தது. காய்சின வழுதி எனும் பாண்டிய மன்னன் முதற் சங்கத்தை நிறுவிய மன்னனாகக் கருதப்படுகிறான்.

அம்மன்னன் தொடங்கி, கடுங்கோன் எனும் பாண்டிய மன்னன் வரை 89 அரசர்கள் 4440 ஆண்டுகள் முதற் சங்கத்தை நடத்தியதாக இறையனார் களவியல் உரை விளக்கியுள்ளது.

**முதற்சங்கப் புலவர்கள்:** இறையனார், அகத்தியர், முருகப்பெருமான், முரஞ்சியூர் முடி நாகராயர் போன்ற புலவர்கள் தமிழ் ஆய்ந்தனர். பரிபாடல், முதுநாரை, முதுகுருகு போன்ற நூல்கள் முதற்சங்க காலத்தில் பிறந்தன.

**இடைச்சங்கம்**

தென் மதுரை கடல் கோளால் அழிந்து போன் பின், பாண்டியர்கள், கபாடபுரம் எனும் ஊரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தனர். அதுவே இடைச் சங்கம் இருந்த இடமாயிற்று. வெண்தேர்ச் செழியன் எனும் பாண்டிய மன்னனால் தொடங்கப்பட்ட இடைச் சங்கத்தில் முடத்திருமாறன் உள்ளிட்ட 59 மன்னர்கள் பங்கேற்றனர். 3700 ஆண்டுகள் இடைச் சங்கம் நடைபெற்றது.

**இடைச்சங்கப் புலவர்களும் நூல்களும்:** தொல்காப்பியரும், இருந்தையூர் கருங்கோழியார் வெள்;ர்க் காப்பியனார் போன்ற 3700 புலவர்கள் இருந்தனர். குருகு, கலி, வெண்டாளி போன்ற நூல்கள் இக்காலத்தில் பிறந்தன.

**கடைச்சங்கம்**

கபாடபுரம் கடல் கோளால் அழிந்த பின்னர் இன்றுள்ள மதுரைக்குத் தங்கள் தலைநகரை பாண்டிய மன்னர் முடத்திருமாறன் மாற்றினார். அவர் தொடங்கி மன்னர் உக்கிரப் பெருவழுதியார் வரை 49 அரசர்கள் இச் சங்கத்தை நடத்தினர். இன்றுள்ள மதுரையே கடைச் சங்கம் நடைபெற்ற மாநகரமாகத் திகழ்கிறது. இச்சங்கம் 1850 ஆண்டுகள் நடைபெற்றது.

**கடைச் சங்கப் புலவர்களும் அக்காலத்தில் பிறந்த நூல்களும்**

நல்லந்துவனார், மருதனிள நாகனார், நக்கீரர், சிறுமேதாவியார், இறந்திருமாறன், சேந்தம்பூதனார், பெருங்குன்றூர் கிழார் போன்ற 449 புலவர்கள் செய்யுள்கள் இயற்றினர். அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, கலித்தொகை போன்ற இலக்கியங்கள் பிறந்தன.

**சங்ககாலம்**

கி.மு. 500 முதல் கி.பி.200 வரை உள்ள காலத்தையே கங்க காலமாகத் தமிழறிஞர்கள் கருதுகின்றனர்

**எட்டுத்தொகை**

எட்டுத்தொகையை எண்பெருந்தொகை என்று அழைப்பர். மொத்த பாடல்கள்: 2348

அகம்: 1856, புறம்: 492

**“நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு**

**ஒத்த பதிற்றுப் பத்து ஓங்கு பரிபாடல்**
**கற்றறிந்தார் ஏத்தும் கலியோடகம் புறமென்**
**றித்திறத்த எட்டுத் தொகை"**

எனும் பாடல் எட்டுத்தொகையில் உள்ள பாடல்களைக் குறிப்பிடுகிறது.

**எட்டுத்தொகை நூல்கள்:** நற்றிணை, குறுந்தொகை, ஐங்குநுறூறு, கலித்தொகை, அகநானூறு எனும் ஐந்து நூல்களும் அகநூல்கள்.

**புறநானூறும் பதிற்றுப்பத்தும் புற நூல்கள்**

அகமும் புறமும் கொண்டவை பரிபாடல். இவை முருகப்பெருமான், திருமால் பற்றிய 14 பாடல்கள் என்று கூறுவர்.

வைகை பற்றிய எட்டுப் பாடல்கள் அகப்பாடல்கள். எனவே பரிபாடல் இலக்கியத்தை அகப்புற இலக்கியம் என்று அழைப்பர். அறிஞர்களில் சிலர் இவ்விலக்கியத்தைப் புற இலக்கியமாகவே கருதுவதும் உண்டு.

## அகத்தொகை இலக்கியங்கள்

## 1. நற்றிணை

**அடிவரையறை**

9 அடி முதல் 12 அடிவரை நற்றிணைப் பாடல்கள் அமைகின்றன.

**நற்றிணையைத் தொகுப்பித்தவர்:** பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி.

**பாடல்கள் எண்ணிக்கை**

நற்றிணை நானூறு என்று இந்நூல் அழைக்கப்பட்டாலும் 399 பாடல்களே கிடைத்துள்ளன. 234ஆவது பாடல் கிடைக்கவில்லை.

| | |
|---|---|
| குறிஞ்சித்திணைப் பாடல்கள் | : 130 |
| முல்லைத்திணைப் பாடல்கள் | : 32 |
| மருதத்திணைப் பாடல்கள் | : 32 |
| நெய்தல்திணைப் பாடல்கள் | : 102 |
| பாலைத் திணைப் பாடல்கள் | : 104 |

**பாடிய புலவர்கள்: 192** புலவர்கள் நற்றிணைப் பாடல்களைப் பாடினர்.

**அதிகமாகப் பாடல்கள் இயற்றிய புலவர்கள்:**

கபிலரும் உலோச்சனாரும் ஒவ்வொருவரும் 20 பாடல்கள் பாடி நற்றிணையில் அதிகமானப் பாடல்களைப் பாடியவர்கள் எனும் சிறப்பினைப் பெற்றுள்ளனர்.

**பாடல் தொடர்களையே பெயர்களாகச் சூட்டப் பெற்ற புலவர்கள்:** விழிக்கண் பேதையார், தும்பிசேர்கீரனார், தேய்புரிப் பழங் கயிற்றினார் என்று பாடல்களின் தொடர்களையே பெயர்களாகப் பெற்ற புலவர்களும் உள்ளனர்.

**நற்றிணையின் சிறப்புகள்:**

தமிழ் பண்பாட்டின் நிகழ்காலத் தொடர்ச்சியாக நற்றிணை திகழ்கிறது. பின்னாளில் தனி இலக்கிய வகையாக மாறிய தூது எனும் இலக்கிய வகையின் தொடக்கமாகக் குருவி, கிளி, நாரை ஆகியவற்றைத் தூதுவிடும் செய்தியை நற்றிணை அன்றே பதிவு செய்தது. எட்டுத் தொகை நூல்களில் பழைய உரை இல்லாத ஒரே நூல் நற்றிணைதான்.

## 2. குறுந்தொகை

எட்டுத் தொகைப் பாடல்களில் நல்ல குறுந்தொகை எனும் அடைமொழியால் குறிக்கப்படும் இலக்கியமே குறுந்தொகை. குறுந்தொகை அதாவது குறைந்த அடிகள் கொண்ட பாடல்களின் தொகுப்பாக அமைவதால் குறுந்தொகை என்று அழைக்கப்படுகிறது. 205 புலவர்கள் பாடிய 400 ு 1 பாடல்களின் தொகப்பாகக் குறுந்தொகை நானூறு திகழ்கிறது.

**தாங்கள் பாடிய பாடல்களையே பெயர்களாகப் பெற்ற புலவர்கள்**

அணிலாடு முன்றிலார், செம்புலப் பெயல் நீரார், குப்பைக் கோழியார், காக்கைப் பாடினியார், விட்ட குதிரையார், மீனெறி தூண்டிலார், ஒரேருழுவனார், காலெறி கடிகையார், கல்பொரு சிறு நுரையார் ஆகியோர் தாங்கள் பாடிய பாடல்களால் அழைக்கப்படுகிறார்கள்

| | |
|---|---|
| குறிஞ்சித் திணைப் பாடல்கள் | : 148 |
| முல்லைத் திணைப் பாடல்கள் | : 46 |
| மருதத் திணைப் பாடல்கள் | : 48 |
| நெய்தல் திணைப் பாடல்கள் | : 66 |
| பாலைத் திணைப் பாடல்கள் | : 94 |

**குறுந்தொகையின் சிறப்பு**

அளவில் சிறியதாக இருந்தாலும் குறுந்தொகை காட்டும் தமிழர் வாழ்வியல் நுட்பமானது.

**"யாயும் ஞாயும் யாரா கியரோ**
**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்**
**யானும் நீயும் எவ்வழி அறிதும்**
**செம்புலப் பெயல் நீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே"**

செம்மண்ணும் நீரும் கலந்து ஒன்றிக் காணப்படுவது போன்று காதலர் உள்ளங்கள் ஒன்றிப் பிணைந்துள்ளன.

**தொகுத்தவர்**: புலத்துறை முற்றிய கூடலூர்க் கிழார்

**தொகுப்பித்தவர்**: யானைக் கண் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை

**பெயர்க் காரணம்:** குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் ஐந்து நில ஒழுக்கங்களுக்கும் திணை ஒன்றிற்கு நூறு பாடல்கள் என்று பாடியதால் ஐங்குறுநூறு என்று பெயர் பெற்றது.

**பாடிய புலவர்கள்:** ஒவ்வொரு திணை சார்ந்த 100 பாடல்களையும் ஒவ்வொரு புலவர் பாடியுள்ளார்.

**“மருதமோ ரம்போகி நெய்தலம் மூவன்**
**கருதும் குறிஞ்சிக் கபிலர் - கருதிய**
**பாலையோ தலாந்தை பனி முல்லைப் பேயனே**
**நூலையோ தைங் குநுறூறு”**

1. மருதத் திணைப் பாடல்கள் (100) – ஓரம்போகியார்
2. நெய்தல் திணைப் பாடல்கள் (100) – அம்மூவனார்
3. குறிசித் திணைப் பாடல்கள் (100) – கபிலர்
4. பாலைத் திணைப் பாடல்கள் (100) – ஓதலாந்தையார்
5. முல்லைத் திணைப் பாடல்கள் (100) – பேயனார்

## 3. கலித்தொகை:

பாவகையால் பெயர் பெற்ற இலக்கியம் கலித்தொகை.

**பாடல் அமைப்பு**: கடவுள் வாழ்த்தோடு 150 கலிப்பாக்களைக் கொண்ட இலக்கியம் கலித்தொகை.

**பாடிய புலவர்கள்**: திணைக்கு ஒருவராக ஐந்து திணைகளுக்கு ஐந்து புலவர்கள் கலித்தொகைப் பாடல்களைப் பாடியுள்ளனர்.

1. பாலை பாடிய பெருங்கடுங்கோ – பாலைத் திணைப் பாடல்கள் (35 பாடல்கள்)
1. கபிலர் - குறிஞ்சித் திணைப் பாடல்கள் (29 பாடல்கள்)
2. மருதனிள நாகனார் - மருதத் திணைப் பாடல்கள் (35 பாடல்கள்)
3. சோழன் நல்லுருத்திரன் - முல்லைப் திணைப் பாடல்கள் (17 பாடல்கள்)
4. நல்லந்துவனார் - நெய்தல் திணைப் பாடல்கள் (33 பாடல்கள்)

**அடி வரையறை**

11 முதல் 80 அடிகளை உடைய பாக்களால் ஆனது கலித்தொகை.

**முதலில் பதிப்பித்தவர்**: சி.வை. தாமோதரம் பிள்ளை (1887) (நச்சினார்க்கினியர் உரையோடு)

இ.வை. அனந்தராமையர் 1925-ம் ஆண்டு கலித்தொகையைப் பதிப்பித்தார்.

**கலித்தொகையின் சிறப்பு**

ஓசை ஒழுங்கு மிக்கன கலித்தொகைப் பாடல்கள்.

தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் ஆகிய சிறப்பான அமைப்புகளால் ஆனது கலித்தொகைப் பாடல்கள்

காமன் வழிபாடு செய்த மக்களைப் பற்றிய குறிப்புகள் கலித்தொகையில் உண்டு.

திருமுருகனின் படை வீடுகள் குறித்தும், மகாபாரதச் செய்திகள் குறித்தும் கலித்தொகை விளக்குகிறது.

**சிறப்புப் பெயர்கள்**

கற்றறிந்தார் ஏத்தும் கலி
கல்வி வலவர் கண்ட கலி

## 4. அகநானூறு

அகத்திணை சார்ந்த நானூறு பாடல்களைக் கொண்ட நூல் எனவே இந்நூல் அகநானூறு என அழைக்கப்படுகிறது.

**சிறப்புப் பெயர்**: 13 அடி சிற்றெல்லையும் 31 அடி பேரெல்லையும், நீண்ட பாடல்களைக் கொண்டிருப்பதால் இந்நூல் நெடுந்தொகை என்று அழைக்கப்படுகிறது.

**நூல் அமைப்பு**

கடவுள் வாழ்த்தைத் தவிர்த்து 400 பாடல்களை உடைய நூலான அகநானூறில்,

1. **களிற்றியானை நிரை** (1-120)

இப்பகுதியில் உள்ள பாடல்கள் யாவும் யானைகளின் பெருமித அணி வகுப்பைப் போன்று அமைந்து பிரமிப்பைத் தருவதால் இப்பகுதியில் அமையும் பாடல்களைக் களிற்றியானை நிரை என அழைப்பர்.

2. **மணியிடை பவளம் (121-300)**

இப்பகுதியில் உள்ள பாடல்கள் நீல நிற மணிகளைப் போலவும் சிவப்பு நிறப் பவளம் போலவும் அதாவது மணியும் பவளமும் கோர்த்த ஆரம் போன்று அழகுடையதாய் அமைகின்றன.

3. **நித்திலக் கோவை (301-400)**

நித்தில முத்துக்கள் போலப் பெருமதிப்பு கொண்ட பாடல்களாய் அமைகின்றன.

**பாடல் பகுப்பு முறை**

**பாலைத்திணைப் பாடல்கள்**: அகநானூறு இலக்கியத்தில் 1,3,5 என்று ஒற்றைப்படை எண்களைப் பெற்று வரும் 200 பாடல்கள் பாலைத் திணைப் பாடல்களாக அமைகின்றன.

**நெய்தல்திணை:** 10,20 என்று வரும் பாடல்கள் நெய்தல் திணைப் பாடல்களாக அமைகின்றன.

**முல்லைத் திணைப் பாடல்கள்:** 4, 14 என்று நான்கு எனும் எண்ணைப் பெற்று வரும் 40 பாடல்கள் முல்லைத் திணைப் பாடல்களாக அமைகின்றன.

**குறிஞ்சித் திணைப் பாடல்கள்:** 2, 8, 12, 18 என்று 2, 8 எனும் எண்களைப் பெற்று வரும் 60 பாடல்கள் குறிஞ்சித் திணைப் பாடல்களாக அமைகின்றன.

**நற்றிணையைத் தொகுத்தவர்:** மதுரை உப்பூரி குடிகிழார் மகனார் உருத்திரசன்மார்

**அகநானூற்றுப் புலவர்கள்:** 146 பேர்.

## புறத்தொகை இலக்கியங்கள்

### 1. புறநானூறு

புறத்திணை சார்ந்த தொகை நூலான புறநானூறு தமிழரின் வரலாற்றுக் கருவூலமாகத் திகழ்கிறது.

**சிறப்புப் பெயர்கள்:** நந்தா விளக்கம், புறம், புறப்பாட்டு

**அடிவரையறை**: 4 முதல் 40 அடிவரை

**பா வகை:** ஆசிரியப்பா (சில பாடல்களில் வஞ்சியடிகளும் வந்துள்ளது)

**மொழிபெயர்ப்பு**: ஜி.யூ. போப் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

**பாடல்களின் எண்ணிக்கை:** 400 புறப் பாடல்கள் என்று குறிப்பிருந்தாலும் 398 பாடல்களே கிடைத்துள்ளன. 267, 268 ஆகிய இரு பாடல்கள் கிடைக்கவில்லை.

பாடிய புலவர்களின் எண்ணிக்கை: 156 புலவர்கள் புறநானூறு இலக்கியப் பாடல்கள் பாடியுள்ளனர்.

### 2. பதிற்றுப்பத்து

**பெயர்க்காரணம்**

பத்துச் சேர மன்னர்களைப் பற்றி பத்துப் புலவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பே பதிற்றுப் பத்து.

**கிடைத்த பாடல்கள்:** முதல் பத்தும் இறுதிப் பத்தும் கிடைக்கவில்லை. 80 பாடல்களே கிடைத்துள்ளன

**அடிவரையறை:** 3 முதல் 55 அடிகளை உடைய பாடல்களே பதிற்றுப்பத்து இலக்கியத்தில் உள்ளன.

**சிறப்பு:** புறப்பொருள் குறித்த இலக்கியம், ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் துறை, வண்ணம், தூக்கு ஆகியன இடம் பெற்றுள்ளன.

**ஒவ்வொரு பத்தின் இறுதியிலும்,**

1. பாடிய புலவர்கள்
2. பாடப்பட்ட மன்னர்களின் சிறப்புகள், அவர்கள் புலவர்களுக்கு வழங்கிய கொடைகள் ஆகியன பதிக வடிவில் இடம்பெற்றுள்ளன.

**காலம்:** கபிலரும் பரணரும் பாடியுள்ளதால் இது கடைச்சங்க காலம் சார்ந்த நூல் என அறியலாம்.

## 3. பரிபாடல்

பரிபாடல் எனும் இசைப்பாவால் ஆன இலக்கியம் இது.

அராகம், கொச்சகம், தனிச்சொல், சுரிதகம் என்னும் உறுப்புகளுடன் 25 முதல் 400 அடி வரை செய்யுட்களாகப் பாடப்படுவது பரிபாடல்

இன்பத்தை மட்டுமே கருவாகக் கொள்ளும் என்று தொல்காப்பியம் பரிபாடலுக்கு இலக்கணம் வகுத்தது.

மொத்தம் 70 பாடல்கள் பரிபாடலில் இடம்பெற்றுள்ளதாகச் சொல்லப்பட்டாலும் பல பாடல்கள் கிடைக்கவில்லை. தற்போது நாம் பயிலும் பரிபாடலில் திருமால் பற்றிய ஆறு பாடல்கள், முருகன் பற்றிய எட்டுப் பாடல்கள், வைகை பற்றிய எட்டு பாடல்கள் என 22 பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன.

## 4. முல்லைப்பாட்டு

**பாடியவர்:** காவிரிப் பூம்பட்டினத்துப் பொன் வணிகர் மகன் நப்பூதனார்.

**பொருண்மை:** போருக்குச் சென்ற தலைவன் வரும் வரை தலைவி ஆற்றியிருந்த நிலையில் தலைவன் வரக்கண்ட தோழியர் தங்களுக்குள் மகிழ்ந்து கூறுவதாக முல்லைப் பாட்டு விளக்குகிறது.

**இலக்கியச் சிறப்பு:** மிகக் குறைந்த அடிகளில் (103) மிகச் செறிவான பாடல் கருத்துகளை விளக்குகிறது.

## 5. குறிஞ்சிப்பாட்டு

**பாடியவர்: கபிலர்**

**அடிகள்: 261**

**பொருண்மை:** தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றல் எனும் துறைவழி நின்று, களவுக் காதல் நிகழ்வுகளை கபிலர் நயத்தோடு பாடியுள்ளார்.

**சிறப்புப் பெயர்:** நச்சினார்க்கினியரால் இந்நூல் பெருங்குறிஞ்சி என சிறப்புப் பெயரிடப்பட்டது.

**பாவகை:** ஆசிரியப்பா

**சிறப்பு:** 99 வகை மலர்களைக் கபிலர் பட்டியலிட்டுள்ளார்.

தலைவியின் முன்கையைப் பிடித்து தலைவனிடம் தரும் மணவழக்கத்தைக் குறிஞ்சிப்பாட்டு விளக்குகிறது.

ஆரிய மன்னன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவுறுத்த கபிலர் குறிஞ்சிப் பாட்டு பாடினார்.

## 6. பட்டினப்பாலை

**சிறப்புப் பெயர்:** வஞ்சி நெடும்பாட்டு

**பாவகைகள்:** பட்டினப் பாலையின் முதற்பகுதியில் வஞ்சிப்பாவும் பிற்பகுதியில் ஆசிரியப்பாவும் இடம்பெற்றுள்ளது.

**பாடியவர்:** கடியலூர் உத்திரங்கண்ணனார்

**பாட்டுடைத் தலைவன்:** கரிகாற்சோழன்

**பரிசு:** இந்நூலைப் பாடியதற்காகக் கரிகாற்சோழன் 16 இலட்சம் பொன்னைப் புலவர் உருத்திரங்கண்ணனாருக்கு வழங்கியதாகக் கலிங்கத்துப் பரணியும் சங்கர சோழன் உலாவும் தெரிவிக்கின்றன.

**நூலின் கரு:** பாலைத் திணை உரிப்பொருளான பிரிவுத் துன்பம் இந்நூலின் கருவாக அமைகிறது.

**நூற்சிறப்பு:** காதலின் ஆழத்தைப் புகழ்வதாக, காவிரியைப் புகழ்வதாக, காவிரிப் பூம்பட்டினத்தின் செல்வச் சிறப்பைப் புகழ்வதாக, வணிகச் செய்திகளை விளக்குவதாக அமைகிறது.

## 7. திருமுருங்காற்றுப்படை

**இயற்றியவர்:** மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர்

**பாட்டுடைத் தலைவர்:** திருமுருகர்

**பாவகை:** ஆசிரியப்பா

**அடிகள்:** 317

**சிறப்புப் பெயர்:** புலவராற்றுப்படை

**நூல் அமைப்பு:** முருகரின் உருவழகு, அவருடைய பெருஞ் செயல்கள், ஆறுபடை வீடுகளின் வழிபாட்டு முறைகள் எல்லாவற்றையும் இந்நூல் விளக்குகிறது. யானைமீது அமர்ந்த கோலத்தில் வள்ளி, தெய்வானையுடன் திருமுருகர் அருள்பாலிக்கும் அழகைத் திருமுருகாற்றுப்படை விளக்குகிறது.

## 8. பொருநராற்றுப்படை

**இயற்றிய புலவர்:** முடத்தாமக் கண்ணியார்

**பாட்டுடைத்தலைவன்:** கரிகாலன்

**அடிகள்:** 248

**நூலின் சிறப்பு:** அழகான உவமைச் சிறப்பு மிக்க நூல். கரிகாலனின் விருந்தோம்பல், வெற்றி, கொடைச்சிறப்பு, சோழ நாட்டு வளம் ஆகியவற்றை இவ்வியலக்கியம் சிறப்பாக விளக்குகிறது.

## 9. சிறுபாணாற்றுப்படை

**எழுதிய புலவர்:** நல்லூா் நத்தத்தனாா்

**பாட்டுடைத் தலைவன்:** நல்லியக் கோடன்

**அடிகள்:** 269

**பெயா்க்காரணம்:** சிறு யாழை இரசிக்கக்கூடிய பாணா்களின் ஆற்றுப்படை நூல் இது என்பதால் சிறுபாணாற்றுப்படை என அழைக்கப்பெறுகிறது.

நூல் சிறப்பு: வஞ்சி, மதுரை, உறையூா் எனும் முப்பெரும் நகரங்களின் சிறப்பை இந்நூல் விளக்குகிறது. நல்லியக் கோடனை மட்டுமல்லாமல் பேகன், பாாி, காாி, ஆய், அதியமான், நள்ளி, ஓாி எனும் ஏழு வள்ளல்களையும் இமயமலையில் வில் சின்னத்தைப் பொறித்த மன்னா் செங்குட்டுவன் குறித்தும் நத்தத்தனாா் இந்நூலில் விளக்கியுள்ளாா்.

## 10. பெரும்பாணாற்றுப்படை

**பாடியபுலவா்:** கடியலூா் உருத்திரங்கண்ணனாா்

**பாட்டுடைத் தலைவன்:** காஞ்சி மன்னன் தொண்டைமான் இளந்திரையன்

**பாடல் அடிகள்:** 500 அடிகள்

**பாவகை:** ஆசிாியப்பா

**பெயா்க்காரணம்:** பேரியாழை இயக்க வல்ல பெரும்பாணா்கள் தம்முன் ஆற்றுப்படுத்துவதைக் குறிப்பிடும் நூல் என்பதால் இதைப் பெரும்பாணாற்றுப்படை என்பா்.

**சிறப்புப் பெயா்:** பாணாறு

**நூற்சிறப்பு:** தொண்டைமான் இளந்திரையன் ஆண்ட நாட்டின் அமைப்பு, மக்கள் பண்பாடு, வாழ்வியல் முறை குறித்து இந்நூல் விளக்குகிறது. வலைஞா், உழவா், கோவலா், எயினா் போன்ற மக்களின் வாழ்க்கை முறையை இந்நூல் விளக்கியுள்ளது.

## 11. மலைபடுகடாம்

**பாடியபுலவா்:** இரணியமுட்டத்துப் பெருங்குன்றூா்ப் பெருங்கௌசிகனாா்.

**பாட்டுடைத்தலவன்:** மன்னன் நன்னன்

**அடிகள்:** 583 அடிகள்

**சிறப்புப்பெயர்:** கூத்தராற்றுப்படை

**பெயர்க்காரணம்:** மலையை யானையாக உருவகம் செய்து அம்மலையில் எழும் ஓசையை யானையின் மதமாக சிறப்பித்து விளக்குவதால் இவ்விலக்கியம் மலைபடுகடாம் எனப்பட்டது.

## 12. மதுரைக் காஞ்சி

**பாடிய புலவர்:** மங்குடி மருதனார்

**பாட்டுடைத்தலைவன்:** தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெருஞ்செழியன்

**அடிகள்:** 782அடிகள்

**பாவகை:** வஞ்சிஅடிகள் விரவி வரும் ஆசிரியப்பா

**சிறப்புப் பெயர்:** கூடற்காஞ்சி

**பொருண்மை:** வாழ்வின் நிலையாமை

## 13. நெடுநல்வாடை

**பாடியவர்:** நக்கீரர்

**பாட்டுடைத் தலைவன்:** பாண்டிய நெடுஞ்செழியன்

**நூல் அமைப்பு:** அகமா? புறமா? என்ற விவாதத்திற்கு உரிய நூல்

**நூலின் சிறப்பு:** இந்நூல் மூன்று பகுதிகளை உடையது. முதல் பகுதி வாடைக் காற்றின் விளைவையும், இரண்டம் பகுதி தலைவனைப் பிரிந்த தலைவியின் துன்ப நிலையையும், மூன்றாம் பகுதி பாசறையிலுள்ள தலைவன் பற்றிய செய்தியையும் விளக்குிறது.

## 2. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்

### பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் காலம்

**சங்கம் மருவிய காலம்:** சங்க காலம் பொற்காலம் என்று இலக்கிய வரலாறு எழுதிய இலக்கிய நூலாசிரியர்கள் அதைத் தொடர்ந்து வந்த கி.பி.100 முதல் கி.பி.500 வரை சங்கம் மருவிய காலம் அல்லது இருண்ட காலம் என்றனர். இக்காலத்தில் தோன்றிய இலக்கியங்களைப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என்றனர். சமண பௌத்த சமயங்கள் நீதி இலக்கியங்கள் தோன்றக் காரணமாக அமைந்தன.

### பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்

1. நாலடியார்
2. நாண்மணிக்கடிகை
3. இன்னா நாற்பது
4. இனியவை நாற்பது

5. கார் நாற்பது
6. களவழி நாற்பது
7. ஐந்திணை ஐம்பது
8. ஐந்திணை எழுபது
9. திணைமொழி ஐம்பது
10. திணைமொழி நூற்றைம்பது
11. திருக்குறள்
12. திரிகடுகம்
13. ஆசாரக்கோவை
14. பழமொழி நானூறு
15. சிறுபஞ்ச மூலம்
16. கைந்நிலை
17. முதுமொழிக் காஞ்சி
18. ஏலாதி

# அறம் சார்ந்த நூல்கள்

## 1. நாலடியார்

**இயற்றியவர்**: சமண முனிவர்கள்

**பா வகை:** வெண்பா

**வேறு பெயர்கள்:** நாலடி நானூறு, வேளாண் வேதம்

**சிறப்பு:** பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் உள்ள ஒரே தொகை நூல் நாலடியார், நாலடியாரில் இடம்பெற்றுள்ள உவமை நயம் ஜி.யூ.போப் அவர்களைக் கவர்ந்ததால் அந்நூலை அவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

**பாடல் எண்ணிக்கை:** கடவுள் வாழ்த்து – 1, அறத்துப்பால் - 130, பாடல்கள், பொருட்பால் - 240 பாடல்கள், காமத்துப்பால் - 30 பாடல்கள், ஆக 40 அதிகாரங்களில் 400 பாடல்கள் நாலடியாரில் அமைந்துள்ளன.

## 2. நான்மணிக்கடிகை

**இயற்றியவர்:** விளம்பி நாகனார்

**அடிகள்:** 101 பாடல்கள்

(ஒவ்வொரு பாடலும் நான்கு அடிகளால் ஆனது)

**பெயர்க் காரணம்:**

நான்கு வகை மணிகளால் ஆன ஆபரணம் என்ற பொருளில் நான்மணிக்கடிகை என அழைக்கப்பட்டது

## 3. திருக்குறள்

**இயற்றியவர்:** திருவள்ளுவர்

**சிறப்புப் பெயர்கள்**: முப்பால், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, உத்தர வேதம், தெய்வநூல், திருவள்ளுவம், தமிழ்மறை, பொதுமறை.

**திருவள்ளுவரின் சிறப்புப் பெயர்கள்:** நாயனார், முதற் பாவலர், தெய்வப் புலவர், நான்முகனார், செந்நாப் போதார், பெருநாவலர்

**சிறப்பான உரையாசிரியர்கள்:** பரிமேலழகர், மணக்குடவர், தருமர், தாமத்தர், நச்சினார்க்கினியர், பரிதியார், மல்லர், பரிப்பெருமாள், காளிங்கர்.

**மொழிபெயர்ப்பு:** திருக்குறள் வீரமாமுனிவரால் இலத்தீனில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஜி.யு. போப் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

**பொதுமறை:** திருக்குறள் கருத்துகள் யாவருக்கும் பொதுவாக உள்ளதால் உலகப் பொதுமறை என்கிறோம்.

**குறள் உணர்த்தும் அறம்:** மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறம் என்று திருக்குறள் அறத்தை உணர்த்துகிறது. கள்ளருந்துதலையும் பரத்தமை ஒழுக்கத்தையும் திருக்குறள் எதிர்க்கிறது.

## 4. இனியவை நாற்பது

**பெயர்க் காரணம்:** வாழ்வில் பின்பற்ற வேண்டிய நாற்பது இனிய கருத்துகளைக் கூறுவதால் இந்நூல் இனியவை நாற்பது எனப் பெயர் பெற்றது.

**இயற்றியவர்:** பூதஞ்சேத்தனார்

பாடல்கள்: கடவுள் வாழ்த்துடன் 41 வெண்பாக்கள்

**சிறப்பு:** ஒவ்வொரு பாடலும் மூன்று கருத்துகளுடன் இனிது என்று முடிகிறது.

## 5. இன்னா நாற்பது

**பெயர்க்காரணம்**: வாழ்வில் விலக்கவேண்டிய நாற்பது செய்திகளை இந்நூல் முன்னிறுத்துகிறது.

**இயற்றியவர்:** கபிலர்

**பாடல்கள்:** சிவபெருமான், திருமால், முருகன், நான்முகன், ஆகியோரை வழிபடும் வாழ்த்துடன் 41 வெண்பாக்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

**சிறப்பு:** ஒவ்வொரு பாடலிலும் நான்கு கருத்துகள் அமைந்து இன்னா என்று இறுதியில் அமைகிறது.

## 6. பழமொழி

ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ஒரு பழமொழியைக் கொண்டு அமையும். 400 பாடல்களைக் கொண்ட நூல். எனவே இது பழமொழி நானூறு என அழைக்கப்படுகிறது.

**இயற்றியவர்:** முன்னுறையரையனார்

**சிறப்பு:** சங்க கால மன்னர்கள், வள்ளல்கள் ஆகியோர் பற்றிய குறிப்புகள் இவ்விலக்கியத்தில் இடம்பெற்றுள்ளன.

## 7. ஆசாரக் கோவை

**ஆசிரியர்**: பெருவாயின் முன்னியார்

**பாடல்கள்:** 100

**பா வகை:** குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, பஃறொடை வெண்பா

**சிறப்பு:** அன்றாட வாழ்வில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்களை இந்நூல் தெளிவாக விளக்கியுள்ளது.

## 8. முதுமொழிக் காஞ்சி

**இயற்றியவர்:** மதுரைக் கூடலூர்கிழார்

முதுமொழிக் காஞ்சி என்பது காஞ்சித் திணையின் உட்பிரிவான ஒரு துறை.

**நூல் அமைப்பு:** பத்து அதிகாரங்கள் உள்ளன. ஒவ்வொரு அதிகாரத்திலும் முதுமொழிகளை உடைய பத்து குறட்டாழிசைகள் உள்ளன.

## 9. திரிகடுகம்

**இயற்றியவர்:** நல்லாதனார்

**பெயர்க்காரணம்:** திரி என்றால் மூன்று, கடுகம் - காரமுள்ள பொருள் என்று பொருள்படும்.

சுக்கு, மிளகு, திப்பிலி எனும் மூன்று மருந்துகளும் எப்படி உடல் நோயை நீக்குமோ அது போலத் திரிகடுகத்தின் மூன்று கருத்துகளும் மனிதர்களின் அறியாமை நோயை நீக்கும்.

**பா வகை:** 101 வெண்பாக்கள்

## 10. ஏலாதி

**இயற்றியவர்:** கணிமேதாவியார்

**பாடல்கள்:** 81

**பெயர்க்காரணம்:** ஏலத்தை முதலாகக் கொண்ட இலவங்கம், சிறுநாகப் பூ, சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய ஆறு பொருட்களைப் பயன்படுத்திச் செய்யப்படும் ஏலாதி எனும் பெயரை அடியொற்றி ஆறு நீதிக் கருத்துகளைக் கூறி விளக்குவதால் இந்நூலின் பெயர் ஏலாதி என அமைகிறது.

## 11. சிறுபஞ்சமூலம்

**இயற்றியவர்:** மதுரை கூடலூர் கிழார்

**சிறப்புப் பெயர்கள்:** மூதுரை, முதுசொல்

**காலம்:** கி.பி. 5-ம் நூற்றாண்டு

**நூல் அமைப்பு:** பத்துப் பாடல்கள் கொண்ட பதிக அமைப்பு கொண்டது (மொத்தம்: 100 பாடல்கள்)

**பத்துப் பெயர்கள்:** பத்து அடிகள் கொண்ட ஒவ்வொரு பாடலுக்கும் தனித்தனிப் பெயர் வைக்கப்பட்டுள்ளது.

1. சிறந்த பத்து
2. அறிவுப் பத்து
3. பழியாப் பத்து
4. துவ்வாப் பத்து
5. அல்ல பத்து
6. இல்லைப் பத்து
7. பொய்ப் பத்து

8. எளிய பத்து
9. நல்கூர்ந்த பத்து
10. தண்டாப் பத்து

## அகத்திணை நூல்கள்

### 1. ஐந்திணை ஐம்பது

**இயற்றியவர்:** மாறன் பொறையனார்

**பெயர்க் காரணம்:** குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல் எனும் ஐந்திணைகளின் பின்னணியில் பத்துப் பத்துப் பாடல்களாக ஐம்பது பாடல்கள் உள்ளன.

### 2. திணைமொழி ஐம்பது

**இயற்றியவர்:** கண்ணன் சேந்தனார்

**நூல் கருத்து:** திணைக்குப் பத்துப் பாடல்கள் வீதம் மொத்தம் ஐம்பது பாடல்கள் அமைகின்றன.

### 3. ஐந்திணை எழுபது

**இயற்றியவர்:** மூவாதியார்

**பெயர்க்காரணம்:** ஐந்திணைகளின் பின்னணியில் திணைக்கு 14 பாடல்கள் வீதம் மொத்தம் 70 பாடல்கள் கொண்டதால் இந்நூல் ஐந்திணை எழுபது என அழைக்கப்படுகிறது.

### 4. திணைமாலை நூற்றைம்பது

**இயற்றியவர்:** கணிமேதாவியார்

**பாடல்கள்:** 153

**பாடல் பகுப்பு:** ஐந்து நிலங்களின் பின்னணியில் இந்நூல் இயற்றப்பட்டுள்ளது.

1. குறிஞ்சி (1-31 வரை 31 பாடல்கள்)
2. நெய்தல் (31-62 வரை 31 பாடல்கள்)
3. பாலை (63-92 வரை 30 பாடல்கள்)
4. முல்லை (93-123 வரை 31 பாடல்கள்)
5. மருதம் (124-153 வரை 30 பாடல்கள்)

### 5. கார் நாற்பது

**இயற்றியவர்:** கண்ணங் கூத்தனார்

**பெயர்க் காரணம்:** தன்னைப் பிரிந்து வேற்றூர் சென்ற தலைவன் வருகைக்காகக் கார்காலத்தில் காத்திருக்கும் தலைவியின் நிலை குறித்து விளக்கும் இலக்கியம்

### 6. கைந்நிலை

**இயற்றியவர்:** புல்லங்காடனார்

**பெயர்க்காரணம்:** கை என்றால் ஒழுக்கம், நிலை என்றால் தன்மை, எனவே ஐந்திணையின் ஒழுக்க நிலையைக் கூறும் நூல். எனவே இது கைந்நிலை என அழைக்கப்படுகிறது.

**பாடல்கள்:** 60 (குறிஞ்சி - 12, பாலை – 7, முல்லை – 3, மருதம் - 11, நெய்தல் - 12, மொத்தம் 45 பாடல்கள் கிடைத்துள்ளன)

**பாவகை:** வெண்பா

## புறத்திணை நூல்

### களவழி நாற்பது

**இயற்றியவர்:** பொய்கையார்

**சிறப்பு:** பதினெண்கீழ்க்கணக்கு நூல் தொகுப்பில் உள்ள நூல்களுள் புறப்பொருள் கூறும் ஒரே நூல் களவழி நாற்பது.

**பாடற் கரு:** சோழ மன்னன் கோச் செங்கணானுக்கும் சேரமான் கணைக்கால் இரும்பொறைக்கும் இடையே கழுமலம் எனும் இடத்தில் நடைபெற்ற போரைப் பின்னணியாக வைத்து எழுதப்பட்ட இலக்கியமே களவழி நாற்பது.

**நூற்சிறப்பு:** யானைப்படைகளின் முக்கியத்துவத்தை உணர்த்தும் நூல்.

## 3. காப்பியங்கள்

### காப்பிய இலக்கணம்

நீண்ட நெடுங்கதையைச் செய்யுள் நடையில் சொல்வது காப்பியம் ஆகும்.

**காப்பிய இலக்கணம் வகுத்த நூல்:** கி.பி.12-ம் நூற்றாண்டில் தோன்றிய தண்டியலங்காரம் நூலே “பெருங்காப்பிய நிலை பேசுங்கலை” எனத் தொடங்கி இலக்கணம் வகுத்தது.

**எது காப்பியம்?**

1. வாழ்த்து, வணக்கம், வருபொருள் ஆகியவற்றில் ஒன்று பெற்று வரும்.
2. இலக்கியச் செழுமை உடையதாய் எழுதப்படும்.
3. அறம் பொருள், இன்பம், வீடு எனும் நாற்பொருள் கொண்டதாக அமையும்.
4. சருக்கம், இலம்பகம்,பரிச்சேதம் எனும் உட்பிரிவுகளில் ஏதேனும் ஒன்று பெற்று வரும்.
5. மலை, நாடு, கடல், நகர், பருவம், இருசுடர் ஆகியவற்றைப் பெற்று வரும்.

### காப்பிய வகைகள்

தண்டியலங்காரக் காப்பிய இலக்கணத்தோடு பொருந்தி வருவது பெருங்காப்பியம் ஆகும்.

**சான்று**

**ஐம்பெருங்காப்பியம்**

1. சிலப்பதிகாரம்
2. மணிமேகலை
3. சிவகசிந்தாமணி
4. வளையாபதி
5. குண்டலகேசி

**சிறுகாப்பியம்:**

தண்டியலங்காரம் வரையறுத்துள்ள பெருங்காப்பிய இலக்கணத்தில் ஏதேனும் சில கூறுகள் குறைந்து வருவதே சிறுகாப்பியம் எனப்படும்.

1. சூழாமணி
2. நீலகேசி
3. உதயணகுமார காவியம்
4. யசோதா காவியம்
5. நாககுமார காவியம்

**பிற காப்பியங்கள்**

1. கம்பராமாயணம்
2. பெரிய புராணம்
3. வில்லிபுத்தூரார் பாரதம்
4. சீறாப் புராணம்
5. தேம்பாவணி
6. இரட்சண்ய யாத்திரிகம்

## 1. சிலப்பதிகாரம்

**இயற்றியவர்:** இளங்கோவடிகள்

**பெயர்க்காரணம்:** சிலம்பு காரணமாக விளைந்த கதை என்பதால் சிலப்பதிகாரம் எனப்படும்.

**பாவகை:** ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது.

**சிறப்புப் பெயர்கள்:** குடிமக்கள் காப்பியம், தமிழில் முத்தமிழ்க் காப்பியம், முதல் காப்பியம், பாட்டிடையிட்ட தொடர்நிலைச் செய்யுள், ஐம்பெருங்காப்பியங்களில் முதல் நூல்.

## 2. மணிமேகலை

**இயற்றியவர்:** சீத்தலைச் சாத்தனார்

**சிறப்பு:** சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் எனும் சிறப்பைப் பெறுகின்றன.

**காலம்:** கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காப்பியம்.

மணிமேகலை சேர நாட்டின் வஞ்சி நகரில் சமயக் கணக்கர்களைக் கண்டு அவர்களின் கோட்பாடுகள் குறித்து அறிந்தாள். பசியின் கொடுமையை இக்காப்பியம் அழுத்தமாக விளக்குகிறது.

## 3. சீவகசிந்தாமணி

**இயற்றியவர்:** திருத்தக்கதேவர்

**சமயம்:** சமணம்

**பாவகை:** விருத்தப்பா

**இலம்பகங்கள்:** 13 இலம்பகங்களும் மகளிர் பெயரில் அமைகின்றன

**பாடல்கள்:** 3145

**சிறப்புப் பெயர்கள்:** மணநூல், முக்தி நூல், இயற்கை தவம், முதல் விருத்தக் காப்பியம், தமிழ் இலக்கிய சிந்தாமணி

**நூல் உணர்த்தும் செய்தி:** சீவகன் எட்டு மங்கையரை மணந்தாலும் துறவே இறுதியில் உறுதியானது.

## 4. வளையாபதி

**இயற்றியவர்:** குறிப்பில்லை

**சமயம்:** சமணம்

**கிடைத்துள்ள பாடல்கள்:** 72

**சிறப்பு:** ஐம்பெருங்காப்பிய நூல்களில் ஒன்று

## 5. குண்டலகேசி

**இயற்றியவர்:** நாதகுத்தனார்

**சமயம்:** பௌத்தம்

**கிடைத்துள்ள பாடல்கள்:** 19

**உரையாசிரியர்:** குண்டலகேசிக்குப் பெருமழைப் புலவர் பொ.வெ. சோமசுந்தரனார் விளக்க உரை எழுதியுள்ளார்

**கதைக்கரு:** தன்னைக் கொல்லும் முயற்சியில் ஈடுபட்ட தன் கணவனைக் கொன்று புத்த துறவியாக மாறிப் பௌத்த சமயத்தின் பெருமையைப் பரப்பும் முயற்சியில் ஈடுபட்ட குண்டலகேசி என்கிற வணிகர் குலப் பெண்ணின் வரலாறே இக்காப்பியக் கருவாகும்.

# ஐஞ்சிறு காப்பியங்கள்

## 1. சூளாமணி

**இயற்றியவர்:** தோலாமொழித் தேவர்

**காலம்:** கி.பி. 10-ம் நூற்றாண்டுக்கு முற்பட்டது

**சமயம்:** சமணம்

**மூலநூல்:** ஜினசேனர் வடமொழியில் எழுதிய ஸ்ரீ புராணம் எனும் ஆருகத மகா புராணம்

**நூலமைப்பு:** 12 சருக்கங்கள், 2131 பாடல்கள்

**பாவகை:** விருத்தப்பா

**உணர்த்தும் கருத்து:** சமணம் உணர்த்தும் நான்கு வகைப் பிறவிகள் குறித்து விளக்குகிறது. வீடுபேறு அடைய மனிதப் பிறவியால் மட்டுமே முடியும் என்று உணர்த்துகிறது.

## 2. நீலகேசி

**இயற்றியவர்:** தெரியவில்லை

**சமயம்:** சமணம்

**மறுப்பு நூல்:** பௌத்த சமயப் பெருமையை விளக்கிய குண்டலகேசி நூலுக்கு மறுப்பு நூலே நீலகேசி

**சிறப்புபெயர்:** நீலகேசித் திரட்டு

**நூல் அமைப்பு:** கடவுள் வாழ்த்து நீங்கலாக 10 சுருக்கங்களில் 894 பாடல்களை உடைய நூல்.

## 3. உதயண குமார காவியம்

**இயற்றியவர்:** கொங்குவேளிர்

**கதைத்தலைவன்:** கௌசாம்பி நாட்டு இளவரசன் உதயணன்

**நூல் அமைப்பு:** உஞ்சை, இலாவாண, மகத, வத்தவ, நரவாகன, துறவு எனும் ஆறு காண்டங்களை உடைய காப்பியம்

**பாடல்கள்:** 367 பாடல்கள்

**சமயம்:** சமணம்

## 4. நாககுமார காவியம்

**இயற்றியவர்:** தெரியவில்லை

**சமயம்:** சமணம்

**கதைக்கரு:** இளமையில் இன்பம் துய்ப்பதில் காலம் கழித்து நாக குமாரன் தன் இறுதிக் காலத்தில் நிலையாமையை உணர்ந்து துறவின் பக்கம் வருவதே இக்காப்பியக் கரு

**நூல் அமைப்பு:** 5 சருக்கங்கள் 170 விருத்தப்பாக்களால் நாகபஞ்சமி கதையைக் கூறும் நூல் இது.

### 5. யசோத காவியம்

**இயற்றியவர்:** தெரியவில்லை

**சமயம்:** சமணம்

**கதை:** உதய சாட்டு மன்னன் மாரி தத்தனின் அரச ஆணைக்கு இணங்க உயிர்ப்பலி தருவதற்காக இழுத்து வரப்பட்ட இளம் சமணத் துறவிகள் இருவரின் முன் கதையை இக்காப்பியம் விளக்குகிறது.

## 4. பக்தி இலக்கியங்கள்

### 1. பெரியபுராணம்

**இயற்றியவர்:** சேக்கிழார்

**வேறு பெயர்:** திருத்தொண்டர் புராணம்

**சமயம்:** சைவம்

**மூலநூல்:** சுந்தரமூர்த்தி நாயனாரின் திருத்தொண்டத் தொகை

**காப்பியத் தலைவர்**: சுந்தரர்

**நூல் அமைப்பு**: இரு காண்டங்களை உடைய காப்பியம்

**பாடல்ள்:** 4286 செய்யுள்கள்

**சிறப்பு:** 4286 பாடல்களில் திருஞான சம்பந்தர் பாடல்கள் மட்டும் 1256 பாடல்கள் உள்ளதால் பிள்ளை பாதி, புராணம் பாதி என்ற சிறப்புப் பெயரை இக்காப்பியம் பெற்றது.

### 2. கம்பராமாயணம்

**இயற்றியவர்:** கம்பர்

**சமயம்:** வைணவம்

**மூலநூல்:** வால்மீகி இராமாயணம்

**வேறு பெயர்:** இந்நூலுக்குக் கம்பர் வைத்த பெயர் இராமாவதாரம்

**காப்பிய அமைப்பு:** பாலகாண்டம், ஆரண்ய காண்டம், அயோத்தியா காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் எனும் ஆறு காண்டங்களையும் 118 படலங்களையும் 10,589 பாடல்களையும் உடையதாய் அமைகிறது.

**காப்பியம் உருவாக உதவி செய்த வள்ளல்:** சடையப்பர்

### 3. வில்லி பாரதம்

**இயற்றியவர்:** வேத வியாசர் இயற்றிய மகாபாரதம்

**நூல் அமைப்பு:** பத்து பருவங்கள், 4351 பாடல்கள், வில்லி பாரதத்தில் உலூகன் தூது, கிருட்டிணன் தூது, சஞ்சயன் தூது எனும் மூன்று தூதுச் சுருக்கங்கள் உள்ளன.

**காப்பியச் சிறப்பு:** கதைச் செழுமை, ஓசையுடைமை, சொற்சுருக்கம் ஆகிய சிறப்புகளை உடைய இலக்கியம்.

## 4. சீறாப் புராணம்

**இயற்றியவர்:** உமறுப்புலவர்

**சமயம்:** இஸ்லாம்

**காலம்:** கி.பி.17-ம் நூற்றாண்டு

**காப்பிய அமைப்பு:** முதற்பாகத்தில் 45 படலங்கள், இரண்டாம் பாகத்தில் 47 படலங்கள் என மொத்தம் 92 படலங்கள் உள்ளன. இக்காப்பியத்தில் 5027 பாடல்கள் உள்ளன.

**காண்டங்கள்:** விலாதத்துக் காண்டம், நபுவத்துக் காண்டம், ஹிஜிரத்துக் காண்டம் எனும் மூன்று காண்டங்களை உடையது.

**உரை:** சதாவதானி செய்குத் தம்பிப் பாவலர் உரை எழுதியுள்ளார்.

## 5. இரட்சண்ய யாத்திரிகம்

**இயற்றியவர்:** ஆல்பிரட் கிரு'ண பிள்ளை

**சமயம்:** கிறித்தவம்

**காலம்:** 1896-ம் ஆண்டு

**காப்பிய அமைப்பு**: 5 பருவங்களையும், 47 படலங்களையும் 3622 பாடல்களையும், 144 இரட்சண்ய யாத்திகம் தேவாரங்களையும் உடையது.

## 6. தேம்பாவணி

**இயற்றியவர்:** வீரமாமுனிவர்

**மூலநூல்:** மறை பொருளான இறை நகரம் (ஆலளவஉைடயட ஊவைல ழக புழன)

**பாட்டுடைத் தலைவர்:** புனித ஜோசப்

**பெயர்க் காரணம்:** தேன் ‚ பா ‚ அணி

தேன் போன்ற இனிய பாடல்களின் மாலை.

**நூல் அமைப்பு:** மூன்று காண்டங்கள் உடைய காப்பியம் இது. ஒரு காண்டத்திற்கு 12 படலங்களாக மொத்தம் 36 படலங்கள் கொண்ட காப்பியம் இது.

**சிறப்பு:** விவிலியக் கருத்துக்கள் அதிகம் பெற்ற நூல்.

## 4. பக்தி இலக்கியங்கள்

**தோன்றிய காலம்:** பல்லவர்கள் தமிழ் நாட்டை ஆண்ட காலம்

**சிறப்பு:** பக்தி அனுபவங்களை இலக்கிய வடிவில் தந்தது.

**வடிவம்:** பதிகங்கள், பிரபந்தங்கள்

**பா வகை:** அகவல், வெண்பா, தாழிசை, துறை, விருத்தம்

**இசை:** யாழ் இசையோடு பாடல்கள் பாடிய மரபு

## 1. சைவ இலக்கியம் -12

**தொகுப்பித்தவர்:** இராஜராஜ சோழன்

**காலம்:** கி.பி. 10-ம் நூற்றாண்டு

**தொகுத்தவர்:** நம்பியாண்டார் நம்பி

**முதல் மூன்று திருமுறைகள்:** திருஞான சம்பந்தர் தேவாரம்

**நான்கு, ஐந்து, ஆறு திருமுறைகள்:** திருநாவுக்கரசர் தேவாரம்

**ஏழாம் திருமுறை:** சுந்தரர் தேவாரம்

**எட்டாம் திருமுறை:** மாணிக்கவாசகர் இயற்றிய திருவாசகம், திருக்கோவையார்

**ஒன்பதாம் திருமுறை:** திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த் தேவர், பூந்துருத்தி நம்பி காட நம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் ஆகியோர் இயற்றிய பாடல்கள், சேந்தனார் இயற்றிய திருப்பல்லாண்டு.

**பத்தாம் திருமுறை:** திருமூலர் இயற்றிய திருமந்திரம், திரு ஆலவாய் உடையார் இயற்றிய திருமுகப் பாசுரம், காரைக்கால் அம்மையார் இயற்றிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், திருவிரட்டை மணிமாலை, அற்புதத் திருவந்தாதி, ஐயடிகள் காடவர்கோன் நாயனார் இயற்றிய சேத்திர வெண்பா, சேரமான் பெருமாள் நாயனார் எழுதிய பொன்வண்ணத்தந்தாதி, திருவாரூர் மும்மணிக் கோவை, ஆதி உலா, நக்கீர தேவ நாயனார் இயற்றிய கயிலை பாதி காளத்திபாதி அந்தாதி, திருமுருகாற்றுப்படை முதலான நூல்கள், கல்லாட தேவ நாயனார் இயற்றிய திருக்கண்ணப்ப தேவர் திருமறம், கபில தேவநாயனார் இயற்றிய மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை முதலிய நூல்கள்.

**பதினோராம் திருமுறை:** பரணதேவ நாயனார் இயற்றிய சிவபெருமான் திருவந்தாதி, இளம்பெருமான் அடிகள் இயற்றிய சிவபெருமான் மும்மணிக் கோவை போன்ற நூல்கள்.

**பன்னிரண்டாம் திருமுறை:** சேக்கிழார் இயற்றிய பெரியபுராணம்.

## 2. சமயக்குரவர் நால்வர்

1. **திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்**

   **சமயம்:** சைவம்

   **சிறப்பு:** 63 நாயன்மாரில் முதலாமவர்

   **சிறப்புப் பெயர்கள்:** சம்பந்தர், காழி வள்ளல், ஆளுடைய பிள்ளை, பாலறாவாயர், பரசமய கோளரியார்

   **காலம்:** கிபி 7

**முக்தி:** பதினாறு வயது

**இயற்றிய பாடல்கள்:** முதல் மூன்று திருமுறை, பெரிய புராணத்தில் 1256 பாடல்கள் சம்பந்தர் குறித்தன

**பிறந்த ஊர்:** சீர்காழி

**பெற்றோர்:** சிவபாத இருதயர், பகவதி அம்மை

**அதிசயம்:** மூன்று வயதில் திருத்தோணியப்பர் ஆலயத்தில் உமையன்னை இவருக்கு ஞானப்பால் வழங்கினார்.

**பாடிய முதல் தேவாரம்:** தோடுடைய செவியன்

2. **திருநாவுக்கரசு நாயனார்**

**காலம்:** கி.பி.7

**சமயம்:** சைவம்

**சிறப்பு:** தேவார மூவருள் இரண்டாமவர்

**சிறப்புப் பெயர்:** அப்பர், தாண்டக வேந்தர், உழவாரப் படைஞர்

**இயற்பெயர்:** மருள்நீக்கியார்

**சமணத்தில் இருந்தபோது:** தருமசேனர்

**சைவ சமயத்தில்:** திருநாவுக்கரசர், தாண்டக வேந்தர்

**பிறந்த ஊர்:** கடலூர் மாவட்டம் திருவாமூர்

**தமக்கை:** திலகதியார்

**வயிற்றுவலி நீங்க பாடியது:** கூற்றாயினவாறு விலக்ககலீர்

**பாடிய தேவாரப் பாடல்கள்:** 4, 5, 6 மூன்று திருமுறைகள்

**முக்தி:** 81-வது வயதில் திருப்புகலூரில்

**அற்புதங்கள்:** சமணர்கள் கல்லைக் கட்டி கடலில் விட்டபோதும் கொல்ல முயன்றபோதும் சிவனருளால் இடர் மீண்டார்.

**இயற்றிய தேவாரப் பாடல்கள்:** 19,000

**சிறப்பு:** தாள அமைப்புடன் கூடிய பாடும் பண்ணாங்கப் பாடல்களையும், தாள அமைப்பு இல்லாத திருத்தாண்டகம், திருவிருத்தம், திருக்குறுந்தொகை ஆகிய சுத்தாங்கப் பாடல்களையும் அப்பர் பெருமான் பாடியுள்ளார். கயிலைக் கண்டவர்

3. **சுந்தர மூர்த்தி நாயனார்**

சமயக் குரவர் நால்வரில் ஒருவர்

**அற்புதம்:** புத்தூர் சடங்கவி சிவாச்சாரியார் மகளைத் திருமணம் செய்ய முயன்ற நாளில் சிவபெருமானால் தடுத்து ஆட்கொள்ளப்பட்டார். இவர் இயற்றிய பாடல்கள் திருப்பாட்டு எனப்படும். இவர் பாடிய தேவாரப் பாடல்கள் 7-ம் திருமுறையில் உள்ளன.

**பெற்றோர்:** சடையனார், இறை ஞானியார்

பாடிய பதிகங்கள்: 38000 ஆனால் கிடைத்தவை 100 பதிகங்களே

**பண்கள்:** 17

**பிறந்த ஊர்:** திருநாவலூர்

**இயற்பெயர்:** நம்பியாரூரன்

**நண்பர்:** அரசர் சிவபிரான் அனுப்பிய வெள்ளை யானையில் திருக்கைலாயம் சென்றார்.

**4. மாணிக்கவாசகர்**

**இயற்பெயர்:** திருவாதவூரார்

**சிறப்புப் பெயர்கள்:** மாணிக்கவாசகர், திருவாதவூரடிகள், மணி மொழியார், தென்னவன் பிரமராயன் அருள்வாசகர்

**பாடிய நூல்கள்:** திருவாசகம், திருவெம்பாவை, திருக்கோவையார்

**அதிசயம்:** ஈசன் இவருக்காக நரியைப் பரியாக்கினார்

**பெற்றோர்:** சம்புபாத சரிதர், சிவஞானவதி

**பதவி:** அரிமர்த்தன பாண்டியனின் அமைச்சர்

**அதிசயம்:** திருப்பெருந் துறையில் குருந்த மரத்தடியில் சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்டார்
**ஜி.யு. போப் பாராட்டு:** மாணிக்கவாசகரைப் போல புலமை, உழைப்பு, துன்பம் பொறுத்தல், நீடித்த பக்தி உடையவர் வேறு யாரும் இல்லை என்கிறார்

## வைணவ இலக்கியம்

## 1. நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

பெருமாளைக் குறித்த 12 ஆழ்வார்களால் இயற்றப்பட்ட பாடல்களின் தொகுப்பு

**தொகுத்தவர்:** நாதமுனிகள் (10-ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்)

**காலம்:** 6-ம் நூற்றாண்டு முதல் 9-ம நூற்றாண்டுக்குள் வாழ்ந்த ஆழ்வார்கள் அருளிச் செய்த பாசுரங்களின் தொகுப்பே நாலாயிர திவ்வியப் பிரபந்தம்.

**பெயர்க் காரணம்:** திவ்யம் என்றால் மேலான பிரபந்தம் என்றால் இலக்கிய வகை

**சிறப்புப் பெயர்கள்:** ஆன்ற தமிழ் மறை, ஐந்தாம் வேதம், திராவிட வேதம், திராவிட பிரபந்தம்

**பாசுரங்களின் எண்ணிக்கை:**

முதலாயிரம் - 947

பெரிய திருமொழி – 1134

திருவாய்மொழி - 1102

இயற்பா - 817

### பன்னிரு ஆழ்வார்கள்

### 1. பொய்கையாழ்வா்

**பிறப்பு:** காஞ்சிபுரத்தில் உள்ள திருவெக்காவில் உள்ள சொன்னவண்ணம் செய்த பெருமாள் திருக்கோவில் பொய்கையில் தோன்றியதால் இவா் பொய்கையாழ்வாா் என அழைக்கப்படுகிறாா்.

**அம்சம்:** பெருமாளின் கையில் உள்ள பாஞ்சசன்யம் எனும் புனித சங்கின் அம்சம் இவா்.

**காலம்:** கி.பி.5-ம் நூற்றாண்டின் முற்பகுதி முதல் 7-ம் நூற்றாண்டின் தொடக்கம் வரை இவரது காலம் என்பது அறிஞா் மு. இராகவையங்காா் கருத்து.

**சிறப்பு:** முதல் ஆழ்வாா், பெருமாளின் 10 அவதாரங்களையும் முதலில் பாடியவா் இவரே.

### 2. பூதத்தாழ்வாா்

**பிறந்த ஊா்:** மாமல்லபுரம் திருக்கடல் மல்லையூரில் பிறந்தாா்

**அம்சம்:** திருமாலின் கையில் உள்ள கதாயுதத்தின் அம்சமாகப் பிறந்தாா்

**பாடியது:** நாலாயிர திவ்விய பிரபந்தத்தின் இரண்டாம் திருவந்தாதியைப் பாடினாா்

**காலம்:** பொய்கையாழ்வாா் வாழ்ந்த காலம்

**சிறப்பு:** முதல் மூன்று ஆழ்வாா்களில் இரண்டாமவா்.

### 3. பேயாழ்வாா்

**பிறந்த ஊா்:** திருமயிலை எனும் மயிலாப்பூா்

**அம்சம்:** பெருமாளின் திருக்கரத்தில் உள்ள நந்தகம் எனும் வாளின் அம்சம்

**பாடியது:** அந்தாதியாக இவா் பாடிய 100 பாடல்கள் மூன்றாம் திருவந்தாதி என அழைக்கப்படுகிறது.

**சிறப்பு:** முதல் மூன்று ஆழிவாா்களில் மூன்றாமவா்

### 4. திருமழிசையாழ்வாா்

**பிறந்த ஊா்:** திருமழிசை

**அம்சம்:** திருமாலின் சக்கரம்

**காலம்:** கி.பி. 6-ம் நூற்றாண்டு

**இயற்றியது:** நான்முகன் திருவந்தாதி எனும் நூறு வெண்பாக்கள் கொண்ட நூல். திருச்சந்த விருத்தம் எனும் 120 விருத்தங்கள் கொண்ட நூல்

**சிறப்புப் பெயா்**: பக்திசாரா், பரமயோகி

### 5. நம்மாழ்வாா்

**பிறப்பு:** ஆழ்வாா்திருநகரி

**அம்சம்:** வி'வக்சேனா்

**இயற்பெயா்:** மாறன்

**பெயர்க்காரணம்:** மாயையை உருவாக்கும் சட எனும் நாடியை இவர் வென்றதால் சடகோபன் அதாவது மாறன் சடகோபன் என அழைக்கப்படுகிறார்.

திருமாலைத் தன் அன்பால் கட்டியதால் பராங்குசன் என அழைக்கப்படுகிறார்.

**இயற்றிய நூல்கள்:** திருவிருத்தம் (100 பாசுரங்கள்). திருவாசிரியம் (7 பாசுரங்கள்) பெரிய திருவந்தாதி (87 பாசுரங்கள்) (திருவாய்மொழி (1102 பாசுரங்கள்) ஆக 1296 பாசுரங்கள் இவர் இயற்றியுள்ளார்.

**சிறப்புப் பெயர்கள்:** சடகோபன் மாறன், காரிமாறன், பராங்குசன், வேதம் தமிழ் செய்த மாறன், வகுளாபரணன், குருகைப்பிரான், குருகூர்நம்பி போன்ற 35 சிறப்புப் பெயர்கள் பெற்றவர்.

## 6. மதுரகவி ஆழ்வார்

**பிறப்பு:** திருக்கோ;ர்

**சிறப்பு:** பெருமாளைப் பாடாமல் தன் ஆச்சார்யரான சுவாமி நம்மாழ்வாரையே தெய்வமாகப் போற்றிப் பதினொரு பாசுரங்கள் பாடியவர்.

**காலம்:** 9-ம் நூற்றாண்டு

**பாடியது:** நாலாயிரம் திவ்வியப் பிரபந்தத்திலி மதுரகவி ஆழ்வார் அருளிச் செய்தது கண்ணி நுண்சிறுத்தாம்பு எனும் ஒரே பதிகம் தான். அதில் உள்ள பதினோரு பாடல்களும் திருக்குருகூர் நம்பி நம்மாழ்வாரை ஏத்திப்பாடுவது.

## 7. குலசேகர ஆழ்வார்

**பிறப்பு:** கொல்லி நகரான கருவூர் திருவஞ்சிக் களம்.

**அம்சம்:** திருமாலின் மார்பிலுள்ள கௌஸ்துப எனும் மணி போன்றவர்

**பாடியது:** திருவரங்கம் சென்று அரங்க நாதரை வாழ்த்தி 31 பாசுரங்கள் பாடினார். திருவேங்கடல், திருக்கண்ணபுரம் போன்ற திருத்தலங்களை இவர் பாடினார்.

**திருப்பணி:** திருவரங்கம் பெரிய கோவிலில் மூன்றாவதாக இருக்கும் திருக்கற்றில் உள்ள சேனை வென்றான் திருமண்டபம் இவர் கட்டியது. பவித்ரோற்சவ மண்டபம் இவர் கட்டியது.

## 8. பெரியாழ்வார்

**பிறப்பு:** திருவில்லிபுத்தூர்

**இயற்பெயர்:** வி'ணு சித்தர்

**சிறப்பு:** ஆண்டாள் நாச்சியாரின் வளர்ப்புத் தந்தை. மகளை அரங்கனுக்கு மணம்முடித்துத் தந்ததால் அரங்கனின் மாமனார்.

**பாடியது:** திருப்பல்லாண்டு

**பெயர்க் காரணம்:** திருமாலுக்கே கண்ணேறு கழிக்க முயன்றதால் இவரைப் பெரிய ஆழ்வார் என்றனர்.

ஏழாவது ஆழ்வாராக இவர் திகழ்ந்தாலும் இவர் பாடிய பாடல்கள் சிறப்புடையவை

### 9. ஆண்டாள்

**பிறப்பு:** ஸ்ரீ வில்லிப்புத்தூரில் துளசிச் செடிக்குக் கீழ் கிடந்த கோதையைப் பெரியாழ்வார் தன் மகளாய் வளர்த்தார்

**காலம்:** 6 அல்லது 7-ம் நூற்றாண்டு

**இயற்றிய இலக்கியங்கள்:** திருப்பாவை, நாச்சியார் திருமொழி

**சிறப்பு:** திருமணம் செய்தால் அரங்க நாதரையே திருமணம் செய்வேன் என உறுதி பூண்டு அவ்வாறு செய்துகொண்டார்.

### 10. தொண்டரடிப் பொடியாழ்வார்

**இயற்பெயர்:** விப்ர நாராயணர்

**பிறப்பு:** திருமந்தன்குடி

**இயற்றிய நூல்கள்:** திருப்பள்ளி எழுச்சி, திருமாலை

**சிறப்பு:** திருப்பள்ளி எழுச்சி பத்து வசனங்களைக் கொண்டதாகவும் திருமாலை நாற்பது வசனங்களைக் கொண்டதாக நாலாயிர திவ்விய பிரபந்தத்தில் 4000 சரணங்களை உடையதாக அமைகின்றன.

இவர் பாடிய திருப்பள்ளி எழுச்சியே பள்ளி எழுச்சி வகைப்படைப்புகளுக்கு முன்னோடியாகத் திகழ்கிறது.

### 11. திருப்பாணாழ்வார்

**பிறப்பு:** திருச்சி அருகே உள்ள உறையூர்

**சிறப்புப் பெயர்கள்:** பாணர், முனிவாகனர், யோகிவாகனர், கவீசுவார்

**பாடியது:** திருவரங்க நாதர் முன் சென்று திருமுடி முதல் திருவடி வரை பத்துப் பாடல்களாக அமலனாதிபிரான் எனும் தலைப்பில் பாடினார்.

### 12. திருமங்கையாழ்வார்

**பிறப்பு:** சீர்காழி திருக்குறையலூர்

**இயற்பெயர்:** கவியன்

**சிறப்புப் பெயர்:** திருமங்கை மன்னர்

**பாடியது:** 1137 பாடல்கள்

திருவெழுக் கூற்றிருக்கை – ஒரு பாடல் 47 அடிகள்

சிறிய திருமடல் – ஒரு பாடல் 155 அடிகள்

பெரிய திருமடல் – ஒரு பாடல் 297 அடிகள்

திருநெடுந்தாண்டகம் – 30 பாடல்கள்

திருக்குறுந்தாண்டகம் – 20 பாடல்கள்

பெரிய திருமொழி – 1084 பாடல்கள்

## 5. சித்தர் பாடல்கள்

அ்'டமா சித்திகள் அதாவது எட்டு விதமான பேராற்றல் பெற்றவர்களே சித்தர்கள். அவர்கள் பாடிய செய்யுள்களே சித்தர் பாடல்கள் என அழைக்கப்படுகின்றன.

**சிறப்பு:** சித்தர் பாடல்கள் ஞானப் பாடல்கள் என அழைக்கப்படுகின்றன. மறைபொருள் நிறைந்த கருத்துக் கருவூலங்களாகச் சித்தர் பாடல்கள் திகழ்கின்றன.

**பதினெண் சித்தர்கள்**

1. திருமூலர்
2. இராமதேவர்
3. கும்பமுனி
4. இடைக்காடர்
5. தன் வந்திரி
6. வான்மீகி
7. போக நாதர்
8. குதம்பைச் சித்தர்
9. மச்சமுனி
10. கமலமுனி
11. கொங்கணர்
12. பதஞ்சலி
13. நந்தி தேவர்
14. போத குரு
15. பாம்பாட்டிச் சித்தர்
16. சட்டை முனி

17. சுந்தரானந்த தேவர்

18. கோரக்கர்

### 1. சிவவாக்கியர்

**சிறப்புப் பெயர்:** புரட்சிச் சித்தர்

யோகம், குண்டலினி, நிலையாமை ஆகிய கருத்துகளோடு சிவவாக்கியர் சமூக சீர்திருத்தக் கருத்துகளையும் கூறியுள்ளார்.

### 2. பட்டினத்தார்

**இயற்பெயர்:** திருவெண்காடர்

**சிறப்பு:** வானுலகதேவரான இவர் பூவுலகில் திருவெண்காடர் எனும் பட்டினத்தாராகத் தோன்றினார் என்று திருவெண்காட்டுப் புராணம் விளக்குகிறது.

### 3. பாம்பாட்டிச் சித்தர்

பாம்புகள் பிடிப்பதில் வல்லவரான பாம்பாட்டிச் சித்தர் ஒரு பாம்பின் அழகில் பிரமித்து நிற்க அது தவயோகியாக மாறிக் காட்சி தந்தது. அவர் தான் சட்டை முனிச்சித்தர். அவரால் தீட்சை தரப்பட்டவர்தான் பாம்பாட்டிச் சித்தர்.

### 4. இடைக்காட்டுச் சித்தர்

**பிறப்பு:** இடைக்காடு

**சிறப்பு:** கொங்கணர் சீடர்

### 5. அகப்பேய் சித்தர்

**பெயர்க் காரணம்:** மனமாகிய பேயை வென்றவர் என்பதால் இவர் அகப்பேய் சித்தர் என அழைக்கப்பட்டார்.

**சிறப்பு:** மனமாகிய அகப்பேயை அடக்கி வெற்றி கண்டால் சிவமாகிய இறைவனைக் காணலாம் என உணர்ந்தார்

### 6. குதம்பைச் சித்தர்

குதம்பை எனும் காதணி அணிந்த பெண்ணை முன்னிலைப் படுத்திப் பாடியதால் இவர் குதம்பைச் சித்தர் என அழைக்கப்பட்டார்.

**சிறப்பு:** தன்னை அறிய வேணும் சாராமல் சார வேணும் என்று பாடினார்

### 7. கடுவெளிச் சித்தர்

**பெயர்க் காரணம்:** கடுவெளி என்பது வெட்டவெளி அதாவது பிரம்மம்.

**சிறப்பு:** பிரபஞ்சம் எனும் வெட்ட வெளியைத் தன் ஆத்ம ஞானத்தால் கண்டு பாடிய சித்தர் இவர்.

### 8. அழுகணிச் சித்தர்

இவர் பாடல்களைப் படிப்போர் கண்கள் குளமாகும்.

**சிறப்பு:** இவர் பாடல்கள் ஒப்பாரிப் பாடல்கள் போல் இருந்தாலும் ஆழ்ந்த உட்பொருள் கொண்டன. "ஊத்தைச் சடலமடி உப்பிருந்த பாண்டமடி" என்று பாடியவர்.

### 9. பத்திரகிரியார்

பத்திரகிரியின் மன்னராக இருந்த பத்ரகிரியார் ஞானானுபவம் பெற்று சித்தரானார்.

### 10. கொங்கணர்

**பிறப்பு:** கேரளாவின் கொங்கண தேசத்தில் பிறந்தவர். போகரின் மாணவராகி அவரால் ஞானமார்க்கத்திற்கு அழைக்கப்பட்டவர்

**சிறப்பு:** திருமூலரைப் போல இவர் கூடு விட்டுக கூடு பாய்ந்தார் எனக் கருவூரார் காவியம் தெளிவுப்படுத்துகிறது.

**11. சட்டைமுனி**

போகரின் சீடர் இவர். கொங்கணா, கருவூரார் நண்பர். மற்ற சித்தர்கள் புரியாத பரி பாஷ'யில் எழுத இவர் எளிய நடையில் எழுதினார்.

**12. அகத்தியர்**

காலத்தால் மூத்த சித்தர் அகத்தியர். இவரைப் பற்றி நிறைய புராணக் கதைகள் உள்ளன. பொதிகை மலை உச்சியில் வாழ்ந்தவர். தான் என்ற தானே தான் ஒன்றே தெய்வம் என்று பாடியவர்

**13. திருமூல நாயனார்**

கயிலாய பரம்பரை சார்ந்தவர். பதஞ்சலியாரோடு கனகசபையில் ஈசனின் திருநடனம் கண்டவர் என்று திருமந்திரம் கூறுகிறது. இவர் 8000 திருமந்திரங்கள் பாடினார் என்று அகத்தியர் குறிப்பிட்டாலும் 3000 திருமந்திரப் பாடல்களே தற்போது கிடைத்துள்ளன.

**14. காகபுசுண்டர்**

காக்கை வடிவில் திரிந்த சித்தர் ஊழிக் காலத்திற்குப் பின் ஈசன் எங்கே இருப்பார்? எனும் வினாவுக்குப் பதில் தந்தவர் இவரே.

**15. மொனச் சித்தர்**

மறறொரு பெயர்: வகுளி நாதர்

பாடிய பாடல்கள்: 12

**16. போகர்**

பழனியில் பிறந்தவர். இரசவாதம் புரிந்தவர். ஒன்பது பாடாணங்களைக் கொண்டு இவர் பழனி தண்டாயுதபாணி சிலையைச் செய்தார் என்பர். சீன தேசம் வரை கென்றார் என்பர்.

**17. கருவூரார்**

கருவூரில் பிறந்தவர்.

காலம்: 10-ஆம் நூற்றாண்டு

திருப்புடைமருதூரில் ஈசனை இவர் நாறும்பூநாதனே என்று அழைக்க ஈசன் இச்சித்தருக்காகச் செவி சாய்த்தார் என்பர்.

**18. சங்கிலிச் சித்தர்**

**இயற்பெயர்:** மதங்க நாதர்

**காலம்:** 15-ஆம் நூற்றாண்டு

**சிறப்பு:** கும்மி மெட்டில் 36 பாடல்கள் பாடியவர்.

## 6. சிற்றிலக்கியங்கள்

காப்பியம் என்னும் சொல்லைத் தண்டியலங்காரம் பிரபந்தம் எனும் சொல்லாக்கத்தால் குறித்தது. அச்சொல் வடசொல் என்பதால் அதற்கு மாற்றுக் கலைச் சொல்லாகச் சிற்றிலக்கியம் எனும் சொல் பயன்பாட்டுக்கு வந்தது. சிற்றிலக்கியம் மக்கள் இலக்கியம்.

**வகைகள்:** 96 வகைப் பிரபந்தங்கள் உண்டு

### 1. அந்தாதி

ஒரு பாடலின் அந்தம் (இறுதி) அடுத்த பாடலின் ஆதியாதல் (தொடக்கம்) அந்தாதி எனப்படும். பாடலின் முன்னுள்ள அடியின் இறுதி எழுத்தோ இறுதி அசையோ இறுதிச் சீரோ தொடர்ந்து வரும் அடுத்த அடிக்கு முதலாவதாக வருவதே அந்தாதி. கலம்பகம் என்னும் சிற்றிலக்கியத்தின் ஓர் உறுப்பாகவும் அந்தாதி அமைகிறது.

### 2. உலா

காப்பியத் தலைவனின் அழகில் மயங்கிய பெண்கள் பாடுவதாக உலா இலக்கியம் அமைகிறது.

**பா வகை:** உலா இலக்கியம் கலி வெண்பாவால் இயற்றப்படுகிறது.

**மிகப் பழைய உலா:** திருக்கயிலாய ஞான உலா

**பாட்டுடைத் தலைவன்:** சிவபெருமான்

**வேறு பெயர்:** தெய்வீக உலா

**சிறப்பான உலா:** ஒட்டக்கூத்தர் இயற்றிய விக்கிரம சோழன் உலா, குலோத்துங்க சோழன் உலா, திருஞானசம்பந்தர் மீது நம்பியாண்டார் நம்பி இயற்றிய இராசராச சோழன் உலா.

### 3. கோவை

அன்புடைக் காதல் நிகழ்வுகளைத் தொடுத்துப் பாடுவது கோவை இலக்கியம்.

**சில கோவை இலக்கியங்கள்**

திருக்கோவையார்

தஞ்சை வாணன் கோவை

அம்பிகாபதிக் கோவை

கோழிக் கோவை

### 4. கலம்பகம்

கலப்பு ‚ அகம் ஸ்ரீ கலம்பகம். கலம் - 12, பாகம் - பாதி ஸ்ரீ 6, ஆக மொத்தம் 18 உறுப்புக்களை உடையது. கலம்பகம் பாடுவதில் இரட்டைப் புலவர்கள் சிறந்தவர்கள்.

திருவரங்கக் கலம்பகம், மதுரைக் கலம்பகம், கச்சிக் கலம்பகம், நந்திக் கலம்பகம் போன்றவை கலம்பக நூற்களுள் சிறந்தவை.

### 5. தூது

காதலர்கள் செய்திகளைப் பரிமாறிக் கொள்ள தூது இலக்கியம் பயன்படுகிறது.

**தூது அனுப்பப் பயன்படுகிற பொருட்கள்:** நெஞ்சு, கிளி, வண்டு, பணம், துகில், சவ்வாது, நெல், விறலி, தமிழ், புகையிலை, பொன், காக்கை

**சில தூது நூல்கள்:** அழகர் கிள்ளை விடுதூது, தமிழ் விடு தூது, பலபட்டடைச் சொக்கநாத பிள்ளை தூது.

### 6. குறவஞ்சி

குறவஞ்சி என்பதற்குக் குறப் பெண் என்பது பொருள். குறவஞ்சி ஓர் இசைக் கூத்து இலக்கியமாகத் திகழ்கிறது.

திருக்குற்றாலக் குறவஞ்சி – திரிகூட ராசப்பக்கவிராயர்.

## 7. தனிப்பாடல்கள்

வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு புலவர்களால் இயற்றப்பட்ட பல பாடல்கள் தனிப்பாடல்கள் என்று அழைக்கப்படுகின்றன. ஔவையார் பாடிய பல தனிப்பாடல்கள் சுவடிகளில் ஆங்காங்கே தொகுக்கப்பட்டுள்ளன.

சில தனிப்பாடல்கள் யார் இயற்றியது என்கிற குறிப்பின்றித் தொகுக்கப்பட்டுள்ளன.

ஒரு சோழ மன்னன் தன் அவைப்புலவர்களை அழைத்து நாளை காலைக்குள் நாலு கோடிப் பாடல்களைப் பாடவேண்டும் என்று ஆணையிட அவர்கள் ஔவையாரிடம் சென்று தங்கள் இயலாமையைத் தெரிவிக்கிறார்கள். இதற்கா இவ்வளவு வருத்தம்? என்று ஔவையார் உடனே நாலுகோடி வரும் பாடலை எழுதித்தந்தார்.

**“மதியாதார் முற்றம் மதித்தொரு கால்சென்று**
**மிதியாமை கோடி பெறும்:**
**உண்ணீர் உண்ணீர் என்று உபசரியார் தம்மனையில்**
**உண்ணாமை கோடி பெறும்**
**கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மோடு**
**கூடுதல் கோடி பெறும்.**
**கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடைய நாக்**
**கோடாமை கோடி பெறும்”**

எனும் பாடல் ஔவையாரின் தனிப்பாடலாக அமைகிறது.

**தனிப்பாடல் திரட்டு**

தனிப்பாடல் திரட்டு என்பது பல பொருள் குறித்துப் பல புலவர்கள் பல காலங்களில் எழுதிய உதிரிப் பாடல்களின் தொகுப்பு.

**பல்வேறு தொகுப்புகள்**

**சந்திரசேகர கவிராச பண்டிதர்**
**கொட்டாம்பட்டிக் கருப்பையா பாவலர்”**

மதுரை மு.ரா. கந்தசாமிக் கவிராயர் ஆகியோர் தனிப்பாடல்களைத் தொகுத்து நூல்களாய் வெளியிட்டுள்ளனர்.

திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் பல புலவர்களின் 3670 பாடல்களைத் தொகுத்து நான்கு தொகுதிகளாகத் தனிப்பாடல் தொகுப்பினை வெளியிட்டுள்ளனர்.

## ஐஐ இலக்கணங்கள்

### 1. வகைகள்

தமிழ் இலக்கணம் ஐந்து வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை,

1. எழுத்திலக்கணம்
2. சொல்லிலக்கணம்
3. பொருளிலக்கணம்
4. யாப்பிலக்கணம்
5. அணியிலக்கணம்

1. **எழுத்திலக்கணம்**: தமிழ் எழுத்துக்களின் எண், பெயர், வடிவம், மாத்திரை போன்றவற்றை விளக்குவது.
2. **சொல்லிலக்கணம்**: சொற்களின் அமைப்பு, வேர்ச் சொல், வினைகள் போன்றவற்றை விளக்குவது.
3. **பொருளிலக்கணம்:** சொல்லால் உரையாடும் பொருளை அகப்பொருள், புறப்பொருள் என இரண்டாகப் பிரித்துக் கூறுவர். இது தொல்காப்பியர் வகுத்த முறை. பிற்காலத்தவர் வடநூல் முறையைத் தழுவி அறம், பொருள், இன்பம், வீடு என்று பகுப்புச் செய்தனர். இவற்றுள் இன்பம் அகப்பொருளாகவும் அடங்கும்.
4. **யாப்பிலக்கணம்:** ஓசை நயமும், பொருட் சிறப்பும் அமையப் புலவர்களால் இயற்றப்படுவது செய்யுளாகும். இதில் செய்யுளின் அமைப்பு, உறுப்புக்கள், பா, பாலினம் ஆகியவை அடங்கியிருக்கும்.
5. **அணியிலக்கணம்:** கற்போர்க்கு இன்பம் பயக்கும் முறையில் கருத்துக்களை அழகுபடுத்திக் கூறுவது அணி எனப்படும். இது செய்யுளிற் பெரும்பான்மையாக வழங்கப்படும். அணிகள் தன்மை, உவமை, உருவகம் என பல வகைப்படும்.

### 2. கோட்பாடுகள்

இலக்கண கோட்பாடுகள் என்பது மொழி அமைப்பு, விதிமுறைகள், மொழி பற்றிய பொதுவான புரிதல்கள் பற்றிய ஒரு துறை. புறத்திணைக் கோட்பாடு என்பது புறவாழ்க்கை சார்ந்த திணைகளுக்காக வகுத்த வாழ்க்கைக் கோட்பாடாகும். எடுத்துக்காட்டாக முதற் பொருள், கருப்பொருள், உரிப்போருள் என்பன.

அகத்திணை கோட்பாடு என்பது, தமிழில் அகப்பொருள் சார்ந்த இலக்கியங்களை வகைப்படுத்தும் ஒருமுறை. அகத்திணை ஏழு வகைப்படும். அவை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்,பாலை, கைக்கிளை, பெருந்திணை என்பன.

### 3. நூல்கள்

1. தொல்காப்பியம்
2. வீரசோழியம்
3. நேமிநாதம்
4. நன்னூல்
5. இலக்கண விளக்கம்
6. தொன்னூல் விளக்கம்
7. முத்து வீரியம்
8. புறப்பொருள் வெண்பாமாலை

என்பன இலக்கண நூற்கள்.

## 4. உரைகள்

காலத்தால் முற்பட்ட இலக்கண நூல்களை நாம் எளிமையாகப் புரிந்து கொள்ள உரையாசிரியர்களின் எளிய உரைகள் பேருதவி புரிகின்றன. பல்லவர்கள், சோழர்களின் ஆட்சிக் காலத்தில் இலக்கண நூல்களுக்கு உரை எழுதும் பணிகள் சிறப்பாக நடைபெற்றன.

இறையனார் அகப் பொருள் உரையாசிரியர் - நக்கீரர்

**சிறப்புப் பெயர்:** களவியல் உரை

இலக்கண உரையாசிரியர்களுள் காலத்தால் மூத்தவர் இவர்.

**காலம்:** கி.பி. 8-ம் நூற்றாண்டு

இலக்கண மூல நூலாசிரியரின் சிறப்பைச் செய்யுள் நடையில் விளக்கிய இலக்கண உரையாசிரியர் நக்கீரர்

**தொல்காப்பிய உரையாசிரியர்:** இளம்பூரணர்

தொல்காப்பியம் முழுமைக்கும் உரை கண்டவர் இளம்பூரணர் என்கிற உரையாசிரியர்.
பிறமொழிக் கலப்பற்ற எளிய தமிழ் நடையில் உரை தந்தவர்.

**சிறப்புப் பெயர்:** உரையாசிரியர்

**பேராசிரியர்:** தொல்காப்பிய மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் எனும் நான்கு இயல்களுக்கு இவர் உரை எழுதியுள்ளார். விரிவான விளக்கமும் செறிவான உரையும் இவர் தனித்துவம்.

**சேனாவரையர்**

**சிறப்புப் பெயர்:** சொல்லுக்குச் சேனாவரையர்

தமிழிலும் சமஸ்கிருதத்திலும் புலமை பெற்ற சேனாவரையர் தொல்காப்பிய சொல்லதிகாரத்திற்கு தந்த உரை தனித்துவமானது.

**நச்சினார்க்கினியர்:**

தெளிவும் எளிமையும் நச்சினார்க்கினியர் உரையின் சிறப்புகள். நச்சினார்க்கினியரின் தொல்காப்பிய உரை சிறந்த உரை.

தெய்வச் சிலையார் - 5

சொல்லதிகாரத்திற்குத் தெய்வச் சிலையார் எழுதிய உரை நுட்பமானது, தெளிவானது.

**கல்லாடர்:** தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்குக் கல்லாடர் எழுதிய உரை சுருக்கமானது.

**நன்னூல்:**

நன்னூல் மயிலை நாதர் உரை

பவணந்தியார் இயற்றிய நன்னூல் இலக்கண நூலுக்கு மயிலை நாதர் எழுதிய உரை மிகப் பழமையானது.

தொல்காப்பிய உரையாசிரியர் இளம்பூரணரின் உரை நெறியைப் பின்பற்றி மயிலைநாதா நன்னூல் உரையை எழுதியுள்ளார்.

விருத்தியுரை எனும் உரையைச் சங்கரநமச்சிவாயர் நன்னூலுக்கு எழுதியுள்ளார்.

நன்னூலுக்கு உரை எழுதிய பிற உரையாசிரியர்கள்

இராமானுசக் கவிராயர்

யாழ்பாணத்து ஆறுமுக நாவலர்

ஆண்டிப் புலவர்

கூழங்கைத் தம்பிரான்

## 6. நிகண்டுகள்

சொல் தொகை, தொகுப்பு, கூட்டம் என வழங்கப்படுபவையே நிகண்டுகள் எனப்படும்.

**திவாகரம்**

கி.பி. 8-ம் நூற்றாண்டில் திவாகர முனிவரால் இயற்றப்பட்ட திவாகர நிகண்டே காலத்தால் முற்பட்டது.

**வேறு பெயர்:** சேந்தன் திவாகரம்

திவாகர நிகண்டிவில் அடங்கிய தொகுதிகள்

1. தெய்வப் பெயர்
2. மக்கட் பெயர்
3. விலங்குப் பெயர்
4. மரப் பெயர்
5. இடப் பெயர்
6. பொருட் பெயர்
7. செயற்கை வடிவப் பெயர்
8. பண்புப் பெயர்
9. செயல் பற்றிய பெயர்
10. ஒலி பற்றிய பெயர்

போன்றவை குறித்த விளக்கங்கள் திவாகரத்தில் உள்ளன.

## 7. ஒப்பிலக்கியம்

இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மொழிகளைச் சேர்ந்த படைப்புகளையும் படைப்புப் போக்குகளையும் ஒப்பிட்டுத் தரமான படைப்பை இனம் காணும் முயற்சியே ஒப்பிலக்கியம் (ஊழஅியசயவளைந டுவைநசயவரசந) என அழைக்கப்படுகிறது.

**நோக்கம்**

இரு இலக்கியங்களை ஒப்பிடுவதன் நோக்கம் ஓர் இலக்கியத்தை விட இனனொரு இலக்கியம் தரமானது என்று குறிப்பிடுவதற்கு அல்ல. ஒவ்வொன்றின் தனித்தன்மையை அறிவதும் அவற்றின் நேர்மறையான கூறுகளை அறிவதுமே ஆகும்.

## 8. ஒப்பிலக்கணம்

திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எனும் நூலை எழுதியவர் அயர்லாந்து நாட்டைச் சார்ந்த இராபர்ட் கால்டுவெல். 08.01.1838 அன்று சென்னைக்குக் சமயப் பணியாற்ற வந்தவர் தமிழ் மொழி கற்றார்.

1841-ல் குரு பட்டம் பெற்று திருநெல்வேலி வந்தார். இடையன்குடி எனும் ஊரில் 50 ஆண்டுகள் தங்கி தமிழ்ப் பணியும் சமயப் பணியும் ஆற்றினார்.

**திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்**

ஒப்பியல் ஆய்வில் ஈடுபாடு கொண்ட கால்டுவெல் 1856-ம ஆண்டில் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எனும் ஆய்வு நூலை வெளியிட்டார்.

# III இலக்கியத் திறனாய்வு (Criticism)

இலக்கியத்தில் உள்ள அழகியல் கூறுகளின் பண்பையும் மதிப்பையும தீர ஆய்வு செய்து தீர்ப்பளிப்பதே திறனாய்வு ஆகும்.

**திறனாய்வின் பணிகள்**

ஓர் இலக்கியப் பனுவலை ஏதேனும் ஒரு கோட்பாட்டின் அடிப்படையில் பகுத்து ஆராய்வதும் அதன் உள்ளார்ந்த சிறப்புகளைத்தெளிவாக மதிப்பிடுவதும் அதன் தரம் குறித்து தீர்ப்புக் கூறுவதும் இலக்கியத் திறனாய்வின் பணியாகும்.

**திறனாய்வு வகைமை கோட்பாடு**

கோட்படுகளின் அடிப்படையில் திறனாய்வு பல்வேறு வகைகளாகப் பகுக்கப்பட்டுள்ளன.

**பெண்ணியத் திறனாய்வு**

பெண்ணியத் திறனாய்வு என்று திறனாய்வைப் பல்வேறு வகைகளாகப் பகுக்கலாம்.

கலை இலக்கியத் துறையில் பெண்கள் எதிர்நோக்கும் சிக்கல்களை பெண்ணிய நோக்கில் ஆராய்கிற திறனாய்வு பெண்ணியத் திறனாய்வு என்று சொல்லப்படும். பெண்களுக்கான இலக்கியக் கொள்கையை நிறுவுதல், பெண்களின் பார்வையிலான படைப்புலகை அடையாளம் காணுதல், பெண் மொழியின் தனித்தன்மைகளைக் கண்டறிதல், பெண் நோக்கு அடிப்படையில் இலக்கியப் பிரதியைப் புரிந்துகொள்ளுதல் ஆகியன பெண்ணியத் திறனாய்வின் அடிப்படைக் கூறுகளாய் அமைகின்றன.

**பின்நவீனத்துவத் திறனாய்வு**

மூடிமறைக்கப்பட்ட சமூக அவலங்களை இலக்கியத்தின் மூலம் கட்டுடைக்க பின்நவீனத்துவத் திறனாய்வு முயல்கிறது. கட்டுடைத்தலின் மூலமாக மையப்புள்ளி என்கிற ஒன்று இத்திறனாய்வில் அகற்றப்படுகிறது. மையத்தை நோக்கி வரையப்படும் வட்டம் உடைக்கப்படுவதால் பின் நவீனத்துவம் ஒழுங்கிற்கும் முழுமைக்கும் நேர்கோட்டுப் பார்வைக்கும் எதிரானது. இத்திறனாய்வு, கருத்துகளின் நிச்சயமற்ற தன்மையை வலியுறுத்துகிறது. காலத்தைக் கடந்த உண்மை குறித்து இத்திறனாய்வு கேள்வி எழுப்புகிறது. பின் நவீனத்துவப் பாத்திரங்கள் ஒன்றுக்கொன்று முரண்படுகின்றன. தொடர்ச்சியின்மையும் உடையதாக இத்திறனாய்வு அமைகிறது.

**மார்க்சியத் திறனாய்வு**

மார்க்சியம் எனும் பொதுவுடைமைத் தத்துவத்தின் அடிப்படையில் நிகழ்த்தப்படும் திறனாய்வு மார்க்சியத் திறனாய்வாக அமைகிறது. சமூகத்தின் போக்கினைப் புரிந்து கொள்வதன் மூலமே இலக்கியத்தைப் புரிந்து கொள்ளமுடியும் என்று இத்திறனாய்வு விளக்குகிறது. படைப்பின் உள்ளடக்கம் முற்போக்குச் சிந்தனையோடு அமைவதை இத்திறனாய்வு உறுதி செய்கிறது. மார்க்சியத்தின் கலை, இலக்கியக் கோட்பாடு புறத்திலிருந்து தொடங்குகிறது.

**அழகியல் முறைத் திறனாய்வு**

இரசனை முறைத் திறனாய்வு என்று அழைக்கப்படும் அழகியல் திறனாய்வு உருவத்தை முதன்மைப் படுத்துவதாக அமைகிறது.ஓர் இலக்கியப் படைப்பின் நீடித்த சிறப்பிற்கு அதன் வடிவமே முதன்மையானது. அதுவே இலக்கியத்திற்குக் கலையழகைத் தரக்கூடியதாகத் திகழ்கிறது என்பதே அழகியல் திறனாய்வின் அடிப்படையாகும். மனப்பதிவு முறையில் இத்திறனாய்வு முறை அமைகிறது. ரசிகமணி டி.கே.சி. போன்றோர், கவிதைக்கு அதன் கருவல்ல, உருவமே முக்கியம் என்று கருதினர். கவிதையை ரசிக்க வேண்டுமே தவிர அதை இன்னொரு கவிதையோட ஒப்பு நோக்கி மதிப்பீடு செய்வதை இத்திறனாய்வு முறை மறுக்கிறது. கல்கி, ராஜாஜி, அ. சீனிவாசராகவன், நீதிபதி மகராஜன், அ.ச. ஞானசம்பந்தன் ஆகியோர் இத்திறனாய்வு முறையில் இலக்கியத்தை ஆராய்ந்தனர்.

**பாராட்டு முறைத் திறனாய்வு:**

ஓர் இலக்கியத்தை வியந்து பாராட்டும் திறனாய்வே பாராட்டு முறைத் திறனாய்வு எனப்படும். விளக்கமுறைத் திறனாய்வாக இத்திறனாய்வைக் கொள்ளலாம். ஓர் இலக்கியத்தின் சிறப்பை, அதன் தனித்தன்மையை இரசிகர் மனத்தில் ஆழப் பதியுமாறு விளக்குதலே இத்திறனாய்வின் நோக்கமாகும்.

**விதிமுறைத் திறனாய்வு**

கோட்பாட்டின் அடிப்படையில் ஓர் இலக்கியத்தை அணுகுதல் விதிமுறைத் திறனாய்வு என்று அழைக்கப்படுகிறது.

**இது தவிர பின்வரும் திறனாய்வு முறைகளும் தமிழில் உண்டு.**

1. பகுப்புமுறைத் திறனாய்வு
2. விதிமுறைத் திறனாய்வு
3. வரலாற்று முறைத் திறனாய்வு
4. ஒப்பியல் முறைத் திறனாய்வு
5. மனப்பதிவு முறைத் திறனாய்வு
6. உளவியல் திறனாய்வு
7. சமூகவியல் திறனாய்வு
8. அறிவியல் திறனாய்வு
9. தொன்மவியல் திறனாய்வு
10. மொழியியல் திறனாய்வு
11. குறியியல் திறனாய்வு
12. அமைப்பியல் திறனாய்வு

## 1. இலக்கிய வகைமைக் கோட்பாடு

இலக்கியத்தை ஒரு பெரு மரமாக உருவகம் செய்தால் கிளையாக, பூவாக, மொட்டாக, இலையாக, உணர்ச்சி, கற்பனை, வடிம், பொருள் ஆகியவற்றைக் குறிக்கலாம். ஓர் இலக்கியம் காலம் கடந்து போடப்படக் காரணம் அதன் அறிவுத் தளம் ஆகும். இலக்கியம் புகழ் பெற அதன் உருவமும் உள்ளடக்கமும் மிக முக்கியம். இதை வெளிப்படுத்த உதவும் மொழிநடை இன்றியமையாதது.

**உணர்ச்சி**

வாசிக்கும்போது சிறப்பான உணர்ச்சியைத் தராத இலக்கியம் வாசகர்களால் புறந்தள்ளப்படும். உணர்ச்சி இலக்கிய உறுப்புகளில் ஒன்று. உணர்ச்சியை உண்மை உணர்ச்சி என்றும் உண்மையற்ற உணர்ச்சி என்றும் வகைப்படுத்தலாம். தரமான இலக்கியம் உண்மையான உணர்ச்சியைத் தூண்டும். தொல்காப்பியர் ஒருவர் பெறும் அனுபவத்தை ஒட்டி நடைபெறும் மாற்றங்களை மெய்ப்பாடு என்கிறார். எண்வகை மெய்ப்பாடு என்று தொல்காப்பியர் குறிப்பிட் வடமொழி நூலார் இதை நவரசம் என்கின்றனர். அவலமே சிறந்த உணர்வு என்று அரிஸ்டாட்டில் குறிப்பிட்டார். தமிழிலக்கியங்களில் சிருங்காரம், அவலம், அச்சம், இரக்கம் ஆகிய சுவைகள் இடம்பெறுகின்றன. சங்க இலக்கியப் பாடல்கள் யாவும் ஒரே உணர்ச்சியையே பெற்றுள்ளன.

ஐம்பெருங்காப்பியங்களும், ஐஞ்சிறுகாப்பியங்களும், புராணங்களும் வெவ்வேறு உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதாய் அமைகின்றன. மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலன்களுள் உருவாகும் உணர்ச்சிகளை இலக்கியம் தனதாக்குகிறது. சீவக சிந்தாமணியின் ஒவ்வொரு இலம்பகத்திலும் இந்த உணர்ச்சிப் பெருக்கை அறிய முடிகிறது. மகாகவி பாரதியின் பாடல்கள் இன்னும் வாசிக்கவும் பாடவும் மேற்கோள்களாக மேடையில் பேசவும் பயன்படுவதன் காரணம் காலம் கடந்தும் இன்றும் நின்று நிலைக்கும் உணர்ச்சியே காரணமாக அமைகிறது.

**கற்பனை:**

ஓர் இலக்கியப் பிரதியை வலுவான பிரதியாக மாற்ற அதன் கற்பனைத் திறன் சரியான காரணமாக அமைகிறது. கற்பனை, புதிர் நிலை கொண்டதாகவும் விளக்க இயலாததாகவும் திகழ்கிறது. எதையும் நாம் கண்களால் பார்க்கும் திறனே கற்பனைக்குக் காரணமாக அமைகிறது. என்றோ கண்களால் கண்ட காட்சிகளை நினைவுக்குக் கொண்டு வந்து படைப்பின் ஊடே கொண்டு வருவதில் படைப்பாளர் தன் திறனைக் காட்டுகிறார். மூலத்தோடு நகலை ஒப்பிடும் வாசகன் இன்ப நிலையை அடைகிறான். படைப்பாளி மொழி வழி எழுதும் காட்சியை வாசகர் தம் மனக் காட்சியில் கொண்டு வருவார்.

## 2. உருவம் (Form)

இலக்கியத்தின் வடிவம், அமைப்பு, மொழிநடை போன்றவை உருவம் ஆகும். அது கவிதையின் மொழி, அமைப்பு போன்றவற்றை உள்ளடக்கியது. மொழி, அமைப்பு என்பது சரித்திரம் தோன்றுவதற்கு முன்னர் எல்லா மொழிகளிலும் கவிதைகள் தோன்றியுள்ளன. அது உணர்வை நிரல்பட அமைத்த ஒலிகளால் வெளியிடுகின்றமையால் அதன் அமைப்பு என்பது இலக்கியக் கலையாகிறது. உருவம், உள்ளடக்கத்தை வெளிப்படுத்தவும்,

வாசகர்களைக் கவரவும் உதவுகிறது. உருவம் என்பது இலக்கியத்தின் வெளிப்படையான அம்சமாகும்.

## 3. உள்ளடக்கம்

உருவம், உள்ளடக்கம் இரண்டும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவை. உள்ளடக்கம் உருவத்தின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. உருவம் உள்ளடக்கத்தை எடுத்துச் செல்கிறது. ஒரு நல்ல இலக்கியப் படைப்பு என்றால் அதில் உள்ளடக்கம் மற்றும் உருவம் இரண்டும் சரியான விகிதத்தில் கலந்திருக்க வேண்டும். உள்ளடக்கம் மற்றும் உருவம் இரண்டும் ஒருமித்து ஒரு முழுமையான அர்த்தமுள்ள இலக்கியப் படைப்பை உருவாக்குகின்றன. அதனால் தான் கவிஞன் ஒரு செயலையோ பொருளையோ காண்பதற்கும், ஏனையோர் காண்கின்றதற்கும் பெருத்த வேறுபாடு காணப்படுகிறது. பொருள்களை ஊடுருவி நிற்கும் அழகினைப் பருகவல்லவர் கவிஞன். அதனால்தான் அவன் கவிதையும் அவ்வழகினை வெளிப்படுத்தவல்லதாய் இருக்கும். இதிலிருந்து உள்ளடக்கம் உருவகமாக மாறுகிறது. உருவம் உள்ளடக்கமாக இயங்குகிறது எனலாம்.

## 4. உத்தி

இலக்கியத்தில் உத்தி என்பது ஒரு எழுத்தாளரின் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான திறமையான வழிமுறைகள் அல்லது தந்திரங்களைக் குறிக்கிறது. இது ஒரு படைப்பின் கருத்தை வெளிப்படையாகவும், ஆழமாகவும், அழகியலோடு வெளிப்படுத்துவதற்கு உதவுகிறது. உண்மை, உருவகம், குறியீடு, அங்கதம், நனவோடை (ளுவசநயஅ ழக ஊழஉெளைழரளநௌள) பின்னோக்கு உத்தி போன்றவை இலக்கியத்தின் உத்திகளாக இடம்பெறுகின்றன. இலக்கியத்தின் உத்திகள் ஒரு படைப்பின் அழகை, ஆழத்தை மற்றும் கருத்தை வெளிப்படுத்துவதற்கு பெரிதும் உதவுகின்றன.

## 5. திறனாய்வு அணுகுமுறைகள் (Criticism)

'கிறிட்டிசிசம்' எனும் சொல்லிற்குத் திறனாய்வு, ஆராய்ச்சி, ஆய்வு, மதிப்பீடு, விமர்சனம் போன்ற பல கலைச் சொற்கள் நடைமுறையில் பயன்படுத்தப்படுகின்றன. நூலின் உட்பொருளைத் திறனாய்ந்து தெளிதலே விமர்சனம் எனக் குறிக்கப்பட்டுள்ளது. திறனாய்வு என்பது ஆராய்ச்சித் துறையாக வளர்ந்துள்ளது. ஓர் இலக்கியத்திற்குள் உட்பொதிந்துள்ள தனித்துவமாக கூறுகளைத் திறனாய்வு வெளிக்கொண்டு வருகிறது.

**ஆய்தல்**

கீரை ஆய்தல் எனும் சொல்லைக் கிராமப்புற மக்கள் இன்றும் பயன்படுத்துகின்றனர். பரந்து பட்ட நிலத்திலிருந்து எத்தனையோ கல்வகைகளிலிருந்து உணவுக்குப் பயன்படும் கீரையை மட்டும் ஆய்ந்தெடுத்தலே ஆய்தல் என்று சொல்லப்படும்

ஆய்தல் எனும் சொல்லுக்குத் தொல்காப்பியர் "உள்ளதன் நுணுக்கம்" என்கிறார். யார் எதைச் சொன்னாலும் அதை அப்படியே ஏற்காமல் ஏன்? எதற்கு? எதனால்" என்று வினாக்கள் கேட்டு அதன் மெய்ப்பொருள் காண்பதையே ஆய்தல் என்கிறோம். ஆய்வு, மனம்போன போக்கில் அமையாமல் திட்டமிட்ட முறைமைப்படி செய்யப்படுகிறது. ஒரு படைப்பின் திறனை ஆய்தலே திறனாய்வு ஆகும்.

**நூலின் உட்பொருள்**

தமிழ்மொழி உலகின் முதல் மொழி

மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகள் தமிழ் மொழியிலிருந்து பிறந்த மொழிகள்.

தமிழ் மொழிக் குடும்பம் இருந்ததற்கான சான்றுகளை இந்நூலில் தந்துள்ளார். திராவிட மொழிகள் தனித்துவமிக்கன என்று கூறினார்.

திராவிட மொழிகளின் நூல் தொடக்கத்தில் கால்டுவெல், திராவிட மொழிகளுக்குள்ளே மிகப் பழைய காலத்திலேயே திருந்திய நிலை பெற்றதும்,நனி நாகரிகம் மிக உடையதாக ஆககப் பெற்றதும் பல வகையில் அவ்வின மொழிகளின் பிரதிநிதியாக விளங்குவதுமாகிய தமிழ் மொழியின் அமைப்பு முறை பற்றிய விளக்கங்களைப் பெரும் அளவில் தருவதே இந்நூலாசிரியரின் சிறப்பு நோக்கமாகும்" என எழுதினார்.

**திராவிடம் எனும் சொல்**

தென்னிந்தியாவில் பேசப்படும் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய திராவிட மொழிகளை மேலை நாட்டார் மலபார் மொழிகள் என்றும் தமுலிக் என்றும் குறிப்பிட்டனர்.

தமிழ் என்பது ஒரு குறிப்பிட்ட மொழியைக் குறிக்கும் சொல். அம்மொழிக் குடும்பத்தில் உள்ள மொழிகளைக் குறிக்கத் திராவிடம் எனும் சொல்லைத் தேர்ந்தெடுத்ததாகக் கால்டுவெல் கூறுகிறார்.

திராவிட மொழிகள் தனிக் குடும்பம் சார்ந்தவை அல்ல என்னும் அவை இந்தோ ஐரோப்பிய மொழிகளுடன் தொடர்புடையன அல்ல என்றும் நிறுவினார்.

பண்பட்ட திராவிட மொழிகள்

தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளு என்பன.

பண்படா திராவிட மொழிகள்

தோடா, கோடா, கோண்டு என்பன என்று கால்டுவெல் வகைப்படுத்தினார்.

## 6. இலக்கியக் கொள்கைகள்

கொள்கை என்பது வுாநழசல என்னும் ஆங்கிலச் சொல்லின் தமிழாக்கமாக அமைந்த சொல் ஆகும். வுாநழசல என்னும் ஆங்கிலச் சொல்லிற்கு தமிழில் ஊகக் கருத்து, கலந்தாய்வுத் தொகுதி, தற்காலமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்ளை என்றெல்லாம் பொருள் கொள்ளலாம்.

இலக்கிய வரலாறு, இலக்கியத் திறனாய்வு, இலக்கியக் கொள்ளை இவை மூன்றும் ஒரு தொடர்நிலை அமைப்பாக நின்று இலக்கியத்தின் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாக அமைவன.இ

ஓரிலக்கியப் படைப்பின் உட்பொருள், உத்தி, வடிவம், பயன், நோக்கு முதலியவற்றின் (வுாந நளளநஉந ழக வாந நளளநவெயைடள ழக ய டவைநசயசல றழசம) வழியே ஆய்ந்தறியலாகும் உண்மைகளின் பிழிவே இலக்கியக் கொள்ளை எனலாம்.

ஓரிலக்கியம் படைக்கப்பட்டபோது நிலவிய காலச் சூழல், அவ்விலக்கியத்தின் அமைப்பு, பொருண்மை, இலக்கியப் படைப்பாளன் கூற நினைத்த கருத்து, அக்கருத்தினை உணர்த்தும் முறை இவை அவ்விலக்கியத்தின் கொள்கைகள் எனக் கூறலாம்.

**ஒரு நூலின் இலக்கியக் கொள்கை இதுவென திறனாய்வாளர் இருவழியாக அறியலாம்.**

1. படைப்பாளன், நூலின் கொள்கைகளாக நூலுள் சொல்லியிருப்பதையே அவ்விலக்கியத்தின் கொள்கையாகக் கொள்ளுதல்
   **எடுத்துக்காட்டாக**, இளங்கோவடிகள் தாம் இயற்றிய சிலப்பதிகாரத்தில்,

   **“அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்று ஆவதூஉம்**
   **உரைச்சொல் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும்**
   **ஊழ்வினை உருத்து வந்து ஊட்டலும்”**

என்ற பாடல் வரிகள் சிலப்பதிகாரத்தின் இலக்கியக் கொள்கை எனக் கொள்ளலாம்.

2. திறனாய்வாளர் ஒருவர் படைப்பாளனொருவனின் நூல் அல்லது நூல்களின் பாடுபொருள் வழிச் சென்று படைப்பாளன் கூறிய கருத்துக்களின் திரட்சியைக் கண்டு அந்நூல் அல்லது நூல்களின் கொள்கை அல்லது ஆசிரியரின் கொள்கை இதுவென விண்டுரைத்தல்.

**எடுத்துக்காட்டாக** ஒட்டக்கூத்தரின் நூல்களை ஆராய்நத முனைவர் ச. சிவகாமி அவர்கள், வரலாற்றுச் செய்திகள் பலவற்றைத் தம் நூலில் கூறியுள்ளமையைக் கூறலாம்.

இலக்கியங்கள் காலந்தோறும் மாறுவதனால் இலக்கியக் கொள்கைகளும் காலந்தோறும் மாறும் என்பதில் ஐயமில்லை

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | கலித்தொகைநூல் குறிப்புவரைக. | K2 | CO2 | PO4 |
| 2 | திறனாய்வுஅணுகுமுறைகள் யாவை? | K3 | CO3 | PO5 |
| 3 | சித்தர் பாடல்கள் குறித்துஎழுதுக. | K4 | CO4 | PO1 |
| 4 | நிகண்டுகள் என்றால் என்ன? | K5 | CO5 | PO2 |
| 5 | இலக்கியகொள்கைகள் விளக்குக. | K1 | CO4 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | ஐஞ்சிறுகாப்பியங்களைவிரிவாகவிளக்குக. | K2 | CO1 | PO4 |
| 2 | இலக்கியத்தின் உருவம்,உள்ளடக்கம்,உத்திகுறித்துஆராய்க. | K1 | CO2 | PO6 |
| 3 | பக்தி இலக்கியங்களைவகைப்படுத்துக. | K4 | CO2 | PO5 |
| 4 | ஒப்பிலக்கியம்,ஒப்பிலக்கணம் தெளிவுபடுத்துக. | K3 | CO4 | PO6 |
| 5 | பழந்தமிழ் இலக்கியங்களைதொகுத்துரைக்க. | K5 | CO1 | PO3 |

# அலகு – 2 (UNIT – II)

## மொழி, கலை, பண்பாட்டு வரலாறுகளும் தத்துவங்களும்

### ஐ மொழி வரலாறு

1. வரலாறு மற்றும் மொழியியல் நோக்கு
2. சொற்களஞ்சியங்கள்
3. பொருட்களஞ்சியங்கள்
4. அடைவுகள்
5. அகராதியியல்
6. நோக்கு நூல்கள்
7. மொழிக்குடும்பம்
8. திராவிட மொழிகள்
9. பிறமொழிக் கலப்பு
10. கிளை மொழிகள்
11. தமிழின் தனித்தன்மை
12. பிறமொழிகளில் தமிழின் செல்வாக்கு

**ஐஐ தமிழக வரலாறு**

சங்க காலம் தொடங்கி சமகாலம்
வரையிலான வரலாற்றுப்
பொதுப் பார்வை

**ஐஐஐ தமிழகப் பண்பாடு**

1. தொல்லியல்
2. நாணயவியல்
3. கல்வெட்டியல்
4. சுவடியியல்
5. பழக்கவழக்கங்கள்
6. நம்பிக்கைகள்
7. உணவு
8. உடை
9. திருவிழா
10. விளையாட்டு
11. வழிபாட்டு நெறி

12. சிந்தனை நெறி
13. அறிவியல் நெறி
14. தமிழர் மருத்துவம்

**ஐஏ நாட்டுப்புறவியல்**

1. பாடல்கள்
2. கதைகள்
3. கதைப்பாடல்கள்
4. சடங்குகள்
5. நாட்டார் நடனம்
6. நாடகங்கள்
7. வழிபாடுகள்
8. திருவிழாக்கள்
9. பெருங்கோயில்

**ஏ கலைகள்**

1. கட்டடம்
2. சிற்பம்
3. ஓவியம்
4. இசை
5. ஆடல்

**ஏஐ நாடகங்கள்**

1. கூத்து வகைகள்
2. நாடக இயக்கங்கள்

**ஏஐஐ இயக்கங்கள்**

1. தேசியம்
2. திராவிடம்
3. பொதுவுடமை
4. தனித்தமிழ்
5. சுயமரியாதை

**ஏஐஐஐ இசங்கள் (தத்துவங்களும், கொள்கைகளும்)**

1. ரியலிசம்
2. ஸ்டக்சுரலிசம்
3. எக்ஸிஸ்டென்சியலிசம்
4. யோஸ்ட் மாடர்னிசம்
5. கியூபிசம்
6. மாக்சியம்

7. சோசலிசம்
8. பெண்ணியம்
9. தலித்தியம்

# அலகு – 2 (UNIT – II)

## மொழி, கலை, பண்பாட்டு வரலாறுகளும் தத்துவங்களும்

### ஐ மொழி வரலாறு

### 1. வரலாறு மற்றும் மொழியியல் நோக்கு)

மனிதர்கள் மொழியை எப்போது பயன்படுத்தத் தொடங்கினர் என்ற வரலாறே மொழி என வழங்கப்படுகிறது.

**பேச்சு மொழியின் தோற்றம்**

13.7 பில்லியன் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய அண்டத்தில் மனித இனம் 300,000 ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியதாய் அறிவியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.

காடுகளில் வாழ்ந்து கொண்டிருந்த மனிதர்கள் சப்தத்தின் மூலம் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தினர். ஒழுங்குபடுத்தப்பட்ட அச்சப்தம் பேச்சாக மாறியது. உலகில் பேச்சு மொழி தோன்றி சுமார் 40,000 ஆண்டுகள் ஆகியிருக்கலாம் என்று மானுடவியல் அறிஞர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

**எழுத்து மொழி**

பேச்சு மொழி தோன்றிய பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின்னரே எழுத்து மொழி தோன்றியது.

காட்டு வாழ்க்கை வாழ்ந்த மனித இனம் ஆற்றுச் சமவெளிகளில் வேளாண் சமூகமாக உருப்பெற்றபோது சுமேரிய மொழியும், எகிப்திய மொழியும், சீன கிரேக்க மொழிகளும் தமிழ் மொழியும் எழுத்து மொழியாக உருவாயின.

**"எழுத்து எனப்படுவ**
**அகர முதல னகர இறுவாய்**
**முப்ப.்.தென்ப"**

என்று தொல்காப்பியர் எழுத்ததிகார நூன்மரபில் இலக்கிணம் வகுத்துள்ளார்.

**திராவிட மொழிக் குடும்பம்**

திராவிட மொழிக் குடும்பத்தில் 133 மொழிகள் உள்ளதாய் மொழியியலாளர்கள் கருத்து தெரிவித்தாலும் அவற்றில் உள்ள அனைத்து மொழிகளையும் தனி மொழிகளாகக் கொள்ளாமல் வட்டார வழக்குகளாகவே கருதுகின்றனர். அதில் தனித்துவம் பெற்ற மொழியாகத் தமிழ் திகழ்கிறது.

**தென்திராவிட மொழிகளில் தமிழ்**

ஏனைய திராவிட மொழிகளை ஒப்பிடும்போது தமிழில் வடசொற்கள் குறைவு. அவ்வாறு வடசொல் வந்தாலும் தொல்காப்பியம்,

> **“வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ**
> **எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே”**

என்று அச்சொற்களைத் தமிழ் ஒலியமைப்பிற்கேற்ப மாற்றிப் பயன்படுத்தியுள்ளனர். மிகப் பழமையான எழுத்து வடிவில் உள்ள இலக்கியங்கள் தமிழில் தான் அதிகம்.

**தமிழின் எழுத்து வடிவமும் பேச்சு வடிவமும் ஒன்றாகவே இருக்கிறது.**
**ஏனைய திராவிட மொழிகளைவிடத் தமிழில் சொல்வளம் அதிகம்.**
**பிறமொழித் தாக்குதல்களும் தாக்கங்களும் தமிழில் மிகக் குறைவு.**

தொல்காப்பியம், நன்னூல் யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம் என்று மிகச் செழுமையான இலக்கண நூல்கள் மிகப் பழமையான காலத்திலேயே தோன்றி தமிழ் மொழியின் தொன்மைக்குச் சான்று பகர்கின்றன.

**தமிழ் எனும் மந்திரச் சொல்**

தமிழென் கிளவி, தமிழ் கூறும் நல்லுலகம், தமிழ்கெழு கூடல் என்னும் மந்திரச் சொற்களை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இலக்கண இலக்கிய நூல்களில் பயன்படுத்தி உள்ளதை உணரமுடிகிறது. சங்க இலக்கியங்களில் தமிழ் என்பதற்கு மொழி, நாடு, மக்கள் எனும் பல பொருட்கள் இருப்பதைக் காணமுடிகிறது. தமிழ் எனும் சொல்லுக்கு இனிமை எனும் பொருள் உண்டு என்று இராகவையங்கார் எடுத்துக் காட்டியுள்ளார்.

**தமிழ் எனும் சொற்பொருள்**

தமிழ்ப் பேரகராதி தமிழ் என்பதன் வேர்ச் சொல் தமி என்பதாக விளக்குகிறது. தமி என்றால் தனிமையானது, இணையற்றது என விளக்குகிறது.

**அறிஞர் ச.வே.சு கருத்து**

தமிழ் என்பதைத் தம் - இழ் அதாவது தம் சொந்தமான இனிமையான ஒலி என்று ச.வே. சுப்பிரமணியன் கருத்துரைத்தார்.

**அறிஞர் கமில் சுவலபில்**

தமிழ் என்பதைத் தம்-வேர் உருபன் (தனிப்பொருளுடையது) இழ் - ஆக்க உருபன் என்பவை இணைந்த வடிவம் எனக் கொள்ள வேண்டும் என்கிறார் சுவலபில்.

தம் ஈ மிழ் - நம் சொந்த மொழி என்பதையே அடிச்சொல்லாகக் கருதலாம் என்கிற கருத்தும் உள்ளது.

**பண்டைத் தமிழ் எழுத்து**

தமிழ் நாட்டின் மிகப் பழைமையான எழுத்து தென்னிந்திய பிராமி எழுத்தாகக் கருதப்பட்டது. இதன் காலம் கி.மு. 3, 2-ம் நூற்றாண்டு எனக் கருதினர்.

**உயிராய்த் திகழும் உயர்தனிச் செம்மொழி**

மொழி நம் பண்பாட்டின் விழி. மொழியில்லாத வாழ்க்கை ஒளியில்லாத வாழ்க்கை. மூச்சைப் போல் மொழியும் முக்கியம். பேச்சைப் போல் அதில் உள்ளுறைந்து வாழ்வின் வழியை நமக்குக் காட்டும் தாய்மொழி அதைவிட முக்கியம். அறிதலுக்கும், தெரிதலுக்கும், புரிதலுக்கும், உணர்தலுக்கும், ஆராய்தலுக்கும் காரணமான உயிர் ஊடகம் மொழிதான். மனித இனத்தின் நாகரிகத்தின் அடையாளம் மொழி, பண்பாட்டின் அடையாளம் தாய்மொழி, தாயிடமிருந்து கற்கும் மொழி தாய்மொழி, தாயாக நம்மைக் காக்கும் மொழி நம் தாய்மொழி

**திராவிடமொழிகளின் தாய்**

தமிழ்க்குடியின் நீண்ட வரலாறும் அதன் தொன்மையும் தொடர்ச்சியும் நம் தாய்மொழியில்தான் பொதிந்துவைக்கப்பட்டுள்ளது. 5000 ஆண்டுப் பழமை உடைய ஹரப்பா, மொகஞ்சதாரோ புதைபொருட்களில் இடம்பெற்றுள்ள உருவ எழுத்துகள் தமிழ் எழுத்துகளே என்று ஹிராஸ் பாதிரியார் போன்ற அறிஞர்கள் கருதுகின்றனர். தமிழ் எழுத்து மொழி மூவாயிரம் ஆண்டுகள் பழமையானது எனக்கொண்டால் தமிழ்ப் பேச்சுமொழி ஐயாயிரம் ஆண்டுகள் பழமையானது என்று புரிந்துகொள்ளலாம். திராவிட மொழிக்குடும்பத்தின் தாயாகத் திகழ்வது தமிழ்தான் என்றும் தமிழிலிருந்துதான் திராவிட மொழிகள் தோன்றின என்றும் கால்டுவெல் போன்ற அறிஞர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

**தலைமுறை குறித்த நுண்ணறிவு**

தமிழ் எல்லாவற்றையும் வரையறை செய்துவைத்திருக்கிறது. ஒருதலைமுறையை அறுபது ஆண்டுகள் எனக் கணக்கிட்டு ஏழு தலைமுறை தமிழர்கள் குறிப்பிட்டது 480 ஆண்டுகளைத்தான். நம்மை முதல் தலைமுறையாகக் கருதி கணக்கில்

எடுத்துக்கொண்டால் நம் தாய் தந்தையர் இரண்டாம் தலைமுறை, நம் பாட்டன் பாட்டி மூன்றாம் தலைமுறை, பூட்டன் பூட்டி நான்காம் தலைமுறை, ஓட்டன் ஓட்டி ஐந்தாம் தலைமுறை, சேயோன் சேயோள் ஆறாம் தலைமுறை, பரன், பரை ஏழாம் தலைமுறை. நாம் பிறந்தது ஹேவிளம்பி ஆண்டில் நமக்கு அறுபது வயதாகும் போது அதே ஹேவிளம்பி ஆண்டு வந்திருக்கும். இதுபோல் ஆயிரமாயிரம் சான்றுகளைத் தமிழ் தன்னகத்தே கொண்டதாக அமைகிறது.

**காலம் குறித்த தெளிவு**

காலம் குறித்த தெளிவை நாம் சங்க இலக்கியப் பதிவுகளிலிருந்து உணரமுடிகிறது. நாளின் உட்பிரிவுகளை யாமம், மாலை, வைகறை, ஏற்பாடு, நண்பகல் என்று அழகாகப் பகுத்தும், ஆண்டின் உட்பிரிவுகளை குளிர்காலம், கார்காலம், இளவேனில், முதுவேனில், பின்பனி என்று பகுத்தும் புவியியல் அடிப்படையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐந்துவகையாகப் பகுக்கவும் அறிந்திருந்தது அவர்களின் நுண்மான் நுழைபுலத்திற்குச் சான்றாக அமைகிறது.

**தாய்மொழி**

அறிவின் வளர்ச்சி தாய்மொழியால் மட்டுமே சாத்தியம். தாய்மொழியே நம் அடையாளம். தாய்மொழியே நம் பண்பாட்டின் நீட்சி. சிந்தையில் விந்தையை ஏற்படுத்தும் ஆற்றல் தாய்மொழிக்கு மட்டுமே உண்டு. மக்களால் பேசப்படாத மொழி மரித்துப் போகிறது. உலகில் இரண்டு வாரங்களுக்கு ஒரு மொழி வழக்கிழந்து அழிந்துபோகிறது. மொழியின் உயிர்ப்பு மக்கள் பயன்பாட்டில் இருக்கிறது. மொழியின்றி ஏதுமில்லை. நோபல் பரிசு பெற்ற மகாகவி தாகூரின் கீதாஞ்சலி அவர் தாய்மொழியான வங்கமொழியில்தான் முதலில் எழுதப்பட்டது. மகாத்மா காந்தி தன் சுயசரிதையைத் தன் தாய்மொழியான குஜராத்தி மொழியில்தான் முதலில் எழுதினார். நம் சிந்தனைகளை நம் மொழியில் மட்டுமே தங்குதடையில்லாமல் நம்மால் தரமுடியும்.

**தாய் மொழியில் பேசுவோம்**

உலகில் பேசப்படும் 7000 மொழிகளில் இன்னும் எண்பது ஆண்டுகளில் நான்கில் ஒருபங்கு மொழிகள் வழக்கிழந்துபோகும் அபாயம் இருக்கிறது. மூவாயிரம் ஆண்டுகளாக நம் அருமைத்தமிழ் மொழி மக்களால் பேசப்பட்டும் எழுதப்பட்டும் இந்த நூற்றாண்டிலும் இளமையாகவும் இனிமையாகவும் உயிர்ப்போடும் இருக்கிறது. இலங்கையிலும் மலேசியா சிங்கப்பூரிலும் மொரிசியஸ் தீவிலும் மியான்மரிலும் பிரான்ஸிலும் ஜெர்மனியிலும் தென்னாப்பிரிக்காவிலும் அமெரிக்காவிலும் கனடாவிலும் இன்னபிற உலக நாடுகளிலும 90 மில்லியன் மக்களாலும் பேசப்படும் மொழியாக நம் அன்னைத் தமிழ் திகழ்கிறது. எத்திசையும் புகழ் மணக்க எல்லோராலும் விரும்பப்படும் மொழியான நம் தாய்மொழியில் பேசும்போது நமக்கு கிடைக்கும் இன்பம் கொஞ்சநஞ்சமா? என்றுமுள தென்தமிழ் என்று கம்பரால் புகழ்ந்து பாராட்டப்படும் நம் அன்னைத் தமிழ் முன்னைக்கும் முன்னைப்

பழமையானது. தமிழ் பேசினாலும் கேட்டாலும் இனிமை தரும் மொழியாய் திகழ்வதால் மகாகவி பாரதியார், யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்'' என்று பாடியுள்ளார். தமிழ் எனும் சொல்லின் பொருள் இனிமை என்பதாகும்.

**தமிழ்ப்பள்ளிகள் உருவாக்கல்**

ஆங்கிலவழிப் பள்ளிகளில் நம் குழந்தைகள் பயிலத்தொடங்கின. பின் தமிழில் எழுதுவதும் பேசுவதும் அவர்களுக்குக் கடினமாக மாறத்தொடங்கியது. பத்து என்று சொன்னால் புரியாத நிலையில் ற்றென் என்று சொல்லிப் புரியவைக்க வேண்டியுள்ளது. மலேசிய நாட்டில் தாய்மொழியோடு தங்கள் வேரறுந்து போகாமல் இருக்க ஐநூறுக்கும் மேற்பட்ட தமிழ்ப் பள்ளிகளை நடத்துகிறார்கள். இங்கிலாந்து நாட்டில் இருபது தமிழ் அமைப்புகள் இணைந்து வாரவிடுமுறை நாட்களில் புலம்பெயர்ந்த தமிழர்களின் குழந்தைகளுக்காக எளிய தமிழ்ப் பாடத்திட்டத்தை வகுத்து தமிழாசிரியர்களைக் கொண்டு பாடநூல்கள் எழுதச்செய்து பாடங்களை முறையாக நடத்தி தமிழுணர்வை ஊட்டி வருகிறது. பிறமொழி பேசும் மக்களுக்கு தமிழ்ப் பயிற்சி தரும்தமிழ்ப் பள்ளிகளை உலகெங்கும் நாம் உருவாக்க வேண்டும்.

**எழுத்துப் பயிற்சி**

**"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்''**

எனும் பழமொழிக்கேற்ப கண்களாகத் திகழ்ந்த எண்ணெயும் எழுத்தையும் நாம் இன்று இழந்து நிற்கிறோம். பழைய நூல்களில் பழக்கத்தில் இருந்த எண்முறை தற்போது பதிப்பிக்கப்படும் தமிழ் நூல்களில் இல்லை. பள்ளிகளில் எழுத்துப் பயிற்சிக்காக இரட்டைக் கோடு போட்ட குறிப்பேட்டில் எழுதும் முறைகள் குறைந்துள்ளதால் கையெழுத்தை இழந்து குழந்தைகள் தவிக்கின்றன. முன்பு பள்ளிகளில் நடைமுறையிலிருந்த கட்டுரை எழுதும் முறைகள் இப்போது வழக்கத்தில் அதிகமாக இல்லை. இதனால் பிழையின்றி விடுப்புக் கடிதம் எழுதக்கூடத் தெரியாமல் குழந்தைகள் மாறிக்கொண்டிருக்கின்றன. அளவைகள் குறித்த தமிழ்ச்சொற்களின் நினைவு நம் முன்னோரிடம் இருந்தது. எழுதப்படிக்கத் தெரியாத வீடுகளில்கூட அக்காலத்தில், ஒன்று, முக்கால், அரைகால், கால், நாலுமா, மூன்றுவீசம், மூன்றுமா, அரைக்கால், இருமா, மாகாணி, ஒருமா, முக்கால்வீசம், மூன்றுமா, அரைவீசம், குன்றிமணி, பலம், வீசை ஆழாக்கு, உழக்கு, மரக்கால், போன்ற அழகான தமிழ்ச் சொற்களின் பயன்பாடு இருந்தது. ஆனால் இந்தத் தலைமுறைக்கு அவை தெரியாத நிலை ஏற்பட்டுவிட்டது துயரமான நிலையே. தமிழ் எழுத்துகளை இழந்தோம், தமிழ் அளவை முறைகளை இழந்தோம், தமிழ்ப் பண்பாட்டை இழக்க ஒருநாளும் சம்மதியோம்.

**தமிழ்த்தாய்க்கு நாம் செய்யவேண்யது என்ன?**

"தகுதி உள்ளதே தப்பிப் பிழைக்கும் என்ற அறிவியல் அறிஞர் டார்வினின் விலங்கியல் கோட்பாட்டின்படி, மனிதன் தப்பிப் பிழைப்பதன் காரணம், காலத்துக்கேற்பத்

தன்னை மாற்றி நவீனமயமாக்கித் தற்காத்துக்கொண்டதுதான். பல்லாயிரம் ஆண்டு இலக்கிய, இலக்கண வரலாறு பெற்றது தமிழ். ஆனாலும் இணையத்தின் இருதயத்தில் இடம்பெற்ற இணையற்ற மொழியாக நம் அன்னைத் தமிழ் திகழ்வதன் காரணம் அந்தந்தக் காலத்தின் மாற்றங்களை ஏற்றுத் தன்னைப் புதுப்பித்துக்கொண்டே வருகிறது. இணையத்தில் இன்னும் உள்ளிடப்படாத இலக்கிய இலக்கண நூல்களை நாம் உள்ளிடத் தொடங்கவேண்டும்.

**நவீனமுறையில் கற்பித்தல்:**

தமிழ்மொழி, ஆய்வகங்கள் மூலம் இன்னும் நவீன உத்திகளோடு ஒலி வடிவிலும், ஒளி வடிவிலும் கற்றுத்தரப்படவேண்டும். தமிழக அரசின் தமிழ் இணையக் கல்விக்கழகம் தகவலாற்றுப் படை எனும் அரிய இணையப் பதிவைத் தந்துள்ளது. சங்கஇலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரை அனைத்து இலக்கிய வகையையும் மறுவாசிப்பிற்குள்ளாக்கி இன்னும் ஆழமாகப் புரியப்படலாம். தமிழ்த்துறை - வணிகம், பொருளாதாரம், மானுடவியல், இயற்பியல், புவியியல், வானியல், மண்ணியல் போன்ற பல்துறைகளோடு இணைந்த பல்துறையாக மாறி அதிலிருந்து புதிய துறைகள் உருவாகலாம். உ.வே.சா. அழிந்துகொண்டிருந்த நூல்களைத் தேடிப்பிடித்து பல ஓலைச்சுவடிகளை ஒப்புநோக்கிப் பாடபேதம் கண்டு அடிக்குறிப்போடு பல இலக்கியங்களை அச்சிட்டு வெளியிட்டார். அதன்பின் சுவடிகளை ஒப்புநோக்கி ஆய்தல் குறைந்து போனது. எதிர்காலத்தில் இந்நிலை மாறவேண்டும். ஓலைச்சுவடிகள் யாவற்றையும் ‘‘ஸ்கேன்’’ செய்து இணையத்தளத்தில் உலகம் முழுக்க உள்ளிடும் பணி நடந்தால் உலகளாவிய முன்முயற்சியாக அது அமையும். புதிய இலக்கியங்களின் மூல எழுத்துப்படி ஒவ்வொன்றும் இம்முறையில் ஆவணப்படுத்தப்பட்டால் எதிர்கால ஆய்வுகளுக்கு வழிகாட்டியாய் அமையும். படைப்பாளிகளின் வாழ்வியல் பதிவுகள் அவர்கள் வாழும்போதே செய்யப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டால், அவை அவர்களின் படைப்பில் வெளிப்பட்ட முறையை நம்மால் அறியமுடியும். எதிர்காலத்தில் வெளியாகும் அனைத்துப் படைப்புகளோடும் அந்தப் படைப்பு பிறந்த சூழல் குறித்த ‘‘குறுந்தகட்டு ஒலிப்பதிவுடன் இணைந்து வெளியானால் வாசகனால் படைப்பை முழுமையாய் உணரமுடியும். நாளைய பல்கலைக்கழகத் துறைகளில் பேராசிரியர்களோடு படைப்பாளிகளும் இணைந்து பணிபுரிவார்கள். கரிசல் காட்டு எழுத்தாளர் கி.ரா. புதுவைப் பல்கலைக்கழகத்தில் பாடம் நடத்தியதைப்போன்ற சூழல் எங்கும் நிலவும்.

**தமிழின் எழுச்சிக்காலம்**

எதிர்காலம் தமிழின் எழுச்சிக்காலமாய் அமையும். சொந்த மண்ணில் அந்நியப்படுத்தப்பட்ட மொழியாக இனி தமிழை யாரும் நினைக்க முடியாது போகும் தமிழ் ஆட்சிமொழியாக அனைத்துத் துறைகளிலும் திறம்படச் செயல்படும். புலம் பெயர்ந்த தமிழர்களுக்கு இணையான தமிழ் உணர்வு தமிழகத்திலும் உருவாகும். தமிழ் நவீன

ஊடகமான இணையத்திலும் சாதனை படைத்து உலகத்தோரால் பாராட்டப்பெறும். பேச்சுத்தமிழுக்கு இலக்கணம் வகுக்கப்படலாம். வேலைவாய்ப்புத் தரும் துறையாக மலரும். தொன்மையின் வேரில் தமிழ் எனும் கற்பகத்தரு நவீன கனிகளைத்தரும். மொழிபெயர்ப்புகள் நிறைய நடைபெற்று "தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்." நம் தேர்ந்த பண்பாடும், திராவிட நாகரிகமும் உலக மக்களால் ஏற்றுக்கொள்ளப் பெற்று பின்பற்றப்படும். தனித்தியங்கும் தன்மை தமிழனுக்கு உண்டு. தமிழே ஞாலத்தில் முதுமொழி என்ற பாவேந்தர் கூற்று அப்போது மெய்ப்பிக்கப்படும்.

## 2. சொற்களஞ்சியங்கள்

**சொற்களஞ்சியம் என்பதென்ன?**

சொற்களஞ்சியம் என்பது சொற்களைக் கருத்துருக்கள், தலைப்புகள் அல்லது பாடப் பொருள்கள் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு செய்வதாகும்.

ஒரு பொருள் பன்மொழிகள் சொற்களஞ்சியத்தின் சிறப்புக் கூறாக இடம்பெறும். ஒரு மொழியின் சொல் வளத்தைச் சொற்களஞ்சியத்தின் மூலம் அறியலாம்.

**அகராதிக்கும் சொற்களஞ்சியத்திற்கும் என்ன வேறுபாடு?**

அகரவரிசைப்படிச் சொற்களை ஒழுங்குப்படுத்தித் தருவது அகராதி. அகரவரிசைப்படி அடுக்கப்பட்ட சொற்களைப் பயில கால விரயம் ஏற்பட்டது. மின்னகராதிகளில் ஓரிரு வினாடிகளில் நாம் தேடும் சொற்பொருள் விளக்கத்தை நம்மால் அறிய இயலும்.

சொற்களஞ்சியத்தில் சொற்களின் ஒழுங்கைவிட அவை தரும் விளக்கம் முக்கியமானதாக அமைகிறது.

அச்சு வடிவில் ஆயிரம் பக்கங்களுக்கு மேலாக இருந்த சொற்களஞ்சியங்கள் மின் சொற்களஞ்சியங்களாய் மாற்றப்பட்ட பின்பு தேடுவது எளிமையாயிற்று. ரொஜஸ்ட் தெசாரஸ் போன்ற ஆங்கில சொற்களஞ்சியத்தைவிடத் தமிழில் உருவாக்கப்பட்ட சொற்களஞ்சியங்கள் எளிமையாகவும் பொருள் பொதிந்ததாகவும் உள்ளன.

**சொல் ஆய்வுகளுக்குச் சொற்களஞ்சயங்கள் பயன்படுகின்றன**

சொல்லுதல் எனும் சொல்லுக்கு இணையாக, சொல்லுதல், பகருதல், மொழிதல், நவிலுதல், இயம்புதல், செப்புதல் போன்ற இணைச் சொற்களை அறிந்து கொள்ளமுடிகிறது.

**எதிர்மறைப் பொருளில் பண்புச் சொற்களை அறியமுடியும்**

நல்லவன் எனும் சொல்லுக்கு எதிர்மறைப் பொருளில் வரும் பண்பு தொடர்புடைய பெயர்களான கெட்டவர், கொடியவர், வம்பர், தீயவர் போன்ற சொற்களை ஓரிரு நொடிகளில் அறிந்துகொள்ள முடிகிறது.

சொற்களஞ்சியங்களின் உதவியால் மொழியியல், உளமொழியியல் ஆய்வுகளை நம்மால் முன்னெடுக்க முடியும்.

## 3. பொருட்களஞ்சியங்கள்

தமிழைப் போன்ற பல்லாயிரம் ஆண்டு பழமையான சொல் வளமும் பொருள் வளமும் மிக்க மொழியில் பொருட்களஞ்சியங்களின் பணி இன்றியமையாதது. முனைவர் இரா. சாரங்கபாணியை முதன்மைப் பதிப்பாசிரியராகக் கொண்டு தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடாக வந்துள்ள சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் (முதற்பதிப்பு – 1986, மறுபதிப்பு – 2003) குறிப்பிடத்தக்க நன்முயற்சி.

கங்குல் எனும் சொல்லுக்கு இரவு என்று இக்களஞ்சியம் பொருள் தந்துவிட்டு, சங்க இலக்கியத்தில் எங்கெல்லாம் இப்பொருளில் இச்சொல் இடம் பெற்றது என்பதை அடைப்புக் குறிக்குள் தந்திருப்பது சிறப்பு.

இப்பொருட்களஞ்சியங்களுக்கு இணையாக நடைமுறைச் சொற்களுக்கு விளக்கம் தரும் இணையப் பொருட்களஞ்சியங்கள் இணையத்தில் நிறைய உள்ளன.

| | |
|---|---|
| வாட்ச் கடை | – மணிப்பொறி அங்காடி |
| சுவிட்ஸ், பேக்கரி | - இனிப்பகம் |
| அக்ரோ சென்டர் | - வேளாண்மை நடுவம் |
| க.்.பே | – அருந்தகம் |
| பெயின்ட் | - தீட்டு |
| டிரிங்கிங் வாட்டர் | - பருகு நீர் |
| பீஸ் | - அமைதி |

## 4. அடைவுகள்

**அடைவு என்பதென்ன?**

அடைவு என்றால் செறிவு என்று பொருள் உண்டு. கணினியில் ஆயிரக்கணக்கான கோப்புகள் உள்ளிடப்பட்டுள்ளன. அடைவுகளால் அவை கணினியில் சேமிக்கப்பட்டால்தான் நாம் தேடும் போது உடன் கண்டடைய முடிகிறது.

**சிறு அடைவுகளாகச் சேமித்தல்**

சான்றாகத் தமிழிலக்கியம் எனும் பெருங்கடலைக் கணினியில் சிறு சிறு அடைவுகளாக சங்க இலக்கியங்கள், நீதி இலக்கியங்கள், காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், தனிப்பாடல்கள் எனச் சேமித்து வைத்தால் தேடுவது எளிதாகும்.

**அடைவுகளை நூல் எழுதப் பயன்படுத்தலாம்**

இதே முறைமையை நூல் எழுதவும் பயன்படுத்தலாம். ஒரு நூலின் பெருந்தலைப்பு, அதில் இடம் பெற வேண்டிய இயல்கள், அவ்வியல்களில் இடம்பெற வேண்டிய சில அலகுகளின் உட்தலைப்புகள் என்று திட்டமிட்டு அடைவுகளாகச் சேமித்து வைத்தால் நூலைச் சரியாக விடுபடல் ஏதுமின்றி எழுதி முடித்துவிட இயலும்.

**இரு அடைவுகள்**

இந்நூலை,

1. சொல்லடைவு
2. பொருளடைவு

என்று பிரித்துக் கொண்டால் எளிமையாக இருக்கும்.

சொல்லடைவு (புடழளளயசல) என்பது சொற்களின் பட்டியல்

பொருளடைவு என்பது பொருள்களின் பட்டியல்

அகராதித் தொகுப்பு இன்று அடைவுகளின் உதவியோடு சிறப்பாக செய்யப்படுகிறது.

## 5. அகராதியியல்

ஒரு மொழியிலுள்ள சொற்கள் அனைத்தையும் அகர வரிசைப்படி தொகுத்து நூலாகத் தருதலே அகராதி என்பதாகும். அகராதிகளை எவ்வாறு தொகுப்பது? என்பதற்கான முறைமையை அகராதியியல் விளக்குகிறது.

செயல்முறை அகராதியியல் என்பது அகராதிகள் எழுதும் கலையை விளக்குகிறது. மக்களின் வழக்கிலுள்ள மொழி குறித்து விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டு நெறிமுறைக்கு உட்பட்டு அகராதிகள் எழுதப்படுகின்றன.

**அகராதியியலின் அடிப்படை**

1. அகராதி மற்றும் அகராதியியலின் அடிப்படை, தேர்ந்த மொழியே ஆகும்.
2. சொற்களின் சரியான பொருளுக்கு விளக்கம் எழுதுதல்.
3. சொல்லையும் பொருளையும் ஒழுங்குபடுத்துதல்
4. அச் சொல்லை எவ்வாறு சரியாக உச்சரிப்பது என்று தருதல்

**அகராதிப் பயன்பாடு பிறமொழிக் கலப்பைத் தடுக்கும்**

நம் தாயிடமிருந்து நாம் கற்கும் மொழி, நம் தாயை விட நம்மிடம் உயிராய் நிற்கும் மொழி என் தமிழ்மொழி, மூவாயிரமாண்டுத் தொன்மையிலும் பத்தாயிரமாண்டுத் தொடர்ச்சியிலும் உள்ள மொழி நம்மருமைத் தமிழ்மொழி.

## 6. நோக்கு நூல்கள்

ஒரு மாணவன் ஒரு பாடநூலைத் தெளிவாகக் கற்றுக் கொள்வதற்கும், ஓர் ஆசிரியர் ஒரு மாணவனுக்குத் தான் கற்பிக்கின்ற பாடத்தைத் தெளிவகக் கற்றுக் கொடுப்பதற்கும், அந்தப் பாடநூல் பற்றிய தெளிவான அறிவைப் பெறுவதற்கும் கற்பவர், கற்றுக்கொடுப்பவர் எந்த சந்தேகமும் இல்லாமல் தெளிவாகக் கற்பதற்கும் நோக்கு நூல் அல்லது பார்வை நூல்கள் தேவைப்படுகின்றன. நோக்கு நூலின் உதவியின்றி எந்த பாடத்தையும் தெளிவாகக் கற்றுக் கொள்ள இயலாது. கல்வியின் தரம் உயர உயர நோக்கு நூல்களின் தேவை அதிகரிப்பதைக் காணலாம்.

நோக்கீட்டு மரபை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படுபவை நோக்கு நூல்கள் ஆகும். எனவே அவை,

1. **எளிய பயன்பாட்டு நோக்கு**
2. **வரையறுத்த நெறிமுறை**

என்ற இரண்டின் அடிப்படையில் சொற்களைத் திரட்டித் தருகின்றன. பல்வேறு அடிப்படையில் உருவாகும் நோக்கு நூல்களைக் காலம், மொழி, சொல், சொற்களின் பொருள், வரையறை, இயல்பு, பயன்பாட்டாளரின் நோக்கம், பதிவுகளின் வரையறை போன்ற பல்வேறு அடிப்படையில் வகைப்படுத்தலாம். இந்நோக்கு நூல்கள் பொதுவாக ஏழு வகையாகப் பாகுபாடு செய்யப்படுகின்றன. அவை, அகராதி, கலைக்களஞ்சியம், சொல்லடைவு, பொருளடைவு, தொடர் அடைவு, சொற்பட்டியல், சொற்களஞ்சியம், என்பனவாகும்.

## 7. மொழிக்குடும்பம்

பல்வேறு தொன்மையான மொழிக் குடும்பங்களின் தொட்டிலாக இந்தியா திகழ்ந்தாலும் திராவிட மொழிக் குடும்பம் அதில் ஆகத் தொன்மையானது. இந்தோ ஆரிய, திராவிட மொழிக் குடும்பங்கள் சிறப்பான மொழிவளம் உடையன.

இந்தோ ஆரிய மொழிக் குடும்பம் சமஸ்கிருதம் எனும் வடமொழியை அடிப்படையாகக் கொண்டது.

இந்தோ ஆரிய மொழிக் குடும்பமான வடமொழியில் எழுதப்பட்ட ரிக் வேதத்தில் திராவிட மொழிச் சொற்களான உருகல, சாந்து, குழி, காலா, மயூரா போன்ற சொற்களின் கலப்பைக் காணமுடிகிறது. திராவிட அல்லது திராமிடா எனும் சொற்கள் கி.மு. 3-ம் நூற்றாண்டிலிருந்து வடமொழி இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன.

தென்னிந்திய மக்களின் மொழிக் குடும்பங்களை ஆய்வு செய்த ராபர்ட் கால்டுவெல் ‘தமிழ்’ எனும் பெயர் ஏற்கனவே ஒரு குறிப்பிட்ட மொழியின் நிறுவப்பட்ட பெயராகத் திகழ்ந்ததால் முழு குடும்பத்தின் பொதுவான பெயராக ஏற்றுக் கொண்டார்.

கிரேக்க மொழிக்கும் தமிழ் மொழிக்கும் தொடர்பு உண்டு என்று கால்டுவெல் கருதினார்.

தமிழில் வழங்கும் அரிசி எனும் சொல்லே கிரேக்கத்தில் ஒருசா ∴ ஒரிசா ∴ ஒரிண்டா என மாறியதாய்க் கருதினார்.

## 8. திராவிட மொழிகள்

னுசயஎனையைெ டுயபெரயபநள என்று அழைக்கப்படும் மொழிக் குடும்பத்தில் 86 மொழிகள் உள்ளன. 215 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் பேசும் மொழிக் குடும்பமாக இம்மொழிக் குடும்பம் திகழ்கிறது.

### அரசியலமைப்புச் சட்டம் அங்கீகரித்துள்ள திராவிட மொழிகள்

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய திராவிட மொழிகள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் தமிழ் மொழியும், ஆந்திரப் பிரதேசத்தில் தெலுங்கு மொழியும், கருநாடகத்தில் கன்னட மொழியும், கேரளத்தில் மலையான மொழியும் அலுவல் மொழிகளாகத் திகழ்கின்றன.

### முதனிலை மொழி

உலகில் உள்ள பெரிய மொழிக் குடும்பங்களில் ஒன்றாகத் திகழும் திராவிட மொழி, தெற்காசிய மக்களால் அதிகமாகப் பேசப்படுகிறது.

முதல் நிலைத் திராவிட மொழி என்றும், வடக்கு, மத்திய, தெற்கு ஆகியன துணைப் பிரிவுகள் என்றும் வழங்கப்படுகின்றன.

### இராபர்ட் கால்டுவெல்லின் மொழிகளின் திராவிட நூல்

1856-ல் இராபர்ட் கால்டுவெல் தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு என்னும் நான்கு மொழிகளோடு வேறு சில மொழிகளையும் சுட்டிக் காட்டுவதற்காகத் திராவிட எனும் சொல்லை உருவாக்கினார். யு ஊழஅியசயவளைந புசயஅஅயச ழக வாந னுசயஎனையெ ழச ளுழரவா ஐனெயைெ குயஅடைல ழக டுயபெரயபநள என்ற தலைப்பில் ‘திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்’ எனும் ஆய்வு நூலை எழுதி வெளியிட்டார்.

### திராவிட மொழிகளின் சிறப்புகள்

மிகப் பழைய அமைப்பு முறையையும் தனிச் சிறப்பையும் பெற்றன திராவிட மொழிகள். இந்தியாவில் மட்டுமல்லாமல் உலகின் பிற பாகங்களிலும் குறிப்பாகப் பாகிஸ்தான், நேபாளம், ஈரான், இலங்கை ஆகிய நாடுகளின் சில பகுதிகளிலும் திராவிட மொழிக் குடும்ப மொழிகள் பேசப்படுகின்றன.

திராவிட மொழிகளுக்குள் மிகத் தொன்மையான மொழியாகவும் திருந்திய நிலை பெற்றதாகவும் நனி நாகரிகம் உடையதாகவும் பிற திராவிட மொழிகளின் தாயாகவும் திகழ்வது தமிழ் மொழியாகும்.

தமிழிலிருந்து வடமொழி உட்பட இந்திய ஆரிய மொழிகள் சொற்களைக் கடன் வாங்கியுள்ளன என்று கால்டுவெல் ஆய்வு செய்து நிறுவினார்

## 9. பிறமொழிக் கலப்பு

தமிழில் இலக்கிய வழக்கு செந்தமிழ் என்றும், மக்களின் பேச்சு வழக்கு இலக்கண ஆசிரியர்களால் கொடுந்தமிழ் என்றும் அழைக்கப்படுகிறது. திராவிட மொழிகளான கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளிலும் இவ்விரு மொழி வழக்குகள் இருந்தாலும் அவை தனிப் பெயர்களால் வேறுபடுத்தப்படுவதில்லை.

| | |
|---|---|
| தமிழ் | - வடமொழி |
| திரு | – ஸ்ரி |
| கன்மம் | - கர்மம் |
| உலகு | – லோகம் |
| அரசு | – ராஜா |

சங்க இலக்கியத்தில் தமிழ்ச்சொற்களோடு வடமொழிச் சொற்கள் ஆங்காங்கே இடம்பெற்றிருப்பதைக் காண முடிகிறது. அகநானூறு பாடல் 16-ல் மகன் என்கிற தமிழ்ச் சொல்லும், அதற்கு இணையான புதல்வன் என்கிற வடமொழிச் சொல்லும் இடம் பெற்றிருப்பதைக் காணமுடிகிறது.

புறநானூற்றுப் பாடல் 308-ல் யானை எனும் தமிழ்ச் சொல்லோடு குஞ்சரம் எனும் வடமொழிச் சொல்லும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

கொடி எனும் தமிழ்ச் சொல்லோடு வடமொழிச் சொல்லான பதாகை எனும் வடமொழிச் சொல் மதுரைக் காஞ்சியில் பயன்படுத்தப்படுகிறது.

திராவிட மொழிகள் அனைத்திலும் திசைகள் குறித்த சொற்கள் ஒன்று போல் உள்ளனவா? என்று ஆராய்ந்தால் அவ்வாறு வழங்கப்படவில்லை என்பது புலனாகிறது. தமிழில் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என வழங்கி வரும் சொற்கள் திராவிட மொழிகளில் வெவ்வேறு சொற்களில் அழைக்கப்படுகிறது.

திராவிட மொழிகள் ஒரே மொழியில் வேறுபட ஒலிக்கும் திசை மொழிகள் அல்ல என்று கால்டுவெல் விளக்கியுள்ளார்.

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகிய திருந்திய திராவிட மொழிகளின் வேர்ச் சொற்கள் ஒப்புமை உடையன. ஆனால் காலப்போக்கில் அவை மாற்றமடைந்தன என்று கூறும் கால்டுவெல் திராவிட மொழிச் சொற்களில் சிறப்பாகத் தமிழ்ச் சொற்களில் செமிடிக் இனச் சொல்லுருவங்கள் காணக் கிடைப்பது வியப்பூட்டும் பெருநிகழ்ச்சியாகும் என்று கால்டுவெல் விளக்கியுள்ளார்.

சமஸ்கிருத ஸ், என்றும் ரீ, திரு எனத் திரிந்துள்ளது. பூர்வ ஆ'டம் என்னும் சொல் பூராடம் என்று திரிந்துள்ளது. ஆ'டம் என்பதிலிருந்து ஆடி எனும் திங்கட்பெயர் தோன்றியுள்ளது. அஸ்வினீ ஐப்பசி என ஆகியுள்ளது. பூர்வபத்ர – பத முதலில் பூரட்டாதி அன்று ஆகிப் பின்னர்ப் புரட்டாசி என்று ஆகியுள்ளது. விண்மீன்கள், திங்கள் ஆகியவற்றைக் குறிக்கும் பெயர்களுக்கு நிகரான தெலுங்கு கன்னடச் சொற்கள் முழுக்க முழுக்கச் சமஸ்கிருதச் சொற்களாகவே உள்ளன. இதிலிருந்து அச்சொற்கள் தமிழில் வழங்க முற்பட்ட நனிமிகப் பழமை, நிலைநாட்டப் பெறும் என்று திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் நூலில் டாக்டர் கால்டுவெல் எழுதியுள்ளார்.

## 10. கிளை மொழிகள்

திராவிட மொழிகள் ஐந்து பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

1. தென் திராவிடம்
2. தென் நடுத் திராவிடம்
3. நடுத் திராவிடம்
4. வட திராவிடம்
5. வகைப்படுத்தப்படாதவை

தமிழிலிருந்து மலையாளம் கிளைத்து உருவானதாக கால்டுவெல் கருதினார். தமிழ், கன்னடத்தின் இணைப்பில் குடகு மொழி அதிலிருந்து குறும்பா மொழி, கோத்தர் மொழி, தோடா மொழி, படுக மொழி உருவானதாகவும்,

தமிழ், துளு, கன்னடம் இணைப்பில் துளு மொழியும் அதிலிருந்து கொற்ற கொரகா, துளுவ மொழி குடியா மொழியும் கோண்டி எனும் மொழியிலிருந்து கோண்டி, மாரியா, முரியா, பர்தான், நாகர்ச் சால், கிர்வார் மொழியும் தெலுங்கு குயி மொழிகளின் இணைப்பில் கூய் மொழி, குவி மொழி, கோயா மொழியும் மண்டா மொழியும் பெங்கோ மொழியும் தோன்றியதாகக் கால்டுவெல் ஆராய்ச்சி செய்து எழுதினார்.

## 11. தமிழின் தனித்தன்மை

மொழி நம் பண்பாட்டின் விழி. மொழியில்லாத வாழ்க்கை ஒளியில்லாத வாழ்க்கை. மூச்சைப் போல் மொழியும் முக்கியம், பேச்சைப்போல் அதில் உள்ளுறைந்து வாழ்வின் வழியை நமக்குக் காட்டும் தாய்மொழி அதைவிட முக்கியம். அறிதலுக்கும் தெரிதலுக்கும் புரிதலுள்கும் உணர்தலுக்கும் ஆராய்தலுக்கும் காரணமான உயிர் ஊடகம் மொழிதான். மனித இனத்தின் நாகரிகத்தின் அடையாளம் மொழி, பண்பாட்டின் அடையாளம் தாய்மொழி. தாயிடமிருந்து கற்கும் மொழி தாய்மொழி, தாயாக நம்மை காக்கும் மொழி நம் தாய்மொழி.

## 12. பிற மொழிகளில் தமிழின் செல்வாக்கு

பிற மொழிகள் தமிழ்ச் சொற்களைத் தனதாக்கிக் கொண்டன. திரைகடல் ஓடியும் திரவியம் தேடிய தமிழர்கள் தங்களோடு தங்கள் தாய்மொழியையும் தமிழ்ப் பண்பாட்டையும் உலகெங்கும் கொண்டு சென்றனர்.

கிரேக்கம், ஹீப்ரு, வடமொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தமிழ்ச் சொற்களின் கலப்பைப் பார்க்க முடிகிறது.

**வடமொழியில் தமிழ்ச் சொற்கள்**

| **தமிழ்ச் சொல்** | - | **வடமொழிச் சொல்** |
|---|---|---|
| 1. உலக்கை | – | உலூகலா |
| 2. அனல் | - | அனலா |
| 3. குடம் | - | குடா |
| 4. தண்டம் | - | தண்டா |
| 5. பள்ளி | – | பள்ளி |
| 6. மயில் | - | மயூரா |
| 7. மாலை | – | மாலா |
| 8. முரசு | – | முரஜா |
| 9. வளை | – | வலயா |
| 10. வள்ளி | – | வல்லி |
| 11. உடுக்கை | - | ஹூ டுக்கா |
| 12. பிணடம் | - | பிண்டா |
| 13. பழம் | - | பலம் (தெலுங்கில் பண்ட்லு) |
| 14. புற்று | – | புத்திக |

**கிரேக்க மொழியில் தமிழ்ச் சொற்கள்**

தமிழில் உள்ள அரிசி எனும் சொல் கிரேக்கத்தில் ஒரிசா என்றும் தமிழின் இஞ்சி எனும் சொல் சிஞ்சி பெர் என்றும் கருவா எனும் தமிழ்ச் சொல் கா்பியன் என்றும் அழைக்கப்படுகிறது.

**சப்பானிய மொழியில் தமிழ்ச் சொற்கள்**

சப்பானிய மொழியில் தமிழ்ச் சொற்களின் தாக்கத்தை அறிய முடிகிறது.

தமிழின் பாம்பு எனும் சொல் சப்பானிய மொழியில் பாபு எனவும், தமிழின் அடி எனும் சொல் சப்பானிய மொழியில் அசி என்றும் பிடி எனும் தமிழ்ச் சொல் சப்பானிய மொழியில் பிசி என்றும் கலந்துள்ளதை நம்மால் காணமுடிகிறது.

**ஆங்கிலத்தில் தமிழ்ச் சொற்கள் அப்படியே எடுத்தாளப்பட்டுள்ளன.**

| தமிழ்ச்சொல் | - | ஆங்கிலச் சொல் |
|---|---|---|
| 1. கட்டுமரம் | - | CATAMARAN |
| 2. கயிறு | – | CAIR |
| 3. நகாசு | – | CASH |
| 4. தேக்கு | – | TEAK |
| 5. வெற்றிலை | – | BETEL |
| 6. மாங்காய் | - | MANGO |
| 7. பந்தல் | - | PANDAL |
| 8. குயில் | - | KEL |
| 9. பூசை | – | POOJA |
| 10. பலகணி | – | BALCONY |
| 11. ஆயா | – | AYAH |
| 12. சந்தனம் | - | SANDAL |
| 13. கொப்பறை | – | COPRA |
| 14. வண்டி | – | BANDY |
| 15. இஞ்சி | – | GINGER |

# II தமிழக வரலாறு

## சங்க காலம் தொடங்கி சமகாலம் வரையிலான தமிழக வரலாற்றுப் பொதுப்பார்வை

தமிழகம் என்னும் பெரும் நிலப்பரப்பு பழங்காலம் தொட்டே தனித்துவம் வாய்ந்த நிலப்பரப்பாகவே திகழ்கிறது. பல்லாயிரம் ஆண்டுப் பழமையான உலகின் பண்பாட்டு நிலம் தமிழ் நிலம்.

### பழைய கற்காலத் தமிழகம்

பழந்தமிழ் நாட்டின் பழங்கற்காலப் பகுதியில் இருந்த குடியிருப்புகள் கி.மு. 500000 ஆண்டிலிருந்து கி.மு. 3000 வரை நீடித்திருந்தன. அடர்ந்த காடுகளிலும் ஆற்றுப் பள்ளத்தாக்குகளிலும் மலைப்பகுதிகளிலும் மனிதர்கள் வாழ்ந்தனர். கைக்கோடரி, கூர்கத்திகள் ஆகியவற்றால் வேட்டைத் தொழில் புரிந்தவர்களாகக் கானக வாழ்வு வாழ்ந்தனர். சூரிய காந்தக் கல், சிக்கி முக்கிக் கல் ஆகிய கற்களால் நுண்கல் கருவிகளை உருவாக்கும் ஆற்றல் பெற்றிருந்தனர்.

### புதிய கற்காலத் தமிழகம்

சுமார் கி.மு. 2500 ஆண்டு முதல் தமிழகத்தின் புதிய கற்காலம் தொடங்கியது. போர்க் கருவிகளைக் கற்களில் உரசி சாணை பிடிக்கக் கற்றுக் கொண்டனர். சமதளமான மலைப் பகுதிகளிலும் மலையின் அடிவாரங்களிலும் தங்கள் குடியிருப்புகளை அமைத்தனர். ஐகோர், அலெக்சாண்டர் ரியா ஆகியோர் ஆதிச்சநல்லூரில் மேற்கொண்ட அகழ்வாய்வுகள் 3000 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர்கள் வாழ்ந்த பண்பாட்டு வாழ்க்கையை மெய்ப்பிக்கின்றன. அங்குக் கிடைத்த ஈழத்தாழிகள் அங்கு வாழ்ந்த மனிதர்களின் மண்சார் பண்பாட்டினை மெய்ப்பிக்கின்றன.

### தொல் பொருட்கள்

காடுகளை விட்டு நதியோரங்களில் மக்கள் வாழ்ந்த அடையாளங்களை ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டத்தின் ஆதிச்சநல்லூர் அருகே உள்ள சிவகளை, கொங்கராயன்குறிச்சி, ஸ்ரீவைகுண்டம் போன்ற பகுதிகளில் கிடைத்த தொல் பொருட்களிலிருந்து அறிய முடிகிறது. தமிழர்களின் இறப்புச் சடங்குகள் கிரேக்கர்களின் இறப்புச் சடங்குகளோடு ஒப்பிடுவதற்கான காரணிகளை உடையதாய் அமைகின்றன. பேராசிரியர் தொ.பரமசிவம் அவர்களின் கருத்துப்படி ஆதிச்சநல்லூர் முதுமக்கள் தாழியில்

அடக்கம் செய்யப்பட்டவை இரண்டாம் ஈமச் சடங்கு என்பதாகப் புரிந்து கொள்ளலாம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

**இரும்புக் காலத் தமிழகம்**

தமிழகத்தின் இடுகாட்டு நினைவுச் சின்னங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் இரும்புக் காலக் குடியேற்றத்தைப் புரிந்து கொள்ள முடிகிறது. கி.மு. 1000 கால கட்டத்தில் இரும்புப் பயன்பாட்டினை அறியமுடிகிறது. ஆதிச்சநல்லூரின் அகழாய்வுக் களத்தில் கிடைத்த 157 புதைகலங்களில் மனிதர்களின் மண்டையோடுகள், உமி, அரிசி, தானியங்கள், கற்காலக் கோடரிக்கருவி ஆகியன கிடைத்துள்ளன. மண்பாண்டங்களில் பொறிக்கப்பட்ட எழுத்துகள் 2800 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த தமிழ் பிராமி எழுத்துகளோடு ஒத்திருந்ததைத் தொல்லியல் ஆய்வாளர்கள் கண்டறிந்தனர்.

**கல்வெட்டுச் சான்றுகள்**

தமிழ்நாட்டு அரசியல் பற்றிய குறிப்புகளை கி.மு. 300-ம் ஆண்டைச் சார்ந்த மாமன்னர் அசோகரின் சாசனத்திலும், கி.மு. 150 ஆண்டைச் சார்ந்த கதிகும்பா கல்வெட்டிலும் காணமுடிகிறது.

**பழந்தமிழகத்தின் முற்கால வரலாறு**

பழந்தமிழகம் மூவேந்தர்களின் ஆட்சியில் இருந்தது. அரசர்களுக்கு இணையாகப் பழங்குடி இனக்குழுத் தலைவர்களும் ஐவகை நிலங்களிலும் ஆளுகை செலுத்தினர். மூவேந்தர் ஆட்சி குறித்த குறிப்புகள் மாமன்னர் அசோகரின் தூண்களில் கல்வெட்டுகளாய் குறிக்கப்பட்டுள்ளன.

**நான்கு பேரரசுகள்**

சேர, சோழ, பாண்டிய, பல்லவ பேரரசுகள் ஆண்ட சிறப்பான மாநிலமாகத் தமிழகம் விளங்கியது.

**சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன்**

சங்ககாலச் சேர மன்னரான சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதனைப் பற்றிய குறிப்புகள் அகநானூற்றில் (அகம்.85, அகம் 233) காணப்படுகிறது. ஓரைவர், ஈரைம் பதின்மர், போரில் பெருஞ்சோறு அளித்த சேரன் பொறையன் மலையன் என்று இம்மன்னனைச் சிலப்பதிகாரம் விளக்குகிறது. அப்போர் மகாபாரதப் போரே என்று சில அறிஞர்கள் கருத்துரைக்கின்றனர். சௌந்தர மகாதேவன்: கிரேக்கர்கள் மற்றும் ரோமானியர் ஆவணங்களில் பாண்டியர்களின் பேரரசு குறித்த பதிவுகள் உள்ளன. மெகஸ்தனிஸ் எழுதிய இண்டிகா நூலில் பாண்டியப் பேரரசு பற்றிய குறிப்புகள் உள்ளன. சங்க இலக்கியங்களான புறநானூற்றிலும், அகநானூறு, மதுரைக் காஞ்சி,நெடுநல்வாடை, பரிபாடல் ஆகியவற்றில் சங்ககால மன்னர் வரலாற்றினைத் தெளிவாகப் புரிந்து கொள்ள

முடிகிறது. தமிழகத்தின் செவ்வியல் இலக்கியமான சங்க இலக்கியம் கி.மு. 200 முதல் 300 வரை உடையதாக மதிப்பிடப்படுகிறது. முசிறி, பூம்புகார் போன்ற இடங்களில் கப்பல் போக்குவரத்து ஏற்படுத்தப்பட்டு வெளிநாட்டுப் பொருட்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்யப்பட்டன.

# III தமிழகப் பண்பாடு

## 1. தொல்லியல்

**தொல்லியல் நோக்கில் உலகத் தமிழர் பண்பாடு**

உலகின் மூத்தகுடி தமிழ்க்குடி. இந்திய வரலாறு தமிழக வரலாற்றை அடியொற்றி மீண்டும் எழுதப்படவேண்டிய சூழலை சமீபத்தில் தமிழ்நாடரசின் தொல்லியல் துறை வெளியிட்டுள்ள கீழடி குறித்த ஆவணப்பதிவின் மூலம் உணரமுடிகிறது. தமிழ், தமிழகம் கடந்த, நாடு கடந்த, கண்டம் கடந்த உலகமொழியாக விரிவதால் தமிழ்ப் பண்பாட்டின் வேர்களை உலகம் முழுக்கத் தேடவேண்டிய பெருமித நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த கால வரலாற்றைத் தமிழினம் அறிந்தால் மட்டுமே எதிர்காலத்தில் நாம் பயணிக்க வேண்டிய இலக்கை நம்மால் தீர்மானிக்க முடியும். அதற்குத் தமிழர்கள் வாழும் உலகின் பகுதிகளில் எல்லாம் அகழ்வாய்வுகளையும் தொல்லியல் தடயங்களையும் தேடிப் பயணிப்பது அவசியம். மதுரைக்கு அருகில் உள்ள கீழடியில் நான்கு கட்டங்களாய் நடைபெற்ற அகழ்வாய்வுகளின் முடிவாக, அங்கே வாழ்ந்த தமிழர்களின் நகரவாழ்க்கைக்கான தொன்மை 2600 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று அறிவியல் ஆய்வுகளால் உறுதிசெய்யப்பட்டுள்ளது. சங்க இலக்கியமான பரிபாடலில் விருந்தோம்பப்படும் வையை நதியின் கரையில் இருந்த நகர நாகரிகம் இன்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

**பல்துறை ஆய்வுகள்**

தமிழ் இலக்கியத்தின் பின்னணியில் இன்னும் நிலவமைப்பின் அடிப்படையில் தேடுதல்களை மேற்கொண்டால் இன்னும் தமிழ்ப் பண்பாட்டின் காலத்தை இன்னும் இன்னும் முன்பாகக் கொண்டு செல்ல முடியும். தமிழர் சமயங்கள் குறித்த ஆய்வுகளை இன்னும் ஆழமாக மேற்கொண்டால் உலகளாவிய அளவில் பரந்து விரிந்துள்ள தமிழர் பண்பாட்டின் வேர்களை இன்னும் துல்லியமாக வரையறுக்க முடியும்.

**தமிழகம் எனும் சொல்லாக்கம்**

புறநானூறு இலக்கியத்தில், கருவூர் கந்தப்பிள்ளை சாத்தனார் பாடிய 168-ஆம் பாடலில் ''அருவி ஆர்குங் கழைபயில் நனைந்தலை'' எனத் தொடங்கி ''வையக வரைப்பில் தமிழகம் கேட்ப'' என்ற தொடரில் ''தமிழகம்'' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. மொழியின் அடிப்படையில் பெருநிலத்திற்குப் பெயர் சூட்டிய தமிழ்ப் புலவரின் அறிவாற்றலை எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது. சங்க இலக்கியம் தமிழரின் ஐந்திணைகளை சார்ந்த திணைக் கோட்பாட்டை முன்வைத்ததையும், அது

செய்த அகம்புறம் வரையறையையும், அந்த நிலத்தில் வாழ்ந்த உயிரிகளின் துணையாகக் கருப்பொருளாகக் கொண்டு தலைவன் தலைவி ஆகியோரின் மன உணர்வுகளைப் பதிவுசெய்தமையும் பழந்தமிழரின் பண்பாட்டு அடையாளங்களாக இன்றைய இலக்கிய உலகம் கருத்தில் கொள்கிறது.

**தமிழ்ப் பண்பாட்டு அகழ்வாய்வுகள்:**

தமிழ் இலக்கியத்தின் பின்னணியில், இன்னும் நிலவமைப்பின் அடிப்படையில் தேடுதல்களை மேற்கொண்டால் தமிழ்ப் பண்பாட்டின் காலத்தைத் தெளிவாக அறியமுடியும். தமிழர் சமயங்கள் குறித்த ஆய்வுகளை ஆழமாக மேற்கொண்டால் உலகளாவிய அளவில் பரந்து விரிந்துள்ள தமிழ்ப்பண்பாட்டின் வேர்களைத் துல்லியமாக வரையறுக்க முடியும். சங்க இலக்கியம் தமிழரின் ஐந்து திணைகள் சார்ந்த திணைக்கோட்பாட்டை முன்வைத்ததையும், அது செய்த அகம்புறம் வரையறையையும், அந்த நிலத்தில் வாழ்ந்த உயிரிகளின் துணையாகக் கருப்பொருளாகக் கொண்டு தலைவன் தலைவி ஆகியோரின் மன உணர்வுகளைப் பதிவுசெய்தமையும் பழந்தமிழரின் பண்பாட்டு அடையாளங்களான இன்றைய இலக்கிய உலகம் கருத்தில் கொள்கிறது. சங்க இலக்கியமான பரிபாடலில் போற்றிப் புகழப்படும் வையை நதிக் கரை நாகரிகம், கீழடி அகழ்வாய்வுகளின் அடிப்படையில் நகர நாகரிகம் என்று உறுதி செய்யப்பட்டுள்ளது. தமிழ் மண்ணில் நடைபெறும் அகழ்வாய்வுகளோடு சங்க இலக்கியப் பாடல்களின் வரலாற்றுச் செய்திகளையும் ஒப்புநோக்கி ஆய்வுகளை மேற்கொண்டால் என்னும் ஆழமான தரவுகள் நமக்குக் கிடைக்கலாம்.

**பொருநைநதிப் பண்பாடு**

பொருநை என்னும் தாமிரபரணி நதி பாயும் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அகழாய்வுகள் தென்னக வரலாற்றை மட்டுமல்லாமல் இந்திய வரலாற்றையே புரட்டிப் போடலாம். ஆதிச்சநல்லூரிலும், சிவகளையிலும், கொற்கையிலும் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள் தொடர்பாகத் தொல்லியல் துறை, பொருநை நதி நாகரிகம் எனும் தலைப்பில் வெளியிட்டுள்ள மின்நூல் புதிய வரலாற்றின் திசையை உணர்த்துகிறது. சிவகளை அகழாய்வில் அமெரிக்க ஆய்வகத்தில் ஆய்வு செய்ததில் அதன் காலம் 3155 ஆண்டுகளுக்கு முற்பட்டது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சிந்துவெளியில் கண்டறியப்பட்ட பெண் சுடுமண் சிற்பத்துடன் ஆதிச்சநல்லூரில் கண்டறியப்பட்ட பெண் சுடுமண் சிற்பம் ஒப்பு நோக்கப்பட்டபோது பல புதிய தரவுகள் கிடைத்துள்ளன. சிந்துசமவெளி நாகரிகத்திற்கும் முற்பட்ட நதிக்கரை நாகரிகம் பொருநை நாகரிகம் என்பதற்கான சான்றுகள் தொடர்ந்து கிடைத்துக்கொண்டே இருக்கின்றன. பொருநை நதிக்கரையில் கிடைத்த முத்துகள் சங்கு வளையங்களைப் பற்றிய தரவுகளைப் படிக்கும்போது சங்கினை அறுக்கும் தொழில் அப்பகுதியில் 3000 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்றதை அறிய முடிகிறது. அறிவியலில் ஒரு கண்டுபிடிப்பு அதற்கு முந்தைய

கண்டுபிடிப்பை எவ்வாறு கடந்து பயணிக்கிறதோ அதேபோல் புதிய வரலாறும் முந்தைய வரலாற்றைக் கடந்து புதிய நோக்கோடும் புதிய போக்கோடும் பயணிக்கத்தான் செய்யும். சிலேட்டில் பழையதை அழித்து எவ்வாறு புதியதை எழுதுகிறோமோ அதேபோல் கிடைக்கும் புதியதரவுகளால் பழைய வரலாற்றை அழித்து அதன்மீது புதிய வரலாற்றினை எழுதத்தான் வேண்டும். சங்ககாலம் குறித்த புதிய தேடல்கள் இன்னும் தீவிரப்படுத்தப்படவேண்டும். லெமூரியாக் கண்டம் குறித்த ஆய்வுகள் அதிகமாகத் தமிழ்ச் சூழலில் நடத்தப்பட வேண்டும். தமிழ் எழுத்துகள் குறித்த கல்வெட்டியல் ஆய்வுகள் தமிழ் இலக்கண, இலக்கியங்களோடு ஒப்பு நோக்கி செய்யப்படவேண்டும். நிலப்பகுதிகளுக்கும் தமிழ் இலக்கியத்திற்குமான தொடர்புகள் இன்னும் நுணுக்கமாக ஆராயப்படவேண்டும்.

**புதிய வரலாறு எழுதப்பட வேண்டும்**

கீழடி மற்றும் ஆதிச்சநல்லூரில் மண்ஓடுகளில் கிடைத்துள்ள எழுத்துகளோடு சிந்துசமவெளியில் கிடைத்த மண் ஓடுகளையும் உருவங்களையும் ஒப்பு நோக்கும்போது தமிழ் மண் சார்ந்த புதிய வரலாறு எழுதப்படலாம். அப்போது ஏற்கனவே எழுதப்பட்ட வரலாறுகள் மாற்றி எழுதப்படவேண்டிய நிலை வரலாம். அப்போது நம் உலகளாவிய தமிழ்ப் பண்பாடு இன்னும் பல செல்நெறிகளை உலகிற்குத் தரலாம்.

**ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வுகள்**

பழந்தமிழரின் ஆதித்துறைமுகமான கொற்கையிலிருந்து அகழ்வாய்வுகளைத் தொடங்கி சிவகளை, கொங்கராயன்குறிச்சி போன்ற இடங்களில் அகழ்வாய்வுகளை மேற்கொள்ள வேண்டும். தாமிரபரணி நதியின்போக்கு மாற்றப்பட்டதாய் ஒரு கருத்து நிலவுவதால் பாபநாசம் முதல் புன்னைக்காயல் வரை தாமிரபரணி ஓடும் பாதைகள் எங்கும் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டால் புதிய செய்திகள் கிடைக்கலாம். திருநெல்வேலி மாவட்டம் ஆதிச்சநல்லூரில் நடைபெற்ற அகழாய்வுகளின் முடிவுகள் தொல்லியல் துறையால் முறையாக அறிவிக்கப்பட்டால் அடுத்தடுத்த கட்டங்களை நோக்கி ஆய்வுகளை நகர்த்திச் செல்ல முடியும். தொல்லியல் அறிஞர் அலெக்ஸ்சாண்டர் ரியாவின் ஆதிச்சநல்லூர் ஆய்வறிக்கைகள் உலகத் தமிழர்களுக்கும் தாமிரபரணி மண்சார்ந்த வாழ்க்கை வாழ்ந்த நதியோரத்து தமிழர்களுக்குமான தொடர்பை புலப்படுத்தியது. தமிழர்களின் உலோகப் பயன்பாடுகள் குறித்த அறிவை உலகுக்குக் காட்டியது. ஆதிச்சநல்லூரில் கிடைத்த அகழாய்வுப் பொருட்களைக் கொண்டு அவ்வூரிலேயே அருங்காட்சியகம் தொடங்கவும் அதில் ஆதிச்சநல்லூர் குறித்து வெளிவந்த அரிய கட்டுரைகள், நூல்களை ஆவணப்படுத்தவும் வகைசெய்ய வேண்டும். தமிழ் இலக்கியப் பதிவுகளுடன் ஆதிச்சநல்லூர் அகழாய்வுகளின் ஆய்வுகளை இணைத்துப் பார்க்கும் ஒப்பியல் ஆய்வுகள் தொடங்கப்பட வேண்டும்.

**கீழடி சொல்லும் தமிழ்ப் பண்பாட்டுச் செய்தியும்**

கீழடி, தொல்தமிழர்களின் பண்பாட்டுத் தாய்மடி என்பதைச் சமீபத்தில் கீழடியில் கிடைத்த தொல்லியல் தடயங்கள் உணர்த்துகின்றன. கீழடி அகரம், கொந்தகை, மணலூர் ஆகிய பகுதிகளில் நடைபெற்று வரும் அகழாய்வில் யானைத் தந்தத்தில் செய்யப்பட்ட பகடை, சுடுமண் முத்திரை, உறைகிணறுகள், சுடுமண்ணால் செய்யப்பட்டு ஒன்றோடு ஒன்றாக இணைக்கப்பட்ட மண் குழாய்கள், அடையாள முத்திரைகள், இரட்டைச் செங்கற்சுவர்கள், காதணிகள், முதுமக்கள் தாழிகள், கருப்பு சிவப்புப் பானையோடுகள், பழங்கால மக்கள் பயன்படுத்திய பொருட்கள் ஆகியன கிடைத்துள்ளன.

முதல்கட்ட ஆய்வில் தந்தத்தால் செய்யப்பட்ட சீப்பு கிடைத்த நிலையில், ஏழாம் கட்ட ஆய்வில் கிடைத்த அழகான பகடை ஒன்றுமுதல் ஆறு புள்ளிகள் கொண்ட நான்குகிராம் எடையுள்ளதாகத் தொல்லியல் துறையால் அறிவிக்கப்பட்டுள்ளது. சுடுமண்ணால் ஆன அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய தொட்டி கீழடியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. அகரத்தில் தங்க அணிகலன்கள் கிடைத்துள்ளன. கீழடியில் ஒரு வெள்ளிக் காசு கிடைத்துள்ளது. முன்புறம் சூரிய சந்திரரும், காளை, எருது, நாய்க் குறியீடுகளும் ‘ட’ வடிவக் குறியீடுகளும் அதில் பொறிக்கப்பட்டுள்ளன. கொந்தகையில் முதுமக்கள் தாழிக்குள்ளிருந்து எடுக்கப்பட்ட கருப்பு, சிவப்பு நிறச் சுடுமண் பானைகளில் கிடைத்த குறியீடுகள் வியப்பை ஏற்படுத்துவதாய் அமைகின்றன.

பழமையைத் தேடும் பண்பாட்டுப் பயணத்தில் கிடைத்த தரவுகள் தமிழரின் தொன்மையை உலகுக்கு மீண்டும் மீண்டும் உரக்கச் சொல்கின்றன. 2600 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்ச்சமூகம், எழுத்தறிவு பெற்ற பண்பட்ட சமூகமாகத் திகழ்ந்து வருவதைக் காணமுடிகிறது. தமிழர் நாகரிகம் உலகின் மூத்த நாகரிகம் என்பதை உலகுக்குப் பறை சாற்றுவதாய் அமைகிறது. இதற்குமுன்பு ஆதன், உதிரன் எனும் பெயர் பொறிக்கப்பட்ட மண் ஓடுகள் கிடைத்த நிலையில் கீழடியில் நடைபெற்ற ஏழாம் கட்ட ஆய்வில் 14 எழுத்துக்கள் கொண்ட தமிழ் பானையோடுகள் கிடைத்துள்ளன. இதுவரை கிடைத்த மண் ஓடுகளில் அதிக எழுத்துகள் கொண்ட மண் ஓடு இதுதான்.

கீழடியின் ஏழாம் கட்ட ஆய்வில் எட்டுக் குழிகள் தோண்டப்பட்டு மிகக் கவனமாகவும் மிக நுட்பமாகவும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உழவுக்குப் பயன்படும் கல்கருவி, தங்கக் காதணிகள், பாசிகள், இரும்பால் செய்யப்பட்ட ஆயுதங்கள் ஆகியன கண்டறியப்பட்டுள்ளன. விலங்குகளின் உருவபொம்மை சுடுமண் மாதிரியாகக் கிடைத்துள்ளன. கீழடியில் சிவப்பு வண்ணக் கொள்கலன்கள் கிடைத்துள்ளன. நான்காம் கட்ட அகழாய்வில் ஆடுகள், மாடுகள், கோழிகள், மான்கள், மயில்கள் ஆகியவற்றின் எலும்புகள் கிடைத்தன. காளைகளின் எலும்புகளைச் சோதனைக்கு உள்ளாக்கியதில் அவை ஜல்லிக்கட்டுக் காளையாக இருக்கலாம் என்று ஆய்வுமுடிவுகள் தெளிவுபடுத்துகின்றன.

ஏழாம் கட்ட ஆய்வில் கிடைக்கும் விலங்குகளின் சுடுமண் உருவம் பொம்மைகளைப் பார்க்கும்போது சங்ககாலத்தில் விலங்குகளோடு இணக்கமாக வாழ்ந்த தமிழர்களின் பேரன்புத்திறம் நமக்குப் புலப்படுகிறது. அகரம் அகழாய்வில் 25 அடுக்குகள் கொண்ட மண் உறைக் கிணறுகள் கிடைத்துள்ளன. கொந்தனையில் கிடைத்துள்ள ஈமத்தாழிகள் புதிய செய்திகளை நமக்குப் புலப்படுத்துகின்றன.

கீழடி அகழ்வாய்வுகள் 2600 ஆண்டுகளுக்கு முற்பட்ட வைகை ஆற்றுக்கரையின் நகர நாகரிகத்தை மெய்ப்பிக்கின்றன. தமிழ் பிராமி எனும் தமிழி எழுத்துகளைக் கொண்ட மட்பாண்ட ஓடுகள் 2600 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்ச் சமூகம் கற்றறிந்த சமூகமாக இருந்ததை உறுதிப்படுத்துகின்றன. ஏறுதழுவும் காளைகளோடு தமிழர்கள் கொண்டிருந்த நட்புறவை அவர்களின் வீடுகளில் புதைக்கப்பட்ட காளை மாடுளின் எலும்புகள் சான்று பகர்கின்றன. அழகான கட்டமைப்புடன் கூடிய நவீன வடிகால்வசதிகள் கொண்ட செங்கலால் கட்டப்பட்ட புகைபோக்கிகள் உடைய வீடுகளில் தமிழர்கள் வசித்துவந்தார்கள் என்பதும், நீர்மேலாண்மை மிக்கவர்களாக உறைகிணறுகளை உருவாக்கித் தண்ணீரை எடுத்து அவற்றை மட்கலன்களில் சேர்த்துத் தேவையான நேரத்தில் பயன்படுத்தினார்கள் என்பதும், கழிவுநீரைக் குழாய்கள் மூலம் தனியே வீட்டிற்கு வெளியே கொண்டுசென்றார்கள் என்பதும் நமக்குப் புலப்படுகிறது.

சுத்தம் சுகாதாரம் என்று எவ்வளவு பண்பட்ட சமூகமாகத் தமிழ்ச்சமூகம் இருந்துள்ளது என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. அணிகலன்களைப் பார்க்கும்போது தமிழர்களின் கலைநயமும் நுண்கலைகளில் அவர்கள் பெற்ற தேர்ச்சியையும் உணரமுடிகிறது. தங்க, வெள்ளிக் காசுகளின் பயன்பாடு, எடைபோடப் பயன்பட்ட எடைக்கற்கள் ஆகியன தமிழர்களின் பொருளாதார ஆழ்சிந்தனையின் நற்சான்றுகளாய் அமைகின்றன. பொற்காசுகளில் சூரிய சந்திர உருவப்பொறிப்பு தமிழர்களின் இயற்கை சார்ந்த அறிவுக்குச் சான்று பகர்வதாய் அமைகிறது.

கீழடியில் கிடைத்த தொல்படிமங்களைச் சங்க இலக்கியப் பாடல்களோடு ஒப்பிட்டு ஆராயும்போது, ‘‘கீழடி தொல்தமிழர்களின் பண்பாட்டுத் தாய்மடி’’ என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

## 2. நாணயவில்

நாணயங்கள் பொருளாதாரம் சார்ந்தவை மட்டுமன்று, பண்பாட்டின் அடையாளமாகவும் அவை திகழ்கின்றன. சிறிய நாணய அலகாக ஆட்டுத் தோல்கள் பயன்படுத்தப்பட்டன. ரோமானிய பேரரசர்களான அகஸ்ட்டஸ், ஜூலியஸ் ஆகியோர் கிரேக்க நாணயங்களைச் சேமித்த சேமிப்பாளர்களாகத் திகழ்ந்துள்ளனர். ஒரு பகுதியின்

வரலாற்றினை, அப்பகுதிப் பண்பாட்டினை அப்பகுதியில் வெளியிடப்படும் நாணயத்தின் மூலம் தெளிவாக அறிந்துகொள்ள முடியும்.

**சங்ககாலத் தமிழர் நாணயவியல்**

சங்ககாலத் தமிழர் பண்பாட்டினை மூவேந்தர் முத்திரைக் காசுகள் மூலம் அறிந்து கொள்ளலாம். பெருவழுதி நாணயமும், செழியன் காசும் குறிப்பிடத்தக்கன. மதுரை கோவலன் பொட்டலில் சங்ககால நாணயங்கள் கிடைத்தன. பாண்டிய மன்னர்களின் நாணயங்களில் ஒரு புறம் மீன் சின்னமும் மறுபுறம் யானைச் சின்னமும் பொறிக்கப்பட்டதைக் காணமுடிகிறது.

**சங்ககால வெள்ளி முத்திரைக் காசுகள்**

கி.மு. 4 அல்லது கி.மு. 5-ம் நூற்றாண்டு சார்ந்த சில செப்புக் காசுகள் 18-ம் நூற்றாண்டில் கிடைத்தன. கி.மு. 5-ம் நூற்றாண்டு முதல் கி.மு. இரண்டாம் நூற்றாண்டு பொருளாதாரத்தை அறிய சங்ககால வெள்ளி முத்திரைக் காசுகள் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

**பெருவழுதி நாணயம்**

பாண்டியர்கள் வெளியிட்ட சதுர வடிவ செப்பு நாணயத்தில் முன்பக்கத்தில் இடதுபக்கம் நோக்கி நிற்கும் குதிரை காணப்படுகிறது. அதன் கீழ் ஆமைகள் இரு தொட்டிகளில் உள்ளன. கி.மு. 3-ம் நூற்றாண்டு சார்ந்த முத்திரை நாணயமாக இது இருக்கலாம் என நம்பப்படுகிறது. சங்க காலப் பாண்டியர் வெளியிட்ட பெருவழுதி நாணயம் குறிப்பிடத்தக்கது.

**சங்ககாலச் சோழர் காசு**

அமராவதி நதிப் படுகையில் கிடைத்த சங்ககாலச் சோழர் காசு குறிப்பிடத்தக்கது.

**சங்ககால சேரர் நாணயங்கள்**

வில் பொறித்த சங்ககால சேரர் நாணயங்கள் சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை, குட்டுவன் கோதை போன்ற மன்னர்களுடையன என்று அறிகிறோம்.

**மலையமான் வெளியிட்ட செப்பு, இரும்புக் காசுகள்**

கி.பி. 100-300 காலகட்டம் சார்ந்த திருக்கோவலூர் மலையமான் வெளியிட்ட செப்பு, இரும்புக் காசுகளில் திருக்கோவலூர் ஊரின் பொன்னையாறு, மூன்று மலைகள் காணப்படுகின்றன.

**வெளிநாட்டு நாணயங்கள்**

அரிக்கமேட்டில் கிடைத்துள்ள ரோமப் பேரரசர் அகஸ்டஸ் கால நாணயங்களும் கர்நாடக மாநில சந்திரவல்லியில் கண்டு எடுக்கப்பட்ட சீன நாணயம் ஒன்றும் நமக்கும் அயல்நாடுகளுக்கும் இருந்த வணிகத் தொடர்பை விளக்குகின்றன.

## 3. கல்வெட்டியல்

கல் அல்லது வேறு பொருட்களில் வெட்டப்பட்ட அல்லது வார்க்கப்பட்ட எழுத்துகள் தொடாபான ஆய்வுத்துறையே கல்வெட்டியல் (நுிபைசயிால) என அழைக்கப்படுகிறது. வரலாற்றுத் துறையின் துணைத் துறை இது. உலகளாவிய அளவில் 'கோப்பஸ் இன்ஸ்டிகிராப்'னம் லட்டினராம்' எனும் அமைப்பு 1863-ம் ஆண்டிலிருந்து இன்றுவரை இலத்தீன் கல்வெட்டுகளைப் பெர்லினிலிருந்து வெளியிட்டு வருகிறது.

**உலகின் குறிப்பிடத்தக்க கல்வெட்டுகள்**

1. ரொசெட்டா கல்வெட்டு
2. பெஹிஸ்ட்டன் கல்வெட்டு
3. லகுனா செப்பேடு
4. ஆபெர்சியஸ் கல்வெட்டு

**தமிழ்க் கல்வெட்டுகள்**

இலத்தீன் மொழிக்கு அடுத்து இந்தியத் தொல்லியல் ஆய்வுக் கழகம் கண்டறிந்த ஒரு இலட்சம் கல்வெட்டுகளில் 60,000 கல்வெட்டுகள் தமிழ்நாட்டில் உள்ளன.

**குறிப்பிடத்தக்க பதிவுகள்**

ஆதிச்சநல்லூர் மண்தாழிகளில் உள்ள பெருங்கற்காலக் குறியீடுகள் தமிழ் எழுத்தில் அமைந்தன. கீழடியில் கிடைத்த மண்பாண்டங்களில் ஆதன், திசன், உத்திரன், குவிரன், ஆதான் எனும் தமிழ்ப் பெயர்கள் இடம்பெற்றன.

**கி.மு. 6-ம் நூற்றாண்டு முத்திரை**

இலங்கை ஆனைக் கோடையில் கி.மு. 6-ம் நூற்றாண்டு காலம் சார்ந்த சோப்புக் கல் முத்திரை கிடைத்துள்ளது.

**கி.மு. 5-ம் நூற்றாண்டு தமிழ் எழுத்துகள்**

கொடுமணல் மற்றும் பொருந்தலில் கி.மு. 500-க்கு முற்பட்ட எழுத்துகள் கொண்டு ஓடுகள் கிடைத்துள்ளன.

**கி.மு. 4-ம் நூற்றாண்டு மட்பாண்ட எழுத்துகள்**

பூம்புகாருக்குக் கிழக்கே கடல் தொல்லியல் ஆய்வாளர்களால் கி.மு. 4-ம் நூற்றாண்டுக்கு முற்பட்ட மட்பாண்டங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

**கி.மு. 3-ம் நூற்றாண்டு மாங்குளம் கல்வெட்டுகள்**

மதுரை மாவட்டம் மாங்குளம் குகைகளில் கி.மு. 3-ம் நூற்றாண்டு தமிழ்க் கல்வெட்டுகள் கிடைத்தன.

**கி.மு. 2-ம் நூற்றாண்டுப் பானை ஓடு**

திருநெல்வேலி மாவட்டம் மாங்குடியில் கி.மு.2-ம் நூற்றாண்டு தமிழ்க் கல்வெட்டுகள் கிடைத்தன.

**கி.மு. 2-ம் நூற்றாண்டுப் பானை ஓடு**

திருநெல்வேலி மாவட்டத் மாங்குடியில் கி.மு.2-ம் நூற்றாண்டு தமிழ்க் எழுத்துகள் கொண்ட சிவப்பு பானை ஓடுகள் கிடைத்துள்ளன.

**கி.மு முதல் நூற்றாண்டுத் தமிழ் கல்வெட்டு**

திருவண்ணாமலை மாவட்டம் ஜம்பை எனும் ஊரில் முதல் நூற்றாண்டு தமிழ் கல்வெட்டு கிடைத்தது.

**கி.பி.5-ம் நூற்றாண்டு களப்பிரர் கல்வெட்டு**

திருபத்தூர் மாவட்டம் பூலாங்குறிச்சி குன்றின் சரிவில் கி.பி. 5-ம் நூற்றாண்டு களப்பிரர் காலத் தமிழ்ப் பிராமி கல்வெட்டுகள் கிடைத்துள்ளது.

## 4. சுவடியியல்

**எப்படி ஓலைச்சுவடிகளில் எழுதுகின்றனர்?**

பனையோடு இணைந்த வாழ்க்கை தமிழரின் வாழ்க்கை. அதனால்தான் பழந்தமிழரின் வாழ்வைப் பனையோலையில் இன்றும் பார்க்க முடிகிறது. இளவோலையாகவும் இல்லாமல் முதிர் ஓலையாகவும் இல்லாமல் நடுத்தரமான பக்குவத்தில் இருக்கும் வெள்ளை ஓலைகளை ஒத்த அளவில் நறுக்கி ஓலைச்சுவடிகளைத் தயார் செய்வர். எழுதத் தயாராக இருக்கும் இந்த வெள்ளை ஓலைகளுக்கு ‘ஓலைச்சிறகுகள்’ என்ற பெயருண்டு. ஓலைகளின் இடதுபுறத்தில் சுவடிகளைக் கட்டத் தோதாய் துளையிடுவர். அதற்குமேல் வைத்துக் கட்ட மரச்சட்டத்தை அதே அளவில் செதுக்கிவைப்பர். வெள்ளோலைகளில் எழுதுவதை “ஓலைதீட்டுதல்” என்று முன்னோர் அழைத்தனர். அவர்களை ஏடெழுதுவோர் என்று அழைத்தார்கள். சுவடிகளைக் கட்டிப் பாதுகாக்க பட்டுத்துணிகளைப் பயன்படுத்தினர். காவியங்களையும் சிற்றிலக்கியங்களையும் நேரடியாக எழுதிய புலவர்களை ‘மூலஏடு எழுதுநர்’ என்று அழைத்தனர். அக்காப்பியங்கள் ஒரே இடத்தில் இருந்து அழிந்து விடாமலிருக்க அவற்றைப் பலர்கூடி நகலெடுத்து பல இடங்களில் இருந்த ஓலைச்சுவடிப் பாதுகாப்பகங்களில் வைத்துப் பாதுகாத்தனர். அவர்களை ‘நகலேடு எழுதுநர்’ என

அழைத்தனர். அவ்வாறு எழுதிய சுவடிகளில் ஏதேனும் பிழைகண்டால் உடன் அதைப் பல சுவடிகளோடு ஒப்புநோக்கித் திருத்துநர்களும் அக்காலத்தில் இருந்தனர். அவர்களுக்கு 'ஓலைச்சுவடித் திருத்துநர்' என்ற பெயரும் உண்டு.

**தமிழ்ச் சுவடிகள் பாதுகாப்பின் தேவை**

தமிழ்ச் சுவடிகள் பாதுகாப்பு உடனடித் தேவை. ஆனால் நம் மெத்தனத்தால் சுமார் 30,000 அரிய சுவடிகள் இன்னும் பதிப்பிக்கப்படாமல் கரையானுக்கு உணவாகிக் கொண்டிருப்பது சுவடிகள் குறித்த நம்முடைய அறிவின்மையைக் காட்டுகிறது. 1584-ல் தமிழின் முதல் புத்தகம் ''தம்பிரான் வணக்கம்'' அச்சுக்கு வந்தது. (தற்போது அந்த நூல் ஹார்ட்வர்ட் பல்கலைக்கழகக் கிளைநூலகத்தில் உள்ளது) அதற்கு முன் தமிழ் இலக்கியங்களைத் தனக்குள் புதைத்து வைத்து நமக்கு அருங்கொடையாகத் தந்த சிறப்பை ஓலைச் சுவடிகள் பெறுகின்றன.

## 5. பழக்கவழக்கங்கள்

பழக்கவழக்கங்கள் என்பது, ஒரு சமூகத்தில் அல்லது ஒரு குழுவினரிடையே தொடர்ந்து கடைபிடிக்கப்படும் நடத்தைகள், மரபுகள், சடங்குகள் மற்றும் நம்பிக்கைகள் ஆகும். இவை சமூகத்தின் ஒரு அங்கமாக, வழிவழியாக வரும் ஒரு பண்பாட்டின் வெளிப்பாடாக இருக்கின்றன.

பழக்கவழக்கங்களை சமூக பழக்கவழக்கங்கள், தனிப்பட்ட பழக்கவழக்கங்கள், சடங்கு பழக்கவழக்கங்கள் என மூன்றாக வகைப்படுத்தலாம்.

1. **சமூக பழக்கவழக்கம்:**
   பெரியோரை மதித்து மரியாதை செலுத்துதல், விருந்தினரை உபசரித்தல் போன்றவை.
2. **தனிப்பட்ட பழக்கவழக்கம்**
   தினமும் காலையில் எழுந்து குளித்து, தியானம் செய்தல், உணவு உண்பதற்கு முன் கை கழுவுதல்
3. **சடங்கு வழக்க வழக்கம்**
   திருமணம், இறப்பு போன்ற நிகழ்வுகளில் செய்யப்படும் சடங்குகள்

## 6. நம்பிக்கைகள்

பண்டைய காலத்தை விட இன்று நாம் அறிவுத்துறைகளில் முன்னேறி இருக்கின்ற காரணத்தால் பண்டைய பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் பலவற்றை இன்று நாம் மூடநம்பிக்கை என்று எண்ணி வருகிறோம். சில உண்மைகளைக் கூட மூடநம்பிக்கை என்று பேச ஆரம்பித்து விட்டோம். ஆனால் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இரண்டறக் கலந்து காணப்படுகின்றன. அவைகளில் சிலவற்றை கீழே காண்போம்.

**நாளும் சகுனமும்**

எந்த காரியத்தைச் செய்வதற்கும் நல்ல நாள் பார்ப்பது மூடநம்பிக்கை. நாளில் என்ன இருக்கிறது? நட்சத்திரத்தில் என்ன இருக்கிறது? நம்மிடம் அறிவும், திறமையும், உறுதியும் இருந்தால் தொட்ட காரியத்தை வெற்றியுடன் செய்து முடித்து விடலாம் என்று கூறுகின்றனர். இது உண்மைதான். ஆனால் இப்படி கூறுகின்றவர்களில் கூட சிலர் தான் செய்யும் செயல்களை சுப முகூர்த்தம் பார்த்துதான் செய்கின்றனர். நல்ல நாள், நல்ல நட்சத்திரம், நல்ல நேரம் இவைகளைப் பிறர் அறியாமல் பார்த்து வைத்துக் கொள்கின்றனர். குறிப்பிட்ட நேரத்தில் செயலை தொடங்குகின்றனர். இதற்கு காரணம் பரம்பரைப் பண்பைத் தவிர வேறில்லை.

பண்டை தமிழர்களிடம் நல்ல நாள் கெட்ட நாள் பார்க்கும் பழக்கம் இருந்தது.

**"மறைந்த ஒழுக்கத்து ஒரையும் நாளும்**
**துறந்த ஒழுக்கம் கிழவோர்க்கு இல்லை"**

என்பது தொல்காப்பிய களவியல் சூத்திரம். களவு மணம் நிகழும் காலத்தில் கெட்ட ராசியிலும் கெட்ட நாளிலும் காதலியுடன் சேராமல் இருக்கும் வழக்கம் தலைவனிடம் இல்லை என்பது இதன் பொருள்.

**பல்லி சொல்லுக்கு பலன்:**

நாம் ஒரு காரியத்திற்குப் புறப்படும் போது அல்லது வீடுகளில் அமர்ந்திருக்கும் போது பல்லி கத்தினால் ஏதோ பலன் உண்டு என்று எண்ணுகின்றோம். பல்லி ஒலி எழுப்பினால் தரையில் மூன்று முறை விரலால் தட்டும் பழக்கமும் வாயினால் பல்லி எழுப்பிய ஒலியைப் போன்று ஒலி எழுப்புகின்ற பழக்கமும் இன்றும் சிலரிடம் இருப்பதைக் காண முடிகிறது. பல்லி சொல்லை நம்புவது பரம்பரை பழக்கம்தான்.

**"மையல் கொண்ட மதன் அழி இருக்கையள்**
**பகுவாய் பல்லி படுதோறும் பரவி கூறஎன நடுங்கி"**

காதல் மிகுதியால், வலிமையற்றிருப்பவள், பிளந்த வாயை உடைய பல்லி சொல்லும் போதெல்லாம் வணங்கி, அதனை நல்லது சொல் என்று நடுங்கி வேண்டினாள். இந்த அகநானூற்று பாடல் வழி பல்லி சொல்வதற்குப் பலன் உண்டு என்று தமிழ் மக்கள் நம்பி வந்தனர் என்பதை உணர்த்துகிறது.

**எரி நட்சத்திரம்**

வானத்திலிருந்து பெரிய நட்சத்திரம் எரிந்து விழுந்தால் அது விபரீதத்துக்கு அடையாளம் என்பர். சிறப்பாக அரசனுக்கு ஆகாது, அரசனுக்கு ஆபத்து என்று எண்ணி வந்தனர்.

கோச் சேரமான் யானைக்கண் சேய் மாந்தரம் சேரல் இரும்பொறை என்னும் மன்னன் சேர நாட்டை ஆண்டு வந்தான். அப்போது ஒருநாள் இரவிலே பெரிய நட்சத்திரம் ஒன்று எரிந்து நிலத்தில் விழுந்தது. அதைக் கண்ட புலவர்களும், அரசனால் உதவி பெற்ற இரவலர்களும் வருந்தினர். நமது அரசன் நோயின்றி வாழ்வானாயின் நலம் என்று அவர்கள் எண்ணினர். அரசனுக்கு என்ன ஆபத்து வருமோ என்று நினைத்து ஏங்கினர். நட்சத்திரம் எரிந்து விழுந்த ஏழாம் நாளில் சேர மன்னனாகிய இரும்பொறை உயிர் நீத்தான். இச்செய்தி புறநானூற்றில் காணப்படுகிறது.

**தெய்வ வாக்கு**

நாம் ஏதேனும் ஒரு காரியத்தைப் பற்றி உரையாடிக் கொண்டிருக்கும்போது எங்கேயாவது இருந்து மணியோசை கேட்டால் உடனே அந்த காரியம் வெற்றி என்று சொல்லிக் கொள்கிறோம். தெருவோடு பேசிக் கொண்டு போகிறவர்கள் தங்கள் பேச்சிலே 'இனிமேல் கவலை வேண்டாம்' என்று சொல்லிக்கொண்டு போனால், அல்லது 'நிச்சயம் முடிந்துவிடும்' என்று சொல்லிக் கொண்டு போனால் அச்சொற்களைத், தான் பேசிக்கொண்டிருக்கும் காரியத்தைக் குறித்து கூறியதாக நினைத்துக் கொள்கிறோம். இதுவும் தமிழர்களின் பரம்பரை பண்புதான். தொல்காப்பிய புறத்திணையியலில் ஆநிரையைக் கவர்வதற்குச் சென்ற வீரர்கள் தாங்கள் சென்றிருக்கும் இடத்தில், இரவில் நல்ல பறவையின் ஒலியைக் கேட்டால் அதையும் நல்ல சகுனமாக நினைப்பர். இதற்கு 'விரிச்சி' என்ற பெயர். இதுபோன்ற செய்திகள் நற்றிணை போன்ற இலக்கியங்களிலும் இடம்பெற்றுள்ளது.

## 7. உணவு

**தமிழர்களின் உணவு**

பண்டைய தமிழர்கள் உண்டு மகிழ்ந்த உணவைப் பற்றி இரு கருத்துக்கள் கூறப்படுகிறது. பழந்தமிழர்கள் மரக்கறி வகைகளைத் தான் உண்டு வாழ்ந்தனர். காய், கனி, கிழங்குகள் தான் அவர்களுடைய உணவாக இருந்தன. ஆரியர் இந்நாட்டில் குடிபுகுந்த பின்னர்தான் தமிழர்களின் உணவில் மாற்றம் ஏற்பட்டது. ஆரியர்கள் வேள்விகளிலே உயிர் பலியிட்டு உண்பதைக் கண்டனர். தமிழர்களும் அவர்களைப் பார்த்து புலால் உண்ணக் கற்றுக் கொண்டனர். ஆரியர்கள் சோம பானம் அருந்துவதைப் பார்த்து தமிழர்களும் மதுபானம் செய்ய கற்றுக் கொண்டனர் என்று சில ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

ஆனால் மற்றொரு சாரார், இதை மறுக்கின்றனர். பண்டைய தமிழர்கள் புலாலும், மதுவும் உண்டார்கள். அவர்களுக்கு இவைகளை உண்ண அந்நியர் யாரும் கற்றுக் கொடுக்கவில்லை. தமிழகத்தில் மாம்சமும், மதுவும் நிறைய கிடைத்தன. இவைகளைத் தேடி எங்கும் செல்ல வேண்டிய கட்டாயம் இல்லை. வலியக் கிடைத்த இவைகளை

தமிழர்கள் உண்டு மகிழ்ந்தனர். ஊக்கமுடன் வாழ்க்கை நடத்தினர். வீரர்களாக சிறந்து வாழ்ந்தனர். பிற்காலத்தில் புலால் உண்பது தவறு, உயிரினங்களை கொல்வது இரக்கமற்ற செயல், புலால் உண்பவர்கள் கருணையற்றவர்கள், மது அருந்துவது ஒழுக்க கேட்டுக்கு அடிப்படை என்று கூற துவங்கினர்.

ஆனால் பண்டையத் தமிழ் இலக்கியங்களில் பார்க்கும்போது புலால், மது இவ்விரண்டையுமே சிறந்த உணவாகக் உட்கொண்டு வந்துள்ளனர். பண்டைய தமிழ் இலக்கியமாகிய புறநானூறு 150-வது பாடலில் தமிழர்கள் மான்கறி உண்டச் செய்தி இடம்பெற்றுள்ளது. பண்டையத் தமிழர்கள் புளி விட்டு சமைத்த கறியை விரும்பி உண்டனர். புளிச்சுவை தமிழர் போற்றிய சுவைகளில் ஒன்றாக சிறந்து விளங்கியது. மரக்கறி வகைகளையும் புளி விட்டு சமைத்து உண்டனர். மாமிச உணவையும் கூட புளிவிட்டு சமைத்து உண்டனர் என்பதை குறுந்தொகை 167-வது பாடல் கூறுகிறது. மாமிசத்தை, புலாலை அவர்கள் விரும்பி உண்டது போலவே மதுவையும் அருந்தி மகிழ்ந்தனர்.

**"யவனர் தந்த தண்கமழ் தேறல்**
**பொன்செய் புனைகலதது ஏந்தி நாளும்**
**ஒண்தொடி மகளிர் மடுப்ப மகிழ் சிறந்து**
**ஆங்கு இனிது ஒழுகு மதி"**

இவ்வாறு பொருநர் ஆற்றுப்படையில் நக்கீரர் என்னும் புலவர் பாடியுள்ளார். மேலே கூறிய தெய்திகள் பழந்தமிழர்கள் மதுவை வெறுக்கவில்லை விரும்பி உண்டனர். விருந்தினர்களுக்கும் கொடுத்துப் போற்றினர் என்பதை உணர்த்துகிறது.

**வழிபாட்டு நெறி**

பண்டைய தமிழ் மக்கள் தங்கள் பழக்கவழக்கங்களை ஒட்டியே தாங்கள் நம்பிய கடவுள்களையும் வழிபட்டு வந்தனர். நாம் விரும்பும் ஒரு பொருளைப் பிறருக்குக் கொடுப்பது என்பது இயற்கை. இந்த இயற்கை வழியிலேயே கடவுள் வழிபாடும் நடைபெற்று வந்தது. பெரிய புராணத்தில் உள்ள கண்ணப்ப நாயனார் புராணம் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். வேடர் மரபில் பிறந்த இவ்வேட்டையில் கிடைத்த ஊனையே சிவலிங்கத்துக்குப் படைத்தார். இவ்வாறு தாம் விரும்பியப் பொருளை தாம் விரும்புபவர்களுக்கு கொடுப்பது இயற்கையாகவே அமைவது போல இறை வழிபாடு என்பதும் இயற்கையாக அமைந்ததே. பண்டைய தமிழர்கள் புலாலையும் மதுவையும் வெறுக்கவில்லை. சிறந்த வள்ளல்கள், பெரிய புலவர்கள் போன்றோர் இவற்றை விலக்கவில்லை. பத்துப்பாட்டில் புலால் உணவும் மதுவும் பாராட்டப்பட்டிருப்பதை பார்க்க முடிகிறது.

இத்தகைய தமிழ் மக்கள் தங்கள் பழக்க வழக்கங்களை ஒட்டியே வழிபாடுகளை நிகழ்த்தி இருப்பர் என்பதில் ஐயமில்லை. ஆடு கோழிகளை பலியிட்டு வணங்கியும், மாம்சங்களைப் படைத்தும் வழிபாடு செய்தார்கள் என்ற உண்மையை சங்க இலக்கியங்களில் காணலாம்.

**பலியிட்டு வழங்குதல்:**

குறுந்தொகை 263-வது பாடலில் மகள் காதல் நோயால் வருந்தி இருக்கிறாள். இதை அறியாதத் தாய் ஏதோ தெய்வ கோளாறினால் தான் தன் மகளுக்கு நோய் வந்தது என்று நினைத்து தெய்வங்களுக்கு பூஜை போட்டு மகளின் நோயை நீக்கும்படி வேண்டிக்கொள்வது என்று முடிவு செய்தாள். இதை அறிந்த தோழி தலைவியிடம் தோழியே நீராடும் ஆற்றின் நடுத்திட்டில் அன்னை வெறியாட்டு எடுக்க கருதி இருக்கிறாள். உன்னுடைய காதல் நோய் எந்த வகையிலும் தணிக்க முடியாத வேறு பல தெய்வங்களை போற்ற நினைத்தாள். ஆட்டுக்குட்டியை அறுத்து தினையால் செய்த பலியைப் படைத்து பலவகையான வாத்தியங்களும் முழங்கும்படி பூசை போடும்போது தெய்வங்கள் பூசாரிகளின் மேல் தோன்றுமே தவிர உன் காதல் நோய்க்கு மருந்தாகாது. உன் அன்னை தெய்வத்தின் மேல் பழி சுமத்துதல் வருந்தத்தக்கது.

**"மறிகுரல் அறுத்துத், திணைப்பிரப்பு ஓரீஇச்**
**செல்லாற்று கவலைப் பல்லியம் கறங்கத்**
**தோற்றம் அல்லது நோய்க்கு மருந்து"**

ஆகா

**"வேற்றுப்பெரும் தெய்வம் பலவுடன் வாழ்த்திப் பேஎய்க்கோளீஇயள்.**
**எனப்படுதல் நோதக் கன்றே தோழி"**

**முருகன் வழிபாடு**

சங்க நூல்களில் முருகனுக்கு வழிபாடாற்றிய முறை தான் விரிவாகக் கூறப்படுகின்றது. உயிர்பலி இல்லாமல் முருக வழிபாடு நடந்ததில்லை என்று சொல்லலாம்.

தலைவி காதலால் வருந்துகிறாள். அதை அன்னை அறியவில்லை. முருகனால்தான் அவளுக்கு பிணி வந்தது என்று கருதி முருகனுக்கு விழா எடுத்தாள். அப்போது பூசாரி மீது முருகன் ஆவேசம் வந்தது. அவன் ஆடுகிறான். அவனை பார்த்து தோழி கேட்பதாகக் குறுந்தொகை 362-ம் பாடல் இடம்பெற்றுள்ளது.

**காளி வழிபாடு**

துர்க்கை, ஐயை, காளி என்னும் பெண் தெய்வத்திற்கும் பலி கொடுத்து வழிபாடு செய்தனர் தமிழர்.

**“விடர்முகை அடுக்கத்து விரல்கெழு சூலிக்குக்**

**கடனும் பூணாம்கைந்நூல் யாவாம்”**

“பிளப்பும் குகையும் உள்ள மலை பக்கத்தில் உள்ள வெற்றி பொருந்திய துர்க்கைக்கு பலியிட்டுப் பூசை செய்யும் கடமையை செய்யாது விட்டோம். கையில் காப்பு நூலை கட்டாமலும் விட்டோம். என்ற குறுந்தொகை பாடல் தமிழர்கள் துர்க்கைக்கு பூசை செய்த விதத்தை காட்டுகிறது.

## 8. உடை

சங்க இலக்கியச் செய்யுள்களிலிருந்து அக்கால பருத்தித் தொழில் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது. தமிழ் நாட்டில் அதிகம் பருத்தி விளைந்தது. பருத்தியை நூல் நூற்று ஆடை நெய்தார்கள். ஆகவே பருத்திப் பயிரிடும் தொழிலும், பருத்தியிலிருந்து நூல் நூற்கும் தொழிலும், அதனை விற்கும் வாணிபத் தொழிலும் நடைபெற்றன. தமிழகத்தில் துணி விற்கப்பட்டதோடு மட்டுமல்லாமல் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது.

**“கல் சேர்பு இருந்த கதுவாய் குரம்பைப்**

**தாழி முதற் கலித்த கேழிலைப் பருத்தி”** (அகம் - 129)

**“பருத்தி வேலிச் சீறூர் மன்னன்”** (புறம்-299-1)

என்று பருத்தி பயிரிடப்பட்டது கூறப்பட்டுள்ளது. வில் அடித்து பஞ்சிலிருந்து கொட்டை நீக்கப்பட்டது. கொட்டை நீக்கப்பட்ட பஞ்சு வெண்மேகம் போல் காணப்பட்டது அதை நூலாக நூற்கிறார்கள். அக்காலத்தில் கையினாலே நூல் நூற்கப்பட்டது. நூலை நூற்றவர்கள் மகளிர். ஆண்மகன் ஆதரவு இல்லாத பெண்டிர் பஞ்சை நூலாக நூற்றார்கள்.

**“ஆளில் பெண்டிர் தாளிற் செய்த**

**நுணங்கு நுண்பனுவல்”** (நற்-353:1-2)

போன்ற வரிகள் இதற்குச் சான்று.

நூலினால் முரத்துத் துணிகளும், மெல்லிய துணிகளும் நெய்யப்பட்டன. குளத்தில் படரும் பாசி போன்று முரட்டுத் துணிகளும், நுண்மையான நூல்களினால் மெல்லிய துணிகளும் செய்யப்பட்டன. பால் ஆவிபோன்ற மெல்லிய துணிகளும், பாம்புத்தோல் போன்ற அழகான துணிகளும், காகிதம் போன்ற மெல்லிய துணிகளும் பலவகையாக நெய்யப்பட்டன.

**“பாம்புரித் தன்ன பொன்பூங் கலிங்கம்”** (மலைபடு 156)

**“அரவுரியன்ன அறுவை”** (பொருநர்-82-83)

**“காம்பு சொலித்தன்ன அறுவை”-** (சிறுபாண-236)

இவ்வாறு பலதரமான ஆடைகள் நெய்யப்பட்டன.

## 9. திருவிழா

மனித சமுதாயம் பல்வேறு காரணங்களால் பல்வேறு பிரிவுகளாக வாழ்ந்திருந்தாலும், அச்சமுதாயம் ஒன்றிணைந்து கொண்டாடுவது திருவிழாக்களாகும். தமிழகத்தில் இரண்டாயிரம் ஆண்டுகளாகத் திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. சமுதாய மாற்றத்தால் புதிய புதிய திருவிழாக்களும் தோன்றுகின்றன. கலைகளின் வளர்ச்சிக்கு மூல காரணம் திருவிழா என்றால் அது மிகையாகாது. திருவிழாக்கள் அனைத்தும் கோயிலுடன் பின்னிப்பிணைந்துள்ளன. கோயில் என்றாலே திருவிழா் திருவிழா என்றாலே கோயில் விழாக்கள்தான். சமயத்தின் கூறாக மட்டுமின்றி கலைகளின் வளர்ப்புப் பண்ணையாகவும் திகழ்கிறது. திருவிழாக்கள் பண்பாட்டு உணர்வை வளர்க்கவும், ஒருமனப்பாட்டுணர்வை வளர்க்கவும் பயன்படுகின்றன.

விழாதக்கள் பொழுதுபோக்காக மட்டுமின்றி பயன் கருதியும் நடத்தப்படுகின்றன. நாட்டுப்புற விழாக்கள் மூலம் நாட்டுப்புற மக்களின் பண்பாடும், பழக்கவழக்கங்களும், நாகரிகமும் வெளிப்படுகின்றன. விழாக்கள் பெரும்பாலும் மதச் சார்புடையதாகவோ அல்லது தொழில் சார்புடையதாகவோ இருக்கும். தொழில் சார்புடைய விழாக்கள் தொழில் சிறப்படைய வேண்டும் என்ற எண்ணத்தில் கொண்டாடப்படுவது. சமய சார்புடைய விழாக்களில் தெய்வ வழிபாடு கலந்திருக்கும். திருவிழாக்கள் மகிழ்ச்சிக்காக மட்டுமின்றி பண்பாட்டுப் பரிமாற்றங்கள் நிகழவும் உறுதுணையாக உள்ளன. சமூக ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுணர்வை வளர்க்கவும் பயன்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## 10. விளையாட்டு

விளை என்றால் விருப்பம் ஆட்டு என்றால் ஆட்டம் எனப்படும். எனவே விரும்பி ஆடும் ஆட்டம் விளையாட்டாகும். ஒருவன் தன் இன்பத்திற்காகத் தானே விரும்பி மேற்கொள்வது விளையாட்டு எனப்படுகிறது. மனிதனின் அன்றாட வாழ்வில் சிறுபிள்ளைகள் செய்யும் ஒவ்வொரு அசைவினைக் கூட விளையாட்டு என்கின்றனர். பிள்ளைப் பருவம் முதல் முதுமைப் பருவம் வரை வயதிற்கு ஏற்ப விளையாட்டுகளும் விளையாட்டுக் களமும் மாற்றம் பெறுகின்றன.

**“ஓய்வு வேளைகளில் மன மகிழ்ச்சிக்காகச் செய்யக்கூடிய**
**எளிய அல்லது வேடிக்கையான செயல்களே விளையாட்டெனலாம்”**

என்று பாலசுப்பிரமணியம் வரையறுத்துள்ளார். சக்திவேல் விளையாட்டு என்பது வெளித்தூண்டல்களின்றி மகிழ்ச்சியூட்டும் செயல்களில் இயற்கையாக ஈடுபடுவதாகும் என்று

விளக்கம் அளிக்கிறார். இவ்விளையாட்டு பொழுது போக்காக மட்டுமின்றி உடல் நலம், மனநலம் பேணுபவையாகவும் உள்ளது. வாழ்க்கைக்குப் பயிற்சியளிக்கும் களமாகவும் விளையாட்டு இடம்பெற்றுள்ளது.

## 11. வழிபாட்டு நெறி

பண்டைய தமிழ் மக்கள் தங்கள் பழக்கவழக்கங்களை ஒட்டியே தாங்கள் நம்பிய கடவுள்களையும் வழிபட்டு வந்தனர். நாம் விரும்பும் ஒரு பொருளைப் பிறருக்குக் கொடுப்பது என்பது இயற்கை. இந்த இயற்கை வழியிலேயே கடவுள் வழிபாடும் நடைபெற்று வந்தது. பெரிய புராணத்தில் உள்ள கண்ணப்ப நாயனார் புராணம் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். வேடர் மரபில் பிறந்த இவ்வேட்டையில் கிடைத்த ஊனையே சிவலிங்கத்துக்குப் படைத்தார். இவ்வாறு தாம் விரும்பியப் பொருளை தாம் விரும்புபவர்களுக்கு கொடுப்பது இயற்கையாகவே அமைவது போல இறை வழிபாடு என்பதும் இயற்கையாக அமைந்ததே. பண்டைய தமிழர்கள் புலாலையும் மதுவையும் வெறுக்கவில்லை. சிறந்த வள்ளல்கள், பெரிய புலவர்கள் போன்றோர் இவற்றை விலக்கவில்லை. பத்துப்பாட்டில் புலால் உணவும் மதுவும் பாராட்டப்பட்டிருப்பதை பார்க்க முடிகிறது.

இத்தகைய தமிழ் மக்கள் தங்கள் பழக்க வழக்கங்களை ஒட்டியே வழிபாடுகளை நிகழ்த்தி இருப்பர் என்பதில் ஐயமில்லை. ஆடு, கோழிகளை பலியிட்டு வணங்கியும், மாம்சங்களைப் படைத்தும் வழிபாடு செய்தார்கள் என்ற உண்மையை சங்க இலக்கியங்களில் காணலாம்.

**பலியிட்டு வழங்குதல்:**

குறுந்தொகை 263-வது பாடலில் மகள் காதல் நோயால் வருந்தி இருக்கிறாள். இதை அறியாதத் தாய் ஏதோ தெய்வ கோளாறினால் தான் தன் மகளுக்கு நோய் வந்தது என்று நினைத்து தெய்வங்களுக்கு பூஜை போட்டு மகளின் நோயை நீக்கும்படி வேண்டிக்கொள்வது என்று முடிவு செய்தாள். இதை அறிந்த தோழி தலைவியிடம் தோழியே நீராடும் ஆற்றின் நடுத்திட்டில் அன்னை வெறியாட்டு எடுக்க கருதி இருக்கிறாள். உன்னுடைய காதல் நோய் எந்த வகையிலும் தணிக்க முடியாத வேறு பல தெய்வங்களை போற்ற நினைத்தாள். ஆட்டுக்குட்டியை அறுத்து தினையால் செய்த பலியைப் படைத்து பலவகையான வாத்தியங்களும் முழங்கும்படி பூசை போடும்போது தெய்வங்கள் பூசாரிகளின் மேல் தோன்றுமே தவிர உன் காதல் நோய்க்கு மருந்தாகாது. உன் அன்னை தெய்வத்தின் மேல் பழி சுமத்துதல் வருந்தத்தக்கது.

**“மறிகுரல் அறுத்துத், திணைப்பிரப்பு இரீஇச்**

**செல்லாற்று கவலைப் பல்லியம் கறங்கத்**

**தோற்றம் அல்லது நோய்க்கு மருந்து"**

ஆகா

**"வேற்றுப்பெரும் தெய்வம் பலவுடன் வாழ்த்திப்**

**பேஎய்க்கோளீஇயள். எனப்படுதல் நோதக் கன்றே தோழி**

**முருகன் வழிபாடு**

சங்க நூல்களில் முருகனுக்கு வழிபாடாற்றிய முறை தான் விரிவாகக் கூறப்படுகின்றது. உயிர்பலி இல்லாமல் முருக வழிபாடு நடந்ததில்லை என்று சொல்லலாம்.

தலைவி காதலால் வருந்துகிறாள். அதை அன்னை அறியவில்லை. முருகனால்தான் அவளுக்கு பிணி வந்தது என்று கருதி முருகனுக்கு விழா எடுத்தாள். அப்போது பூசாரி மீது முருகன் ஆவேசம் வந்தது. அவன் ஆடுகிறான். அவனை பார்த்து தோழி கேட்பதாகக் குறுந்தொகை 362-ம் பாடல் இடம்பெற்றுள்ளது.

**காளி வழிபாடு**

துர்க்கை, ஐயை, காளி என்னும் பெண் தெய்வத்திற்கும் பலி கொடுத்து வழிபாடு செய்தனர் தமிழர்.

**"விடர்முகை அடுக்கத்து விரல்கெழு சூலிக்குக்**

**கடனும் பூணாம்கைந்நூல் யாவாம்"**

"பிளப்பும் குகையும் உள்ள மலை பக்கத்தில் உள்ள வெற்றி பொருந்திய துர்க்கைக்கு பலியிட்டுப் பூசை செய்யும் கடமையை செய்யாது விட்டோம். கையில் காப்பு நூலை கட்டாமலும் விட்டோம். என்ற குறுந்தொகை பாடல் தமிழர்கள் துர்க்கைக்கு பூசை செய்த விதத்தை காட்டுகிறது.

## 12. சிந்தனை நெறி

மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலன்கள் வாயிலாக நாம் ஒவ்வொரு உணர்வுகளையும் உற்றறிகின்றோம். புலன்கள் வாயிலாக எழும் உணர்வுகள் சிலவேளைகளில் நம்மை நாமே மறந்து வாழவும் தூண்டுகின்றன. உலக ஆசைகளில் சிக்குண்டு ஐம்பொறி உணர்வுகளையும் அடக்கும் வலிமையின்றி அவதியுறுவோர்க்கு அடக்கும் வலிமையை வழங்குவது இறைவனது அருளியல்பாகும். நல்லொழுக்க நெறியில் வாழ்பவற்கு புலனடக்கத்தையும் பொய்மையைப் பெருக்கும் பாசங்களிலிருந்து

உயிருக்குயிராய் உள் நின்றுணர்த்தும் ஒழுக்க நெறியே உண்மையாக சமயநெறியாகிய சிந்தனை நெறியாகும். இவ்வுண்மையை,

**“பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீ ஒழுக்க**
**நெறிநின்றார் நீடு வாழ்வார்”.**

என வள்ளுவர் அறிவுறுத்தியுள்ளார்.

## 13. அறிவியல் நெறி

சமுதாயத்தின் வளர்ச்சிப் படிகளில் அறிவியலின் பங்கு மிகப் பரியது. நவீன அறிவியல் மனிதரின் வாழ்வில் தொடர்ச்சியாகப் பல புதுமைகளை அறிமுகப்படுத்தி வருகின்றன. உலகம் நவீன அறிவியலின் மிகப்பெரும் வளர்ச்சியால் சுருங்கிப் போய்விட்டது. தற்போது அறிவியலில் உலகம் அடைந்துள்ள வளர்ச்சிய தமிழ் மொழியில் இரண்டாயிம் ஆண்டுகளுக்கு முன்பே காணமுடிகிறது.

அறிவியல் நெறி என்பது அறிவியல் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கான வழிகாட்டுதல்களைக் குறிக்கும். இது அறிவியல் ஆராய்ச்சி, தகவல் வெளியீடு மற்றும் சமூகத்தில் அறிவியலின் பயன்பாடு போன்ற பல அம்சங்களை உள்ளடக்கியது. அறிவியல் நெறி, உண்மைகளைக் கண்டறிதல், அறிவியல் முறையைப் பின்பற்றுதல், வெளிப்படைத்தன்மை, பொறுப்புணர்வு மற்றும் மற்றவர்களுடன் ஒத்துழைத்து செயல்படுதல் போன்ற அம்சங்களை வலியுறுத்துகிறது.

அறிவியலின் முக்கிய கூறுகளாக உண்மை மற்றும் துல்லியம், வெளிப்படைத்தன்மை, பகிர்ந்து கொள்ளல், பொருத்தமான பயன்பாடு, சமூகப் பொறுப்புணர்வு, பரிசோதனை முறை என்பவற்றைக் கொள்ளலாம்.

## 15.தமிழர் மருத்துவம்

மனிதன் தன்மானத்தோடு தலைநிமிர்ந்து நிற்பதற்கான காரணங்கள் பல உண்டு. அவற்றுள் ஒன்றுதான் தமிழர் மருத்துவம். உலகம் தோன்றிய நாள் முதல் ஆண்டாண்டு காலமாக நமது முன்னோர்கள் பின்பற்றிய மருத்துவ முறையே தமிழர் மருத்துவமாகும். இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழ் மக்கள் இயற்கையான உணவு முறைகளைப் பன்பற்றியதுடன், இயற்கையான உணவுகளையே உண்டு வாழ்ந்தனர். இதனால் “உணவே மருந்து மருந்தே உணவு” என்ற மரபைப் பின்பற்றி தலைநிமிர்ந்து தளராது வாழ்க்கை நடத்தினர். அதுவே பின்னர் தமிழ் மருத்துவம் என்கிற சித்த மருத்துவமாக வளர்ந்தது. இயற்கையில் கிடைக்கின்ற இலை, தழை, மூலிகைள், மலர், காய், கனிகளே

நோய்களுக்கான மருந்துகளாகவும் பயன்பட்டன. இது குடும்ப மருத்துவமாக, அனுபவ மருத்துவமாக வாழ்க்கை என்கிற பட்டறையில் வார்த்தெடுத்த பொன்னணியாக வளர்நது ஒளிர்ந்து வருகிறது.

ஆங்கில மருத்துவத்தில் பழக்கப்பட்டவர்களும் இன்று இயற்கை மருத்துவத்தை நாடுகின்றனர். அந்த அளவுக்கு வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்துள்ளது இம்மருத்துவம். இது இயற்கை மருத்துவம், கீரைவகை மருத்துவம், மூலிகை மருத்துவம், காய் மருத்துவம், கனி மருத்துவம், கிழங்கு வகை மருத்துவம் என பல்வேறு பகுதிகளாகப் பரந்து விரிந்து வளர்ந்துள்ளது.

# IV நாட்டுப்புறவியல்

நாட்டாரியல் என்றும் நாட்டுப்புறவியல் என்றும் அழைக்கப்பெறும் இயல் மக்கள் இலக்கியப்பதிவுகளைக் கொண்டதாக அமைகிறது. கதைப்பாடல்கள், விடுகதைகள், பழமொழிகள், நிகழ்த்து கலைகள் யாவும் இப்பொருண்மையில் அடங்கும்.

## 1. நாட்டுப்புறப் பாடல்கள்

நாட்டார் பாடல்கள், கிராமியப் பாடல்கள், நாடோடிப் பாடல்கள், ஏட்டில் எழுதப்படா பாடல்கள் எனப் பல்வேறு பெயர்களில் அழைக்கப் பெறும் இப்பாடல்கள் தனி மனிதரால் எழுதப்பட்டதல்ல. காலம் காலமாக உழைக்கும் மக்களால் வாய்வழியாக வழங்கப்பட்டு செவி வழியாக அடுத்தடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லப்படும் பாடல்களே நாட்டார் பாடல்கள். வாய்மொழிப் பாடல்களாக இவை வழங்கப்படுகின்றன.

**சிறப்பு:**

பிறமொழிக் கலப்பு இன்றி மக்களின் பயன்பாட்டுத் தமிழில் இப்பாடல்கள் பாடப்படுகின்றன. அன்றாட வாழ்வின் துக்கங்கள், ஏக்கங்கள், போதாமைகள், நெருக்கடிகள் யாவற்றையும் இப்பாடல்கள் வெளிக்கொணர்கின்றன. பாடல் பாடியவரைக் குறித்த எந்த செய்தியும் இல்லை என்பதால் அடையாளச் சிக்கலோ, துதி பாடலோ நாட்டுப்புற பாடல்களில் இல்லை. மக்கள் வழக்கில் இப்பாடல்கள் உள்ளதால் இப்பாடல்கள் வெகு இயல்பாய் அமைகின்றன. அந்தந்த வட்டாரம் சார்ந்த மண் சார்ந்த பண்பாட்டினைப் பொதிந்து வைத்துள்ளன.

## 2. நாட்டுப்புறக் கதைகள்

காலம் காலமாகக் கதை சொல்வதும் கதை கேட்பதும் எல்லா நாடுகளிலும், எல்லா மக்களிடமும் வாய்மொழி மரபாக இருந்து வருகின்றது. நாகரீகம் தோன்றுவதற்கு முன்பே, மக்கள் இனக் குழுக்களாக இயங்கி வந்த போது, ஓய்வு நேரங்களில் சக மனிதர்களிடம் தொடர்பு கொள்வதற்கும், குடும்ப உறவினர்களுடன் பொழுதைக் கழிக்கவும் கதை கூறும் மரபைக் கையாண்டு வந்துள்ளனர். மனித வாழ்வில் ஒவ்வொரு நிகழ்ச்சியும் கதையாகிறது. மனிதனின் ஆசைகள், அவலங்கள், தேவைகள், விருப்பு வெறுப்புகள், கனவுகள் கற்பனைகளும் கதையாகின்றன. கதை கற்பனையை வளர்க்கிறது.

கதைகள் தொல்காப்பியர் காலத்திலே வழக்கிலிருந்ததை,

**“பொருள் மரபில்லா பொய்மொழியானும்**

**பொருளொடு புணர்ந்த நகை மொழியானும்”** (தொல்-செய் - 173)

என்று குறிப்பிட்டுள்ளார். நாட்டுப்புறக் கதைகள் வாய்மொழியாகப் பரப்பப்படுவதாகும். சில பாடல்கள் ஆசிரியர் யாரென அறிய இயலாமையும், ஒருவித வாய்ப்பாட்டுக்குள் அடங்குவதும் நாட்டுப்புறக்கதைகளுக்குப் பொருந்தும்.

## 3. கதைப்பாடல்கள்

இராமயண, மகாபாரதக் கதைகளைக் கிராமிய இசையோடு மக்கள் பாடுவதைக் கதைப் பாடல்கள் என்கிறோம். சுடலைமாடன் கதைப்பாடல், மதுரை வீரன் கதைப்பாடல், பொன்னர் சங்கர் கதைப் பாடல், நல்லதங்காள் கதைப்பாடல், மாரியம்மன் கதைப்பாடல், கட்டப்பொம்மன் கதைப்பாடல், முத்துப்பட்டன் கதைப்பாடல், காத்தவராயன் கதைப்பாடல், தேசிங்குராஜன் கதைப்பாடல், இசக்கியம்மன் கதைப்பாடல், போன்ற கதைப்பாடல்கள் கிராமியத் திருவிழாக்களில் பாடப்படுகின்றன. கதை கூறும் மரபு நாட்டார் கலையில் சிறப்பிடம் பெறுகிறது. துன்பச் சுவையோடு இக்கதைப் பாடல்கள் பாடப்படுகின்றன.

## 4. நாட்டார் சடங்குகள்

நாட்டார் சடங்குகள் தனித்துவம் வாய்ந்தன. சிறு தெய்வ வழிபாட்டுடன் தொடர்புடையன. நாட்டார் சடங்குகளைக் குடும்பச் சடங்குகள் என்றும் கோயில் சடங்குகள் என்றும் பிரிக்கலாம்.

### 1. குடும்பச் சடங்குகள்

பிறப்பு முதல் இறப்பு வரை இச்சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன. குழந்தை தாயின் வயிற்றுக்குள் இருக்கும் போது நடத்தப்படும் வளைகாப்பு, குழந்தை பிறந்தவுடன் சேனை வைத்தல், பெயர் வைத்தல், புனித நீர் தெளித்தல், தாய்மாமன் மடியில் வைத்துக் காது குத்துதல், பூப்புச் சடங்கு, திருமண உறுதிச் சடங்கு, திருமணச் சடங்குகள், நலுங்கு வைத்தல், தேங்காய் உருட்டுதல், அப்பளம் உடைத்தல், குடத்திற்குள் மோதிரம் எடுத்தல்,

தொட்டில் பாட்டு, வீடு கட்டியவுடன் தச்சுக் கழித்தல், இறப்புச் சடங்குகள் ஆகியவற்றைக் குடும்பச் சடங்குகளாகக் கொள்ளலாம்.

**2. கோயில் சடங்குகள்**

சிறுதெய்வக் கோயில் சடங்குகள் உழைக்கும் மக்களோடு தொடர்புடையன. சந்தனக் காப்பிடல், பலி பாடுதல், வெறியாட்டு, உருவம் நேர்ந்து விடல், குழந்தை பிறப்பிற்காக மரத் தொட்டில் கட்டுதல், தீப்பந்தம் ஏற்றுதல், பொங்கல் வைத்தல், சப்பரம் செய்தல், காளி பிறை போன்ற சடங்குகள் கோயில் சார்ந்த சடங்குகளாக அமைகின்றன.

## 5. நாட்டார் நடனம்

தமிழர் கலை மற்றும் தமிழர் பண்பாட்டில் நீட்சியாகக் கருதப்படும் நாட்டார் நடனம் நாட்டார் இசையோடு தொடர்புடையதாய் அமைகிறது. உழைக்கும் மக்களின் சோர்வு நீங்கவும் அவர்களுக்குப் புத்துணர்ச்சி தரவும் நாட்டார் நடனங்கள் பயன்படுகின்றன. நாடகக் கலைக்கே உரிய முக பாவனங்களோடும் அடவுகளோடும் பம்பை உருமி மேளப் பின்னணியில் நாட்டார் நடனங்கள் நிகழ்த்தப்படுகின்றன.

**விளையாட்டு நடனங்கள்**

சிறுவர் விளையாட்டுகளில் இடம் பெறும் நடனங்கள் ஊர்ப் பெருமையை விளக்குவதாய் அமையும். சடுகுடு விளையாட்டில் பாடல் பாடிச்செல்லும் அணியினர், அவர்களைப் பிடிக்கும் அணியினர் என இரு அணியினர் மோதும்போது தன் ஊர்ப் பெருமையை பாடி ஆடிக் கொண்டே செல்வதைக் காணமுடியும்.

**“நான்தாண்டா வீரன்**
**நல்ல முத்துப் பேரன்**
**வெள்ளிச் சிலம்பெடுத்து**
**வீசி வாரேண்டா**
**தங்கச் சிலம்பெடுத்து**
**தாண்டி வாரேண்டா”**

என்று பாடி ஆடி எதிர் அணியைப் பிடிப்பதைக் காணமுடியும்.

## 6. நாடகங்கள்

‘நாடி’ என்னும் சொல்லும் ‘அகம்’ என்னும் சொல்லும் புணர்ந்து ‘நாடகம்’ என முதல்நிலைத் திரிந்த தொழிற் பெயராயிற்று.

உண்மை நிகழ்ச்சிகளை உரைத்தால் உலக வழக்கு. கற்பனையாகப் புனைந்து உரைத்தல் நாடக வழக்கு என்பது தொல்காப்பியம் கூறும் கருத்து ஆகும்.

## 7. வழிபாடுகள்

ஆதிகால மனிதன் தன்னுடைய சக்திக்கு அப்பாற்பட்ட மற்றொரு சக்தி காணப்படுகின்றது என்றும், அச்சக்தியே உலகினை ஆட்டிப்படைப்பதாகவும் கருதினர். எனவே இயற்கைச் சீற்றங்களுக்குப் பயந்து அவைகளைப் போன்றி வழிபடுகின்ற வழக்கத்தை மேற்கொண்டான் மனிதன். தன்னுடைய ஒவ்வவொரு செயலுக்கும் நிகழ்ச்சிக்கும் ஒவ்வொரு சக்தி காரணம் என நம்பினான். அச்சக்தியை பண்டையத் தமிழர் அணங்கு, சூர், பேய், கடவுள், தெய்வம் எனக்கூறினான். இவ்வுலகில் தெய்வத் தன்மை வாய்ந்தது ஒன்று உண்டு என்பது கருதி அதனுடன் தொடர்பு கொண்டு தனித்தனியாக மனிதன் அடையும் உணர்ச்சியும், நடத்தும் செயல்களுமே வழிபாடாகும் என்று ஆராய்ச்சியாளர் ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். வழிபாடை இயற்கை வழிபாடு, ஆவியுலக வழிபாடு, வீட்டு தெய்வ வழிபாடு, குல தெய்வ வழிபாடு, ஊர் தெய்வ வழிபாடு என ஐந்தாக வகைப்படுத்தலாம்.

## 8. திருவிழாக்கள்

ஆண்டு முழுவதும் உழைத்த மனிதன் ஓய்வு நேரத்தில் மகிழ்ச்சியாக இருக்க விரும்புவது இயல்வு. அம்மகிழ்ச்சியைக் கொண்டாடுவதற்கு திருவிழாக்கள் நடத்தப்படுகின்றன. விழாக்கள் பெரும்பாலும் மதச் சார்புடையனவாகவோ, தொழில் சார்புடையனவாகவோ இருக்கும். தொழில் சார்புடைய விழாக்கள் தொழில் சிறப்படைய வேண்டும் என்ற எண்ணத்தில் கொண்டாடப்படுவனவாகும். சமய சார்புடைய விழாக்களில் தெய்வ வழிபாடு கலந்திருக்கும். அவை பொழுது போக்காக மட்டுமின்றி பயன் கருதியும் நடத்தப்படுகின்றன. நாட்டுப்புற விழாக்களின் மூலம் நாட்டுப்புற மக்களின் பண்பாடும் நாகரிகமும் பழக்கவழக்கங்களும் வெளிப்படுகின்றன.

விழாக்களை வருடாந்தர விழாக்கள், கோயில் விழாக்கள் என்று வகைப்படுத்தலாம். இவ்விழாக்களில் சிறுபாரம்பரிய மரபும், பெருபாரம்பரிய மரபும் கலந்து காணப்படுகின்றன. இவ்விழாக்களை நகர்புற மக்கள் மட்டுமின்றி கிராமப்புற மக்களும் கொண்டாடுகின்றனர். எடுத்துக்காட்டாக தமிழ் வருடபிறப்பு, சித்திராபௌர்ணமி, வைகாசி விசாகம், ஆடி பதினெட்டாம் பெருக்கு, வரலெட்சுமி விரதம், விநாயகர் சதுர்த்தி, நவராத்திரி, தீபாவளி, கந்தச‘டி, கார்த்திகை தீபம், வைகுண்ட ஏகாதசி, பொங்கல் விழா, மகா சிவராத்திரி, பங்குனி உத்திரம் என்பவற்றைக் கூறலாம்.

## 9. பெருங்கோயில்

கோயில் கட்டடங்கள் மிகப் பழங்காலத்திலேயே மரத்தினால் அமைக்கப்பட்டன. அதன் பிறகு செங்கல், சுண்ணாம்பு, மரம் முதலிய பொருள்களாலும் பெரிய பாறைகளைக் குடைந்து குகைக்கோயில்கள் போன்றும் அமைக்கப்பட்டன. கடைசியாகத் தனித்தனிக் கருங்கற்களைக் கொண்டு கற்றாளிகள் அமைக்கப்பட்டன. கருங்கற்களை ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டப்படுவது கற்றளி எனப்படும். வெறும் மண்ணால் கட்டப்பட்ட கோயில்களுக்கு மண்தளி என்று பெயர்.

கி.பி. 7-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில், தொண்டை நாட்டையும் சோழ நாட்டையும் மகேந்திரவர்மன் என்னும் பல்லவ அரசன் அரசாண்டன். இவன் ஏறக்குறைய கி.பி. 600 முதல் 630 வரையில் ஆட்சி செய்தான். இவன் பெரிய கற்பாறைகளைக் குடைந்து அழகான குகைக் கோயில்களை (பாறைக்கோயில்கள்) அமைத்தான். பாறையைச் செதுக்கித் தூண்களையும் முன்மண்டபத்தையும் அதற்குள் திருவுண்ணாழிகையையும் அமைக்கும் புதிய முறையை இவன் உருவாக்கினான்.

கி.பி. 10-ம் நூற்றாண்டிற்குப் பின்னர் சோழ மன்னர்கள் கருவறையைச் சுற்றிலும் மண்டபங்களை அமைத்தனர்.

**கட்டட அமைப்பும் உறுப்புகளும்**

கோயிற் கட்டட அமைப்பைப் பற்றியும் அவற்றின் உறுப்புகளைப் பற்றியும் ஆகம நூல்களிலும் சிற்ப சாஸ்திரங்களிலும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. கோயிற் கட்டடத்தில் ஆறு உறுப்புகள் உண்டு. அவையாவன, 1. அடி 2. உடல் 3. தோள் 4. கழுத்து 5. தலை 6. முடி

1. அடி அல்லது தரையமைப்பு இதற்கு அதி'டானம் மசூரகம், ஆதாரம், தளம், பூமி முதலிய பெயர்கள் உண்டு.
2. உடல் அல்லது திருஉண்ணாழிகை: இதற்குக் கல், பாதம், ஸ்தம்பம், கம்பம் முதலிய பெயர்கள் சிற்ப நூலில் கூறப்பட்டுள்ளன.
3. தோள் அல்லது தளவரிசை: இதற்கு பிரஸ்தரம், மஞ்சகம், சுபோதம் முதலிய பெயர்கள் உள்ளன.
4. கழுத்து: இதற்கு கண்டம், களம், கர்ணம் முதலிய பெயர்கள் உண்டு
5. தலை அல்லது கூரை: இதற்குப் பண்டிகை, சிகரம், மஸ்தசம், சிரம் முதலிய பெயர்கள் உள்ளன.
6. முடி அல்லது கலசம்: இதற்கு ஸ்தூபி, சிகை முதலிய பெயர்கள் உண்டு. கோயிற் கட்டடக் கலையில் இந்த ஆறு உறுப்புகளும் இன்றியமையாததாகும்.

# V. கலைகள்

## 1. கட்டடம்

அழகுக்கலைகளில் முதலாவதாக இடம்பெறுவது கட்டடக்கலை (யுசஉாவைநஉவரசந). நீளம், அகலம், உயரம் ஆகிய பரிமாணங்களால் கண்ணையும் கருத்தையும் கவர்வது கட்டடக்கலை. கல், மண், மரம், உலோகத்தாலாக்கப்படுவது. கட்டடக்கலையை உறைந்துபோன இசைக்கலை என்பர் ஸ்லீகல் (ளுஉாடநபயட). கட்டடக்கலைக்கு இயல்பும் பயன்பாடும், நிலை போற்றுத்தன்மை, அழகு என்ற மூன்று இயல்புகள் உண்டு. தமிழகக் கட்டடக்கலை தமிழகத்திற்கே உரியதாகும். மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகம் திராவிடக் கட்டடக் கலையின் முன்னோடி என ஜாண் மார்'ல், ஈராஸ் பாதிரியார் போன்றோர் கூறுகின்றனர். தமிழகத்தில் புதிய கற்கருவி காலத்திலேயே மனிதன் வீடுகளைக் கட்ட ஆரம்பித்தான் என தொல்லியல் கூறுகின்றது. கட்டடத்தின் மையப்பகுதியில் ஓரிரு அறைகளைக் கொண்ட சிறுமண்டபம், அதைச்சுற்றி நான்கு புறமும் தாழ்வாரம் போன்ற அமைப்பு, கிழக்கு அல்லது தெற்கு புறமாக வாயில் அமைப்பது போன்று சிறப்புக்கள் தமிழகத்தில் காணப்படும் தொன்மையான கட்டடக் கலையின் வடிவமாகும். இந்த கட்டடக் கலையை மூன்றாகப் பகுக்கின்றனர்.

1. நாகரம்
2. வேசரம்
3. திராவிடம்

'நாகரம்' என்பது வட இந்திய கட்டிடக் கலையாகும். 'வேசரம்' பௌத்த சமயத்தினரால் வளர்ச்சியடைந்த கட்டடக்கலை. 'திராவிடம்' தென்னிந்திய கோயில் கட்டிடக் கலையாகும்.

## 2. சிற்பக் கலை

கட்டிடக் கலைக்கு அடுத்தப்படியாக இடம்பெறுவது சிற்பக்கலையாகும். கட்டிடக் கலையைவிட சிற்பக்கலை நுட்பமானது. மனிதன், பறவை, மரம், செடி, கடல் போன்ற இயற்கை உருவங்களையும் கடவுள், தெய்வம், தேவர், அரக்கர் போன்ற கற்பனை உருவங்களையும் அழகுப்பட அமைப்பதே சிற்பக்கலையாகும். சிற்பக்கலைகள் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து மனத்திற்கு இன்பங் கொடுக்கும் இனிய கலைகள் ஆகும். இதை மெழுகு, அரக்கு, சுதை, மரம், தந்தம், கல், பஞ்சு, உலோகம் முதலிய பொருட்களினால் உருவாக்குகின்றனர்.

> **"கல்லும் உலோகமும் செங்கலும் மரமும்**
> **மண்ணும் சுதையும் தந்தமும் வண்ணமும்**
> **கண்ட சருக்கரையும் மெழுகும் என்றிவை**
> **பத்தே சிற்பத் தொழிற்குறுப் பாவன".**

என்கிறது திவாகர நிகண்டு.

**நால்வகைப் பிரிவு**

உலோகத்தினாலும், கல்லினாலும் அமைக்கப்பட்ட சிற்ப உருவங்களைத் தெய்வ உருவங்கள், இயற்கை உருவங்கள், கற்பனை உருவங்கள், பிரதிமை உருவங்கள் என நான்கு பெரும்பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. தெய்வ உருவங்கள் என்பது சிவபெருமான், பார்வதி, முருகன், திருமால், கண்ணன் போன்றவை ஆகும்.
2. இயற்கை உருவங்கள் என்பது மனிதன், மிருகம், பறவை போன்றவை.
3. கற்பனை உருவங்கள் என்பது இயற்கையில் காணப்படாத இருதலைப் பட்சி, சாபப்பட்சி, கின்னரம், குக்குட சர்ப்பம், நாகர், பூதர் போன்றவை கற்பனை உருவங்களாகும்.
4. பிரதிமை உருவங்கள் என்பது ஆட்களின் உருவங்களைத் தத்ரூபமாக அமைப்பது.

## 3. ஓவியக்கலை

ஓவியத்திற்குச் 'சித்திரம்' என்ற பெயர் உண்டு. சங்க காலத்திற்கு முன்பே ஓவியக்கலை நமது நாட்டில் வளர்ச்சியடைந்திருந்தது என்பதற்குச் சங்க நூல்களிலே சான்றுகள் உள்ளன. நமது நாட்டு ஓவியங்கள் பெரும்பாலும் சுவர் ஓவியங்களே, அதாவது சுவரிலே எழுதப்பட்ட ஓவியங்கள். சிறுபான்மை மரப்பலகைகளிலும், துணிச்சீலை (ஊயஎெயள)-களிலும் எழுதப்பட்டன. படம் என்று இப்போது வழங்குகின்ற தமிழ்ச்சொல் ஆதிகாலத்தில் துணியில் சித்திரம் எழுதப்பட்டதைத் தெரிவிக்கின்றது. படம் அல்லது படாம் என்பது சித்திரம் எழுதப்பட்ட துணிச்சீலை என்னும் பொருள் உடையது.

### ஓவியம் பற்றிய பெயர்கள்

ஓவியத்தை வட்டிகைச் செய்தி என்பர். வட்டிகை என்பது துகிலிகை (டீசரளா) வண்ணம் தீட்டாமல் வரைந்த ஓவியத்துக்குப் புனையா ஓவியம் என்று பெயர். இதனை ஆங்கிலத்தில் ழுரவடடைநெ னசயறபைெ என்பர்.

**"மனையகம் புகுந்து மணிமே கலைதான்**
**புனையா ஓவியம் போல நிற்றலும்"**

என்றும்,

**"புனையா ஓவியம் புறம்போந் தென்ன"**

என்றும் மணிமேகலை கூறுகிறது.

### ஓவிய நூல்:

மாதவி பல கலைகளைக் கற்றுத் தேர்ந்தவள் என்றும், அவற்றுள் ஓவியக் கலையும் பயின்றாள் என்றும் மணிமேகலைக் கூறுகிறது.

**"ஓவியச் செந்நூல் உரைநூற் கிடக்கையும்**
**கற்றுத்துறை போகிய பொற்கொடி மங்கை"**

என அடியார்க்கு நல்லார் அவர் காலத்தில் ஓவிய நூல் இருந்தது என்பதற்கு ஒரு சூத்திரத்தையும் முன்வைத்துள்ளார். மேலும் ஓவியநூலுள், நிற்றல், இருத்தல், கிடத்தல், இயங்குதல் என்பனவும் அவற்றின் விகற்பங்களும் பல உள்ளன. அவற்றுள் இருத்தல் - திரிதரவுடையனவும், திரிதரவில்லனவும் என இருபகுதிகளை உடையது. யானை, தேர், புரவி என்பன திரதரவுடையன. பதுமுகம், உற்கட்டிதம், சம்புடம் முதலியன திரிதரவில்லன.

## 4. இசைக்கலை

அழகுக் கலைகளுள் நான்காவதாக இடம்பெறுவது இசைக்கலை. இது காதினால் கேட்டு இன்புறத்தக்கது. இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ்களில் ஒன்று. ஆகவே, இது தமிழர் வளர்த்த கலைகளில் மிகப் பழமையானது. சங்க காலத்திலே பரிபாடல் என்னும் இசைப்பாடல்கள் பல பாடப்பட்டிருந்தன. பரிபாடல்கள் இசைப்பாடல்கள் என்பதை பரிமேலழகர் உரையினால் அறியமுடிகிறது. மேலும் இப்போது கிடைத்துள்ள இருபத்தோரு பரிபாடல்களுக்கு, அப்பாட்டுகளைப் பாடிய புலவர் பெயர்களும், அப்பாடல்களுக்கு பண் வகுத்த இசைப் புலவர் பெயர்களும் பண்பெயரும் எழுதப்பட்டிருப்பதனாலே, பரிபாடல்கள் இசைப்பாடல்கள் என்பதை ஐயமற உணரலாம்.

**இசை:**

இசை எழு வகை உண்டு. அவை

1. குரல்
2. துத்தம்
3. கைக்கிளை
4. உழை
5. இளி
6. விளரி
7. தாரம் என்பன.

**இசை பிறக்கும் இடங்கள்:**

இசை பிறக்கும் இடங்களாவன. மிடற்றினால் குரலும், நாவினால் துத்தமும், அண்ணத்தால் கைக்கிளையும், சிரத்தால் உழையும், நெற்றியால் இளியும், நெஞ்சினால் விளரியும், மூக்கால் தாரமும் பிறக்கும். இவை ஏழ்சுரம் என அழைக்கப்படும்.

## 5. ஆடல் (கூத்துக்கலை)

இசைக்கலையுடன் தொடர்புடையது ஆடற்கலை. இசைக்கலையைப் போலவே கூத்துக்கலையும் பழமை வாய்ந்தது. வாயினால் பாடப்பட்ட இசைப்பாட்டுக்கு செந்துறைப் பாட்டு என்றும் பெயர் உண்டு.

பண்டைக் காலத்தில் பதினொரு வகையான ஆடல்களை ஆடிவந்தார்கள். அவைகளின் பெயர்களாவன: அல்லியம், கொடுகொட்டி, குடை, குடம், பாண்டரங்கம், மல், தூடி, கடையம், பேடு, மரக்கால், பாவை என்பன.

1. **அல்லியம்**: இது கண்ணன் யானையின் மருப்பை ஒடித்ததைக் காட்டும் ஆடல்.
2. **கொடுகொட்டி:** சிவபெருமான் முப்புரத்தை எரித்தபோது, அது எரிமூண்டு எரிவதைக் கண்டு வெற்றி மகிழ்ச்சியினாலே கைகொட்டி நின்று ஆடிய ஆடல்.
3. **குடைக்கூத்து:** இது முருகன் அவுணரை வென்று ஆடிய ஆடல்
4. **குடக்கூத்து**: கண்ணனுடைய பேரனாகிய அநிருத்தனை வாணன் என்னும் அவுணன் சிறைவைத்தபோது அவனை சிறை மீட்பதற்காகக் கண்ணன் ஆடிய ஆடல்.
5. **பாண்டரங்கம்:** சிவபெருமான், திரிபுரத்தை எரித்துச் சாம்பலாக்கிய பின்னர், தேர்ப்பாகனாக இருந்த நான்முகன் காணும்படி ஆடியது.
6. **மல்:** மல்லாடல் என்பது கண்ணன் வாணன் என்னும் அவுணனுடன் மற்போர் செய்து அவனைக் கொன்றதைக் காட்டும் கூத்து.
7. **துடி**: துடியாடல் என்பது, கடலின் நடுவில் ஒளிந்த சூரபதுமனை முருகன் வென்ற பிறகு, அக்கடலையே அரங்கமாகக் கொண்டு துடி கொட்டி ஆடியது.
8. **கடையம்:** கடையக்கூத்து என்பது, வாணனுடைய சோ என்னும் நகரத்தின் வடக்குப்புறத்தில் இருந்த வாயில் நின்று ஆடியது.
9. **பேடு:** பேடியாடல் என்பது, காமன் தன் மகனான அநிருத்தனைச் சிறை மீட்பதற்காக பேடியுருவங் கொண்டு ஆடிய ஆடல்
10. **மரக்கால்:** மரக்கால் ஆடல் என்பது, மாயோர் கொற்றவை முன் நேராக எதிர்த்து பாம்பு, தேள் முதலியவற்றை மரக்காலினால் உழக்கி ஆடிய ஆடல்.
11. **பாவை:** பாவைக்கூத்து என்பது, போர் செய்வதற்குப் போர்க்கோலங்கொண்டு வந்த அவுணர் மோகித்து விழுந்து இறக்கும்படி திருமகள் ஆடிய ஆடல்.

இப்பதினொரு வகையான ஆடல்களையும் மாதவி என்னும் கலைச்செல்வி மேடைமேல் 1800 ஆண்டுகளுக்கு முன்னர் ஆடினாள் என சிலப்பதிகாரம் கூறுகிறது.

## ஏஜ. நாடகங்கள்

### 1. கூத்து வகை

முத்தமிழில் நாடகத்தமிழ் முக்கியமானது. நாடகம் என்பதைப் பழந்தமிழ்க் கூத்து என அழைக்கிறோம். வீட்டுக்குள் நடத்தப்படும் கூத்து அகக்கூத்து என்றும் மக்கள் முன்னிலையில் வெளியே நடத்தப்படும் கூத்தைப் புறக்கூத்து என்றும் அழைப்பர். சங்ககாலத்தில் குரவைக் கூத்து, தழூஉக் கூத்து, பிணைக் கூத்து ஆகிய கூத்துகள் நடைபெற்றன. மரபுசார்ந்த நாட்டார் கலை வடிவங்களில் கூத்து மண்வாசனை மிக்கது. மக்களின் நாட்டார் நம்பிக்கையின் வெளிப்பாடாகக் கூத்து அமைகிறது. உடல் களைப்பு

நீங்க வீட்டு முற்றங்களில் நடத்தப்பட்ட கூத்துகள் மக்களின் உணர்வை வெளிப்படுத்தும் கூத்துக் கலையாக வெளிப்பட்டன.

**கூத்து வகைகள்**

தெருக் கூத்து, சாந்திக் கூத்து, மெய்க் கூத்து, குரவைக் கூத்து, கரகம் எனும் குடக் கூத்து, தோற்பாவைக் கூத்து, கழைக் கூத்து என்று கூத்து பலவகைப்படும்.

## 2. நாடக இயக்கங்கள்

கி.பி. 1800 முதல் கி.பி. 1900 வரை உள்ள கால கட்டத்தில் தமிழ் நாடகங்கள் நவீன முறையில் மாறின. நார்வேயைச் சார்ந்த என்ரிக் இப்சன் நவீன நாடகத்தின் தந்தை என அழைக்கப்பட்டார். தமிழகத்தில் பரிதிமாற்கலைஞர் நாடக இயல் எனும் நாடக இலக்கண நூலை எழுதினார். தமிழ் நாட்டில் பழந்தமிழ் நாடகமுறையிலிருந்து புதுமையான முறைக்குத் நாடகங்கள் மாறத்துவங்கின. புதுமையான மேடை நுட்பங்கள், புதுமையான கதைக் கூறுகள், புதுமையான நாடக அரங்குகள் என்று தமிழ் நாடக இயக்கம் மாற்றம் கண்டது. உலகப் பார்வையோடு நாடக இயக்கம் மாறியது. வெவ்வேறு பாணி நாடகங்கள் தமிழில் உருவாயின. நாடகக் குழுக்கள் வெவ்வேறு தத்துவம், கலாச்சார, அரசியல் பார்வைகளோடு உருவாயின. எதார்த்தவாத நாடகங்கள் பார்வையாளர்களை ஈர்த்தன. சர்ரியலிச, பின் நவீனத்துவ நாடகங்கள் தமிழ்ச் சூழலுக்குள் நுழைந்தன. வங்க நாடக ஆசிரியர் பாதல் சர்க்கார் மூலம் அறிமுகமான சோதனை நாடக முயற்சிகள் மூன்றாம் அரங்கு எனும் பெயரில் தமிழ் நாட்டில் புதிய போக்கினை உருவாக்கின. கூத்துப் பட்டறை, நிஜ நாடக இயக்கம், பரீ'ா, அருபம், தேடல், ஆடுகளம், மௌனக்குரல் போன்ற பல இயக்கங்கள் தமிழில் உருவாயின. புதிய சோதனை முயற்சிகளை ஞானி, மு. இராமசாமி, முத்துசாமி ஆகியோர் முன்னெடுத்தனர்.

## 3. தொலைக்காட்சித் தொடர்கள்

தொலைக்காட்சிகள் தொண்ணூறுகளில் பரவலாக புழக்கத்திற்கு வந்தபின் வீட்டுந் சூழல் மாறியது. பிரைம் டைம் எனும் முக்கிய நேரத்தில் அடுக்கடுக்காய் தொலைக்காட்சித் தொடர்கள் ஒளிபரப்பாகத் தொடங்கின. தமிழ் நாட்டில் உருவாகும் தொலைக்காட்சித் தொடர்கள் இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, ஆஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளில் ஆர்வமாகப் பார்க்கப்படுகின்றன.

நகைச்சுவை, பக்தி, காதல், திகில், மர்மம், வரலாறு போன்ற பல வகைகளில் தொலைக்காட்சித் தொடர்கள் தமிழில் தயாரிக்கப்படுகின்றன. தற்போது சன்

தொலைக்காட்சி, விஜய் தொலைக்காட்சி, ஜீ தமிழ், கலர்ஸ் தமிழ் போன்ற தொலைக்காட்சிகளில் தொலைக்காட்சித் தொடர்கள் ஒளிபரப்பாகின்றன.

2012 டிசம்பர் 7, அன்று சன் தொலைக்காட்சியில் தொடங்கப்பட்ட வள்ளி எனும் தொடர் 14 செப்டம்பர் 2019 வரை 1961 அத்தியாயங்களோடு நிறைவுபெற்றது. எண்பதுகளில் கவிதாலயா, ஏவி.எம் நிறவனங்கள் குறுந்தொடர்களைத் தூர்தர்சனில் தயாரித்து ஒளிபரப்பின. இயக்குநர் பாலசந்தரின் மின் பிம்பங்கள் 1989-ல் தயாரித்த இரயில் சிநேகம் பெரும் புகழ் பெற்றது. நாகாவின் மர்மதேசம், காசளவு நேசம், கிரு'ணதாசி, மெட்டி ஒலி, கோலங்கள், நாதஸ்வரம், சரவணன் மீனாட்சி, பொம்மலாட்டம், செம்பருத்தி, மௌன ராகம், பூவே பூச்சூடவா, பாரதி கண்ணம்மா, கண்ணான கண்ணே, நாகினி, சித்தி போன்ற தொடர்கள் பெற்ற வெற்றி குறிப்பிடத்தக்கது.

## ஏஐஐ இயக்கங்கள்

### 1. தேசியம்

தேசமே முதன்மையானது எனும் அரசியல் கொள்கையே தேசியமாகும். 1947-ல் இந்திய தேசம் விடுதலை பெற்ற பின் பல இனங்கள் வாழும் பல மொழிகள் பேசும் பல சமயங்களைப் பின்பற்றும் கோடிக்கணக்கான மக்கள் வாழும் சுதந்திரக் குடியரசு நாடாகத் திகழ்கிறது. வேற்றுமையில் ஒற்றுமை எனும் உயரிய கொள்கையை நம் தேசம் பின்பற்றுகிறது. இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் வழிகாட்டலில் அணி சேராக் கொள்கை, கூட்டு சேராக் கொள்கை நம் தேசத்தின் தனித்தன்மையைக் காட்டுகிறது. இந்தியர் என்பதில் பெருமையடைகிறோம் எனும் வாக்கியம் இந்த தேச ஒற்றுமைக்குத் காரணமாக அமைகிறது. இந்தியரின் வளமான வாழ்க்கைக்குத் தொடங்கிய விடுதலைப் பயணம் 78 ஆண்டுகள் தாண்டியும் சிறப்பாகவே உள்ளது. உலகின் வல்லரசு நாடாக மாற இந்தியா எண்ணியதில்லை. மக்கள் நலம் போற்றும் நல்லரசு நாடாகத் திகழ்கிறது.

### 2. திராவிடம்

கி.பி. 19-ம் நூற்றாண்டின் இறுதியில் 20-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ்நாட்டில் உருவான சமூக, அரசியல் இயக்கமே திராவிட இயக்கமாகும். அனைவருக்கும் சம நீதி, அனைவருக்கும் கல்வி எனும் உயரிய நோக்கத்துடன் திராவிட இயக்கம் தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டது. சமூக நீதிக் கோட்பாடு திராவிட இயக்கத்தின் ஆணிவேர். தமிழறிஞர் சித்த மருத்துவரான அயோத்திதாசர் (மே.20, 1845-மே 5, 1914) சாதி எதிர்ப்புப் போராளியாகத் திகழ்ந்தார். கி.பி. 1891-ல் அயோத்திதாசர் திராவிட மகாஜன சபையைத் தோற்றுவித்தார். அதற்கு ஐந்தாண்டுகளுக்கு முன்பாகத் திராவிட பாண்டியன் எனும் இதழைத் தொடங்கி நடத்தினார். திராவிட இயக்கம் உருவாக வித்திட்ட முன்னோடி இவர். இரட்டைமலை சீனிவாசனுடன் இணைந்து வருணாசிரம

முறைக்கு எதிரான போராட்டங்கள் நடத்தினார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் திராவிட இயக்க முன்னோடிகள் இவர்கள்.

## 3. பொதுவுடைமை இயக்கம்

பொதுவுடைமை இயக்கம் என்பது சமூக பொருளாதார இலக்குகளை மக்கள் அடைவதற்காக ஏற்படுத்தப்பட்ட இயக்கமாகும். 1848-ல் கார்ல் மார்க்ஸ், ஃபிரெட்ரிக் ஏங்கல்ஸ் ஆகியோரால் கம்யூனிஸ்ட் கட்சி என்ற சொல் பொதுவுடைமைக் கட்சியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டது. பொதுவுடைமைக்கட்சி பாட்டாளி வர்க்கத்தின் அரசியல், கல்வி மற்றும் வளர்ச்சிக்கு வழிகாட்டுகிறது. முழு அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட்டால் கொள்கையில் வெல்லலாம் என்று பொதுவுடைமைக் கட்சி கூறுகிறது. கருத்தியல் ரீதியான கட்டமைப்பு, உறுப்புக் கட்சிகளின் மையக் கட்டுப்பாடு ஆகியன பொதுவுடைமைக் கட்சியின் தனித்துவமாகக் கூறலாம். இளைஞர்களைப் பொதுவுடைமைக் கருத்துகள் நோக்கி ஈர்க்க இளம் கம்யூனிஸ்ட் லீக் எனும் அமைப்புகளுடன் ஜனநாயக இளைஞர் கழகம் என்கிற அமைப்புகளும் தொடங்கப்பட்டன. உழைக்கும் மக்களின் உரிமைக்காகப் பொதுவுடைமை இயக்கங்கள் இன்றும் உழைத்து வருகின்றன.

## 4. தனித்தமிழ் இயக்கம்

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய பழமையான தமிழ் மொழியைப் பிறமொழி கலக்காமல் பேசவும் எழுதவும் வேண்டும் என்று முனைந்த இயக்கம்தான் தனித்தமிழ் இயக்கம். வடமொழிச் சொற்களைத் தமிழோடு கலந்து மணிப்பிரவாள நடை தமிழுக்குள் நுழைந்தபோது 1916-ம் ஆண்டு முன்னெடுக்கப்பட்டது தனித்தமிழ் இயக்கம். தேவ நேயப் பாவணர், மறைமலை அடிகள், பாரதிதாசனார், பெருஞ்சித்திரனார், பரிதிமாற்கலைஞர், கி.ஆ.பெ. விசுவநாதன் போன்றோர் பங்கேற்ற இயக்கமே தனித்தமிழ் இயக்கம். தூய தமிழ்ச் சொற்கள் தமிழில் இருக்கும் போது ஏன் பிறமொழிச் சொற்களைக் கையாளவேண்டும? என்று மறைமலையடிகள் கேட்டதன் விளைவே இத்தமிழியக்கம். சுவாமி வேதாச்சலம் என்னும் தம் வடமொழிப் பெயரை மறைமலையடிகள் என மாற்றிக்கொண்டார். அவர் வழித் தோன்றல்களின் பெயர்களும் (திருஞானசம்பந்தன் - அறிவு தொடர்பன், மாணிக்கவாசகம் - மணிமொழியன், சுந்தர மூர்த்தி – அழகுரு) தமிழுக்கு மாற்றப்பட்டன.

## 5. சுயமரியாதை இயக்கம்

சமுதாயத்தில் விளிம்பு நிலையில் உள்ள மக்களின் வாழ்வியல் உரிமைக்காகவும் அவர்களின் சமத்துவத்திற்காகவும் பெரியார் ஈ.வே. ராமசாமியால் அப்போதைய சென்னை இராஜதானியில் தொடங்கப்பட்ட இயக்கமே சுயமரியாதை இயக்கம். இவ்வியக்கம்

பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் சுயமரியாதையை பேணியது. 1944-ல் திராவிடர் கழகம் என்று பெயர் மாற்றப்பட்டு திராவிடர் நலன்களை முன்னிறுத்திய சமூக சீர்திருத்த அமைப்பாகச் செயல்படத் தொடங்கியது.

# VIII இசங்கள்

## (தத்துவங்களும் கொள்கைகளும்)

### 1. மெய்மையியல் (சுநயடளைஅ)

எந்தவித அலங்காரமோ விளக்கமோ இன்றி அன்றாட வாழ்க்கையில் பார்ப்பவற்றை அப்படியே இலக்கியப் படைப்பிலோ, கலைப் படைப்பிலோ எடுத்துக் காட்டுவதையே மெய்மையியம் (சுநயடளைஅ) என்று குறிப்பர். இயல்பியல் எனும் வேறு பெயரும் மெய்மையியத்திற்கு உண்டு. மெய்மையியம் உண்மையை அப்படியே எடுத்துக் காட்டுவதால் அதில் போலித்தனத்திற்கு இடமில்லை. பிரான்ஸ் நாட்டில் 1848-ம் ஆண்டு நிகழ்ந்த பிரஞ்சுப் புரட்சிக்குப் பிறகு உருவான கலை இயக்கமே மெய்மையியல் ஆகும். நிழற்படக்கலையில் மெய்மையியல் மிகப்பெரிய மாற்றத்தை உருவாக்கியது. 18, 19-ம் நூற்றாண்டில் பிரான்ஸ் நாட்டு இலக்கியத்துறையில் முன்னணியில் இருந்த கற்பனை, புனைவு, புத்தார்வத்திற்கு எதிராக இயக்கமாக மெய்மையியம் மாறியது. உண்மையும் துல்லியமும் மெய்மையியத்தின் அடிப்படைகளாய் இருந்தன. எதையும் இலட்சிய நோக்கில் இல்லாத ஒன்றை இருப்பதாகக் கூறாமல் உள்ளதை உள்ளபடி மெய்மையியல் விளக்குகிறது.

### 2. அமைப்பியல் (Structuralism)

ஸ்டக்சுரலிசம் தமிழில் அமைப்பியல் என்று அழைக்கப்படுகிறது. இவ்வுலகில் தோன்றிய எல்லாவற்றையும் ஓர் அமைப்பாகக் கருதும் கோட்பாடு ஸ்டக்சுரலிசம் . ர஑ய நாட்டறிஞர் விளாடிமிர் பிராப் அமைப்பியல் கோட்பாட்டின் தந்தை என அழைக்கப்படுகிறார். 1928-ம் ஆண்டு ர஑ய மொழியில் அவர் வெளியிட்ட நாட்டுப்புறக் கதைகளின் நூல் 1958-ல் ஆங்கிலத்தில் வெளியாகி அமைப்பியல் கோட்பாட்டினை உலகறிய வைத்தது. 1960-ம் ஆண்டுக்குப் பின் அமெரிக்காவில் நாட்டுப்புற இலக்கியங்களை ஆராய்வதில் அமைப்பியல் கோட்பாடு முக்கிய இடம் பிடித்தது. ஆய்வுக்கு எடுக்கும் எந்த இலக்கியத்தையும் பல உறுப்புகளாக அமைப்பியல் நோக்கில் பகுத்துப் பார்த்து அதில் ஓர் ஒழுங்கமைவைக்

காண்பதை அமைப்பியல் முன்வைக்கிறது. அமைப்பியல் நோக்கில் ஆய்வு நடத்த பிராப், அ∴பனேசவ் என்பவர் தொகுத்த நூறு தேவதைக் கதைகளை எடுத்துக் கொண்டு அக்கதைகளின் உறுப்புகளைத் தனித்ததொரு முறைகொண்டு பிரித்தார். அவர் தனித்தனியே பிரித்த உறுப்புகளை ஒப்பிட்டார். அவ்வாறு அவர் ஒப்பிட்டதன் அடிப்படையில் அமைப்பியல் கோட்பாடு உருவானது. அக்கதைகளைப் பிராப் உடைத்து மாறுபவை (ஏயசயைடிடநள)இ மாறாதவை (ஊழளெவயவெள) என்று தனித் தனியே பிரித்தெடுத்தார். நிலையானது என்று எடுத்துக் கொண்ட கதைகளின் கரு, பாத்திரங்கள், அவர்களின் செயல்பாடுகள் எப்படி அமைந்தன எனப் பிராப் விளக்கினார்.

நிலையற்றது என்று வகைப்படுத்திய கதைகளின் போக்கு, பாத்திரங்களின் செயல்பாடுகள் எப்படி மாறுபடுகின்றன என்பதை பிராப் ஆராய்ந்தார். எந்த 31 வினைகள் நடந்தால் கதையின் போக்கு எப்படி மாறுகிறது என்று அமைப்பியல் நோக்கில் பிராப் விளக்கினார்.

பிராப் ஆராய்ந்த தேவதைக் கதைகளின் அமைப்பியல் மாதிரியை ஆலன் டண்டிஸ் எனும் அமைப்பியல் ஆய்வாளர் மாற்றியமைத்தார். பிராப் முன் வைத்த 31 வினைகளை டண்டிஸ் 10 வினைகளாக மாற்றி அமைப்பியல் ஆய்வை நடத்தினார்.

கிளாட் பிரிமாண்ட் எனும் அமைப்பியல் ஆய்வாளர், பிராப்பின் அமைப்பியல் மாதிரியைப் பிரஞ்சு நாட்டுத் தேவதை கதைகளுக்குப் பொருத்திக்காட்டினார். பிராப்பைத் தொடர்ந்து லெவிஸ்ட்ராஸ் எனும் மானிடவியல் அறிஞர், மொழியியலை அடிப்படையாக வைத்து நாட்டுப்புற வழக்காறுகளை ஆராய்ந்தார்.

## 3. இருத்தலியல் (Existentialism)

மனிதர்களின் இருப்பு பற்றிய சிக்கலைத் தத்துவ விசாரணையின் மூலம் ஆராயும் இயலாகும்.

மனிதர்களின் இருப்பின் நோக்கம் என்ன? வாழ்வின் பொருள் யாது? போன்ற உயரிய வினாக்களைத் தத்துவார்த்தமாக ஏன்? எதற்கு? எப்படி? எங்கு? எதனால்? என்று வேர் தேடி ஆராய்கின்றனர். வாழ்வின் நெருக்கடி என்ன? எதற்கு மனித இனம் அஞ்சுகிறது? எவை அபத்தமாக அமைகின்றன? மனிதன் ஏன் எதற்குக் கவலை கொள்கிறான்? எது நம்பகத்தன்மை உடையது? நல்லொழுக்கம், மன உறுதி வாழ்வை எவ்வகையில் உயர்த்தும் எனும் வினாக்களை இருத்தலியல் முன் வைக்கிறது. பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டு ஐரோப்பிய தத்துவ ஞானிகள் எழுப்பிய பல தத்துவ வினாக்கள் இருத்தலியல் சார்ந்தே அமைகிறது.

சோரன் கீர்கேகார்டு, பிரெட்ரிக் நீட்சே ஆகிய தத்துவவாதிகள் புதினப்படைப்பாளர் பியோதர் தஸ்தாயெவ்ஸ்கி ஆகியோர் விமர்சித்த பகுத்தறிவு வாதம் இருத்தலியலின் புதிய வாசல்களைத் திறந்தது.

இருபதாம் நூற்றாண்டின் இருத்தலியல் சிந்தனையாளர்களான கார்ல் ஜாஸ்பர்ஸ், கேப்ரியல் மார்செல், ஜீன் பால் சார்த்ரே போன்றோர் இருத்தலியலைப் புதிய கோணத்தில் கண்டனர். நம்பகத்தன்மையே இருத்தலியலின் அடிப்படைக் கோட்பாடு. தனிப்பட்ட சுதந்திரம், தனிப்பட்ட பொறுப்புணர்ச்சி, சுய தேடல் ஆகியன வாழ்வின் பொருளை தீர்மானிக்கும் என்று இருத்தலியம் விளக்குகிறது.

## 4. பின்னை நவீனத்துவம் (Postmodernism)

நவீனத்துவம் ஒரு கலை இலக்கியக் கொள்கை மட்டுமன்று, அது ஒரு வாழ்க்கை முறை, பண்பாட்டு வடிவமாகவும் திகழ்கிறது. காலம் காலமாய் சொல்லிக் கொண்டிருக்கும் மரபுக்கு எதிராய் நவீனம் புதுப்பாதையில் பயணிக்கிறது. யாப்பை மையமிட்ட செய்யுள் வடிவத்திற்கு எதிராக உரைநடை எனும் எளிய வடிவத்தைப் பரமார்த்த குரு கதையின் மூலம் இத்தாலி நாட்டு அருளாளர் வீரமாமுனிவர் முன்வைத்தார். புதிய கலை, புதிய குரல், புதிய பாதை என்று நவீனம் பயணிக்கத்தொடங்கியது. சமகால நிகழ்வுகளை நவீனம் பேசுகிறது. இலக்கிய வடிவங்களில் பல சோதனை முயற்சிகளை நவீனம் முன்னிறுத்துகிறது.

## 5. கியூபிசம் (Cubism)

இத்தாலி நாட்டில் நடைபெற்ற மறுமலர்ச்சி இயக்கத்திற்குப் பின் உருவான கலை இயக்கங்களுள் முக்கியமானது கியூபிசம் (ஊரடிளைஅ) எனலாம். கியூபிசக் கலையில் பொருட்கள் துண்டு துண்டாகப் பகுத்தாராயப்பட்டு ஒரு சுருக்க உருவாக மாற்றுருவாக்கம் செய்யப்படுகிறது. ஒரு பொருளின் பல கோணப்பார்வையைக் காட்டும் புதிய முயற்சியைக் கியூபிசம் சிறப்பாகச் செய்கிறது. பிரான்சியக் கலை விமர்சகர் லூயிஸ்செல்ஸ் 1908-ல் கியூபிசம் என்ற சொல்லை முதன் முதலில் பயன்படுத்தினார். 1910 முதல் கியூபிசக் குழுமம் உலகப் புகழ் பெறத் தொடங்கியது. ஸ்பானிய நாட்டை சேர்ந்த ஓவியர்கள் பாப்லோ பிக்காசோ, ஜுவான் கிரிஸ் ஆகியோர் உலகப்புகழ் பெற்ற கியூபிசக் கலைஞர்களாகத் திகழ்ந்தனர்.

## 6. மார்க்சியம் (Marxism)

மார்க்சியம் என்பது ஓர் அரசியல் தத்துவமாகவும் சமூகப் பொருளாதார ஆய்வு முறையாகவும் அறியப்படுகிறது. வரலாற்று வளர்ச்சியின் இயங்கியல் மற்றும் பொருள் முதல்வாத விளக்கத்தை மார்க்சியம் பயன்படுத்துகிறது. 19-ம் நூற்றாண்டின் ஜெர்மானிய

தத்துவ ஞானிகளான கார்ல் மார்க்ஸ் மற்றும் ஃபிரெட்ரிக் ஏங்கெல்ஸ் ஆகியோரின் படைப்புகளிலிருந்து மார்க்சியம் உருவானது. நவீன உலகைக் கட்டமைக்க மார்க்சியம் பெரும் பங்கு வகித்து வருகிறது. மார்க்சியம் காலப்போக்கில் பல்வேறு கிளைகளாகவும் பல சிந்தனைப் பள்ளிகளாகவும் மாறின. மனிதர்களின் பொருளாதார நடவடிக்கைகளைப் பகுப்பாய்வு செய்து எந்தவொரு சமூக நிகழ்வையும் மார்க்சியம் விளக்க முயல்கிறது. முதலாளி வர்க்கத்திற்கும் பாட்டாளி வர்க்கத்திற்குமான முரண்பாடே சிந்தனைப் பள்ளிகளாகவும் மாறின. மனிதர்களின் பொருளாதார நடவடிக்கைகளைப் பகுப்பாய்வு செய்து எந்தவொரு சமூக நிகழ்வையும் மார்க்சியம் விளக்கமுயல்கிறது. முதலாளி வர்க்கத்திற்கும் பட்டாளி வர்க்கத்திற்குமான முரண்பாடே யாவற்றுக்கும் காரணம் என வர்க்கப் புரட்சிக்கு இட்டுச் செல்கிறது என்று மார்க்சியம் விளக்குகிறது. மார்க்சியம் பொருள்முதல்வாத முறைமையைப் பயன்படுத்துகிறது.

## 7. சோசலிசம் (Socialism)

சமவுடைமை அல்லது சமூகவுடைமை சோசலிசம் என அழைக்கப்படுகிறது. இது ஓர் அரசியல் பொருளியல் கோட்பாடு. உற்பத்திக் காரணிகள், இயற்கை வளங்கள், அரசு அல்லது சமூகக் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்று சமூகவுடைமை வலியுறுத்துகிறது. கார்ல் மார்க்ஸ் மற்றும் பிரெட்ரிக் ஏங்கல்ஸ் இணைந்து எழுதிய பொதுவுடைமை அறிக்கையில் வெளியான சிந்தனையின் அடிப்படையில் மார்க்சிய சமூகவுடைமை உருவானது. சமவுடைமை எனும் இலக்கை மக்களாட்சி மற்றும் சுதந்திர அமைப்புகளின் வாயிலாக அடைய முடியும் என்று மக்களாட்சி சார்ந்த சமூகவுடைமை விளக்குகிறது.

## 8. பெண்ணியம் (Feminism)

பெண்களைத் தாழ்வுபடுத்தும் சமூக, அரசியல், பொருளாதார நடைமுறைகளுக்கு எதிரான கட்டமைப்புகளை உடைக்கும் இயம். ஆண் பெண் சமத்துவத்தை வரையறுக்கும் கோட்பாடாகவும் இதைப் புரிந்து கொள்ளலாம். பெண்ணியம் பெண்மை ஆளுமையின் உயர்வைப் பேசுகிறது. பெண்ணியம் இனம், சமூகம், கலாச்சாரம், மத எல்லைகள் கடந்து பெண்களை வினைத்திறம் மிக்கவர்களாய் மாற்ற முயல்கிறது. பெண்களின் எல்லாச் சிக்கல்களையும் புரிந்துகொண்டு அதைத் தீர்க்க உதவும் முறைமையைப் பேசுகிறது. பெண்களின் பொருளாதார சுதந்திரத்தைப் பேணுகிறது. ஆணாதிக்கத்திற்கு எதிராகப் போராடுகிறது. பெண்கள் நலனைப் பேணுகிறது.

## 9. தலித்தியம் (Thalithiyam)

தலித் மக்களின் வரலாறு, அவர்களின் அடையாளம், அன்றாடம் அவர்கள் எதிர்நோக்கும் வாழ்வியல் சிக்கல்கள், மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றைச் சமூக நோக்கிலும் இலக்கிய நோக்கிலும் ஆராயும் இயமே தலித்தியம். சமஉரிமை பேசும் இயமாக தலித்தியம் அமைகிறது. தலித் மக்களின் சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களைத் தலித்தியம் நுட்பமாக ஆராய்ந்து அவர்கள் எதிர் நோக்கும் சிக்கல்களுக்குத் தீர்வு சொல்கிறது.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | பழந்தமிழர் நம்பிக்கைகள் யாவை? | K2 | CO2 | PO4 |
| 2 | கட்டடக்கலைகுறித்தெழுதுக. | K4 | CO3 | PO5 |
| 3 | கல்வெட்டியல்,நாணயவியல் விளக்குக. | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | K1 | CO4 | PO1 |
| 4 | நாடக இயக்கங்கள் யாவை? | K5 | CO5 | PO2 |
| 5 | அகராதியியலைதெளிவுபடுத்துக. | K3 | CO4 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | நாட்டுப்புறகதைப்பாடல்களின் தன்மைகளைஆராய்க. | K1 | CO4 | PO4 |
| 2 | இலக்கியத் தத்துவங்கள் மற்றும் கொள்கைகளுக்குரியலிசம், ஸ்டச்சுரலிசம் போதுமானதா? | K4 | CO2 | PO6 |
| 3 | இலக்கிய இயக்கங்கள் குறித்துவிவரிக்க. | K3 | CO1 | PO5 |
| 4 | மொழிவரலாறுஆராய்க. | K2 | CO5 | PO6 |
| 5 | பெண்ணியம்,தலித்தியம் குறித்துஎடுத்துரைக்க. | K4 | CO3 | PO3 |

# அலகு – 3 (UNIT – III)

## இக்கால இலக்கியங்களும் ஊடகங்களும்

**ஐ இக்கால இலக்கியங்கள்**

1. கவிதை
2. புதினம்
3. சிறுகதை
4. நாடகம்
5. கட்டுரை

**ஐஐ அயலகத் தமிழ் இலக்கியங்கள்**

1. இலங்கை
2. மலேசியா
3. சிங்கப்பூர்

4. தன் வரலாறு
5. வாழ்க்கை வரலாறு
6. கடித இலக்கியம்
7. சுற்றுலா மற்றும் பயண இலக்கியங்கள்
8. நவீனத்துவம்

**ஐஐஐ பிற துறைகள்**

1. மொழிபெயர்ப்பு
2. பேச்சுத் தமிழ்
3. மேடைத் தமிழ்
4. அயல் நாட்டாரின் தமிழ்
5. அறிவியல்
6. ஊடகங்கள்
7. இதழியல்
8. திரையியல்
9. வானொலி
10. தொலைகாட்சி
11. கணினி
12. செல்பேசி
13. இணையம்
14. பிற மின்னணுக் கருவிகள்
15. ஆளுமைகள்
16. வல்லுநர்கள்
17. விருதுகள்
18. விருதாளர்கள்
19. படைப்புகள்
20. விருது வழங்கும் அமைப்புகள்

# அலகு – 3

# இக்கால இலக்கியங்களும் ஊடகங்களும்

## ஐ இக்கால இலக்கியங்கள்

### 1. கவிதை

இருபதாம் நூற்றாண்டினை 'மறுமலர்ச்சிக் காலம்'எனலாம். இந்திய விடுதலைப் போராட்டமும், மேலை நாடுகளின் இலக்கியக் கோட்பாட்டுத் தாக்கமும் புதிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டன. பழைய மரபுகளிலிருந்து புதிய கண்ணோட்டங்கள் பிரிய ஆரம்பித்தன.

சிற்றரசர்களைப் புகழ்ந்து துதிபாடி உலா, மடல் எனப் பாடும் நிலையில் மாற்றம் விளைந்தது. விடுதலை வேட்கையும், ஆங்கிலேயரின் ஆதிக்கப் போக்கும் சமூக ஆர்வலர்களைத் தட்டி எழுப்பியது. பாரதியார் உள்ளிட்ட கவிஞர்கள் சமூகம் குறித்துப் பாடத் தொடங்கினர். இத்தகைய ஒன்றுபட்ட உணர்வோட்டங்கள் பாரதிபரம்பரை என்ற புதியதொரு பாதையை உருவாக்கியது.

**(1) பாரதியார்: (1882–1921)**

இயற்பெயர் சுப்பிரமணியன். எட்டயபுரத்து அரசவைக் கவிஞராக இருந்தார். அங்கு ஜமீன்தாரின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கப் பிடிக்காமல் வெளியேறினார். இவரது விடுதலை உணர்ச்சிக்கு வ.உ. சிதம்பரம்பிள்ளை, திலகர் முதலானோர் உரமிட்டனர். அதன் விளைவாக 1921-லேயே,

**“ஆடுவோமே பள்ளு பாடுவோமே**
**ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று”**

விடுதலைப் பாடல் பாடினார்.

**“என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்**
**என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்**''

என்று பாடிப் பாமரர் வரையிலும் தேசிய உணர்வைத் தூண்டினார்.

பாரதியார் பாடல்களில்,

**பெண்கள் அறிவை வளர்த்தால் வையம்**
**பேதமை அற்றிடும் காணீர்**

என்பதன் மூலம் பெண்முன்னேற்றச் சிந்தனையையும்

**பாருக்குள்ளே தெய்வம் ஒன்று இதில்**
**பற்பல சண்டைகள் வேண்டாம்**

என்பதன் மூலம் சமய ஒருமைப்பாட்டுச் சிந்தனையையும்,

**சாதிக் கொடுமைகள் வேண்டாம் - அன்பு**
**தன்னில் செழித்திடும் வையம்**

என்பதன் மூலம் சாதி ஒருமைப்பாட்டுச் சிந்தனையையும்

**‘சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே’**
**‘யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்**
**இனிதாவது எங்கும் காணோம்’**

என்பதன் மூலம் பாரதியின் தமிழ்ப் பற்றையும் உணரலாம்.

கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் என்னும் மூன்றனையும் பாரதியின் முப்பெருங் காவியங்கள் என்பர். பாஞ்சாலியைப் பாரத தேவியாகக் கொண்டு பாரதத்தின்

விடுதலையை உருவகத்தில் பாடியுள்ளார். பாரதியின் கவிதைச் சிறப்பைப் பாட்டுக்கொரு புலன் பாரதியடா என்னும் கவிமணியின் பாடலால் அறியலாம்.

பாரதியின் உரைநடைக் கட்டுரைகள், பத்திரிகைத் தலையங்கங்கள் மொழிப்பெயர்ப்புச் சிறுகதைகள் மூலம் அவரது அறிவின் திறத்தை அறியலாம்.

**2. பாரதிதாசன்: (1891–1984)**

இயற்பெயர் கனகசுப்புரத்தினம். பாரதியார் கவிதைகளில் கொண்ட ஈடுபாட்டால் பாரதிதாசன் ஆனார். பெண் முன்னேற்றம், பொதுவுடைமை, மூடப்பழக்க எதிர்ப்பு முதலான கொள்கைப் பாடல்களின் மூலம் புரட்சிக்கவி எனப் போற்றப்படுகிறார்.

தொடக்க காலத்தில் பாரதிதாசன் கடவுள் நம்பிக்கை கொண்டிருந்தார். பாரதியின் முதல் அறிமுகத்தில் ‘பாடு’ எனக் கேட்க,

**எங்கெங்கு காணினும் சக்தியடா – தம்பி**
**ஏழுகடல் அவள் வண்ணமடா**

எனப் பாடியதன் மூலம் இதனை அறியலாம்.

**கல்விஇல்லாத பெண்கள் களர்நிலம் அந்நிலத்தில்**
**புல்விளைந்திடலாம் நல்ல புதல்வர்கள் விளைதல்இல்லை**
**கல்வியைஉடைய பெண்கள் திருந்தியகழனி அங்கே**
**நல்லறிவுடைய மக்கள் விளைவது நவிலவோநான்**

என்னும் பாடல் இவரது பெண் கல்விச் சிந்தனையையும்,

**வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்**
**மணவாளன் இறந்தால் பின்மணத்தல் தீதோ**

என்பதன் மூலம் விதவை மறுமணச் சிந்தனையையும்,

**நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்**
**நிறையுழைப்புத் தோள்களெலாம் எவரின் தோள்கள்**

என்பதன் மூலம் பொதுவுடைமைச் சிந்தனையையும் காணலாம்.

பாண்டியன் பரிசு, எதிர்பாராத முத்தம் முதலியன இவரது குறுங்காப்பியங்கள். தமிழியக்கம் இவரது தமிழ்ப்பற்றின் கண்ணாடி. அழகின் சிரிப்பு, இயற்கை ஓவியம், 4 தொகுதிகளில் 234 தலைப்புகளில் பாடல்கள் பாடியுள்ளார்.

**3. கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை (1876–1954)**

கவிமணியின் பாடல்கள் மலரும் மாலையும் என்னும் தொகுப்பாக வெளிவந்துள்ளது. தமிழ், மலையாளம், ஆங்கிலம் என மும்மொழிப் புலமை வாய்ந்தவர். தமிழ்க்கவிதை, கல்வெட்டு ஆராய்ச்சி, சமுதாய சீர்திருத்தம், பெண் விடுதலை, நூற்பதிப்பு ஆகிய தளங்களில் ஈடுபாடு கொண்டவர். நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம், குழந்தைச் செல்வம், கீர்த்தனைகள் முதலானவையும் இவரது படைப்புக்கள்.

**உள்ளத்து உள்ளது கவிதை - இன்ப**
**உருவெடுப்பது கவிதை**
**தெள்ளத் தெளிந்த தமிழில் - உண்மை**
**தெளிந்து உரைப்பது கவிதை**

என்று கவிதைக்கு இலக்கணம் கூறியுள்ளார்.

எட்வின் ஆர்னால்டு எழுதிய டுபைாவள ழுக யுளயை என்பதனை ஆசியஜோதி என்னும் பெயரில் மொழியாக்கம் செய்துள்ளார். உமர் கய்யாமின் பாரசீகக் கவிதைகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பிட்ஜெரால்டு என்பவரின் கவிதைகளின் வழி தமிழில் அதனை உமர் கய்யாம் பாடல்கள் என்னும் பெயரில் தமிழாக்கம் செய்துள்ளார். சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் 24-12-1940-ல் கவிமணி என்னும் பட்டத்தைக் கொடுத்துச் சிறப்பித்தது. இவர்,

**மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல**
**மாதவம் செய்திட வேண்டும் அம்மா**

என்னும் பாடலின் மூலம் பெண்ணின் பெருமை பேசுகிறார்.

**4. நாமக்கல் கவிஞர். வெ. இராமலிங்கம் பிள்ளை (1888–1972)**

“திலகர் விதைத்த வித்து பாரதியாக முளைத்தது. காந்தி தூவின விதை நாமக்கல் கவிஞராகத் தோன்றியது” என மூதறிஞர் இராசகோபால் உரைக்கின்றார். காந்தீயக் கவிஞர் எனப் போற்றப்படுகின்றார். வேதாரண்யம் உப்புச் சத்தியாக்கரகத்தின் பொழுது காந்தியைக் குறித்து,

**கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது**
**சத்தியத்தின் நித்தியத்தை நம்பும்யாரும் சேருவீர்**

எனப் பாடியது இவரைக் காந்தியவாதியாக அடையாளப்படுத்தியது.

**தமிழன் என்றொரு இனமுண்டு**

**தனியே அவர்க்கொரு குணமுண்டு**

எனத் தமிழின் பெருமை பாடுகின்றார். 'அவனும் அவளும்' இவர் எழுதிய காப்பியம். சங்கொலி, தமிழ்த்தேர் முதலானவை இவரது கவிதைத் தொகுப்புக்கள்

**5. சுரதா: (1921)**

பாரதிதாசன் மீது கொண்ட அன்பு காரணமாக இராசகோபாலன் என்னும் தனது பெயரைச் சுப்புரத்தினதாசன் என மாற்றிக் கொண்டார். இப்பெயர் நாளடைவில் சுரதா எனச் சுருங்கியது. இவர் எடுத்தாளும் உவமைச் சிறப்பால் உவமைக்கவிஞர் எனச் சிறப்பிக்கப்படுகின்றார். 'நெய்தல் நீர்' என்னும் கவிதையில்,

**'சீதநீர்த் துளிகள் எல்லாம் சிறியகண் ணாடிமீதில்**
**ஊதிடும் ஆவி போன்று மறைந்திடும் உலர்ந்த மண்ணில்'**

என்று கடல்நீரைப் பற்றிப் பாடுவதில் இவரது உவமைச் சிறப்பைக் காணலாம். மேலும் 'தண்ணீரின் ஏப்பம்தான் அலைகள்' என்கின்றார். பாரதிதாசன் பாடல்களின் சிறப்பைக் கூற,

**"தடைநடையே அவர் எழுத்தில் இல்லை வாழைத்**
**தண்டுக்கா தடுக்கின்ற கணுக்கள் உண்டு"**

என உவமிக்கின்றார்.

சிரிப்பின் நிழல், சுவரும் சுண்ணாம்பும், துறைமுகம் முதலானவை இவரது பாடல் தொகுப்புகள். தேன் மழை என்னும் கவிதைத் தொகுப்புக்குத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பரிசைப் பெற்றார். தமிழ்நாடு அரசு ஏற்படுத்திய பாரதிதாசனார் நினைவுப் பரிசும் பதக்கத்தையும் முதன் முதலில் சுரதாவே பெற்றார்.

**6. வாணிதாசன்: (1915–1974)**

இயற்பெயர் அரங்கசாமி. 'ரமி' என்னும் புனைப்பெயரும் உண்டு. தமிழச்சி, கொடிமுல்லை, பொங்கற்பரிசு, இலக்கியம் முதலிய நூல்களை இயற்றியுள்ளார். இவரது தனிப்பாடல்கள் 'வாணிதாசன் கவிதைகள்' என்னும் தலைப்பில் வெளிவந்துள்ளது. எழிலோவியம் என்னும் நூலில்,

**"நோக்கடா கீழ்வான் தங்கக் காட்டாறு நுண்முகில்கள்**
**ஆக்கிய அழகைக் காண ஆயிரம் கண்கள் வேண்டும்"**

என அந்திவானத்தைப் பாடுகின்றார்.

**7. முடியரசன்: (1920–1998)**

இயற்பெயர் கா. சு. துரைராசு. காவியப்பாவை, வீரகாவியம், முடியரசன் கவிதைகள் இவரது படைப்புகள். பூங்கொடி காப்பியத்திற்குத் தமிழக அரசின் பரிசு கிடைத்தது. வீட்டிலும், விழாக்களிலும் கடைகளிலும் அனைத்திலும் தமிழ் கொலுவீற்றிருக்க வேண்டும் என்பது இவரது தணியாத ஆசை.

நாட்டுப்பண்கூடத் தமிழில் இருக்க வேண்டும் என விரும்புபவர். காவியப்பாவை கவிதைநூலில்

**"உயிருடல் பொருள்திரு நாலிடனும் நினைவே**
**ஓங்கிட வேண்டுவம் நாமே**
**துஞ்சாது நின்று குலையாம விந்நாட்டைத்**
**தோழமை கொண்டுல காள்வோம்**
**நெஞ்சு கெடாவகை உரமாய் நின்றால்**
**நிற்பவர் எதிரில் உளரோ"**
**படைபலம் நாமே பாரீர்**
**தடைகளை நீக்கிட வாரீர்**
**போற்றுவம் போற்றுவம் நாமே**
**நலமே மிகவேபெறவே**
**பலபல நல மிக வே"**

என்னும் பாடலை 'நாட்டுப்பண்ணாகப்' புனைந்துள்ளார். இப்பாடலை, 'ஜன கண மன இராகத்தில் பாடினால் நாட்டுப்பண் போலவே இருப்பதனை உணரலாம்.

**8. கண்ணதாசன் (1927–1981)**

'கண்ணதாசன் கவிதைகள்' என்னும் தலைப்பில் இவரது கவிதைகள் 7 தொகுதிகளாக வெளிவந்துள்ளன. மாங்கனி, ஆட்டணத்தி - ஆதிமந்தி இவரது குறுங்காப்பியங்கள். சேரமான் காதலி என்னும் புதினநூல் சாகித்திய அகாதெமி விருது பெற்றது. அர்த்தமுள்ள இந்து மதம் பத்துத்தொகுதிகள் கொண்டது. பாரிமலைக்கொடி, சிவகங்கைச் சீமை, மலைவாசம், அனார்கலி உள்பட 60 நூல்கள் எழுதியுள்ளார். தன் வாழ்நாளில் இறுதியில் இயேசு காவியம் என்னும் நூலை எழுதித் தன் வாழ்வை நிறைவாக்கினார்.

**"போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்**
**தூற்றுபவர் தூற்றட்டும் தொடர்ந்து செல்வேன்**
**ஏற்றதொரு கருத்தைஎனது உள்ளம் என்றால்**
**எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன் அஞ்சேன்"**

என்பது கண்ணதாசனின் தனிப்பாடல்.

இவரது திரைப்படப்பாடல்கள் 2 தொகுதிகளாக வெளியாகியுள்ளன. ‘யாயும் ஞாயும் யாராகியரோ’ என்னும் குறுந்தொகைப் பாடல் இவர் கரங்களில்

**“நேற்றுவரை நீயாரோ நான் யாரோ**
**இன்றுமுதல் நீவேறோ நான் வேறோ”**

என உருமாறியது. ‘உன்னையறிந்தால் நீ உனையறிந்தால் உலகத்தில போராடலாம்’ என்னும் பாடலின் வழி அனைவர்க்கும் தன்னம்பிக்கை ஊட்டியவர்.

**9. கவியோகி சுத்தானந்த பாரதியார்: (1897–1989)**

பாரத சக்தி மகா காவியம் இவரது காப்பிய நூல். இதற்குத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் ராஜராஜன் விருது பெற்றார். வளையாபதி அகவல், யோகசித்தி யசோதரையும் சித்தார்த்தனும், பாரதகீதம் எனப்பல நூல்களைப் படைத்துள்ளார்.

**10 ச.து.சுப்பிரமணிய யோகி (1904–1963)**

பாலபாரதி எனப் போற்றப்படுபவர். ‘அகல்யா’ இவரது குறுங்காப்பியம். அகலிகையின் சார்பாகப் பேசும் நூல், விவிலியத்தில் உள்ள மேரி மக்தலேனா வரலாற்றை 112 பாடல்களில் சிறுகாப்பியமாக்கியுள்ளார். இதில்

**“வான்கோழிகள் இடையேஒரு மயிலாடுதல் போலும்**
**மீன்பாடிய வானத்தொளி மேவும்மதி போலும்**
**தேன் பாடிய மலரிடை செந்தாமரை போலும்**
**மான்பாடிய விழியாரிடை மரியாள்எனும் ஒருமான்”**

என மேரியை அறிமுகப் படுத்துகின்ற பகுதி நயம் மிக்கது.

**11. கலைஞர் மு. கருணாநிதி:**

3.6.1924-ல் தோற்றம் பெற்ற இவர் உரைநடை, கவிதை, நாடகம், திரையுலகு என முத்திரை பதித்த சித்திரைத் தென்றல். தூக்குமேடை, பராசக்தி, மந்திரிகுமாரி, பூம்புகார், பொன்னர் சங்கர், சங்கத்தமிழ், குறளோவியம், நெஞ்சுக்கு நீதி, தொல்காப்பியப் பூங்கா முதலானவை கலைஞரின் படைப்புகள். விடுதலை என்னும் கவிதையில்

**“கற்றார் கல்லார் கழனியில் உழல்வோர்**
**சிற்றாள் கொல்லர் சிறுதொழில் செய்வோர்**
**மாதர் நல்லார் மாணவ மணிகள்**
**தீதறு வாழ்வில் திளைத்தலே சுதந்திரம்”**

என்று சுதந்திரத்திற்கு விளக்கம் தருகின்றார். தமிழகத்தின் முதலமைச்சராக இருந்து மறைந்த தமிழ்க் கவிஞர்.

**12. பிற கவிஞர்கள்:**

**(1) புலவர் குழந்தை:**

இராமாயணத்திற்கு மறுதலையாக இராவண காவியம் எழுதிப் புகழ்பெற்றார்.

**(2) கா.மு. செரீப்:**

மச்சகந்தி என்னும் குறுங்காவியத்தின் சொந்தக்காரர்

**(3) பெருஞ்சித்திரனார்:**

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரின் கொள்கையைப் பரப்பியவர் ஐயை, பாவியக்கூத்து இவரது படைப்புக்கள் பாவலரேறு எனப் போற்றப்படுகிறார்.

**(4) சு. சீனிவாசராகவன்:**

இவருடைய 'வெள்ளைப்பறவை' சாகித்திய அகாடமி பரிசு பெற்றது.

**(5) திருலோக சீதாராம்:**

துறைவன், கம்பதாசன், வேழ வேந்தன், வல்லம் வேங்கடபதி முதலான பலர் தரமான கவிதைகளைத் தமிழ் அன்னைக்குப் பங்களிப்புச் செய்திருக்கின்றனர்.

## 2. புதினம்

மேனாட்டார் தொடர்பால் தமிழுக்குக் கிடைத்த புதிய இலக்கிய வகை புதினம். புதினம் என்னும் சொல் ேேளநட என்னும் சொல்லில் இருந்து வந்தது. ேேளநட என்றால் நேறநெளள என்று பொருள். இப்பொருளின் அடிப்படையிலேயே ேேளநட என்பது புதினம் எனத் தமிழாக்கம் செய்யப்பட்டுளளது.

சிறுகதை ஒரு மாளிகையின் சாளரம் என்றால், மாளிகையின் மொத்தப் பரப்பும் புதினம் ஆகும் என்கின்றார் ஜியார்ஜ் மூர் என்னும் அறிஞர். புதினத்தைச் சமகாலச் சரித்திரம் எனலாம். 'சிறப்பாக அமையும் புதினங்கள் பொதுமக்களுக்கு வெறும் கதை் அறிஞர்களுக்குக் கருத்து விளக்கம் கற்று வல்லார்க்கு அனுபவப் பிழிவு' என்கிறார் மார்ரே. மேலைநாட்டில் 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் புதினங்கள் இலக்கியங்களாக உருவெடுக்கத் தொடங்கின.

**1. தமிழின் முதல் புதினம் (பிரதாப முதலியார் சரித்திரம் (1879)**

மாயூரம் நீதிபதி வேதநாயகம்பிள்ளை அவர்கள் 1879-ல் பிரதாப முதலியார் சரித்திரம் என்னும் புதினத்தைப் படைத்தார். தமிழில் இம்மாதிரி ''உரைநடை நவீனம்''

பொதுமக்களுக்கு இரசமாகவும் போதனை நிறைந்ததாகவும் இருக்கலாம் எனப்பெருமை கொள்கிறேன் என்று புதினத்தின் முன்னுரையில் வேதநாயகம் தெளிவு செய்கின்றார்.

சிட்டி, சிவபாத சுந்தரம் ஆகியோர் 1875-ல் வித்துவான் சே'ய்யங்கார் எழுதிய 'ஆதியூர் அவதானி சரித்திரம்' என்னும் நூலைத் தமிழின் முதல் புதினமாகக் காட்ட விழைவர். இந்நூல் கதைப்பாடல் வடிவில் அமைந்தது. உரையாடல் வகையிலும் பொதுமக்களுக்கு உரிய வகையிலும் அமையவில்லை.

- உரைநடை வடிவில்
- வாசகர் விரும்பும் முறையில்
- நீதி நவில் முறையில்
- மக்கள் இலக்கியமாக

என்னும் கூறுகள் கொண்ட புதினமே பிரதாப முதலியார் சரித்திரம். இதனால்தான் இது தமிழின் முதல் புதினமாக அமைவதை வேதநாயகர் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார். பிரதாப முதலியார் சரித்திரம் தமிழின் முதல் புதினமாக அமைந்த பின்னர் பின்வரும் அனைத்துப் புதினங்களும் மக்கள் இலக்கியமாக விளங்க முன்னோடியாகத் திகழ்கின்றது. எனவே தமிழ்ப் புதினத்தின் தந்தை எனப் போற்றப்படுகின்றார் வேதநாயகர். 'சுகுணசுந்தரி சரித்திரம்' என்னும் புதினத்தையும் எழுதியுள்ளார்.

**2. தமிழின் முதல் மூன்று புதினங்கள்: பட்டியல்-80**

| புதினம் | ஆண்டு | ஆசிரியர் |
|---|---|---|
| 1 பிரதாப முதலியார் சரித்திரம் | 1879 | மாயூரம் வேதநாயகம்பிள்ளை |
| 2 கமலாம்பாள் சரித்திரம் | 1896 | இராஜம் ஐயர் |
| 3 பத்மாவதி சரித்திரம் | 1898 | அ. மாதவையா |

இம்மூன்று புதினங்களுக்கும் பொதுப்பண்புகள் சில உள்ளன.

அவை:

- ❖ புதினத்தைச் 'சரித்திரம்' எனக் குறிப்பிடல்
- ❖ பெண்ணின் பெருமை பேசல்
- ❖ நகைச்சுவையோடு கூடிய நவில் முறை
- ❖ சமூகப் பார்வை

இவற்றுள் கமலாம்பாள் சரித்திரத்தைப் புதின உத்திகள் அமைந்த முதல் தமிழ்ப் புதினம் எனலாம். பின் வந்த பலர் சமூக சிக்கல்களைப் பேசினர்.

**இதன் பட்டியல் வருமாறு:**

| ஆசிரியர் | நூல் | பொதுக்கூறுகள் |
|---|---|---|
| 1 குருசாமிசர்மா | பிரேமகலாவத்யம் | பெண் கல்வி மறுப்பு |
| 2. நடேச சாஸ்திரி | தீனதயாளு, திக்கற்ற இரு குழந்தைகள் | குழந்தைமணம் |
| 3. அ. மாதவையா | விஜயமார்த்தாண்டன் | விதவைக் கொடுமை |
| 4. வில்லியம் பொன்னுசாமி | கமலாக்ஷீ சிவகுமரன் | சமூகப்பார்வை |

## 3. துப்பறியும் புதினங்கள்: (1910–1940)

ஆங்கிலம் தெரிந்த தமிழ் எழுத்தாளர்கள் ஆங்கிலமொழியின் தழுவலாகப் பல துப்பறியும் புதினங்களைப் படைத்தனர்.

**ஆரணிகுப்புசாமி முதலியார்: (1867–1925)**

ஆங்கிலப் புதினங்களைத் தழுவி தமிழ் நாடடுச் சூழலில் 75 துப்பறியும் புதினங்கள் எழுதினார். இரத்தினபுரி இரகசியம் (9 பாகம்), தபால் கொள்ளைக்காரன், மஞ்சன் அறையின் மர்மம் இவரது படைப்புகள்.

**வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார்: (1880 – 1942)**

மேனகா, கும்பகோணம் வக்கீல், பாலாமணி அல்லது பாக்தாத்திருடன் முதலானவை இவரது பங்களிப்பு.

**ஜே.ஆர். ரங்கராஜு (1875 – 1956)**

இவரது ‘துப்பறியும் கோவிந்தன்’ மக்கள் மனதில் பதிந்த பாத்திரம் சந்திரகாந்தா, இராஜம்மாள். மோகனசுந்தரம் முதலானவை இவரது புதினங்கள்.

**கோதைநாயகி அம்மாள் (1901–1960)**

‘ஜெகன் மோகினி’ என்னும் இதழைத் தாமே நடத்தினார். கிழக்கு வெளுத்தது, புனித பவனம், தைரிய லட்சுமி உள்ளிட்ட 115 புதினங்கள் படைத்த பெருமைக்குரியவர்.

பிறா் ‘துப்பறியும் சாம்பு’ மூலம் நகைச்சுவை ஊட்டும் தேவன், சங்கா்லால் மூலம் துப்பறியும் தமிழ்வாணன், கணே‘ வசந்த் மூலம் புகழ்பெற்ற சுஜாதா, விவேக் - ரூபலா பாத்திரங்களை உலவவிட்டு அறிவியற் கருத்துக்களையும் சேர்த்து எழுதிய ராஜே‘குமாா் முதலானோரும் துப்பறியும் புதினத்துறையில் புகழ்பெற்றோா் ஆவா்.

## 4. சமூகப் புதினங்கள்

சமூக வாழ்வியலின் மக்கள் சிக்கல்களை அடிப்படையாகக் கொண்டு எழும் புதினங்கள் இவை.

**கல்கி:** தியாகபூமி, கள்வனின் காதலி, மகுடபதி, அலைஓசை முதலான பல பங்களிப்புகள் மூலம் சாதிக் கொடுமை, விதவைக்கொடுமை, பொருந்தாமணம் இவற்றிற்கு எதிராகக் குரல் கொடுத்து, விடுதலை வேட்கையை ஊட்டினாா்.

**அகிலன்:** ‘கதைப்படைப்பிலும், பாத்திரப் படைப்பிலும், இலக்கியப்படைப்பிலும் தனித்தன்மையுடையாா்’ என்பாா். தெ.பொ.மீ.

**இவரது பல நூல்கள் பெற்ற பரிசுகள் பின்வருமாறு:**

1. பெண் - நாராயணசாமி ஐயா் நாவல் போட்டிப்பரிசு
2. எங்கே போகிறோம் - அண்ணாமலைச் செட்டியாா் அறக்கட்டளைப்பரிசு
3. நெஞ்சின் அலைகள் - தமிழ் வளா்ச்சிக்கழகம் பரிசு
4. வேங்கையின் மைந்தன் - சாகித்திய அகாடமிப் பரிசு
5. சித்திரப்பாவை – ஞானபீடப்பரிசு

தமிழ் எழுத்தாளா்களின் முதல் முதலில் ஞானபீடப்பரிசு பெற்றவரும் இவரே.

**மு. வரதராசனாா்:** தமிழ் நாட்டுப் பொ்னாட்‘ா என்ற பாராட்டைப் பெறுபவா். பாவை, கயமை, வாடாமலா், கள்ளோ காவியமோ, பெற்ற மனம், கரித்துண்டு என 15 புதினங்கள் எழுதியுள்ளாா். அகல் விளக்கு சாகித்திய அகாடமி விருது பெற்றது.

**நா. பாா்த்தசாரதி:** சமுதாய சீா்திருத்த நோக்கினா். இவருடைய குறிஞ்சி மலா், பொன்விலங்கு புகழ்பெற்றவை.

**பரிசு பெற்றவை:**

1. சமுதாயவீதி – சாகித்திய அகாடெமிப் பரிசு
2. துளசிமாடம் - அண்ணாமலை அரசா் பரிசு

**கோ.வி. மணிசேகரன்**: இவரது, யாகசாலை அண்ணாமலை அரசா் பரிசுபெற்றது. ஜெயகாந்தனின் பாரிசுக்குப்போ, ஒரு நடிகை நாடகம் பாா்க்கிறாள், கங்கை எங்கே போகிறாள் ஆகியன புகழ் பெற்ற புதினங்கள்.

மேலும் சுந்தர ராமசாமியின் ‘ஜெ.ஜெ. சில குறிப்புக்கள்’ வேறுபட்ட புதினம். உமா சந்திரனின் ‘முள்ளும் மலரும்’ திரைப்படமாக்கப்பட்டது. அசோகமித்திரனின் ‘தண்ணீர்’ முதலான புதினங்களும் குறிப்பிடத்தக்கன. ராஜம்கிரு‘ண்ணன், தமிழ்நாட்டு ஜேன் ஆஸ்டின் எனப் புகழ் பெற்றவர்.

## 5. வரலாற்றுப் புதினங்கள்

தமிழக வரலாற்று நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு கற்பனை கலந்து எழுதப்படும் புதினங்கள் இவ்வகையின.

(1) **கல்கி:** பார்த்திபன் கனவு, பல்லவர் பற்றிய சிவகாமியின் சபதம், இராஜராஜ சோழன், பொன்னியின் செல்வன் புகழ் பெற்ற புதினங்கள்.

(2) **சாண்டில்யன்:** யவன ராணி, கடல்புறா, இராபர்ட் கிளைவ் பற்றிய ராஜபேரிகை மக்களிடம் செல்வாக்குப் பெற்றவை.

(3) **அகிலன்**: வேங்கையின் மைந்தன், சாகித்திய அகாடெமி பரிசு பெற்றது. மதுரையைப் பற்றியது கயல்விழி.

(4) **மு. மேத்தா**: சோழநிலா பத்திரிகைத் தொடராக வந்தது.

(5) **கோ.வி.மணிசேகரன்:** இவரது செம்பியன் செல்வி, அஜாத சத்துரு அனைவரும் அறிந்தன.

(6) **கலைஞர் கருணாநிதி:** ரோமாபுரிப் பாண்டியன், பொன்னர் சங்கர், தெண்பாண்டிச்சிங்கம், புயல், புதையல், வெள்ளிக்கிழமை, சுருளிமலை முதலாயின மக்களிடையே புகழ் வாய்ந்தவை.

(7) **பூவண்ணன்:** இவரது காந்த;ர்ச் சாலையும் மக்களிடையே புகழ் வாய்ந்தவை.

(8) **சுஜாதா**: இவரது இரத்தம் ஒரே நிறமும் குறிப்பிடத் தக்கன ஆகும்.

## 6. வட்டாரப் புதினங்கள்

ஒரு குறிப்பிட்ட பகுதி மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு புனையப்படுவன. இவ்வகையின.

(1) **சூரியகாந்தனின்** ‘மானாவரி ‘ மனிதர்கள்

(2) **அகிலனின்** ‘நினைவு’ புதினப் பரிசுப்போட்டியில் பரிசு பெற்றது.

(3) **ஜெயமோகனின்** ‘ரப்பர்’ நாஞ்சில் நாடு பற்றியது

(4) **தோப்பில் முகம்மது மீராவின்** ‘சாய்வு நாற்காலி’ சாகித்திய அகாடமி விருது பெற்றது.

(5) **பெருமாள் முருகனின்** ‘ஏறுவெயில்’ சேலத்தைக் களமாகக் கொண்டது

(6) **இராஜம் கிரு‘ணனின்** ‘கூட்டுக் குஞ்சுகள்’ சிவகாசி குழந்தைத் தொழிலாளர் பற்றியது. இவரது ‘கரிப்பு மணிகள்’ கடலோர மக்களின் வாழ்வியல் சிக்கல் தொடர்பானது.

(7) **முகிலை இராசபாண்டியனின்** 'தேரிமணல்' கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மண்டைக் காட்டுப் பகுதியைக் களமாகக் கொண்டது. 1982-ம் ஆண்டு கோவில் விழாவை ஒட்டி உருவான கலவரம் சாதி, சமய, ஊர்க்கலவரமாக வெடித்ததை ஆசிரியர் விவரிக்கின்றார். திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் அடிமைப்பட்டுக்கிடந்த மக்கள் ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ வேண்டியவர்களாக இருந்தும், சாதி, சமய உணர்வுகளால் அடிமைப்பட்டு அல்லலுறுவதை முகிலை இராசபாண்டியன் அழகாகச் சித்திரித்துள்ளார். இவர், 'அலைகளின் காலம்', 'அருகருகே நான்கு வீடுகள்', 'போகிற வழி' ஆகிய புதினங்களையும் படைத்துள்ளார்.

**(8) சுப்ரபாரதிமணியன்** திருப்பூரின் சிக்கலாக இனங்காணப்படும் சாயப்பட்டறைகளைக் கவனத்தில்கொண்டு 'சாயத்திரை' எழுதியுள்ளார்.

## 7. மொழிபெயர்ப்புப் புதினங்கள்

தமிழில் மொழிபெயர்ப்புப் புதினம் மெல்ல வளர்ச்சியடைந்து வருகின்றது. ஒரியமொழிக்கதையைத் தமிழில் மொழிபெயர்த்ததற்காகத் **தமிழ்நாடன்** சாகித்திய அகாடெமி விருதினை 1999-ல் பெற்றார்.

மாக்ஸிம் கார்க்கியின் 'தாய்', டால்ஸ்டாயின் 'போரும் அமைதியும்', விக்டர் ஹியூகோவின் 'ஏழைபடும்பாடு' முதலியன சிறந்த மொழிபெயர்ப்புப் புதினங்கள். மராட்டிய எழுத்தாளர் காண்டேகரின் படைப்புகளை கா.ஸ்ரீ.ஸ்ரீ மொழிபெயர்த்துள்ளார். த.நா. சேனாபதி வங்க எழுத்தாளர், தாகூரின் படைப்புகளைத் தமிழாக்கம் செய்தவர். சிற்பி பாலசுப்பிரமணியம் சிறந்த மொழிபெயர்ப்புக்கான சாகித்திய அகாடெமி விருது பெற்றார். சுந்தரராமசாமியின் 'தகழி' சிவசங்கரன்பிள்ளையின் 'செம்மீன்', 'தோட்டியின் மகள்' புதினங்களை மலையாளத்திலிருந்து தமிழ்ப்படுத்தியுள்ளார்.

## 8. தழுவல் புதினங்கள்

பிறநாட்டுப் புதினக்கதையை எடுத்துக் கொண்டு தமிழ் நாட்டுச் சூழலுக்கு ஏற்பத் தழுவி எழுதுவது இவ்வகையின. முதலில் ஆரணி குப்புசாமி, 'ரெனால்ட்ஸ்' புதினத்தைத் தழுவி எழுதினார். ரெனால்ட்ஸின் புதினத்தை மறைமலையடிகளாரும் தழுவி 'குமுதவல்லி அல்லது நாகநாட்டரசி' என்னும் புதினம் எழுதினார். டிக்கன்ஸின் புதினம் எஸ்.எஸ். மாரிசாமியால் 'அனாதை ஆனந்தனாக' உருமாறியது. ஆனால் தழுவல் புதினம் தமிழில் அவ்வளவாக வெற்றிபெறவில்லை.

## 9. கூட்டுப் புதினங்கள்

இருவா் சோ்ந்து ஒரு புதினத்தை எழுதுவது கூட்டுப் புதினங்கள் எனப்படும். மேலை நாடுகளில் இத்தகைய பழக்கம் உண்டு. தமிழின் 'குமுதம்' வார இதழின் முயற்சியில் சிவசங்கரி, இநதுமதி இணைந்து 'இரண்டுபோ்' என்னும் கூட்டுப் புதினத்தைக் குமுதத்தில் தொடா் புதினமாக எழுதினா். கவிதா, நிதியாமூா்த்தி சோ்ந்து 'நானும் நீயும்' புதினம் எழுதியுள்ளனா்.

## 10. குறும் புதினங்கள்

ஜெயகாந்தன் 'ஜெய ஜெய சங்கர' என்னும் குறும்புதினம் எழுதினாா். சுஜாதாவின் 'விபரீதக் கோட்பாடு' மகிாிீயின் 'புவனா ஒரு கேள்விக் குறி', சிவசங்கரியின் 'ஒரு சிங்கம் முயலாகிறது' முதலான புதினங்கள் பக்க அளவில் குறுகியவை. ராணிமுத்து, மாலைமதி, முதலான பத்திரிகைகளில் வரும் புதினங்கள் அனைத்தும் இவ்வகையினவே. ராஜே'குமாா், அசோகன் முதலானவா்கள் மக்களின் அவசரகதிக்கு ஏற்ப 'பாக்கெட் புதினங்கள்' எழுதி வருகிறாா்கள்

## 11. பெண் எழுத்தாளா் புதினங்கள்

புதின இலக்கியத்தின் தொடக்க நிலையிலேயே வை.மு. கோதைநாயகி அம்மாள் 115 புதினங்களை எழுதி இன்றும் வியப்பில் ஆழ்த்துகிறாா்.

(1) **ஹெப்சிபா ஜேசுதாசன்**: ஓய்வு பெற்ற ஆங்கிலப் பேராசிாியை. 'புத்தம் வீடு', 'டாக்டா் செல்லப்பா', 'அனாதை' முதலான புதினங்களைப் படைத்துள்ளாா்.

(2) **லெக்'மி:** இயற்பெயா் திாிபுரசுந்தாி. மருத்துவா். பெண்ணிய எழுத்தாளா். இவரது இனிமை எளிமை நடையால் புதினங்களை அனைவரும் விரும்பினா். 'பெண்மனம்', 'நாயக்கா் மகள் ' குறிப்பிடத்தக்கன.

(3) **வாஸந்தி**: இந்தியாா டுடே தமிழ்ப் பதிப்பு இதழின் ஆசிாியராகப் பணிபுாிந்தவா். 'ஆகாச வீடுகள்', 'மூங்கிற் பூக்கள்', 'நான் புத்தன் இல்லை' ஆகிய புதினங்கள் குறிப்பிடத்தக்கன.

(4) **சிவசங்காி:** வங்கிப் பணியாளராக இருந்தவா். 'திாிவேணி சங்கமம்', '47 நாட்கள்', 'பாலங்கள்' முதலான படைப்புக்கள் குறிப்பிடத்தக்கன. பெண்களின் சிக்கலை அழகாக வெளிப்படுத்துபவா்.

(5) **ராஜம் கிரு'ணன்:** முற்போக்குச் சிந்தனையாளா். கள ஆய்வுப் புதினங்கள் எழுதுவதில் வல்லவா். 'கூட்டுக் குஞ்சுகள்', 'காிப்பு மணிகள்' இவ்வகையின.

(6) **பாக்யா:** சென்னை மாநிலக் கல்லூரி இணைப்பேராசிரியர். இரண்டரை ஆண்டுகளாகக் கள ஆய்வு செய்தும் வினாநிரல் தயாரித்தும் காதலர்களை நேர்காணல் கண்டும் எழுதப்பட்ட இவரது புதினம் ‘காதலா? காதலா’ நட்பு மற்றும் காதல் என்னும் போர்வையில் நிகழும் சமுதாய சீர்கேடுகளால் விளையும் உளவியல் பாதிப்புகள், அடுத்த தலைமுறைகளையும் பாதிப்பதை ஆசிரியர் புலப்படுத்துகிறார். மேலும்

(7) **சிவகாமியின்** ‘பழையன கழிதலும்’, ‘ஆனந்தாய்’ புதினங்களும் பாமாவின் ‘சங்கதி’, ‘கருக்கு’, ‘வன்மம்’ மனுசி புதினங்களும் திலகவதியின் ‘கல்மரமும்’ புது எழுச்சியை உருவாக்க வல்லன.

# 3. சிறுகதை

## 1. சிறுகதையின் இலக்கணம்

கற்பனைக் கதைகள், உண்மை நிகழ்வுகள் மற்றும் நகைச்சுவை கலந்தே சிறுகதைகள் எழுதப்படும். இவை முறையே தொல்காப்பியர் கூறிய ‘பொருளொடு புணராப் பொய்ம்மொழி’ ‘பொருளொடு புணர்ந்த நகைமொழி’ என்று கூறியவற்றோடு ஒப்புணரத்தக்கன. எட்டுத் தொகைப் பாடல்கள் அனைத்தும் சிறுகதை வடிவின எனலாம். காப்பியங்கள், புராணங்களில் காணப்படும் கிளைக்கதைகளும் சிறுகதை, நெடுக்கதை வடிவின.

தொடக்கம், வளர்ச்சி, சிக்கல், உச்சகட்டம், முடிவு என்னும் 5 கூறுகளைச் சிறுகதை கொண்டிருக்கும். அதிகப்பட்சம் இரண்டு மணி நேரத்திற்கு மேல் கதை நீளக் கூடாது. குதிரைப் பந்தயத்தின் தொடக்கம், முடிவு போல் கூர்மை கொண்டிருக்க வேண்டும். கிளைக்கதைகள் கூடாது. கதையில் கூறப்படும் ஒவ்வொரு நிகழ்வும் கதையோடு தொடர்பு கொண்டிருக்க வேண்டும் என்பன சிறுகதைக்கான வரையறைகள் ஆகும்.

### 2. சிறுகதை வரலாறு

கதை கூறலும் கேட்டலும் மனித வாழ்க்கையில் கலந்த ஒன்று. ஒவ்வொரு மனித சமூகத்திலும் கதைகள் நிரம்ப உள்ளன. எனவே சிறுகதையைத் தனியொரு இலக்கியமாகக் கருதுகின்ற நோக்கினை அமெரிக்காவைச் சேர்ந்த எட்கர் ஆலன்போ தொடங்கி வைத்தார். மேனாட்டார் வரவும், அறிவியல் வளர்ச்சியும், பத்திரிகைகளின் பக்கபலமும் சிறுகதைகளின் வளர்ச்சிக்குத் துணைபுரிந்தன. 18-ம் நூற்றாண்டில் வீரமாமுனிவர் எழுதிய ‘பரமார்த்த குருகதை’ தமிழ்ச் சிறுகதைகளின் முன்னோடி எனலாம்.

### 3. 19-ம் நூற்றாண்டில் சிறுகதை எழுத்தாளர்கள்

1. **வீராசாமிச் செட்டியர்:** இவரின் ‘விநோத ரசமஞ்சரி’, தாண்டவராய முதலியாரின் ‘பஞ்சதந்திரக்கதைகள்’, செல்வக் கேசவராய முதலியாரின் ‘அபிநயக்கதைகள்’ சிறுகதை உருவில் உருப்பெறத்தொடங்கின.
2. **வ.வே.சு. ஐயர்**: ‘மங்கையா்க்கரசியின் காதல் முதலிய கதைகள் வ.வே.சுவின் தொகுப்பு நூல்களாக இடம்பெற்றுள்ளன. ‘குளத்தங்கரை அரசமரம்’ தமிழின் முதல் சிறுகதை என்னும் பெருமையைப் பெறுகிறது.
3. **அ. மாதவையா**: புனைபெயா் குசிகா். பெண்கள் முன்னேற்றம், மூடநம்பிக்கை, விடுதலை நோக்கு (உ.ம்.) கோடாங்கி ராமுடு
4. **1920 –களுக்குப் பிறகு**: காந்தியடிகள் வரவு, இந்திய விடுதலைப் போராட்டச் சூழல், தேச ஒற்றுமை, விடுதலைப்போா், மது ஒழிப்பு முதலியவை கதைகளின் கொள்கைகளாயின.
5. **ராஜாஜி:** கொள்கை – குடியின் தீமை. நூல் - திக்கற்ற பாா்வதி.

### 4. இதழ்சாா் எழுத்தாளா்கள்

1933 முதல் 1955 வரை ‘மணிக்கொடி’ இதழ் சிறுகதையை ஓா் இயககமாகக் கொண்டு வளா்த்தது. ‘எழுத்து’ இதழும் இதில் பங்கு கொண்டுள்ளது. இதில்,

1. கு.ப. ராஜகோபாலன்
2. ந. பிச்சமூா்த்தி
3. தி. ஜானகிராமன்
4. சி.க. செல்லப்பா்
5. டி.எஸ். இராமையா
6. புதுமைப்பித்தன்
7. வல்லிக்கண்ணன்
8. அசோகமித்திரன்
9. கல்கி
10. கு. அழகிரிசாமி
11. வா.ச. ராமாமிருதம்
12. சுந்தரராமசாமி
13. ஜெயகாந்தன்
14. நா. பாா்த்தசாரதி

ஆகிய எழுத்தாளா்களின் சிறுகதைகள் வெளிவந்தன.

1. **கு.ப. ராஜகோபாலன்**: புதிய உள்ளடக்கப் பரிசோதனைகளைச் செய்து வெற்றிபெற்றவா். உணா்ச்சி விவரிப்பும், பாலியல் சிக்கல்களை ஆராய்வதும் நோக்கம். ‘புனா் ஜென்மம்’, ‘காணாமலே காதல்’, ‘இறுதி வெளிச்சம்’ இவரது நூல்கள்.
2. **ந. பிச்சமூா்த்தி:** பழைமை மரபு மேலோங்கி இருக்கும் சிறுகதையில் சாதனை என்று இவரை மதிப்பிடுவாா். ‘பதினெட்டாம்பெருக்கு’ இவரது பங்களிப்பு
3. **தி. ஜானகிராமன்**: உணா்வுகளுக்கு முதன்மை அழகியல் பரிமாணம் உரையாடல் வடிவம் பெண்ணியச் சிக்கல் பேசுவது இவரது சிறப்பு. ‘கொட்டுமேளம்’, ‘அக்பா் சாஸ்திரி’, ‘கோபுர விளக்கு’ இவரது கதைகள்.

4. **சி.சு.செல்லப்பா:** மணிக்கொடி எழுத்தாளர். 'எழுத்து' ஆசிரியர். உத்தி முறைகளில் கவனம் கொண்டு எழுதினார். 'சரசாவின் பொம்மை', 'மலைமேடு', 'அறுபது', 'வெள்ளை' முதலானவை இவரது தொகுப்புகள்.
5. **பி.எஸ் இராமையா**: சமூகச் சிக்கல்களில் நாட்டம் மற்றும் தீர்வுகளைப் பற்றி எடுத்துரைக்கவில்லை. 'நட்சத்திரக் குழந்தைகள்' இவரது புகழ்பெற்ற சிறுகதை.
6. **புதுமைப்பித்தன்:** கேலி, கிண்டல், அங்கதத்துடன் சமுதாயச் சிக்கல்களை எடுத்துரைத்தார். இவரது கதையிலே கல்லும் உயிர் பெற்று வரும். தொன்மக் கதைகளையும் ஆய்வுக்கு உட்படுத்தியதை 'சாபவிமோசனம்', 'அகலிகை' கதைகள் புலப்படுத்தும். கடவுள் மனிதனிடம் சிக்கினால் படும் பாட்டைக் 'கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்' எடுத்துரைக்கும். 'ஒருநாள் கழிந்தது', 'கபாடபுரம்', 'கயிற்றரவு' முதலானவை இவரது படைப்புக்கள். தமிழ் நாட்டின் 'மாப்பஸான்' என்றும் 'சிறுகதை மன்னன்' என்றும் போற்றப்படுகிறார்.
7. **வல்லிக்கண்ணன்:** 500க்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியவர். முதற்கதை 'சந்திரகாந்தக்கல்'. நாட்டியக்காரி, வல்லிக்கண்ணன் கதைகள், ஆண் சிங்கம், வாழ விரும்பியவன் முதலானவை இவரது சிறுகதைத் தொகுபபுகள்.
8. **அசோகமித்திரன்**: நடுத்தரவர்க்க மனிதர்களின் வாழ்வியல் சிக்கல்களைப் பேசுபவர். எளிமை, சொற்சிக்கனம், இயல்பான உரையாடல் இவரது சிறப்பு. உரிமை வேட்கை, உத்தர ராமாயணம், வாழ்விலே ஒருமுறை முதலானவை இவரது தொகுப்புகள். 'அப்பாவின் சிநேகிதர்' என்னும் சிறுகதைத் தொகுப்பிற்குச் சாகித்திய அகாதெமி பரிசு பெற்றுள்ளார்.
9. **கல்கி:** நகைச்சுவை நடை, ஒரே மூச்சில் படிக்கத் தூண்டும் கதைப்பாங்கு முதலியவை இவருடைய சிறப்பு. 'திருடன் மகன் திருடன்', 'வீணை பவானி' இவருடைய சிறுகதைகள்.
10. **கு. அழகிரிசாமி**: கரிசல் வட்டாரச் சார்பு, எளிய நடை, இயல்பான சித்தரிப்பு அழகுணர்ச்சியும், சமுதாயச் சிந்தனையும் இவரது சிறப்புக்கள். 'தவப்பயன்', 'சிரிக்கவில்லை' குறிப்பிடத்தக்கவை.
11. **லா.சா. ராமாமிருதம்:** ஆழமான உணர்வுகளையும் வெளிக்கொணரும் ஆற்றல், வாழ்க்கை முரண், மனித முரண்களை வெளிக்கொணரும் கைவண்ணம், ஜனவரி இதழ்கள் என்பன சிறப்புடைய சிறுகதைகள்.
12. **சுந்தரராமசாமி:** ஆழ்ந்த அனுபவம், கூர்ந்த நோக்கு, படிமம், குறியீடுகள் இவரது தனிச்சிறப்பு. பல்லக்கு, நாடார்சார், நைவேத்தியம் சிறுகதைகள் குறிப்பிடத்தக்கன.
13. **ஜெயகாந்தன்:** சிறுகதை உலகில் சிறப்பிடம் உண்டு. சமுதாய சீர்கேடுகளைப் படம் பிடித்துக் கூறுவார். தீர்வுகளையும் முன்வைப்பவர். சேரி நடப்புகளைச் சித்திரிப்பதில் வல்லவர் என்பதனைச் 'சினிமாவுக்குப் போன சித்தாளு',

‘பறைசாற்றும் உதயம்’, ‘ஒருபிடி சோறு’, ‘சுமைதாங்கி’ முதலானவை இவரது பங்களிப்புகள்.

14. **நா.பார்த்தசாரதி**: பழைமை போற்றுதலுடன் இலட்சிய நோக்கும் கொண்டவர். இவருடைய ‘வலம்புரிச்சங்கு’ மூட நமபிக்கை மறுப்புச் சிறுகதையாக விளங்குகிறது.

## 5. இதழ் சாரா எழுத்தாளர்கள்

1. **மு.வா:** இனிமை, எளிமை, கருத்தழம் இவரது சிறுகதைப் பண்புகள். ‘விடுதலையா’? ‘குறட்டை ஒலி’ மு.வ.வின் தொகுப்புகள்.
2. **கி. ராஜநாராயணன்**: கரிசல்காட்டு மணம் கமழ எழுத வல்லவர், ‘தாத்தா சொன்ன கதைகள்’ சிறப்புக்குரியது.
3. **கி.வா. ஜகந்நாதன்:** நல்ல படைப்பாளி, ‘கலைஞன் தியாகம்’, ‘பவள மல்லிகை’ சிறந்த படைப்புகள்
4. **ஜெகசிற்பியன்**: இவருடைய படைப்புகளில் ‘ஒரு பாரத புத்திரன்’ 1986-ல் தமிழக அரசின் முதற் பரிசு பெற்றது.
5. **சு.சமுத்திரம்:** ‘குற்றம் பார்க்கில்’, ‘காகித உறவு’, ‘சோற்றுப்பட்டாளம்’ ‘ஒரு கோட்டுக்கு வெளியே’ முதலானவை இவரது பங்களிப்புகள்.
6. **சுப்ரபாரதிமணியன்**: திருப்பூர் நகரைக் களமாக்கி, நகரமயமாதலின் வேகத்தில் சிதைவுறும் மனிதம் பற்றிச் சிறுகதைகள் எழுதி வருகிறார்.

## 6. பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகள்

பெண்களின் சிக்கல்களை 1970-களுக்குப் பிறகு நேரடியாகப் பெண்களே பேசக் களத்தில் இறங்கினர். அதன் விளைவாக பெண்களின் வாழ்வியல் சிக்கல்கள் உலக அரங்கில் உள்ளது உள்ளபடி அரங்கேறத் தொடங்கின.

1. **இராஜம் கிரு'ணன்**: 100-க்கும் மேற்பட்ட சிறுகதைகள் படைத்துள்ளார். பெண்களின் ஆளுமையை நிலைநாட்டுபவர். பெண்களின் கோணத்தில் செய்திகளை ஆராய்வார். காலங்காலமாக அடக்கி வைக்கப்பட்ட பெண்களின் உணர்வுகளைக் கோபமாக வெளிக்கொணர வல்லவர்.

2. **அம்பை:** பெண்களின் சிக்கல்களை ஆழமாகப் பதிவுசெய்பவர். ‘வீட்டின் மூலையில் ஒரு சமயலறை’ என்னும் சிறுகதை பெண்ணின் வாழ்விடமும் கூட வீட்டின் மூலையில் வரையறுக்கப்பட்டிருப்பதைக் குறிப்பிடுகிறது. ‘மல்லுக்கட்டு’ சிறுகதையும் சிறப்பான கதை.

3. **சூடாமணி:** உள்ளத்தின் உணர்வுகளை உள்ளபடி புலப்படுத்த வல்லவர். கதைகள் தெறிப்பாக இருக்கும் ‘ஒளியின் முன்’ இவரது தொகுப்பு

4. **அனுராதா ரமணன்:** நடையின் ஈர்ப்பால் கதையின் வேகத்தைக் கூட்டுபவர். பெண்களின் சிக்கல்களை மிக அழகாக வெளிப்படுத்த வல்லவர். ‘காலச்சுமை தாங்கி’ சிறப்பான சிறுகதை.

5. **திலகவதி:** பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளைப் பெண்கள் தட்டிக் கேட்க வேண்டும் என்னும் எண்ணத்தினர். குடிசையில் வாழுகின்ற இளம்பெண் நாகு, தனக்கு இழைக்கப்பட்ட கொடுமையை எதிர்த்து ‘காளி’யாக உருவெடுப்பதை ‘காளி’ என்னும் இவரது சிறுகதை சித்திரிக்கின்றது.

6. **பாக்யா:** ‘அங்கீகாரம்’, ‘வலம்புரி’ என்னும் இவரது இரு சிறுகதைத் தொகுப்புகளிலும் நடப்பியல் மற்றும் பெண்களின் சிக்கல்களை முன் வைக்கிறார். பாக்யா, வாழ்க்கையில் மனிதர்களை நுட்பமாகப் படிப்பவராக இருக்கிறார். உலக இயல்புகளின் பிழைகளைத் தன்மையாகப் பதிவு செய்கிறார். படைப்பிலக்கிய வேள்விக்குள் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள இவரின் எழுத்தில் ‘பொறிகள்’ காணக் கிடக்கின்றன எனப் பால்நிலவன் குறிப்பிடுகின்றார்.

**7. சிறுகதைப் போற்றும் முயற்சிகள்**

1. **ஆனந்த விகடன்** ஆண்டுதோறும் ‘சிறுகதைப் போட்டி’ நடத்தி வருகிறது. சிறந்த சிறுகதைக்குப் பரிசுகள் வழங்கப்படுகிறது. ஆனந்த விகடன் சிறுகதைப் போட்டியில் ‘சிறை’ என்னும் கதைக்கு ரூ. 10.000.‥- அனுராதா ரமணன் பரிசாகப் பெற்றார்.
2. **‘கணையாழி’** பத்திரிகை தரமான கதைகளை வெளியிட்டு வருகிறது.
3. சென்னையில் உள்ள ‘இலக்கிய சிந்தனை’ என்னும் அமைப்பு பத்திரிகையில் வரும் கதைகளில் சிறந்தனவற்றைத் தேர்ந்தெடுத்துத் தொகுப்புகளாக்கிப் பதிவு செய்கின்றது.
4. கலைஞன் பதிப்பகம் ஜெயகாந்தன், அசோகமித்திரன், பூமணி முதலான 20 எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளது.

# 4. நாடகம்

## நாடகத்தமிழ் நூல்கள்

முத்தமிழின் முத்தாய்ப்பாய்த் திகழ்வது நாடகக்கலை. இயல், இசையால் காதுக்கு மட்டும்தான் இன்பம். கூத்தால் கண்ணுக்கும் இன்பம் என்று பண்டைய காலந்தொட்டு ‘கூத்து’ என்று குறிக்கப்பட்டது.

**1. தொல்காப்பியத்தில் நாடகம்:**

தொல்காப்பியத்தில் ‘நாடகம்’ என்னும் சொல்லாட்சி சுட்டப்படுகின்றது.

**நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்**
**பாடல் சான்ற புலநெறி வழக்கம்**

என்னும் வரிகள் நாடகக்கலை தொன்றுதொட்டு தமிழ்நட்டில் வழங்கப்பட்டு வருவதனை அறிவிக்கும்.

**2 பண்டைய நாடக நூல்கள்**

சயந்தம், செயற்றியம், முறுவல், பரதசேனாபதியம், மதிவாணர் நாடகத்தமிழ் முதலான நாடக நூல்கள் தமிழ் நாட்டில் இருந்தன. இவை பற்றிய குறிப்புகளை அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையில் குறித்துள்ளார்.

**சிலப்பதிகாரத்தில் நாடகம்:**

1. பாண்டரங்கம்
2. கொடுகொட்டி
3. மரக்கால்
4. பாவை
5. துடி
6. குடை
7. அல்லியம்
8. குடம்
9. மல்
10. பேடி
11. கடையம்

என்னும் பதினொருவகைத் கூத்துக்களை மாதவி ஆடியதாகச் சிலம்பு குறிப்பிடுகின்றது. மாதவி நாடக நன்னூல் நன்கு கடைப்பிடித்துக் காட்டினாள் என்றும் கூறுகிறது. நாடகமேடையில் ஒருமுக எழினி, பொருமுக எழினி, கரந்துவரல் எழினி என்னும் மூவகைத் திரைகள் அமைக்கப்பட்ட திறத்தையும் இளங்கோவடிகள் இயம்புகிறார்.

**3 சோழர் காலத்தில் நாடகம்**

இராசராசேச்சுர நாடகத்தின் மூலம் மன்னனின் வெற்றிகள் நடித்துக்காட்டப்பட்டன. குலோத்துங்க சோழன் நாடகம், பூம்புலியூர் நாடகம் முதலானவையும் கோயில்களில் நடிக்கப்பட்டன. உய்யவந்தாள் யசோதை என்பவள் திருவிழாக் காலங்களில் நாடகங்கள் நடிக்கும் உரிமை பெற்றிருந்தாள். நாடகக் கலைஞர்கள் அனைவர்க்கும் அரசு மானியம் வழங்கப்பட்டது.

**4. 17, 18–ம் நூற்றாண்டுகளில் நாடகம்**

மராட்டிய மன்னர்கள் காலத்தில் கி.பி.17-ல் கோயில்களில் நாடகங்கள் நடிக்கப்பட்டன. சரபேந்திர பூபாளக் குறவஞ்சி நாடகம் தஞ்சையில் நடிக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து 18-ம் நூற்றாண்டு முடிய குறவஞ்சி, பள்ளு, நொண்டி நாடகங்களே செல்வாக்கு பெற்றன. திருக்குற்றாலக் குறவஞ்சி, முக்கூடற் பள்ளு முதலாயின நாடகங்களாயின. வேசியர் வலைப்பட்ட செல்வம் மிக்க இளைஞர்கள் நோயும் வறுமையும் உழந்து மனம் திருந்துவது என்னும் கதையமைப்பினைக் கொண்டது நொண்டி நாடகங்கள். மனந்திருந்திய நொண்டி ஒருவன் மெக்கா சென்று முடம் நீங்கி வாழ்ந்ததாக நடிக்கப் படுவது. 'சீதக்காதி நொண்டி நாடகம்' இவ்வகையைச் சேர்ந்ததே. 'இரத்தக் கண்ணீர்' நாடகம்.

**5. 19-ம் நூற்றாண்டில் நாடகம்**

**(அ) வரலாற்று நாடகங்கள்:**

மதுரை வீரன் விலாசம், நல்லதங்காள் நாடகம், ரவிவர்மா முதலானவை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டவை. காசி விசுவநாத முதலியார், டம்பாச்சாரி விலாசம் என்னும் வரலாற்று நாடகத்தை எழுதினார்.

**(ஆ) மொழிபெயர்ப்பு நாடகங்கள்:**

1. ெ'க்ஸ்பியரின் சிம்பலின் நாடகத்தைத் தமிழில் 'சத்தியவதி' என்னும் பெயரில் இலக்குமணப் பிள்ளை என்பவரும், 'சரசாங்கி' என்னும் பெயரில் சலசலோசனச் செட்டியார் என்பவரும் மொழிபெயர்த்தார்.
2. மேலும் ே'க்ஸ்பியரின் 'வெனிஸ் நாட்டு வணிகன்', 'ரோமியோ' 'ஜூலியட்' 'ஒத்தெல்லோ' முதலான நாடகங்களும் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டன.
3. பின் இரண்டு நாடகங்களை சங்கரதாஸ் சுவமிகள் மொழிபெயர்த்தார்.
4. 'லோபி' என்னும் பிரெஞ்சு நாடகமும் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டன.
5. சமஸ்கிருதத்தில் காளிதாசரின் 'சாகுந்தலத்தை' மறைமலை அடிகளும்,
6. 'மிருச்சகடிகத்தை' பண்டிதமணி 'மண்ணியல் சிறுதேர்' என்னும் பெயரிலும் மொழிபெயர்த்தனர்.
7. பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் லிட்டன் பிரபு எழுதிய 'வுாந ளுநஉசநவ றுயல' என்னும் ஆங்கிலக் கவிதையை மனோன்மணீயம் என்னும் பெயரில் மொழிபெயர்த்தார்.

8. கோல்டுஸ்மித் எழுதிய ‘வுாந ர்நசவைை’ என்னும் நூலையும் சைவக் கருத்துக்களைக் கூறும் சிவகாமியின் சரிதம் என்னும் பகுதியாக உருவாக்கம் செய்தார்.
9. வி.கே. சூரியநாராயண சாஸ்திரியார் நாடகவியல் என்னும் பெயரில் நாடக இலக்கண நூல் எழுதியுள்ளார். களவழி நாற்பது நூலை மானவிஜயம் என்னும் பெயரில் நாடகமாக்கினார். கலாவதி, ரூபாவதி, சூர்ப்பனகை என்னும் நாடகங்களையும் இயற்றினார்.

### 6. 20-ம் நூற்றாண்டில் நாடகங்கள்

(1) **சங்கரதாஸ் சுவாமிகள் (1867–1922)**

தன் நாடகக் குழுவை நாடகக் கல்விச் சாலையாக்கினார். 40-க்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதினார். 4 மணிநேரம் நடக்கக்கூடிய நாடகத்தை ஒரு இரவில் அடித்தல் திருத்தலின்றி எழுதும் ஆற்றல் பெற்றவர். வள்ளித் திருமணம், பிரகலாதன், பவளக்கொடி, லவகுசா, சதி, அனுசூயா, முதலான நாடகங்கள் இவரது பங்களிப்புகளாகும். தமிழ் நாடகத் தலைமையாசிரியர் எனப் போற்றப்படுகிறார்.

(2) **பம்மல் சம்பந்த முதலியார்: (1873 – 1964)**

நீதிபதியாக இருந்தவர். நாடக ஆர்வம் மிக்கவர். இளம் பருவத்தில் தனது 18-ம் வயதில் தன் முதல் நாடகமான ‘பு்பவல்லியை’ எழுதி நடித்தார். கருணவிலாச சபா என்னும் நாடக அமைப்பை ஏற்படுத்தினார். 90 நாடகங்கள் எழுதினார். ரத்னாவளி, வேதாள உலகம், சபாபதி, கள்வர் தலைவன் முதலானவை புகழ் பெற்ற நாடகங்கள். மாக்பெத், ஹாம்லெட், வெனிஸ் வணிகன், விரும்பிய வண்ணமே முதலான ே்க்ஸ்பியரின் நாடகங்களை தமிழாக்கம் செய்து மேடையேற்றிர். தன் அனுபவங்களை நாடகத்தமிழ், நாடக மேடை நினைவுகள், நாடகக் கலையில் தேர்ச்சி பெறுவது எப்படி? முதலான நூல்களாக வடித்துள்ளார். இவரது ‘மனோகரா’ நாடகம் மிகவும் புகழ்வாய்ந்தது. நாடகத்தில் நடிப்பவர்களைக் கூத்தாடிகள் என்னும் நிலையில் இருந்து ‘கலைஞர்கள்’ என்னும் நிலைக்கு உயர்த்தினார். எனவே தமிழ் நாடகத்தின் தந்தை எனப் போற்றப்படுகின்றார்.

(3) **தெ.பொ. கிரு்ணசாமிப் பாவலர்**.

பால மனோகர சபாவை நிறுவியவர். அரிச்சந்திரன், கோவலன், வள்ளித் திருமணம், தேசிங்கு ராஜன் முதலான நாடகங்கள் புகழ்பெற்றவை. கதரின் வெற்றி, தேசியக்கொடி, பம்பாய் மெயில் முதலான நாடகங்களின் வாயிலாக தேசிய உணர்வைத் தூண்டினார். நாடகத்தின் நடுவில் ஆங்கிலேயர்களைக் குறித்து நையாண்டியாக இவர் பாடும் ‘கொக்கு பறக்குதடி பாப்பா’ என்னும் பாடல் அரசாங்கத்தையே ஆட்டி வைத்தது.

(4) **டி.கே.எஸ் சகோதரர்கள்:**

முத்துசாமி, சங்கரன், சண்முகம், பகவதி நால்வரும் டி.கே.எஸ். சகோதரர்கள் எனப்படுவர். இவர்கள் ஸ்ரீ பாலசண்முகாந்த சபா தோற்றுவித்தனர். இச்சபாவின் மூலம் உருவாக்கப்பட்டவர்களே என்.எஸ். கிரு'ணன், எஸ்.வி. சகஸ்ரநாமம், கே.ஆர். ராமசாமி, எஸ்.எஸ். இராசேந்திரன், எம்.என். ராஜம் ஆகியோர். 'குமஸ்தாவின் பெண்', 'அந்தமான் கைதி', 'முள்ளில் ரோஜா' முதலான நாடகங்கள் குறிப்பிடத்தக்கன.

(5) **எஸ்.வி. சகஸ்ரநாமம்**:

பாரதியார், தி. ஜானகிராமன், கு. அழகிரிசாமி, கோமல் சுவாமிநாதன் முதலானோர் 'சேவாஸ்டேஜ்' என்னும் இவ்வமைப்பின் நாடக ஆசிரியர்கள். போலிஸ்காரன் மகள், வடிவேலு வாத்தியார், பாஞ்சாலி சபதம் முதலான நாடகங்கள் புகழ்பெற்றவை.

(6) **அவ்வை தி.கே. சண்முகம்:**

பெண்கள் நாடக மேடைக்கு வராத காலகட்டத்தில் ஆண்களே பெண்களின் பாத்திரத்தை ஏற்று நடித்தனர். டி.கே. சண்முகம் 'ஔவையார்' நாடகத்தில் வெற்றிகரமாக நடித்ததால் அவ்வை. தி.கே.சண்முகம் எனப்பெயர் பெற்றார். 70 நாடகங்களில் 109 பாத்திரங்களை ஏற்று நடித்தார்.

(7) **அறிஞர் அண்ணா:**

அண்ணாவின் நாடகங்கள் அனைத்தும் சீர்திருத்தக் கருத்துக்களையும் கூர்மையான வசனங்களையும் கொண்டு சமூகப் புரட்சியை விளைவித்தன. சந்திரோதயம், சந்திர மோகன், ஓர் இரவு, வேலைக்காரி, நீதி தேவன், மயக்கம், காதல் ஜோதி, சொர்க்க வாசல், இன்ப ஒளி முதலான நாடகங்கள் சமூக மாற்றத்திற்கு வித்திட்டன. வேலைக்காரி நாடகத்தில் இடம் பெறும் 'கத்தியைத் தீட்டாதே புத்தியைத் தீட்டு' என்னும் தொடர் பழமொழிபோல் பாமரர் வாயிலும் இன்றும் உலவி வருகின்றது.

**7 தற்கால நாடக ஆசிரியர்கள்**

(1) **கலைஞர் கருணாநிதி:**

நாடகத்துறையில் புதுமை விளைவித்தவர். அண்ணா வழியில் சீர்திருத்தக் கருத்துக்களை மேற்கொண்டார். மணி மகுடம், மந்திரி குமாரி, பராசக்தி, தூக்குமேடை, பூம்புகார், விதவையின் கண்ணீர், நச்சுக் கோப்பை முதலானவை கலைஞரது காவியப் படைப்புக்கள்.

(2) **சோ (இராமசாமி**):

அங்கதம் இவருக்குக் கை வந்த கலை. யாரிடமும் சொல்லாதே, நேர்மை, உறங்கும் நேரம், சம்பவாமி யுகேயுகே, மனம் ஒரு குரங்கு, இரவில் சென்னை, முகம்மது

பின் துக்ளக், யாருக்கும் வெட்கமில்லை முதலானவை இவரது படைப்புக்களுள் குறிப்பிடதக்கன.

(3) **கே. பாலச்சந்தர்:**

வெற்றிகரமான படைப்பாளி. நீர்க்குமிழி, மெழுகுவர்த்தி, எதிர் நீச்சல், மேஜர் சந்திரகாந்த், சர்வர் சுந்தரம் முதலான நாடகங்களைத் திரைப்படங்களாகவும் தயாரித்தார்.

(4) **கோமல் சுவாமிநாதன்**:

சமுதாய அவலங்களை கருப் பொருளாகக் கொண்டு நாடகம் எழுதினார். பெருமானே சாட்சி, தண்ணீர் தண்ணீர், ஒரு இந்தியக் கனவு, அலைக்காற்று முதலான இவரது படைப்புகள் புகழ்பெற்றவை.

மேலும், நாரணதுரைக் கண்ணன், அரு. இராமநாதன், பி.எஸ். ராமையா, இந்திரா பார்த்தசாரதி, ஏ,என். பெருமாள் முதலான பலர் இக்கால நாடக ஆசிரியர்களுள் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

**8 தெருக்கூத்து நாடகங்கள்**

சென்ற சில நூற்றாண்டுகளாக நாடக அரங்கு இல்லாமல் நாடகங்கள் வீதியில் நடிக்கப்பட்டு வரும். இவை கட்டியங்காரன், பாத்திரங்களை அறிமுகப்படுத்துவான், நகைச்சுவையோடு விளக்குவான், சூழலுக்கு ஏற்றவாறு அனைவரையும் சிரிக்கச் செய்வான்.

கூத்துப்பட்டறை என்னும் அமைப்பினை ந. முத்துசாமி நடத்தி வருகிறார். பரீக்'ா என்னும் அமைப்பினை ஞாநி.மு. ராமசாமி. கே.ஏ. குணசேகரன் ஆகியோர் நடத்தி வருகின்றனர். வானொலி நாடகங்கள் குரல் ஏற்றத் தாழ்வின் மூலம் மட்டுமே வசனங்களில் வெளிப்படுத்தும் ஆற்றலை வெளிக்கொணரும் பணியைச் செய்கின்றன. தொலைக்காட்சி நாடகங்களில் நெடுந்தொடர்கள் சில, வருடக் கணக்கில் பார்வையாளர்களை ஈர்த்து வருகின்றன.

## 5. கட்டுரை

கட்டுரை என்பது ஏதேனுமொரு குறிப்பிட்ட பொருளைப் பற்றிய சிறு கலைப்படைப்பு. (யு ளாழசவ உழஅிழளவைழைெ மூக யலெ ിயசவைஉரடயச ளரடிதநஉவ) என ஆக்ஸ்போர்டு அகராதி கூறுகிறது. கட்டுரை என்பது மனதின் செறிவற்ற செயல் முனைப்பானது. அதாவது உள்ளத்தின் போக்குப்படி அமைவது. அதை மனதில் வாங்கிப் பதியவைக்க இயலாதது. கட்டுரையை சிந்தனையின் சிதறல்கள் அல்லது சிதறிய

சிந்தனைகள் எனக் கூறலாம். மேலே கூறியவற்றின் அடிப்படையில், கட்டுரை என்பது குறிப்பிட்ட பொருளைப் பற்றியது சிந்தனையின் விளைவாகத் தோன்றியது குறிப்பிட்ட அளவினதாக உரைநடையில் அமைந்த கலைப்படைப்பு என்று விளக்கம் கூறலாம்.

# II அயலகத் தமிழ் இலக்கியங்கள்

## 1. இலங்கை

'யாழ்ப்பாணத்தான்' எனும் தலைப்பில் கனடாவில் வாழும் பொன் குலேந்திரன் எழுதிய 23 சிறுகதைகளும் கிழக்கு இலங்கைச் சிறுகதைகளும் சிறப்பான வரவு. சுதந்திர இலங்கையின் தமிழ்ச் சிறுகதைகள் தொகுப்பு நுட்பமானது.

## 2. மலேசியா

ஆண் பெண் சமத்துவத்தை மலேசியச் சிறுகதைகள் தெளிவாக உணர்த்துகின்றன. மலேசிய எழுத்தாளர் நிர்மலா ராகவன் 'எழுதிய நான் பெண்தான்' என்ற மலேசியச் சிறுகதைகள் தொகுப்பை அதற்குச் சான்றாகக் கூற முடியும். பாரி எனும் புனைப் பெயரில் ஆழமான கதைகள் எழுதிவரும் வீரசிங்கம் எழுதிய 'சத்து ரிங்கிட்' எனும் கதை ரப்பர் காட்டுக்கு வேலைக்குச் செல்லும் பெற்றோர் நிலையை அப்படியே எடுத்துக் காட்டுகிறது. 'அன்பு இதயம்' எனும் தலைப்பில் வெளியான மலேசியச் சிறுகதைகள் குறிப்பிடத்தக்க செய்தியை முன்வைக்கின்றன.

## 3. சிங்கப்பூர்

சிங்கப்பூர் எழுத்தாளர்களான உதுமான் கனி, சுப்ரா, இராம. கண்ணபிரான், மா. இளங்கண்ணன் போன்றோர் காலத்திற்கு ஏற்ற கதைக் கருக்களுடன் சிங்கப்பூர் வாழ்க்கை முறை, ஆணாதிக்கம், பெண்ணடிமைத் தனம், வேறு நாட்டில் குடிபெயரும் மக்களின் வாழ்வியல் சிக்கல்கள், சூழலியல் சிக்கல்கள் போன்றவற்றைச் சிறுகதைகளாகப் படைத்து வருகின்றனர். இயந்திரங்களோடு ஒன்றாக இணைந்து வாழும் மனிதர்களை அவை எவ்வாறு எள்ளி நகையாடுகின்றன என்ற பொருளில் உதுமான் கனியின் சிறுகதைகள் அமைகின்றன. என்ன நடந்தாலும் நாம் எங்கே இருந்தாலும் நடத்தை மட்டும் மாறவே கூடாது என்று கனிய......

## 4. தன்வரலாறு

'தன் வரலாறு' என்பது ஒரு நபர் தானே எழுதிய அவரது வாழ்க்கை வரலாறாகும். சுயசரிதை என்றும் அழைக்கப்படுகிறது. ஒவ்வொரு மனிதனும் தான் வாழ்ந்த வாழ்க்கையை, தான் வாழும் வாழ்க்கையைப் பின்னோக்கிப் பார்த்தல் அவசியம். கடந்து வந்த பாதைகளில் எத்தனை தடைகள், எத்தனை முட்கள், எத்தனை மலர்கள், வலி,

வேதனை, அவமானம், அங்கலாய்ப்பு, ஆச்சர்யம், பொறாமை, புகழ், சாதனை என இவை போன்ற நிலைகளை கடந்துதான் வரவேண்டும். இந்நிலைகளைக் கடக்காத மனிதன் ஒருவரும் கிடையாது. இதுதான் வாழ்க்கை.

மனிதனின் பிறப்பு ஒரு சாதாரணம்தான். அதனைச் சரித்திரமாக்குவதும், சாதனையாக்குவதும் அவர்களின் நடைமுறை செயல்பாடுகள்தான். இச்செயல்பாடுகளைக் கொண்டு இச்சமூகம் மதிப்பெண் கொடுக்கும். இதுதான் அவனது சாதனை. இதில் 100-க்கு 100 மதிப்பெண் எடுத்தவர்கள் யாருமில்லை என்று அறுதியிட்டு கூறலாம். தன் வரலாறு என்பது குறிப்பிட்ட ஒரு தருணத்திலிருந்து, கடந்தகால வாழ்க்கையை மீழாய்வு செய்வது என்றும், நாட்குறிப்பு தொடர்ச்சியான பல தருணங்களில் எழுதப்பட்ட நினைவுகள் என்றும் 'இராபர்ட் சௌதி' என்னும் அறிஞர் குறிப்பிட்டுள்ளார். எனவே சுயசரிதை அது எழுதப்படும் காலத்தில் இருந்துகொண்டு எழுதுபவரின் வாழ்க்கையயைத் திரும்பிப் பார்க்கிறது.

## 5. வாழ்க்கை வரலாறு

'வாழ்க்கை வரலாறு' அல்லது 'சுயசரிதை' என்பது ஒருவருடைய வாழ்க்கையின் முழுமையான நிகழ்வுகளின் தொகுப்பாகும். இது ஒருவருடைய கல்வி, வேலை, உறவுகள் மற்றும் இறப்பை மட்டும் உள்ளடக்கியதல்ல. மாறாக ஒருவருடைய வாழ்க்கை நிகழ்வுகள், அனுபவத்தின் நெருக்கமான விவரங்கள், மற்றும் அவர்களின் வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களை முன்னிலைபடுத்தி அவர்களின் ஆளுமைத்திறனைப் பற்றி விளக்கமாக வர்ணிப்பதாகும். சில நேரங்களில் ஆளுமையின் பகுப்பாய்வையும் உள்ளடக்கியிருக்கலாம்.

வாழ்க்கை வரலாறு சார்ந்து படைக்கப்படும் படைப்புகள் புனைகதை அல்ல. ஆனால் ஒரு நபரின் வாழ்க்கையை புனைகதை வழியாகவும் கூறலாம். வாழ்க்கை வரலாற்றின் ஒரு ஆழமான வடிவம், எழுத்துக்களிலேயே காணப்படும் என்று நம்பினாலும் கவிதை இலக்கியம் முதல் திரைப்படம் வரை பல்வேறு ஊடகங்களின் படைப்புகளின் வழியாகவும் சுயசரிதை வெளிவரலாம். மேலும் அங்கீகரிக்கப்பட்ட சுயசரிதை என்பது யாரைப்பற்றி எழுதுகிறோமோ, அவருடைய அனுமதி பெற்றோ, அல்லது அவரது வழிதோன்றல்களின் பங்களிப்புடனோ எழுதப்பட வேண்டிய ஒன்றாகம். சில நேரங்களில் சுயசரிதை என்பது ஒருவர் தன்னைப் பற்றி தானோ அல்லது உதவியாளரை வைத்தோ கூட எழுதலாம்.

## 6. கடித இலக்கியம்

**காணாமல் போன கடித இலக்கியம்**

கம்பிக்குள் காலத்தை சொருகிவைத்த வித்தையில் கைதேர்ந்தவர்கள் நம் முன்னோர்கள். அதிகமாகப் படிக்காவிட்டாலும் எழுத்துக்கூட்டி எதையும் வாசிப்பதில் வல்லவர்கள். எந்தக் கடிதம் வந்தாலும் அதைப் படித்துவிட்டு பொருத்தப்பட்ட கடுதாசிக் கம்பியில் சொருகி வைத்துவிடுவார்கள்.

வரலாற்றை அழிப்பதில்தானே நம் வாழ்க்கையே கழிகிறது. கட்டை குத்தப்பட்ட ஒவ்வொரு பழைய வீட்டின் கால்நூற்றாண்டு வரலாற்றைத் தன்னுள் பொதிந்து ஈசான மூலையில் தொங்கிக்கொண்டிருந்த அந்தக் கடிதக் கம்பிகளைப்போல் கடிதங்களும் நம்மைவிட்டுத் தொலைந்து வெகுநாட்களாயிற்று.

நாம் இழந்தவற்றுள் மிகவும் வேதனைக்குரியது கடிதம் எழுதுவதாகத்தான் இருக்க முடியும். கையெழுத்தும், எழுதுவதும் கொஞ்சம் கொஞ்சமாக அப்பால் போய்க் கொண்டிருக்கின்றன. மாதத்திற்கு இரண்டோ மூன்றோதான் கடிதங்களே வருகின்றன. அதுவும் வணிகச் சாயல்கொண்ட கடிதங்கள். தொலைத்தொடர்புத் துறையின் இணையப்பயன்பாட்டுக் கட்டணக் கடிதம், வீட்டுக்கடன் மாதத்தவணை கட்டிய ஒப்புகைச் சீட்டு என்ற வரிசையில் இன்ன பிற.

நம் நலத்தை அறிய யாருக்கும் ஆவல் இல்லாமலும், நமக்கு யார் நலத்தையும் அறிய நேரமில்லாமலும் நம் நாட்கள் நகர்கின்றன. மின்னஞ்சல் முகவரிகள் வந்தபின் பொங்கல் வாழ்த்து அட்டைகளும், அஞ்சலட்டைகளும், நம்மைவிட்டுக் கொஞ்சம் கொஞ்சமாக அகன்று போய்க்கொண்டிருக்கின்றன.

**டாக்டர் மு. வரதராசனாரின் இலக்கியக் கடிதங்கள்**

திருநெல்வேலி மாவட்ட மத்திய நூலகத்தில் பேரறிஞர் அண்ணாவின் கடிதங்கள், டாக்டர் மு. வரதராசனாரின் இலக்கியக் கடிதங்கள், நேருவின் கடிதங்கள் ஆகியவற்றை வாசித்து பெருமிதம் அடைந்திருக்கிறேன். மு.வ.வின் தெள்ளுதமிழ் நடை எனக்கு மிகவும் பிடிக்கும். ஒன்றரையணா விலையில் சென்னை, பாரி நிலையம் 1954-ம் ஆண்டு வெளியிட்ட, ‘‘தம்பிக்கு, மு. வரசராசனார்’’ என்ற கடிதநூலின் ஒவ்வொரு வரியும் கற்கண்டு வெல்லமது.

அன்புள்ள எழில்… எனத்தொடங்கி, ‘‘தமிழ்மொழி நல்லமொழிதான், ஆனால் அதை வல்ல மொழியாக ஆக்கினோமா? பெரும்பாலானோர் போற்றும் மொழியாக ஆக்கினோமா? இன்று எதை எடுத்தாலும் மக்கள் தொகையே வல்லமையாக வைத்துப் பேசப்படவில்லையா? தமிழ்மொழிக்கு அறிவுக் கலைகளில் செல்வாக்குத் தந்தோமா? நீதிமன்றங்களில் உரிமை நல்கினோமா? ஆய்வுக் கூடங்களில் வாழ்வு வழங்கினோமா? இல்லையானால் வெறும் பேச்சு ஏன்?

வல்லமை இல்லாத நல்லதன்மை வாழாது தம்பி! அது பொருட்பால் இல்லாத திருக்குறள் போன்றதுதான்''. மூச்சுவிடாமல் இதை நெல்லையப்பர் கோவில் உள்தெப்பக்குளப் படியில் அமர்ந்து நண்பனிடம் ஏற்ற இறக்கத்தோடு பேசி மகிழ்ந்திருக்கிறேன். இந்த ஒரு நூலின் தாக்கத்தில் மு.வ.-வின் நிழற்படத்தை எங்கள் கட்டைகுத்தப்பட்ட வீட்டின் உத்திரத்தில் மாட்டிவைத்துப் பார்த்து மகிழ்ந்திருக்கிறேன். அந்த தம்பி நானாகவும் மு.வ. அவர் குரலில் எனக்குக் கடிதத்தை வாசித்துக் காட்டுவதாகவும் எண்ணிக் கொண்டதுண்டு.

**புதுமைப்பித்தன் கடிதங்கள்**

இளையபாரதியின் அரிய முயற்சியில் தொகுக்கப்பட்ட, ''கண்மணி கமலாவுக்கு'' என்ற புதுமைப்பித்தன் கடிதங்கள், 1938 முதல் 1948 வரையிலான காலகட்டத்தில் அவரைச் சரியாகப் புரிந்துகொள்ள உதவுகின்றன. வாழ்வை எள்ளலோடும் நையாண்டியோடும் கதைகளாகப் பதிவுசெய்த உன்னதக்கலைஞர் புதுமைப்பித்தன், தன் மனைவி கமலாவுக்கு எழுதிய கடிதங்கள் யதார்த்தமாய் இலக்கியச் செழுமை மிக்கதாய் அமைகின்றன. கடிதத்தின் முதல் விளிப்பு அன்பைப் பொழிவதாய் அமைகிறது.

''எனது உயிருக்கு உயிரான கட்டிக்கரும்புக்கு… எனது அருமைக் கண்ணாளுக்கு… கண்மணி கமலாவுக்கு…'' என்று தொடங்கி புதுமைப்பித்தன் கடிதம் எழுதியுள்ளார். புதுமைப்பித்தன் நம்பிக்கைதரும் கணவராக அவர் கடிதங்களை வாசிக்கும்போது தெரிகிறார்.

''கமலா கண்ணே! கட்டிக் கரும்பே! மறந்து விடாதே. உனக்கு ஏற்படும் துன்பம் எனக்கும்தான். நாம் இருவரும் சேர்ந்தே அனுபவிக்கிறோம். அதனால் உனக்கென்று ஒரு வழி என்னும் அசட்டு யோசனைகளை விட்டுவிடு. மனசை மாத்திரம் தளர விடாதே! அது எனக்கு எவ்வளவு கவலை கொடுக்கிறது தெரியுமா?'' உன்னுடன் தவிக்கும். உனது சொ…வி.'' என்ற வரிகள் படைப்பைத் தொழிலாகக் கொண்ட ஒரு படைப்பாளி வாழ்க்கைச் சூழலில் சிக்கித்தவிக்கும்போது அவன் குடும்பமும் சேர்ந்து தவிப்பதையும் நம்மால் உணரமுடிகிறது. கணவன் மனைவிக்கிடையில் அகச்செய்திகள் மட்டுமே இடம்பெறும் என்ற கருதுகோளை உடைத்த புதுமைப்பித்தன், 05.02.1948 நாளிட்ட கடிதத்தில் மகாத்மா காந்திஜி சுட்டுக் கொலை செய்யப்பட்ட செய்தியை வருத்தத்தோடு பதிவுசெய்துள்ளார்.

சிவசுசார் வல்லிக்கண்ணனுடன் நிகழ்த்திய நேர்காணல் நூலைக் கல்லூரி நூலகத்தில் படித்துவிட்டுப் பெரியவர் வல்லிக்கண்ணனுக்கு இன்லேண்ட் கவரில் கடிதம் எழுதினேன். ஒரு வாரத்தில் முத்து முத்தான கையெழுத்தோடு சென்னையிலிருந்து அவர் எழுதிய பதில் அஞ்சலட்டையில் என் பெயர் போட்டுக் கல்லூரி முகவரிக்கு வந்ததை நான் ஊர் முழுக்கக் காட்டித் திரிந்தது என்றும் நினைவிலிருக்கிறது.

பதினைந்து பைசாவில் இந்தியா முழுக்க யாருக்கு வேண்டுமானாலும் கடிதம் எழுதலாம் என்பது தொண்ணூறுகளில் என் பள்ளிப் பருவக் கல்லூரிக் காலத்தில் பெருவியப்பைத் தந்தது. நெல்லை ம.தி.தா. இந்துக் கல்லூரி மேல்நிலைப்பள்ளியின் வாரியார் அரங்கின் தாமிரசபையில் பத்துநாள் சொற்பொழிவாற்றிய திருமுருகக்கிருபானந்த வாரியார் சுவாமிகளுக்குச் சந்தேக வினாக்களோடு நான் கடிதம் எழுதியதும், அவர் ஒரு மாதம் கழிந்துப் பதில் எழுதியதும் மகிழ்வான நிகழ்வுகள்.

பேனா நண்பர்கள் குழுவிலும் நான் உறுப்பினர், சொல்ல வேண்டியதில்லை. சில நாட்களில் பத்துப்பதினைந்து கடிதங்களுக்கு இரவோடு இரவாகப் பதில்போட்ட நிகழ்வுகள்கூட உண்டு. எரியோடு ஆறுமுகம் அண்ணன் நைஸ் காகிதத்தில் முப்பது பக்கக்கடிதம் கூட எனக்கு எழுதியிருக்கிறார்.

கடிதம் எழுதுவதைவிடக் கடிதங்களுக்குத் காத்திருப்பது சுகமானது. ஆண்டிநாடார் பாத்திரக்கடையில் பித்தளைப் பாத்திரத்தில் பெயர் வெட்டித்தரும், மிகத்தேர்ந்த, சிற்பியின் நேர்த்தியைப் பெற்ற வள்ளிநாயகம் அண்ணாச்சியின் கையெழுத்தைப் போன்று சிலர் எழுதிய கடிதங்களைக் கண்ணில் ஒற்றிக்கொள்ள வைக்கும்.

**வல்லிக்கண்ணன் கடிதங்கள்**

உருண்டை உருண்டையாய் அச்சுப்பதித்ததைப்போல் நேர்த்தியாய் எழுதி தெளிவாகக் கையெழுத்திடும் பழக்கம் வல்லிக்கண்ணனுக்கு. ‘‘நமது நடை’’ வலைப்பூவின் ஆசிரியருக்கு வல்லிக்கண்ணன் 28.05.2001 அன்று எழுதிய கடிதத்தில் பதினைந்து பைசாவிலிருந்து ஐம்பது பைசாவுக்கு அஞ்சலட்டை விலையுயர வருத்தத்தோடு பதிவு செய்துள்ளார்.

‘‘அன்பு நண்பா வணக்கம். கார்டுகள் இரண்டு சும்மா கிடைக்கின்றனவே என்பதால் எழுதுகிறேன். இன்று ஒன்றும், நாளை ஒன்றுமாக ஜூன் 1 முதல் கார்டு விலை 50 பைசா ஆகிறது. 3 ரூபாய் கவர் இனி 4 ரூபாய். இப்படி கட்டணங்கள் உயர்கின்றன. இப்படிப் பலவகைகளிலும் விலைவாசிகள் உயர்கிறபோது, சிற்றிதழ் நடத்துகிறவர்களின் சிரமங்கள் மேலும் அதிகரிக்கும். சிற்றிதழ்கள் நடத்துகிறவர்களில் சிலபேர் வெற்றிகரமான தொழிலாக அதை நடத்துகிறார்கள். ‘பல்சுவை இதழ்’ என்று கூறிக்கொண்டு, மசாலா பத்திரிகை மாதிரியே தயாரிப்பதோடு, கணிசமான அளவு விளம்பரங்களும் சேகரித்து விடுகிறார்கள். அவ்வப்போது சிலர் கவிதைத் தொகுப்பு வெளியிடுகிறோம் ஹைக்கூ தொகுப்பு தயாரிக்கிறோம், கவிதைகளோடு நூறு ரூபாய் பணமும் அனுப்புக என்று அறிவிக்கிறார்கள். தங்கள் கவிதை (ஹைக்கூ) புத்தகத்தில் இடம்பெற்றால் சரிதான்

என்று கவிதை (ஹைக்கூ) உடன் பணமும் அனுப்பி வைக்கிறார்கள். இளைஞர்கள் பலர். அன்பு –வ.க.∴....''

வல்லிக்கண்ணனின் கடிதங்களில் பெரிய ஈர்ப்பு உண்டு எனக்கு. கடிதத்தின் இடப்புற மேல் பகுதியில் அவர் பெயரை எழுதிச் சிறுகோடு போட்டு கீழே இருசிறு புள்ளிகள் வைத்து எழுதத்தொடங்குவார். அதை நான் இன்றும் பின்பற்றிக் கொண்டிருக்கிறேன்.

## 7. சுற்றுலா மற்றும் பயண இலக்கியம்

**பயணமெனும் நகர்வுத் தியானம்**

உங்கள் குடும்பத்தாரோடு சுற்றுலா நிமிடங்களை நினைத்துப் பார்த்திருக்கிறீர்களா? எப்போதும் குறைவாகப் பேசும் உங்கள் மகன் உங்களுக்கு வெகு நெருக்கமாகியிருப்பான். இரண்டடி தூரத்தில் நின்று பேசுகிற உங்கள் மகள் உங்களுக்கு நெருக்கமாகியிருப்பாள். எப்போதும் உங்கள் குறைகளையே பிரகடனப்படுத்தும் உங்கள் அலுவலக நண்பரோடு சுற்றுலா சென்றதுண்டா? சென்றிருந்தால் நீங்களும் அவரும் விசாலமாயிருப்பீர்கள். தூரங்களைத் துரத்தும் நேரங்களைச் சுற்றுலா நமக்குச் சத்தமில்லாமல் தந்து செல்கிறது. பிணக்கை விடுத்துப் பிணைப்பையும் ஓர் இணைப்பையும் சுற்றுலா உருவாக்குகிறது. பிளவுபட்ட மனங்களை நெருக்கி நிறுத்துகிறது. ஓட்டத்தையும், முகவாட்டத்தையும் தடுத்து இறுக்கத்தை நிறுத்தி நெருக்கத்தை உருவாக்குகிறது. பண்பாட்டை நமக்குக் கற்றுத்தருகிறது. நல்ல பழக்கவழக்கங்களை நமக்குக் கற்றுத்தருகிறது. வியப்பின், விரிபரப்பில் அப்பயணங்கள் நம்மை நகர்த்தி வைக்கிறது.

**சுற்றிக்கொண்டேயிருப்பதே சுகம்**

ஆம்! பயணம் அற்புதமானது. சோகத்தைத் தூக்கி எறிந்து சுகவினாடிகளை நாம் ஏன் சுகிக்க மறந்துவிட்டோம். யாரையாவது நீங்கள் துல்லியமாகப் புரிந்துகொள்ள விரும்பினால் அவரோடு இரண்டு நாட்களாவது பயணப்படுங்கள். அவர் அத்மாவைக் கூட நீங்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

தோன்றிய வினாடியிலிருந்து சுற்றிக்கொண்டே இருக்கும் பூமிமாதிரி இடையறாது சுற்றிக்கொண்டேயிருப்பதன் சுகம் தனியானது. அதனால்தான் காசியில் வசிப்பவனுக்கு ராமேஸ்வரமும், காஞ்சியில் வசிப்பவனுக்கு ரிஷிகேசும் புனிதத்தலங்களாய் முன்னிறுத்தப்பட்டது.

**பலம் தந்த பயணங்கள்**

கல்கத்தா நகரில் பிறந்த **சுவாமி விவேகானந்தர்** மிகுந்த சிரமத்திற்கிடையே சிகாகோ மாநகருக்கு மேற்கொண்ட பயணம் இந்தியப் பண்பாட்டை உலகுக்கு உணரவைத்தது. இமயம் முதல் குமரிவரை அவர் கடந்தபாதைகள் அவருக்கு இந்தியா

குறித்த விசாலமான பார்வைக்குக் காரணமாய் அமைந்தன. அவருக்குத் தென்னிந்தியா மிகவும் பிடித்தபகுதியாய் இருந்தது.

பாரிஸ்டர் பட்டம் பெற்ற புகழ்மிக்க வழக்கறிஞராய் வழக்குநடத்தத் தென்னாப்பிரிக்கா மேற்கொண்ட **மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியின்** தென்னாப்பிரிக்கப் பயணம் இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு அவரை அழைத்து வந்தது.

**மகாகவி பாரதியின்** பயணங்கள் தமிழக மக்களுக்கு எழுச்சியையும் உற்சாகத்தையும் தந்தன. எட்டயபுரத்தில் பிறந்து திருநெல்வேலியில் கல்விகற்று காசி சென்று உயர்கல்வி முடித்து பல மொழிகள் கற்று சென்னையிலும், புதுவையிலும், கடையத்திலும் வாழ்ந்து இயற்கையை ரசித்து “நிற்பதுவே நடப்பதுவே பறப்பதுவே நீங்களெல்லாம் சொற்பனந்தானோ? பல தோற்ற மயக்கங்களோ?” என்று கேட்கக் காரணமாய் அமைந்த பயணங்களை எப்படிப் புகழ்வது?

**உலகைச் சுற்றிய பயணிகள்**

போர்ச்சுக்கீசிய நாடுகாண் பயணியாகக் கிளம்பிய **வாஸ்கோடகாமா**, ஆப்பிரிக்காக் கண்டத்திலிருந்து 23 நாட்கள் இந்தியப் பெருங்கடலில் பயணித்து இந்தியாவின் மலபார் கடற்கரைப் பகுதியை அடைந்தார்.

**கிறிஸ்டோபர் கொலம்பசின்** பயணத்தால் அமெரிக்கநாடு உலகின் பார்வைக்கு வந்தது.

**சீனப்பயணியான யுவான்சுவாங்**, கைபர் கணவாய் மூலமாக இந்தியாவுக்கு மேற்கொண்ட பயணம் அற்புதமானது. பதினாறு ஆண்டுகள் இந்தியாவில் தங்கி இந்தியாவின் தொன்மையை ஆராய்ந்தார். கர்‘மீர், பாடலிபுத்திரம் போன்ற பகுதிகளுக்குப் பயணித்து புத்தசமயம் குறித்த ஆய்வுகளை மேற்கொண்டார். நாளந்தா பல்கலைக்கழகத்தில் தங்கிப் பயின்றுள்ளார். சமஸ்கிருதத்தில் இருந்த புத்த சமய நூல்களைக் கற்றுணர்ந்து சீன மொழியில் மொழிபெயர்ப்பது அவர் பயணத்தால் நிகழ்ந்த நிகழ்வு.

பயணித்த கடல் பார்த்த கண்கள், நதியில் கால்நனைக்கும் கால்கள், அருவியில் நனையும் அழகுத்தலைகள், தேயிலைத் தோட்டத்தில் நுரையீரல் நிறைக்கும் வெகுசுத்தமான ஆக்சிஜன் காற்று, பயணத்தடங்களில் கிடைக்கும் சூடான தேநீர், இடைப்படும் இனிய தேசாந்திரிகள், மாசுமருவற்ற அற்புதமான ரயில் சிநேகம் எல்லாம் கிடைத்து எவ்வளவு நாட்களாயிற்று?

இன்னும் திருமலை நாயக்கர் மகால் பார்க்காத திருவாளர்கள் எத்தனைபேர்? தேக்கடிகூடப் பார்க்காமல் கொசுக்கடியில் தவிப்போர் எத்தனைபேர்?” மதுரை ஈர்ப்பில்

அழகர்கூட ஆண்டுக்கொருமுறை அழகர் கோயிலைவிட்டுக் கிளம்பி வந்துவிடுகிறார். ஆனால் இல்லம் விட்டு நகராமல் இன்னும் நம்!

**நிம்மதி தரும் பயணங்கள்**

‘ஓடும் நீர்தானே நதியாகும், இயங்காமல் இருக்கிற இடத்தில் இருப்பது சதியாகும்’. குதிரைப் பந்தயத்தில் உள்ள குதிரைகளைப்போல் ஓடிக்களைக்கும்போது வலுகுறைந்ததாய் வாழ்க்கை நம்மை வாசலில் கொண்டு நிறுத்துகிறது. வாழ்வின் வசந்தத்தை ரசிக்க நாம் வெளிநாடுகளுக்குதான் விமானத்தில் பறக்க வேண்டும் என்பதில்லை. மெட்ரோ ரயில்பயணம் கூட மெட்டுப்போட்ட பாட்டு நம்மைக் கட்டிப்போடுகிற மாதிரி இனிமையானதுதான். பயணப்பொழுதுகளில் பஞ்சுபோல் நெஞ்சு மாறுகிறது.

சோகம் தொட்டுச் சென்றே பழக்கப்பட்ட நமக்கு மேகம் தொடும் அனுபவம் தரும் ஊட்டியும் கொடைக்கானலும் நம் பர்சுக்கு இதமான பக்கத்தில்தான் இன்னும் இருக்கிறது. பேருந்துப் பயணம் எத்தனை அற்புதமானது சன்னலைத் தாண்டி நம் மீது சில்லென்று வீசும் பூங்காற்று, நாற்கரச்சாலையின் நடுவே அழகாகப் பூத்திருக்கும் அரளிச்செடிகள், இருபுறமும் பின்னால் ஓடும் மரங்கள் யாவும் அழகியல் காட்சிகள்.

ரயில் பயணம் இன்னும் அழகு. நம் வீடுபோல் நடக்கவும், நிம்மதியாய் தூங்கவும் எந்த அலுப்பில்லாமல் ஆயிரக்கணக்கான கிலோமீட்டர்கள் கடந்து பல மாநிலங்களைப் பார்த்து ரசிக்கவும் வாய்ப்பளிக்கவும் உதவும் ரயில்பயணம் பல நண்பர்களை நமக்குத் தந்திருக்கிறதே.

கேரளக் கடற்கரையின் படகுப்பயணம், கன்னியாகுமரிக் கடலில் ஸ்டீமர் பயணம், கிராமத்தில் கட்டைவண்டிப் பயணம், உடல் நலத்திற்கு உதவும் சைக்கிள் பயணம், சிறு தெருக்களில் நுழைந்து வெளிவரும் ஆட்டோப் பயணம், பஞ்சுப்பொதிகளுக்குள் நுழைந்ததுபோல் ஆகாயத்தைக் கிழித்தபடி விரிவானில் பல நாடுகளைக் கடக்கும் இனிமையான விமானப்பயணம் என்று விதவிதமாய் அவரவர் வசதிக்கு ஏற்றபடி இனிமையான பயணங்கள்.

**நாமும் பயணிப்போம்**

எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா! என்று நன்றி சொல்லி இந்தக் கோடைவிடுமுறைக்கு நம் பொருளாதாரத்திற்கு ஏற்ற ஏதேனும் ஓரிடத்திற்காவது நம் குழந்தைகளை அழைத்துச் செல்வோம். சலவை செய்த பளிங்கு மொட்டாய் திகழும் தாஸ்மகால், அழகான அரண்மனைகளை அதே பழமையோடு வைத்திருக்கும் ஜெய்ப்பூர் மாநகரம், இயற்கையின் தொட்டிலாகத் திகழும் கேரளமலைப் பகுதிகள், அழகான ராமேஸ்வரத் தீவு, பாபநாசம் அருவி, மாஞ்சோலை, மூணார், வால்பாறைத் தேயிலைத்

தோட்டங்கள், கம்பம் - குமுளி இயற்கை அழகுகள், மதுரை மீனாட்சியம்மன் திருக்கோவில், திருமலைநாயக்கர் மகால், கோடையிலும் குளிரவைக்கும் கோடைக்கானல், ஊட்டி ஒன்றை ஒன்று முந்திச் செல்லும் அசுரவேக வாகனங்கள், அழகர்கோயில் பனிச்சுனைத் தேன்நீர், சாத்தூர் வெள்ளரிக்காய், கோவில்பட்டி கடலைமிட்டாய், திருநெல்வேலி அல்வா, மதுரை மல்லி, கொடை ரோடு பழங்கள், ஸ்ரீவில்லிபுத்தூர் பால்கோவா, மணப்பாறை முறுக்கு, திருச்செந்தூர் சில்லுக்கருப்பட்டி, கடம்பூர் போளி இவற்றையெல்லாம் பெறுவதற்காக நாமும் பயணிப்போம்.

## 8. நவீனத்துவம்

நவீனம் என்பது ஒரு பொருளைப் புதுப்பித்தல், மேம்படுத்துதல், நவீனப்படுத்துதல் அல்லது புதியதாகப் பயன்படுத்துதல் போன்ற பல பொருள்களைக் குறிக்கும் சொல். இது கலை, அறிவியல், கலாச்சாரம் மற்றும் சமூகத்தின் பல துறைகளில் பயன்படுத்தப்படுகிறது. புதுமை, மாற்றம், மேம்பாடு என்பன நவீனத்தின் சில முக்கிய அம்சங்கள். பழைய முறைக்கு மாற்றாக புதுமையாக ஒன்றை சொல்வது புதுமை. கலை, அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தில் ஏற்படும் மாற்றத்தைக் கூறுவது மாற்றம். ஏதாவது ஒரு பொருளைப் புதுப்பித்து மேம்படுத்துவதைக் குறிப்பது மேம்பாடு.

அறிவியல் என்பது இயற்கை மற்றும் சமூக நிகழ்வுகளைப் புரிந்து கொள்வதற்கும், அதை அடிப்படையாகக் கொண்டு தொழில் நுட்பங்களை உருவாக்குவதற்கும் பயன்படுத்தப்படும் ஒரு முறை. இது ஒரு கருதுகோளை முன்வைத்து, நிகழ்வுகளைப் பார்த்து, தரவுகளை சேகரித்து, பரிசோதனை செய்து முடிவுகளை எடுப்பதன் மூலம் பொதுவானக் கோட்பாடுகளை உருவாக்குவதாகும்.

# ஐஐஐ பிற துறைகள்

## 1. மொழிபெயர்ப்பு

**தமிழ்மொழிபெயர்ப்பு முயற்சிகள்:**

மூலமொழியில் உள்ள சொற்களை, சொற்றொடரை மற்றொரு மொழிக்கு அதன் மையக்கருத்து சிதையாமல் பெயர்த்துத் தருவதே மொழிபெயர்ப்பு ஆகும். மொழிபெயர்ப்பு உலகளாவிய அளவில் அனைவரையும் ஒன்றுபடுத்துகிறது. வேறுபாடுகளைக் களைந்து ஒன்றிணைக்கிறது. திருக்குறள் உலகப் புகழ்பெற்றதன் காரணம் மொழிபெயர்ப்பே ஆகும். தாகூரின் கீதாஞ்சலி வங்கமொழியில் இயற்றப்பட்டிருந்தாலும் அதைத் தாகூரே ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து யேட்ஸ் முன்னுரையோடு வெளியிட்டதால் அது உலகத்தார் கவனத்தில் எட்டியது. தமிழ்மொழி சொல்வளம் மிக்க செழுமையான மொழி என்பதால் சங்க இலக்கியப் பாடல்கள் ஏ.கே. இராமானுஜம், வைதேகி ஹெர்பட், இல. தங்கப்பா போன்ற மொழிபெயர்ப்பாளர்களால் மொழிபெயர்க்கப்பட்டு உலக மொழிக்குச் சென்றுள்ளன.

பேராசிரியர் ஜாஹிர் ஹுசைன் திருக்குறளையும், மகாகவி பாரதியார் கவிதைகளையும் ஔவையாரின் ஆத்திச்சூடியையும் அரபு மொழியில் மொழிபெயர்த்துள்ளார்.

மொழிபெயர்ப்பின் பயன் பொதுமக்களை அடைய வேண்டும். மூலநூலின் மூலக் கருத்து சிதையாமல் மொழிபெயர்க்க வேண்டும். மூலநூலின் ஆற்றொழுக்கான நடை, எளிமை, இனிமை, கம்பீரம் யாவும் மொழிபெயர்க்கப்படும் வழி நூலுக்கும் வர வேண்டும். பண்பாடு சார்நத, வட்டாரம் சார்ந்த, புவியியல் சார்ந்த தனித்துவம் காக்கப்பட வேண்டும்.

**சான்றாக**

“ர்நசந றவைா ய டழயக ழக டிசநயனஇ டிநநெயவா வாந டிழரபா
யு கடயளம ழக றுiநெஇ ய டிழழம ழக ஏநசளந யனெ வாழர
டீநளனைந அந ளுiபெiபெ i வாந றுடைனநசநௌள
யுனெ றுடைனநசநௌள ளை ீயசயனளைந”.

எனும் உமர்கய்யாம் பாடல் வரிகளைக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை,

“வெயிற்கேற்ற நிழலுண்டு,
வீசு தென்றல் காற்றுண்டு,
கையில் கம்பன் கவியுண்டு,
கலசம் நிறைய மதுவுண்டு
தெய்வகீதம் பலவுண்டு,
தெரிந்து பாட நீயுண்டு
வைய்யம் தருமிவ் வளமின்றி வாழும்
சொர்க்கம் வேறுண்டோ”?

என்று மொழிபெயர்த்தார்.

## 2. பேச்சுத் தமிழ்

இலக்கிய வழக்கிற்கு எவ்வளவு முக்கியத்துவம் அளிக்கிறோமோ அதே அளவு பேச்சுத் தமிழுக்கு முக்கியத்துவம் அளிக்கத் தொடங்கியுள்ளோம். மக்களின் புழங்கு மொழி குறித்து மொழியியல் ஆய்வுகள் தொடர்ந்து நடக்கின்றன. தடம்பதித்து வரும் தமிழ்ப் புதினங்கள் வட்டார வழக்கை மையமிட்டே எழுதப்படுகின்றன.

### திருநெல்வேலித் தமிழ்

பொதிகை மலையிலே தமிழ் பிறந்தது என்று புராணங்கள் சொல்கின்றன. வயதில் மூத்த பெண்களைத் திருநெல்வேலி, தூத்துக்குடி பகுதிகளில் ‘ஆச்சி’ என்றும் வயதில் மூத்தோரை ‘அண்ணாச்சி’ என்றும் அழைப்பர்.

**‘ஏலே! மக்கா’** என்று நண்பனை அழைப்பர்.

**நான் சொல்லுதேம்லா** – நான் சொல்கிறேன் அல்லவா?

**உங்கள தியேட்டர்ல வச்சுப் பார்த்தேனே** – உங்களை திரையரங்கில் பார்த்தேனே!

**ஏளா! இங்ஙன யானம் கிடந்துச்சே பார்த்தியா?** – ஏ பிள்ளையோ இங்கே பாத்திரம் கிடந்தது பார்த்தாயோ?

**சேக்காளி மவன் இவன்** - நண்பன் மகன் இவன்

**தொரவல தொலைச்சுப்புட்டானே** – சாவியைத் தொலைத்து விட்டானே

**செத்த நேரம் பேசாம இருக்கியளா?** – கொஞ்ச நேரம் பேசாமல் இருப்பீர்களா?

**நீங்க போன் போட்டிய அந்தானிக்கி ஓடியாந்துட்டேன்** - நீங்கள் தொலைபேசியில் பேசினீர்கள், அப்படியே ஓடி வந்துவிட்டேன்.

**புரவாட்டி பாக்கலாம்னாறு** – பிறகு பார்க்கலாம் என்றார்.

**சென்னைத் தமிழ்**

மதராஸ் பட்டினம் என்று முன்பு அழைக்கப்பட்ட சென்னைத் தமிழ் ‘மெட்ராஸ் பாஷை’’ என்று அழைக்கப்படுகிறது. சென்னைத் தமிழ் பிற மொழிச் சொற்கள் கலந்த தமிழாக அமைகிறது. சென்னை வட்டாரத் தமிழ் என்றும் அழைக்கலாம்.

**பூட்ச்சி** – போய்விட்டது

**இஸ்முகினு** - இழுத்துக் கொண்டு

**கீசிடுவேன்** - கிழித்துவிடுவேன்

**எத்தினி தபா சொல்லிருக்கேன்** - எத்தனை முறை சொல்லியிருக்கிறேன்?

**இஸ்கூலு லீவு** – பள்ளிக்கு விடுமுறை

**வந்துனுருக்கான்** - வந்து கொண்டிருக்கிறான்

**குட்த்தியா, எட்த்தியா** – கொடுத்தாயா? எடுத்தாயா?

**லெப்டுல ஒடி** - இடதுபுறம் திருப்பு

**கொங்குத் தமிழ்**

கோவை, நீலகிரி, திருப்பூர் ஈரோடு கரூர், நாமக்கல் பகுதிகளில் வழங்கும் வட்டார மொழி நடை மரியாதை வாய்ந்தது. ஏனுங்கண்ணா – ஏன் அண்ணா

**என்றா** – என்னடா

**சொல்லுங், வாங், போங், இல்லீங்** - சொல்லுங்கள், வாருங்கள், போங்க, இல்லை

**தம்பிமார், அண்ணன்மார், கொழுந்தியாமார்** - தம்பி, அண்ணன், கொழுந்தியாள்

**அவனாட்ட இருக்கே** – அவனைப் போல இருக்கிறதே

**எத்தாச்சோடு** – எவ்வளவு பெரியது

**வரலீன** – வரவில்லை என்றால்?

**அம்முணி** – பெண்ணைக் குறிக்கும் சொல்.

**மச்சாண்டர்** - கணவரின் அண்ணன்

**குச்சுக்கோ** – உக்காருங்க

**இத்தாச்சோடு** – மிகப்பெரிய

**உண்டுனா திங்காத** – அதிகமாக உண்ணாதே

**மதுரைத் தமிழ்**

**பயணம் பூரா அவுக புராணம்தான்** - பயணம் முழுக்க அவர்கள் வரலாறுதான்.

**ஒரே அக்கப்போரா போச்சு** – ஒரே உள்நாட்டுப் போராக உள்ளது

**இந்த லந்துதானே வேண்டாங்கிறது** - இந்தக் கிண்டல்தானே வேண்டாம் என்பது.

**குண்டக்க மண்டக்க** – குன்றுக்கும் மண்ணுக்குமான வேறுபாடு

**கொண்டேபுடுவேன்** - கொன்று போடுவேன்

**வெள்ளன வாங்கய்யா** – விடிகாலையில் வருக

**குமரித் தமிழ்**

மலையாளமும் தமிழும் கலந்த புது மொழிநடையைக் கேரள எல்லைப் பகுதியில் உள்ள இடங்களில் கேட்க முடியும்.

| | | |
|---|---|---|
| சைக்கிள சமட்டுதான் | - | சைக்கிளை மிதிக்கிறான் |
| மோனே மனசுல ஆச்சா? | - | மகளே மனதில் ஏறியதா? |
| அங்கோடி வந்துரும் | - | அந்த வழியாக வந்துவிடுக |
| வீடு அத்தம் | - | வீ கடைசி |
| அயந்துபோச்சி | – | மறந்து போயிற்று |
| அவிய | – | அவர்கள் |
| அன்னா பாத்தியளா? | – | அங்கே பார்த்தீர்களா? |
| இஞ்சோத்திருங்கோ | - | இங்கே வந்து அமர்க |
| உப்புக் குத்தி | – | கணுக்கால் |

## 3. மேடைத் தமிழ்

மேடைத் தமிழால் வளர்ந்த இயக்கம் எனத் திராவிட இயக்கத்தைச் சொல்வார்கள். மேடைத் தமிழ் சிந்தனைத் தமிழ், அறிவுத்தமிழ், அழகுத் தமிழ். சங்ககாலம்முதல் இலக்கிய விவாதங்கள் பொது அரங்குகளில் நடைபெற்றிருக்கின்றன. ஒரு தலைப்பு எடுத்து ஒட்டியும் வெட்டியும் பேசும் வழக்கம் ஈராயிரம் ஆண்டுகளாகத் தமிழில் உண்டு. திருக்குறளில் உள்ள இனியவை கூறல் சொல்வன்மை, அவையஞ்சாமை, அவையறிதல் ஆகிய அதிகாரங்கள் எவ்வாறு தமிழ்ப் புலவர்கள் அவையில் பேசினார்கள் என்பதை உணர்த்திற்று.

மறைமலையடிகள், திரு.வி.க., சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர், ம.பொ.சிவஞானம், ஜீவா, குன்றக்குடி அடிகளார், வாரியார் சுவாமிகள், புலவர் கீரன், பேராசிரியர்கள் அறிவொளி, சரஸ்வதி ராமநாதன், சாலமன் பாப்பையா, இளம்பிறை மணிமாறன், ஞானசம்பந்தன், தா.கு. சுப்பிரமணியம், நமச்சிவாயம், தெ. ஞானசுந்தரம், திண்டுக்கல் லியோனி, ராசா, பாரதி பாஸ்கர், பர்வீன் சுல்தானா போன்றவர்கள் மேடைப் பேச்சில் தங்களுக்கென்று தனி பாணியை வைத்துக் கொண்டு நேயர்களைக் கவர்ந்தனர்.

பேரறிஞர் அண்ணாதுரை, கலைஞர் மு. கருணாநிதி, நாவலர் நெடுஞ்செழியன், பேராசிரியர் க. அன்பழகன், வை.கோ., காளிமுத்து, தமிழ்க் குடிமகன், சம்பத், மதியழகன், ஆசைத் தம்பி போன்றோரின் தெள்ளு தமிழ் மேடைப் பேச்சைக் கேட்கத் தமிழ்நாட்டு மக்கள் மேடைகள் முன்னர் காத்துக் கொண்டிருந்தனர்.

மேடைப் பேச்சால் தொல்காப்பியம் முதல் தொலைந்து போன படகுகள் வரை எல்லாவற்றையும் சுவைப்படப் பேசினர்.

பேரறிஞர் அண்ணாவுக்காக மக்கள் இரவு பத்து மணிக்கு மேலாகக் காத்துக் கொண்டிருந்தனர். தேர்தல் கெடுபிடிகள் அதிகம் இருந்த நேரம், காத்திருந்த மக்களை ஏமாற்ற அண்ணா விரும்பவில்லை. அதே சூழலில் அந்த இரவில் அதிகம் பேசவும் இயலாது. அண்ணா அதை நுட்பமாகக் கையாண்டார்.

**“மாதமோ சித்திரை**
**மணியோ பத்தரை**
**உங்கள் கண்களிலோ தழுவுவது நித்திரை**
**ஆனாலும்**
**எங்களுக்கு மறவாமல் இடுவீர் முத்திரை”**

என்று சுருக்கமாக உருக்கமாக அண்ணா பேச சபை கைதட்டி மகிழ்ந்தது. பெரியாரின் மொழி நடை இயல்பானது. சவுக்கு போன்று சுழன்று அடிப்பது. உண்மையைப் பளிச்சென்று சொல்வது.

கலைஞரின் மேடைப் பேச்சு பலாப் பழம் உண்பதுபோல் அழகானது. இரு பொருள்பட இலக்கிய வரிகளோடு அவர் பேசப் பேசத் தொண்டர்கள் கேட்டுக் கொண்டே இருந்தார்கள். கலைஞரின் ‘‘என் இனிய உடன்பிறப்பே’’, ‘‘எம்.ஜி.ஆரின் ரத்தத்தின் ரத்தமே’’ போன்ற சொற்றொடர்கள் கேட்டவுடன் மக்கள் ஆர்ப்பரித்தார்கள்.

## 4. அயல்நாட்டாரின் தமிழ்

சமயப் பணியாற்ற வந்த அயல்நாட்டார் தமிழுக்குச் செய்த தொண்டு அளப்பரியது. அகராதி, மொழிபெயர்ப்பு, திறனாய்வு, நாட்டுப்புறவியல், பழமொழிகள் தொகுப்பு என்று தழிழுக்கு அயல்நாட்டினர் தொண்டாற்றினர்.

**என்றிக்கே என்றீக்கசு**

போர்த்துக்கல் நாட்டிலிருந்து தமிழ்நாடு வந்து (1556-1600) வேம்பாறு, கன்னியாகுமரி, மணக்குடி, மன்னார், புன்னைக் காயல் போன்ற இடங்களில் வாழ்ந்தவர். 'தம்பிரான் வணக்கம்' என்ற முதல் தமிழ் நூலை 1578-ல் அச்சேற்றினார். அடியார் வரலாறு எழுதியவர் அவரே.

**தத்துவ போதகர்**

இத்தாலி நாட்டின் உரோமை நகரில் 1577-ல் பிறந்த இராபர்ட் தெ. நோபிலி எனும் தத்துவ போதகர் 1605-1656 காலகட்டங்களில் மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், மயிலாப்பூர் போன்ற ஊர்களில் வாழ்ந்தவர். கிறித்தவ இறையியலைத் தமிழில் தந்தவர். 'ஞானோபதேசம்' 'கடவுள் நிர்ணயம்' போன்ற நூல்களை எழுதியவர் இவரே.

**வீரமாமுனிவர்**

1680-ல் இத்தாலி நாட்டின் காஸ்திலியோனே தெல்லெ ஸ்டிவயரேவில் பிறந்த கான்ஸ்டான்டியஸ் ஜோசப் பெஸ்கி, 1710-1747 ஆண்டுகளில் காமநாயக்கன்பட்டி, கயத்தாறு, ஆவூர், ஏலாக் குறிச்சி, அம்பலக்காடு ஆகிய இடங்களில் வாழ்ந்தவர். செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம், சதுரகராதி, தேம்பாவணி, பரமார்த்த குருவின் கதை ஆகிய நூல்கள் படைத்தவர்.

**சீகன்பால்க்**

செருமனியின் புல்ஸ்நிட்ஸ் ஊரில் 1683-ல் பிறந்தவர். 1706-1719 வரை தரங்கம்பாடியில் வாழ்ந்தவர். தமிழ் மருந்துகள் பற்றிய ஆய்வுகள் நடத்தினார்.

**எல்லீசர்**

ஃபிரான்சிசு உவைட் எல்லிசு எனும் அறிஞர் 1778-ல் இங்கிலாந்தில் பிறந்து 1796-1819 வரை பிரித்தானிய கிழக்கிந்தியக் கம்பெனியின் நிர்வாகப் பொறுப்பில் இருந்தார். திருக்குறளின் முதல் 12 அதிகாரங்களையும் ஆங்கிலத்தில் பெயர்த்து விளக்கவுரை எழுதினார். அரிய தமிழ்ச் சுவடிகளைச் சேகரித்தார்.

**இராபர்ட் கால்டுவெல்**

வடக்கு அயர்லாந்தின் கிளாடி நகரில் 1814-ல் பிறந்தவர் கால்டுவெல். இடையன்குடியிலுள்ள சாயர் புரத்தில் வாழ்ந்தார். ‘திருநெல்வேலி மாவட்ட வரலாறு’ எனும் நூலை 1881-ல் வெளியிட்டார்.

**இரேனியஸ்**

மேற்கு புருஸ்ஸியாவில் 1790-ல் பிறந்தவர். 1814-1838 வரை தரங்கம்பாடியிலும் திருநெல்வேலியிலும் வாழ்ந்தவர். விரிவான தமிழிலக்கண நூலை ஆங்கிலத்தில் வெளியிட்டார்.

**ஜி.யு. போப்**

24.04.1820-ல் கனடாவில் பிறந்தவர். தமிழ்நாட்டில் 40 ஆண்டு காலம் தமிழுக்குச் சேவை செய்தவர். திருக்குறள், நாலடியார், திருவாசகம் ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். புறப்பொருள் வெண்பா மாலை, புறநானூறு, திருவருட்பயன் போன்ற நூல்களைப் பதிப்பித்தார்.

## 5. அறிவியல்

அறிவியல் என்பது இயற்கை மற்றும் சமூக நிகழ்வுகளைப் புரிந்து கொள்வதற்கும், அதை அடிப்படையாகக் கொண்டு தொழில் நுட்பங்களை உருவாக்குவதற்கும் பயன்படுத்தப்படும் ஒரு முறை. இது ஒரு கருதுகோளை முன்வைத்து, நிகழ்வுகளைப் பார்த்து, தரவுகளை சேரித்து, பரிசோதனை செய்து முடிவுகளை எடுப்பதன் மூலம் பொதுவானக் கோட்பாடுகளை உருவாக்குவதாகும்.

## 5. ஊடகங்கள் (அச்சு ஊடகம், மின் ஊடகம்)

### 1. ஊடகங்கள் (ஆநனயையள)

தகவல் தொடர்பில் ஊடகங்கள் என்பது தகவல்களைச் சேமித்து வழங்கப் பயன்படுத்தப்படும் கருவிகளாக உதவுகின்றன. இது வெகுஜன தகவல்தொடர்பு வழியாக அதிக பார்வையாளர்களை சென்றடையும் ஊடகங்களின் பல்வேறு வரிசைகளை உள்ளடக்கியது. ஒளிபரப்பு ஊடகம் திரைப்படங்கள், வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்கள் மூலம் மின்னணு முறையில் தகவல்களை அனுப்புகிறது.

### 2. அச்சு ஊடகம் (ீசலைெ ஆநனயை)

அச்சு ஊடகம் என்பது தகவலை நூல்கள், நகைச்சுவைத் துணுக்குகள், இதழ்கள், செய்தித்தாள்கள், குறுநூல்கள், படங்கள் ஆகியவற்றால் பரப்புவதாகும். அச்சு ஊடகத்தில் புழக்கத்தில் உள்ள ஊடகங்களைக் குறிக்கிறது. அவர்கள் செய்தித்தாள்

விற்கும் சிறிய சமூகங்களிலிருந்து புத்தகங்கள் விற்கும் பெரிய பதிப்பகங்கள் வரை இதைக் கொண்டு செல்கின்றனர். செய்தித்தாள்கள் அச்சு ஊடகத்தின் கீழ் வருபவையாகும்.

அச்சு ஊடகம் நம்பகத்தன்மை வாய்ந்தது. மேலும் விளம்பரங்களுக்கு ஒரு வலுவான தளத்தை வழங்குகிறது. குறிப்பாக வாடிக்கையாளர்கள் தொடர்ந்து வாங்கும் தயாரிப்புகளுக்கு ஊக்கம் ஊட்டுகின்றன.

**மின் ஊடகம்**

மின் ஊடகம் என்பது, மின்சாரம் மூலம் இயங்கும் ஊடகங்களைக் குறிக்கும். இதில் வானொலி, தொலைக்காட்சி, இணையம் போன்ற ஊடகங்கள் அடங்கும். இவை அனைத்தும் தகவல்களை வழங்குவதற்கும், மக்களுடன் தொடர்பு கொள்வதற்கும் பயன்படுகின்றன.

## 7.இதழியல்

நமது நாட்டில் நாடாளுமன்றம், நிர்வாகத்துறை, நீதித்துறை ஆகிய மூன்று துறைகளோடு பத்திரிகைத்துறையையும் வலிமையான நான்காவது பிரிவாகக் கருதலம். இப்பத்திரிகைத்துறை சுதந்திரத்தோடும், நேர்மையாகவும், பொறுப்பாகவும் செயல்படும்பொழுது மக்களின் நலன் பாதுகாக்கப்படுகிறது எனலாம். எனவேதான் வாள்முனையை விடப் பேனாமுனை கூர்மையானது எனப் போற்றப்படுகிறது

**இதழ்களின் பணிகள்:**

1. செய்திகளை மக்களுக்கு அறிவித்தல்
2. மக்களுக்கு நல்லன கூறி அறிவுறுத்தல்
3. மக்களை மகிழ்வித்தல்
4. வாணிபம் செய்தல்
5. நடுவுநிலை நிற்றல்
6. பண்பாடு காத்தல்

முதலான பல பணிகள் இதழ்களுக்கு உள்ளன.

**இதழ்களின் வகைகள்:**

நாளிதழ்கள், பருவ இதழ்கள் என அவை வெளியிடம்படும் காலத்தின் அடிப்படையில் இருவகைப்படும்.

**நாளிதழ்கள்:**

காலை இதழ், மாலை இதழ் என இருவகைப்படும்.

**பருவஇதழ்:**

1. வார இதழ்
2. திங்கள் இருமுறை இதழ்
3. திங்கள் இதழ்
4. காலாண்டு இதழ்
5. அரையாண்டு இதழ்
6. ஆண்டு இதழ்

என ஆறுவகைப்படும்.

**இதழ்களின் தரப் பிரிவுகள்:**

தரத்தின் அடிப்படையில் இதழ்களை

1. தரமான இதழ்கள்
2. மக்கள் இதழ்கள்
3. நச்சு இதழ்கள்

என மூன்று வகைப்படும்.

**இதழ்களின் உள்ளடக்கப் பகுப்பு:**

இதழ்களின் உள்ளடக்கம் பல வகைப்படும. குமுதம், ராணி, கல்கி முதலானவை பொழுதுபோக்கு இதழ்கள். ஜனசக்தி, திராவிடநாடு முதலானவை அரசியல் இதழ்கள். செந்தமிழ்ச் செல்வி, எழுத்து, ஞானரதம் முதலானவை இலக்கிய இதழ்கள். முல்லைச்சரம், குயில் முதலானவை கவிதை இதழ்கள். கோகுலம், அம்புலிமாமா ஆகியவை சிறுவர் இதழ்கள். இவைபோக அறிவியல், மருத்துவம், கல்வி, மகளிர், தொழில், கொள்கை, வணிகம், விளையாட்டு, சோதிடம், சமயம், திரைப்படம், மொழிசார்பான பலவகை உள்ளடக்கங்கள் கொண்ட இதழ்கள் இருக்கின்றன.

**பத்திரிகைச் சுதந்திரம்**:

விடுதலை பெற்ற இந்தியாவில் பத்திரிகைகள் சுதந்திரமாகச் செயல்பட முடிந்தது. எனவே அவை வேகமாக வளர்ந்தன. ‘கண்ணுக்குப் புலப்படாத முழுமையான சுதந்திரத்தோடு பொறுப்பு, கடமை, என்பனவும் இணைந்திருக்க வேண்டும்’ என்று ஜவகர்லால் நேருவின் கூற்றும் இத்துடன் உடன் எண்ணத் தக்கது.

**பத்திரிகைச் சட்டங்கள்:**

பத்திரிகையில் வெளியாகும் செய்தி உரியவருக்கு அவமதிப்பாக இருக்குமாயின் அவர் பத்திரிகை மீது அவமதிப்பு வழக்கு தொடர வாய்ப்பு உள்ளது. இத்தகைய அவமதிப்பிற்குக் காரணமானவர்கள் மீது இந்திய தண்டனைச் சட்டம் 500-ஆம் பிரிவின்படி இரண்டாண்டுகள் வரை சிறைத்தண்டனையோ அபராதமோ அல்லது இரண்டுமோ

கொடுக்கலாம். பொதுச்சட்டத்தின்படி மான இழப்பு வழக்குத் தொடர்ந்தவர் இழப்பீடு பெற முடியும்.

இதைப்போல நாடாளுமன்ற நடவடிக்கைகள் சட்டம், நீதிமன்ற அவமதிப்புச் சட்டம், அலுவலக இரகசியங்கள் சட்டம், பத்திரிகை, புத்தகங்கள் பதிவுச் சட்டம், ஆபாச வெளியீட்டுத் தடைச் சட்டம், பதிப்புரிமைச் சட்டம், இளைஞர் தடைச் சட்டம், அஞ்சல் தந்திச் சட்டங்கள், பணிசெய் இதழியலாளர் சட்டம் எனப் பத்திரிகை தொடர்பாகப் பல சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. அவற்றின் நிறை, குறைகளைக் கண்டுணர்ந்து காத்துக் கொள்வது பத்திரிகையாளர்களின் கடமை.

**செய்தித்தாள் நிர்வாக அமைப்பு:**

பத்திரிகையை வெற்றிகரமாக நடத்துவது என்பது பெரிய கலை. தனிமரம் தோப்பாக முடியாது. ‘இணைந்த கரங்களால் இணையற்ற வளர்ச்சி’ என்பதனை பத்திரிகைகள் கொள்கையாகக் கொள்ள வேண்டும். ஒரு சிலர் மட்டும் சேர்ந்து பத்திரிகையை நடத்திவிட முடியாது. பத்திரிகைத் துறையில்

1. ஆசிரியர் பிரிவு
2. வாணிபப் பிரிவு
3. இயந்திரப் பிரிவு
4. வளர்ச்சிப் பிரிவு
5. புள்ளிவிவரப் பிரிவு
6. நிர்வாகப் பிரிவு

எனப் பல பிரிவுகள் சேர்ந்து செயல்படும்.

**செய்தி வகைகள்:**

மக்கள் செய்திகள், கல்விச் செய்திகள், அரசுச் செய்திகள், நீதிமன்றச் செய்திகள், சட்டப் பேரவை, நாடாளுமன்ற நிகழ்வுகள், பொதுக் கூட்டங்கள், அறிவியல், பொருளாதார, விளையாட்டுச் செய்திகள் முதலான வாழ்வியலின் ஒவ்வொரு நிகழ்வுகமும் பத்திரிகைகளுக்குச் செய்திகளாகின்றன.

இச்செய்திகளை முதலில் தரவுகளாகத் திரட்டுவர். அதன் பின்னர் வகைப்படுத்துவர். வரலாற்றுப் பின்புலத்துடன் தரவேண்டிய செய்திகளை அதற்கேற்ற பின்புலத்தோடு தயாரிக்க வேண்டும். உள்நாட்டுச் செய்தி, வெளிநாட்டுச் செய்தி, உலகத் செய்திகளுக்கு ஏற்ற பகிர்வுகளையும் ஆழத்தையும், செய்திகளுக்கு வழங்க வேண்டும். உரிய இடங்களில் ‘நேர்காணல்’ நிகழ்த்தியிருக்க வேண்டும். ‘புலனாய்வு’ புரியவேண்டிய

இடங்களில் அதற்குரிய ஆட்கள், பொருள்கள், பாதுகாப்புடன் புலனாய்வு மேற்கொண்டிருக்க வேண்டும்.

தரும் செய்திகளைப் புகைப்படம் மூலம் வெளிக்கொணர வேண்டும். நகைச்சுவைத் துணுக்குகள், கேலிச்சித்திரங்கள், கருத்துப்படங்கள், படக்கதைகள் எனப் பல கோணங்களிலும் பத்திரிகைப் பரிமாணம் செய்து உரிய சீர்மையில் செய்திகளை வெளிக்கொணர்ந்து வெற்றிநடை போடவேண்டும்.

**செய்திக் கட்டமைப்பு:**

செய்திக்கு தலைப்பு, முகப்பு, உடல்பகுதி என முப்பெரும் பிரிவுகள் உண்டு. பத்திரிகை ஆசிரியருள்ளும் ஆசிரியர், செய்தி ஆசிரியர், துணையாசிரியர் எனப் பலர் இருப்பர்.

**இதழியல் தமிழறிஞர்கள்:**

பாரதியார், திரு.வி.க. சி.பா. ஆதித்தனார், கல்கி, எஸ்.எஸ். வாசன், வல்லிக்கண்ணன் முதலானோர் பத்திரிகைத் துறையில் குறிப்பிடத்தக்க தமிழ்ச் சான்றோராவர். பேராசிரியர் முனைவர். ஜே.ஆர்.இலட்சுமி அவர்கள், பெண்கள் முன்னேற்றத்தில் ‘சுமங்கலி இதழ்களின் பங்கு’ என்னும் தலைப்பில் நூல் எழுதியுள்ளார்.

## 8. திரையியல்

**திரைப்படம்**

19-ம் நூற்றாண்டின் வலிமையான ஊடகமாகத் திரைப்படம் திகழ்ந்தது. தொடக்க காலத்தில் கருப்பு வெள்ளைப் படங்களும், திக்கற்ற பார்வதி போன்ற பேசாத ‘ஊமைப் படங்களும்’ வந்தன. வளர்ந்து வரும் தொழில் நுட்பங்களினால் வண்ணத்திரைப் படங்களாகி வெள்ளித்திரையாக விளங்கிவருகின்றது. ஆரம்ப நாட்களில் ‘வீரபாண்டிய கட்ட பொம்மன்’ முதலான வரலாற்றுப் படங்கள் சுதந்திர எழுச்சியை ஊட்டும் ஊடகமாகத் திரைப்படங்கள் எழுந்தன. பாரதியார், பாரதிதாசன் பாடல்களைப் பாமரர்களும் அறிவதற்கான களனாகவும் இருந்தது. ‘பள்ளியில் தூங்கியவன் கல்வி இழந்தான்’ எனப் பள்ளி மாணவர்களுக்குப் பாடம் புகட்டும் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் பாடல்கள் வாயிலாக கல்விப் புலத்திற்கு உதவவும் உறுதுணையாகவும் திரைப்படம் இருந்தது. மெல்ல மெல்ல காதல் படங்கள், மசாலா படங்கள், சண்டைப் படங்கள் அந்த இடத்தைக் கைப்பற்றிக் கொண்டன.

## 9. வானொலி

வானொலியை கண்டுபிடித்தவர் மார்க்கோனி. காதால் மட்டும் கேட்கும் வகையில் மட்டும் அமைக்கப்பட்டிருப்பது வானொலிச் செய்திகள், வயலும் வாழ்வும்,

ஒலிச்சித்திரங்கள், திரையிசைப் பாடல்கள், சான்றோர் சிந்தனைகள், வானொலி நாடகங்கள், நேர்காணல்கள் முதலான நிகழ்ச்சிகள் வானொலியில் ஒலிபரப்பப்படுகின்றன.

தொலைக்காட்சிகள், தொலைக்காட்சித் தொடர்கள், கணினிப் பயன்பாடு ஆகியவற்றால் வானொலி ஓரளவு மக்களால் மறக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பார்வையற்றோருக்கு வானொலி வரப்பிரசாதமாகவே இன்றும் இயங்குகிறது எனலாம்.

**வானொலியின் வசந்தகாலம்**

காதுகளை கண்களாக்கிப் பார்க்கவைத்த பெருமை வானொலிக்கு உண்டு. கம்பீரமான குரல்களின் காதலனாய்க் காதுகளை ஆக்கிய பெருமையும் வானொலிக்கு உண்டு. பழையகாலத்து வானொலிபெட்டி ட்ரங்கு பெட்டி மாதிரி பெரிதாக இருக்கும். காலை ஆறுமணிக்கு நிகழ்ச்சி கேட்க வேண்டுமானால் ஐந்தரைக்கே அதை அவர் தயார் செய்ய வேண்டும். வலதுபக்கத்தில் இருக்கும் குட்டிபல்பு எரிந்து ‘‘சொய்ங்கென்று’’ சத்தம் எழுப்பியபடிப் பாட ஆரம்பிக்கும். துணிகாயப்போடும் கம்பிமாதிரி நீண்ட ஏரியல்கூட அதில் இருக்கும்.

டெல்லி அஞ்சலில் ஒலிபரப்பாகும் இந்துஸ்தானி இசையை அதில் கரகரப்பாய் கேட்கும்போது வித்யாசமாய் இருக்கும். சில நேரங்களில் சித்தார் இசைகூட அதில் கேட்டிருக்கிறோம்.

சித்தப்பா ஒரு ரகமென்றால் அப்பா இன்னொரு ரகம். டெல்லி செட்டில் அவரால் வந்தே மாதரம் கேட்காமல் அன்றும் இன்றும் என்றும் அவரால் ஒரு நாளின் காலையை தொடங்கமுடியாது. வநதே மாதரம் போடும்போததே, அப்பா நெல்லை வானொலியைக் கேட்க ஆயத்தமாகி விடுவார். சூரியன் உதித்தும் உதிக்காமலும் இருக்கும் அந்தக் கருக்கலோடு இயைந்த அந்தக் காலைவேளை வானொலியின் மங்கல இசை கேட்கும்போது கொஞ்சம் கொஞ்சமாய் பிரகாசமாவதாய் தோன்றும். நெல்லை வானொலியின் சான்றோர் சிந்தனை தினமும் அப்பாவுக்குப் பிடித்தமானது.

நாகூர் அனிபாவின் ‘‘இளைவனிம் கையேந்துங்கள்…’’ பாடல், பி.சுசிலாவின் ‘‘தாமரைப்பூவில் அமர்ந்தவளே…’’ பாடல், ‘‘கேளுங்கள் கொடுக்கப்படும்…’’ பாடல், இளையராஜாவின் ‘‘ஜனனி ஜனனி’’ பாடல் என்று காதுகள் வழியே கனிவைப் பிழிந்து ஊற்றிட நெல்லை வானொலியால் முடிந்திருக்கிறது. அப்போது தென்கச்சி சுவாமிநாதனின் இன்று ஒரு தகவல் பிரவலம், அப்பா காலையில் அதைக் கேட்கவைத்துவிடுவார்.
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், வி. வித்பாரதியின் வர்த்தக ஒலிபரப்பு, பிபிசியின் தமிழோசை, ஆல் இந்தியா ரேடியோவாயிருந்து ஒருநாளில் அகில் இந்திய வானொலியாய்

மாறிப்போன நம்மூரு வானொலி வரை அத்தனை வானொலிகளும் எங்கள் காதுகளுக்குச் சாமரம் வீசின.

இலங்கை வானொலியின் மயில்வாகனம், கே.எஸ். ராஜா, ராஜே'வரி சண்முகம், பி.உ.ச். அப்துல் ஹமீது, விமல் சொக்கநாதன், சில்வெஸ்டர் பாலசுப்ரமணியம், கமலினி செல்வராஜன், எழில் வேந்தன் ஆகியோரைக் கடல் கடந்தும் காதுகள் இன்றும் நினைவில் வைத்திருக்கின்றன.

''பிறந்தநாள் இன்று பிறந்தநாள்'' என்று அழகாக இலங்கை வானொலியால் பிறந்தநாள் வாழ்த்துச்சொல்ல முடிந்தது. வாழ்த்தும் அன்பு நெஞ்சங்கள் பட்டியலில் சித்தப்பாமார், பெரியப்பாமார், மாமன்மார், மாமிமார் என்று வாசிக்க முடிந்தது. வானொலிக்கு நாடுகளின் எல்லை ஏது? பேதம்ஏது? யார் பிறந்தநாள் வாழ்த்தைக் கேட்டாலும் அறிவிப்பாளர்கள் அறிவிக்கும் உற்சாகத்தில் நமக்கே பிறந்தநாள் வந்ததைப்போல் உணர்ச்சிப்பூர்வமாக வாசிப்பார்கள். அப்படி ஒரு காந்தக்குரல் அவர்களுக்கு! பேசும்போதே அவர்களால் பாடி நடிக்க முடிந்தது. முப்பது ஆண்டுகளுக்கு முன் வந்த பாடலை இசையமைப்பாளர், பாடலாசிரியர், பாடகர் பட்டியலோடு நினைத்த மாத்திரத்தில் அவர்களால் சொல்ல முடிந்தது.

அகில இந்திய வானொலியும் சளைத்ததல்ல... செய்திகள் வாசிப்பவர் (ரொம்ப காலம் வரை வாசிப்பதுதான்) சரோஜ்நாராயண் சுவாமி என்ற அந்தக் கரகரப்பான காந்தக்குரலையும் எண்பதுகளில் எங்கள் காதுகள் காதலித்த காலகட்டம் அது. இன்றுள்ளதுபோல் இணையவசதிகள் இல்லாத காலகட்டத்தில் ஜி. ராமநாதன், தர்சன் விஸ்வநாதன் ராமமூர்த்தி, கே.வி. மகாதேவன், இளையராஜா என்று திரையிசை ஜாம்பவான்களை உலகம் முழுக்கக் கொண்டு சென்றது வானொலிதானே!. கவியரசர் கண்ணதாசனின் வரிகள் பட்டிதொட்டியெல்லாம் ஒலிக்கக் காரணம் வானொலிதானே!

''சொப்பன வாழ்வில் மகிழ்ந்து, நிலவே என்னிடம் மயங்காதே, மலர்ந்தும் மலராது, பிறக்கும்போதும் அழுகின்றாய். கண்கள் எங்கே நெஞ்சமும் அங்கே, மாலைப் பொழுதின் மயக்கத்திலே, மயக்கமா கலக்கமா? மனதிலே குழப்பமா? நான் பெற்ற செல்வம் நலமான செல்வம், நிலவே என்னிடம் நெருங்காதே, முல்லைமலர் மேலே, நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால், நான் மலரோடு தனியாக ஏன் அங்னு நின்றேன். உள்ளத்தில் நல்ல உள்ளம், மாசிலா உண்மை காதலே, மடிமீது தலைவைத்து விடியும்வரை தூங்குவோம், அமுதைப் பொழியும் நிலவே, அன்னக்கிளி உன்னைத் தேடுதே, பனிவிழும் மலர்வனம் என்று போட்டிப் போட்டுக்கொண்டு நம் வானொலியும், இலங்கை வானொலியும் ஒலிபரப்பிய பாடல்களை மறக்கமுடியுமா?'' உனக்கும் கீழே உள்ளவர் ''கோடி நினைத்துப் பார்த்து

நிம்மதி தேடு'' என்ற கண்ணதாசனின் கவிதைவரி கடைக்கோடிப் பகுதியில் வாழும் பாட்டாளியின் மனதில் நம்பிக்கையை விதைத்ததே எப்படி?

விளம்பரங்களையும் இசையோடு வானொலி தந்ததை மறக்கமுடியுமா? கோபால் பல்பொடி விளம்பரம், பொன்னான புதிய ரக்சோனா விளம்பரம், பாண்ட்ஸ் விளம்பரம், ஹோர்லிக்ஸ் விளம்பரம் என்று வானொலி தந்த விளம்பரங்கள் இன்றும் நீங்கா நினைவுகளின் படிக்கட்டுகளில் கம்பீரமாய் அமர்ந்திருப்பதை அழிக்க முடியுமா?

எத்தனையோ முகம்தெரியா வானொலிக் கலைஞர்களின் ரசகனாய் மாற்றியதும் வானொலிதான். வானொலி கேட்கும் பழக்கத்தை அப்பாதான் ஆரம்பித்து வைத்தார். அப்பாவின் வானொலிப்பெட்டி அவர் முப்பதாண்டுகளுக்கு முன் புதுடெலலிக்கு இன்பச்சுற்றுலா போனபோது வாங்கி வந்தது. வாங்கிய புதிதில் அப்பா அதைத் தொடக்கூட விடமாட்டார். லெதர் பேக் கடையில் அதற்குத் தோலில் சட்டை வேறு.

தெளிவான அழுத்தமான தமிழ் உச்சரிப்பை நான் கற்றுக் கொண்டது தமிழாசிரியரான என் தந்தையாருக்கு அடுத்து வானொலி அறிவிப்பாளர்களிடம்தான். கிண்டல் மிளிரும் கிராமத்துப் பாமரரின் குரலில் தென்கச்சியாரின் இன்று ஒரு தகவல், இரவின் இனிமையில் தவழும் இந்துதாய் இசை, எம்.எஸ் அம்மாவின் குறையொன்றும் இல்லை பாடல், வாரியார் சுவாமிகளின் ஆன்மீகச் சொற்பொழிவுகள், ஏற்ற இறக்கத்தோடு கம்பராமாயணம் பேசிய புலவர் கீரன் குரல், எம்பார் விஜய ராகவாச்சாரியார் கதாகாலட்சேபம், இளம்பிறை மணிமாறன், சரஸ்வதி ராமநாதன் என்று குரலில் தேன்தமிழைத் தடவித்தந்த நூற்றுக்கணக்கான வெண்கலத் தொண்டைகளுக்கு என் காதுகளைத் தானமாகத் தந்துள்ளேன்.

செய்திகள் வாசிப்பது சரோஜ்நாராயண்சுவாமி என்று டெல்லி செய்தியறிக்கை தரும் அந்தக் காந்தக் குரலுக்காகக் காலை ஏழுமணியிலிருந்தே வானொலிப்பெட்டியின் முன் தவம் கிடந்த நாட்கள் உண்டு. இடையிடையே நிறுத்தி அவர் மூச்சு வாங்க எடுத்துக்கொள்ளும் அவர் பாணி வித்தியாசமானது. சில நாட்களில் அவர் செய்தி வாசிக்கும்போது நகர்த்தும் பேப்பர் சத்தம் கூடத் தெளிவாய் கேட்கும். நான் நெல்லை வானொலியில் சிறுவர்குரலில் நேயர்கடிதம் வாசித்ததை அப்பா சேவியர் பள்ளிமுழுக்கத் தன் மாணவர்களிடம் சொல்லி மகிழ்ந்தது இன்றும் நினைவில் இருக்கிறது.

நாம் பார்க்கும் வேலையில் எந்தத்தடையும் இன்றி வானொலி கேட்டபடி நம்மால் நம் வெலையைத் தொடரமுடியும். சைக்கிள் பஞ்சர் ஒட்டும் கடையில், தேநீர்க் கடையில், பலசரக்குக் கடையில் எப்படியும் வானொலிக்கு ஒரு இடம் கிடைத்தது இப்படித்தான்.

இன்று செல்பேசிகளில் டிஜிட்டல் ஒலிபரப்பில் நூற்றுக்கணக்கான பண்பலைகள் ஒலிபரப்பானாலும் ஏதேனும் ஒன்று நினைவில் நிற்கிறதா? காதுகளின் காதலர்கள் மறைக்காமல் சொல்லட்டும். நினைத்துப்பார்க்கிற யாவும் உணர்வின் வேரை, உயிரின் வேரை நனைத்துப் பார்க்கத்தானே செய்யும். கனத்த பெட்டிக்குள் காதுகளின்றி அடைபட்டுக்கிடக்கிறது காவியமாய் ஒலித்த அந்தக்கால வானொலி.

## 10 தொலைக்காட்சி

கண்ணையும் கருத்தையும் கவரும் திரைப்படத்திற்கு எதிராகத் தோன்றியதைப் போல் தோற்றம் காட்டி திரைப்படத்துறையினரைக் கிளர்ச்சி செய்யவைத்த ஊடகம் தொலைக்காட்சி. இன்று திரைப்படத்துறையினரின் ஊடுருவல் ஊடகமாகவும் தொலைக்காட்சி விளங்குகிறது. தொடக்கத்தில் அரசாங்கத்தினரால் மட்டும் டி.டி. மற்றும் பொதிகைச் சேவைகள் ஒளிபரப்பப்பட்டன. இன்று கலைஞர், சன், ஜெயா, ராஜ், விஜய், மக்கள் தொலைக்காட்சி எனப் பலப்பல தனியார் தொலைக்காட்சிகளின் படையெடுப்புகள் மிகுந்துள்ளன. சரித்திரத் தொடர்கள், நகைச்சுவைத் தொடர்கள், சிறுவர் தொடர்கள், மர்மத் தொடர்கள், மாயாஜாலத் தொடர்கள், அறிவுரை மற்றும் அறிவியல் தொடர்கள், குடும்பத்தொடர்கள், கல்வித் தொடர்கள், சமையல் தொடர்கள் என வாழ்வியலின் அனைத்து தளங்களையும் தொலைக்காட்சி தொடுகின்றது.

## 11. கணினி

**மின்னணு அஞ்சல்**

நுடநஉவழசழைஉ ஆயடை என்பதன் சுருக்கமே நு-அயடை என்பது. இதன் தமிழ் வடிவமே மின்னணு அஞ்சல். தொலைப்பேசித் தொடர்பு கட்டமைப்பின் வழியாக கணிப்பொறிகள் தகவல் பரிமாற்றம் செய்து கொள்வது மின்னணு அஞ்சல் எனப்படும். எழுத்துக்களால் ஆன உரை (வுநஒ) வடிவில் மின்னணு அஞ்சல் அமையும்.

ஒரே அலுவலகத்தில் உள்ள கிளைக் கணிப்பொறிகள் 'நோட்' (ழேவந) எனக் குறிக்கப்படும். தகவல்களைத் தரும் தலைமைக் கணிப்பொறியைச் சர்வர் (ளுநசஎநச) என்பர்.

கணிப்பொறி, தொலைபேசி டிஜிட்டல் சிக்னலாகச் செய்தியை அனுப்ப உதவும் மோடம் இம்மூன்றும் இருந்தால் வெளியூர்களுக்கு மின்னணு அஞ்சல் செய்ய முடியும்.

மன்னணு அஞ்சல் செய்தியைப் பெற்றுக் கொள்ள நாம் காத்திருக்கத் தேவையில்லை. ஆள் இல்லாத போதும் கணிப்பொறி வழியாக மின்னணு அஞ்சல் நமக்காகப் பதிவு செய்யப்பட்டிருக்கும். நேரம் வாய்க்கும் பொழுது கணிப்பொறியில் மின்னணு அஞ்சல்கள் ஏதேனும் பதிவாகி உள்ளனவா எனப் பார்த்துக் கொள்ளலாம்.

**பல்நோக்கு ஊடகம்:**

ஒரு சாதாரண கணிப்பொறியில் சி.டி. ரோம் டிரைவ், சவுண்டு கார்டு, ஒலிப்பெருக்கிகள், விண்டோஸ் முதலான செயல்பாட்டுத் திறன்களை இணைத்துவிட்டால் போதும். அது பல்நோக்கு ஊடகமாக மாறிவிடும். இப்பொழுது

1. உயிரோட்ட வரைபடங்கள் (யுெைஅயவழைெ)
2. ஒளிக்காட்சிப் படங்கள் (எனைநழ ிைஉவரசநள)
3. வரைகலை (புசயிாைஉள)
4. எழுத்து (வுநஒவ) ஒலி (ளுழரனெ)

ஆகிய ஐந்து வடிவங்களில் தகவல்களைப் பெற முடியும்.

இப்பொழுது உலகத் தகவல் களஞ்சியங்களைத் திரையில் காணலாம். நேருவும், காந்தியும் மேடையில் முழக்கியதைக் கணிப்பொறியில் இணைக்கப்பட்ட ஒலிபெருக்கி மூலம் கேட்டுப் புத்துயிர்ப்பு பெறலாம்.

இத்தகைய பல்நோக்கு ஊடகத் தகவல்களைத் தொலைத் தூரத்திலுள்ள வேறொரு கணிப்பொறிக்கு உலகளாவிய இணைய வலையத்தின் மூலமாகப் பரிமாற்றம் செய்ய இயலும்.

**12. செல்பேசி**

செல்போனை சரியாகப் புரிந்துகொள்ள அதை றுயடமநை – வயடமநைஇ ஊடீ சுயனழை போன்றவகை தொலைபேசிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். ஊடீ சுயனழை எனப்படுவது ஒரு சாதாரண எளிய சாதனம். இதில் இருவர் பேசிக் கொள்ளும்போது ஒரே அலைவரிசையைத் தான் பயன்படுத்துவர். இதனால் ஒரே சமயம் இருவர் பேச முடியாது. ஒருவர் மட்டுமே பேச முடியும். அதே சமயம் செல்போன் என்பது ஒரு னுரிடநஒ னுநஎஉைந. இது கேட்பதற்கு என ஒரு தனி அலைவரிசையையும் பயன்படுத்துகிறது. ஊடீ சுயனழை-வில் 40 சேனல்கள்தான் உள்ளன. ஆனால் ஒரு செல்போனில் 1664 சேனல்கள் உள்ளன. செல்போன்கள் செல்களால் இயங்குகின்றன. இந்தச் செல்களால் செல்போன்கள் நெடுந்தூரத் தகவல் பரிமாற்றத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

றுயடமநை – வயடமநை ஒரு மைல் தொலைவு வரை தொடர்புகொள்ள முடியும். ஊடீ சுயனழை அதிக செயல்திறன் கொண்ட 5 மைல்கள் வரை தொடர்பு கொள்ளலாம். அதே சமயம் நம் கையில் ஒரு செல்போன் இருந்தால் ஓர் ஊரைக் கடந்துசெல்லும் வரை இடைவிடாமல் பேசலாம். இதற்குக் காரணம் இதனுள் உள்ள செல்கள் தான். செல்போன் யுஅிள-யுனஎயஉெநன ஆழடிடைந ீழநெ ளுலளவநஅ என்கிற தரத்தின் அடிப்படையில் பிரிக்கப்படுகின்றன.

ஒரு நகரைச் சிறுசிறு செல்களாகப் பிரிக்கமுடியும் என்ற அடிப்படையைக் கொண்டே இதற்கு பயனுள்ள செல்லுலார் அமைப்பு உருவாக்கப்பட்டது. இப்படிப் பிரிக்கப்பட்ட ஒவ்வொரு செல்லுக்கும் ஒரு அடிப்படை நிலையம் உள்ளது. இதில் ஒரு வுழறநசஇ சயனழை சாதனங்கள் கொண்ட ஒரு சிறு கட்டடமும் இருக்கும். ஒரு செல்லாகப் பிரிக்கப்பட்ட நகரின் ஒரு பகுதியிலிருந்து ஒரே சமயம் ஏறத்தாழ 59 பேர் செல்போன் மூலம் பேச இயலும்.

செல்போன் இயங்கும் விதம் மிகவும் சுவாரஸ்யமானது. நம் கையில் ஒரு செல்போன் இருந்தால் அதை ஆன் (ழு) செய்தவுடன் நமக்கு ஓர் அழைப்பு வரும். இந்த அழைப்பு முதலில் செல்போன் நிறுவன அலுவலகத்திற்குச் சென்று அவர்களை நம் செல்போனுடன் தொடர்பு கொள்ள வைக்கிறது. பின்னர் நாம் பேசலாம். இப்படியும் பேசுவதற்கு, நம் செல்போன் அதற்கான டீயளந ளுவயவழைெ-னுடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

மேலும் செல்போனில் அடையாள எண்ணை யாராவது திருடி நம் கணக்கில் அழைப்புகள் செய்வதை ஊடழெைபெ என்று சொல்வார்கள். இது யயெடழப செல்போனில்தான் நடைபெறும்.

**13. இணையம்**

இண்டர்நே'னல் நெட்வொர்க் என்பதன் சுருக்கமே இண்டர்நெட். பல கணிப்பொறிகளை ஒரு மையக் கணிப்பொறியுடன் இணைத்துச் செயல்படுத்துவது இணையம் (நெட்வொர்க்) எனப்படும். ஓர் அறையில் அல்லது ஓர் அலுவலகத்தில் இந்த இணையச் செயல்பாடு நிகழுமாயின் அதனை டுயுே (டுழஉயட யுசநய நேசறழசம) எனக் குறிப்பிடுகின்றனர். வெவ்வேறு ஊர்களில் உள்ள ஒரு நிறுவனத்தின் கிளைகளை ஒரு மையக் கணிப்பொறியில் இணைப்பதனை றுயுே (றுனைந யுசநய நேவறநழம) என அழைக்கின்றனர். இணைய வலையில் விளம்பர வசதியும் உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

## 14. பிற மின்னணுக் கருவிகள்

**மின்னணு வணிகம்: (இ-காமர்ஸ்)**

இணைய வலை மூலமாக நடைபெறும் வணிகமே மின்னணு வணிகம் எனப்படும். குறிப்பிட்ட வெப்சைட் வாடகைக்கு எடுத்துக் கொள்ள முடியும். அந்த வெப்சைட்டில் நமக்குத் தேவையான விளம்பரங்களைச் செய்து கொள்ளலாம். எஞ்சியுள்ள பக்கங்களைப் பிறர் விளம்பரங்களுக்கு வாடகைக்கு விட்டும் பொருளீட்டலாம்.

**செயற்கைக்கோள்**

இந்தியா 1979 முதல் செயற்கைக்கோள் தகவல் தொடர்பைப் பயன்படுத்தி வருகின்றது. விண்ணில் செலுத்தப்பட்டு வலம் வரும் செயற்கைக் கோளின் வழியாக ஓரிடத்தில் இருந்து மற்றோர் இடத்திற்குச் செய்திகளை அனுப்ப இயலும். சர்வதேசத் தகவல் தொடர்புக்கு மட்டுமின்றி உள்நாட்டுத் தகவல் தொடர்புக்கும் செயற்கைக்கோள் பயன்படுத்தப்படுகிறது. 1981-ல் இந்தியா 'இன்சாட்-1யு' செயற்கைக் கோளை விண்ணில் வெற்றிகரமாகப் பறக்கவிட்டது. இதன்மூலம் தொலைதூரத்தில் இருக்கும் கா'மீா, மிசோராம், போர்ட்பிளேயர் முதலான இடங்கள் தகவல் தொடர்பு வசதியில் இணைக்கப்பட்டன. மேலும் இன்சார்-1இ, இன்சாட்-2, இன்வாட்-18 முதலான செயற்கைக் கோள்களை விண்ணில் வெற்றிகரமாக ஏவி இந்தியா பயன் நுகர்ந்து வருகின்றது.

**விசாட் தகவல் தொடர்பு:**

'ஏநசல ளுஅயடட யிநசவரசந வநசஅயைெட' (ஏளுயுவு) என்பதே 'விசாட்' எனக் குறிக்கப்படுகின்றது. மின்காந்த அலைகளின் வாயிலாகச் செய்திகளைச் சிக்னல்களாக அனுப்பவும் பெறவும் பயன்படும் ஆன்டெனாவின் ஒரு பகுதியே 'அபெச்சர்' என்பது. ஆன்டெனா மூலம் தகவல் பரிமாற்றம் செய்து தருவதற்கென நிலையங்கள் உள்ளன. அவை 'விசாட் நிலையங்கள்' எனக் குறிக்கப்படும்.

## 15. ஆளுமைகள்

ஆளுமை என்பது ஒருவர் உண்மையில் எப்படி உள்ளார் என்பதைவிட, அவர் மற்றவர்களுக்கு எப்படிக் காணப்படுகிறார் என்பதாகும். ஒவ்வொரு தனி மனிதனிடமும் ஆளுமை காணப்படுகிறது. ஆளுமை என்பது ஒருவனுக்கு ஏற்படும் தனித்தன்மையைக் குறிப்பிடுவதாகும். ஆளுமை (ீநசளழயெடவைல) என்ற ஆங்கிலச் சொல் ீநசளழயெ என்ற கிரேக்க மொழிச் சொல்லிலிருந்து உருவானதாகும்.

கில்போர்ட் என்பவர் ஆளுமைப் பண்பு என்பது ஒருவனது பண்புகளின் தனிப்பட்ட ஒழுங்கமைவு எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஆல்போர்ட் என்பவரின் கருத்துபடி, ஒருவர் அவருக்கே உரிய நடத்தை, சிந்தனை ஆகியவற்றை நிச்சயிக்கின்ற அவரது உளநிலை மற்றும் உடல் சார்ந்த அமைப்புகளின் மாறக்கூடிய கூட்டமைப்பு என்கின்றார்.

கேட்ஸ் என்பவரின் கருத்துப்படி தன்மைகளின் தொகுப்பு மட்டுமன்றி பண்புக் கூறுகளின் வடிவமைப்பாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## 16. வல்லுநர்கள்

வல்லுநர்கள் என்றால் ஒரு குறிப்பிட்ட துறையில் ஆழமான அறிவுத்திறன் மற்றும் மனப்பான்மை கொண்டவர்கள். அவர்கள் அந்தத் துறையில் நம்பகத்தன்மை வாய்ந்தவர்களாகக் கருதப்படுவர். எடுத்துக்காட்டாக வானியல் வல்லுநர்கள் விண்மீன்கள், கோள்கள், விண்வெளிக் கூறுகளைப் பற்றி ஆராய்ச்சி செய்பவர். சட்ட வல்லுநர்கள் சட்ட விதிகள் மற்றும் நடைமுறைகள் பற்றி ஆழமான அறிவு கொண்டவர்களாகக்காணப்படுவர்.

## 17. விருதுகள்

### 1. சாகித்ய அகாதமி விருது

12.03.1954 முதல் இந்திய அரசால் தொடங்கப்பட்ட அமைப்பே சாகித்திய அகாதமி. 24 இந்திய மொழிகளில் சிறுகதை, நாவல், இலக்கிய விமர்சனம் போன்ற எழுத்தாளர்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் இவ்விருது வழங்கப்படுகிறது.

### 2. யுவ புரஸ்கார்

படைப்பாற்றல் மிக்க இளம் படைப்பாளிகளை ஊக்கப்படுத்த இவ்விருது 2011 முதல் சாகித்ய அகாதமியால் 24 மொழிகளில் வழங்கப்படுகிறது. சனவரி 1-ம் தியதி அன்று 35 வயது அல்லது அதற்கு குறைவாக உள்ள இளம் எழுத்தாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

## 18. விருதாளர்கள் மற்றும் படைப்புகள்

1. கல்கி கிரு‛ணமூர்த்தி – அலை ஓசை
2. மு. வரதராசனார் - அகல்விளக்கு
3. பாரதிதாசன் - பிசிராந்தையார்
4. கு. அழகிரிசாமி – அன்பளிப்பு
5. அகிலன் - வேங்கையின் மைந்தன்
6. கண்ணதாசன் - சேரமான் காதலி
7. சி.சு. செல்லப்பா – சுதந்திர தாகம்
8. பூமணி – அஞ்ஞாடி
9. இன்குலாப் - காந்தன் நாட்கள்
10. திலகவதி – கல்மரம்
11. மலர்வதி – தூப்புக்காரி
12. ஆர். அபிலா‛ - கால்கள்
13. சபரி நாதன் – வால்

14. மு. தவசி – சேவல் கட்டு

15. வீரபாண்டியன் - பருக்கை

## 19. விருது வழங்கும் அமைப்புகள்

விருது வழங்கும் அமைப்புகள் என்பது ஒரு குறிப்பிட்டத் துறையில் சிறந்து விளங்கும் நபர்களை அல்லது குழுக்களை அங்கீகரிக்கும் அல்லது கவுரவிக்கும் அமைப்பு ஆகும்.

**அரசு அமைப்பகள்**

1. பாரத ரத்னா
2. பத்ம விருதுகள் போன்றவை

**பண்பாட்டு அமைப்புகள்**

1. சாகித்திய அகாதமி,
2. ஞான பீடம்

போன்றவை இலக்கியத்திற்காக வழங்குகின்றன.

**தொழில்முறை அமைப்புகள்**

1. ஆஸ்கார் விருது
2. கேன் திரைப்பட விழா விருது போன்றவை

**சர்வதேச அமைப்புகள்**

யுனெஸ்கோ, ஐக்கிய நாடுகள் சபை போன்றவை அமைதி, மனித உரிமை, கல்வி போன்றவைகளுக்காக வழங்குகின்றன.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | சிறுகதையின் தோற்றம் குறிதததெழுதுக. | K2 | CO2 | PO4 |
| 2 | நாடகத்தின் வளர்ச்சிநிலைகளைவிளக்குக. | K4 | CO3 | PO5 |
| 3 | தொலைக்காட்சியின் செயல்பாடுகள் யாவை? | K1 | CO4 | PO1 |
| 4 | ஆளுமைஎன்றால் என்ன? | K5 | CO5 | PO2 |
| 5 | அயலகத் தமிழ் இலக்கியங்கள் யாவை? | K3 | CO4 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | தாங்கள் அனுபவத்தைபயண இலக்கியங்கள் வழி ஆராய்க. | K1 | CO4 | PO4 |
| 2 | தகவல் தொடர்புசாதனங்களுள் இதழ்களின் பணியைவிளக்குக. | K4 | CO2 | PO6 |
| 3 | விருதுகள் விருதாளர்கள் குறித்துவிவரிக்க | K3 | CO1 | PO5 |
| 4 | தன் வரலாறு,வாழ்க்கைவரலாறுவேறுபடுத்துக. | K2 | CO5 | PO6 |
| 5 | தகவல் தொடர்புசாதனங்களுள் வானொலிபெற்றிருந்த இடத்தைவிவரி. | K4 | CO3 | PO3 |

# அலகு – 4 (ருஜேவு – ஐஏ)

## தேர்வுத் திட்டமும் பாடத்திட்டமும்

**5. தற்கால நிகழ்வுகள்**

**6. சமுதாயப் பிரச்சனைகள்**

**7. சுற்றுச்சூழல் தொடர்பான தலைப்புகள்**

**8. இந்தியப் பொருளாதாரம் தொடர்பானத் தலைப்புகள்**

**9. அறிவியலும் தொழில் நுட்பமும்**

**10. கலையும் பண்பாடும்**

**11. பகுத்தறிவு இயக்கங்கள்**

**12. இக்காலத் தமிழ்மொழி**

**13. தமிழ் நாட்டின் சமூகப் பொருளாதார முன்னேற்றம் மற்றும் தமிழக அரசின் நலத்திட்டங்கள்**

**14. சமூக நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதலில் சமூக சீர்திருத்த இயக்கங்களின் பங்கு**

**15. தமிழ் நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சியில் சமூக நீதி மற்றும் சமூக ஒற்றுமையின் பங்கு**

**16. சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக:**

1. பொருள் வேறுபாடு அறிதல்
2. பிரித்தெழுதுதல்
3. எதிர்ச்சொல்
4. எதிர்மறை வாக்கியம்
5. பிழை நீக்கி எழுதுதல்

**17. கொடுக்கப்படும் தலைப்புகளில் கட்டுரை எழுதுதல் (எ.கா.) திருக்குறள்**

அ) மதச்சார்பற்ற தனித்தன்மையுள்ள இலக்கியம்

ஆ) அன்றாட வாழ்வியலோடு தொடர்புத் தன்மை

இ) மானுடத்தின் மீதான திருக்குறளின் தாக்கம்

ஈ) திருக்குறளும் மாறாத விழுமியங்களும்

உ) சமூக அரசியல் பொருளாதார நிகழ்வுகளில் திருக்குறளின் பொருத்தப்பாடு

ஊ) திருக்குறளில் தனித்துவக் கோட்பாடுகள்

# அலகு – 4

## தேர்வுத் திட்டமும் பாடத்திட்டமும்

## போட்டித் தேர்வுகள் தமிழ்ப்பாடத் திட்டங்கள்

## பொதுத் தமிழ் பாடப் பகுதிகள்

## சிறப்புத் தமிழ் பாடப் பகுதிகள்

### 1. தற்கால நிகழ்வுகள்

தற்கால நிகழ்வுகளைச் சரியாக அறிந்து கொள்ள மாணவர்கள் நாள்தோறும் செய்தித்தாள்களை வாசிக்க வேண்டும். 24 மணிநேரச் செய்திச் சேனல்கள் நடத்தும் நடப்பு நிகழ்வுகள் குறித்த விவாத அரங்குகளைக் கவனிக்க வேண்டும். தமிழ், ஆங்கில நாளிதழ்களின் தலையங்கங்களைப் படித்து அதிலிருந்து மாணவர்கள் குறிப்பெடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். போட்டித் தேர்வுகளுக்கு உதவக் கூடிய (ஊளைடை ளுநசஎைஉநள ஊர்சுழுஆஜஊடுநுஇ ஊழஅிநவவைழைெ ளுரஉஉநளளஇ புநநெசயட மழெறடநனபந வுழனயலஇ நுஅிடழலஅநவெ நேறள போன்ற இதழ்களைத் தொடர்ந்து வாசித்து அதிலிருந்து குறிப்பெடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். பொது அறிவு, நடப்பு நிகழ்ச்சிகளை உடனுக்குடன் வழங்கும் இணையதளங்களைத் தினமும் வாசித்து குறிப்பெடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

**நடப்பு நிகழ்ச்சிகள்**

உலகளாவிய அளவில், தேசிய அளவில், மாநில அளவில் நடைபெறும் நடப்பு நிகழ்ச்சிகளைச் சரியான பின்னணியோடு தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

**சான்றாக**

உக்ரைன் மற்றும் ர்'யாவுக்கு இடையே ஏன் போர் ஏற்பட்டது? கிரிமியா எங்கே உள்ளது? பிப்ரவரி 24, 2022 அன்று ஐரோப்பாவில் நடந்த மிகப் பெரிய போர் என்று விமர்சகர்கள் ஏன் சொல்கிறார்கள்? தலை நகர் கீயவில் என்ன நடந்தது? ர்'ய அதிபர் விளாதிமிர் புதின் என்ன கூறினார்? நோட்டோ என்பது என்ன? 2015 ஆண்டு உக்ரைன் அதிபர் பெட்ரோ பொரொெ'ன்கோவுக்கும் ர்'யாவின் விளாதிமிர் புதினுக்கும் இடையில் கையெழுத்தான மின்ஸ்க் ஒப்பந்தம் எதைப் பேசுகிறது? – போர் நிறுத்த முயற்சிகள் ஏன்

பயனற்றுப் போயின? என்று தெளிவாக குறிப்பெடுத்துக் கொண்டால் யுக்ரேன் போர் பற்றி என்ன வினா கேட்கப்பட்டாலும் பதில் எழுத முடியும்.

டொனால்ட் டிரம்ப் இரண்டாவது முறை அமெரிக்க அதிபராக வெற்றி பெற்றதன் விளைவு இந்திய ஐ.டி. துறையில் என்னவாக இருக்கும்? அமெரிக்காவின் குடியேற்றம் மற்றும் வெளியுறவுத் துறைக் கொள்கைகளில் ஏதேனும் மாற்றம் வருமா? விவேக் ராமசாமி, எலான் மஸ்கிற்கு ஏன் முக்கியத்துவம்? இஸ்ரேல் அரபு நாடுகள் யாருக்குச் சாதகம்? இந்தியா, அமெரிக்க நட்புறவு எப்படி இருக்கப் போகிறது? என்பது பற்றி தெளிவாகத் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

## 2. சமுதாயப் பிரச்சனைகள்

**இளையோர் மது மற்றும் போதைப் பொருட்களுக்குப் பலியாதல்:**

இளையோரின் போதைப் பொருள் பயன்பாடு உலக அளவில் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. இளையோரின் போதைப் பழக்கம் வளர் இளம் பருவத்தில் அவர்களின் உடல் மற்றும் மனத்தைப் பெருமளவு பாதிக்கிறது. தாங்கள் செய்யும் தவறு வெளியே தெரிந்துவிட்டால் என்ன செய்வது? என்று தீவிர மன அழுத்தத்திற்கு ஆளாகிறார்கள்.

**மூத்தோரைக் காட்டிலும் இளையோர் அதிகம்**

பாமர மக்களிடையே போதைப் பொருள் பயன்பாடு குறித்த ஐக்கிய நாடுகளின் போதைப் பொருள் மற்றும் குற்றங்களுக்கான அலுவலகத்தின் (ருழேனுஊ) 2018-ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி, உலக இளையோர் அவர்களை விட வயதில் மூத்தோரைக் காட்டிலும் போதைப் பொருள் பயன்பாடு உடையவர்களாகத் திகழ்கிறார்கள் எனும் ஆய்வு முடிவை வெளியிட்டுள்ளது.

**பெரும் சவால்**

சிறுவர்கள் அதிகமாக மது அருந்துகிறவர்களாக இருந்தனர். போதைப் பொருள் பயன்பாட்டிலிருந்து இந்தியக் குழந்தைகளைக் காப்பது பெரும் சவாலாக இருக்கப் போகிறது. போதைப் பொருட்களின் பயன்பாடு குறித்த பாடல்களைப் பள்ளி, கல்லூரிப் பாடத்திட்டத்தில் சேர்ப்பதுடன் அம்மாணவர்களுக்குக் கல்வி நிலையங்களில் ஆலோசனை மையங்களை உடன் தொடங்குவது அவசியமாகும். போதைப் பொருள் பயன்படுத்திய இளையோரை மீட்டெடுத்து இயல்பு வாழ்க்கைக்குக் கொண்டுவர மறுவாழ்வு முகாம்கள் அவசியப்படுகின்றன.

## 3. சுற்றுச்சூழல் தொடர்பான தலைப்புகள்

1. தாமிரபரணி நதிநீர் குடிப்பதற்கும் குளிப்பதற்கும் பயனற்றதாகப் போனதற்குக் காரணம் யாது?
2. கடல் மாசுபாட்டின் காரணமாகக் கடல்வாழ் உயிரினங்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் குறித்து எழுதுக.
3. புவி வெப்பமாவதால் எதிர்காலத்தில் நடக்கப்போகும் விளைவுகள் குறித்து விளக்கமாக எழுதுக?
4. காடுகளை அழித்து துணை நகரங்களை உருவாக்கும் செயலின் எதிர்விளக்கம் என்ன?
5. ஓசோன் அடுக்குச் சிதைவு உலகில் என்ன பாதிப்பை உண்டாக்கும்?
6. ஒலி, மாசுபாட்டிற்கும் மக்களின் மன அழுத்தத்திற்கும் உள்ள தொடர்பினைக் கட்டுரையாக எழுதுக.
7. சுற்றுச் சூழலைப் பாதுகாக்கத் தனிமனிதர்கள் என்ன செய்யலாம்?
8. கியோட்டோ நெறிமுறை என்றால் என்ன?
9. ஹசார்ட் மேப்பிங் ஏன் செய்யப்படுகிறது?
10. சூழல் தூய்மை மனித வாழ்வின் உரிமை – விளக்குக.

## 4. இந்தியப் பொருளாதாரம் தொடர்பான தலைப்புகள்

1. இந்தியப் பொருளாதாரத்தை ஏன் கலப்புப் பொருளாதாரம் என்று அழைக்கிறோம்?
2. இந்திய நாடு உலகின் ஆறாவது பெரிய உற்பத்தியாளராக எவ்வாறு மாறியது?
3. இந்திய மக்கள் தொகையில் 78 மில்லியன் மக்கள் நடுத்தர ஊதியம் ஈட்டும் மக்கள் - ஏன்? காரணம் தருக.
4. இந்தியப் பணவீக்கத்திற்கான காரணங்கள் என்ன?
5. இந்தியாவின் ஒட்டுமொத்த சமூக நலச் செலவு 8.6மூ ஆக உள்ளதே. இது போதுமானதா?
6. இந்தியா ஏன் கெயின்சியன் கொள்கைக்கு ஒப்புதல் அளித்தது?
7. உலக வங்கியின் கூற்றுப்படி இந்திய மக்கள் தொகையில் 93 சதவீதம் மக்கள் ஒரு நாளில் பத்து டாலருக்கும் குறைவாகப் பொருளீட்டுகின்றனர். இக்கூற்றின் உண்மைத் தன்மை அறிக.
8. இந்தியாவின் பொருளாதாரத்தை உயர்த்தும் முக்கியத் தொழில்களாக எவற்றைக் கூறலாம்?
9. இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மொத்த சேமிப்பு விகிதம் எவ்வளவு?
10. இந்தியாவில் அன்னிய நேரடி முதலீடு எவ்வளவு? – விளக்குக.

## 5. அறிவியலும் தொழில்நுட்பமும்

அறிவியலில் எந்தக் கோட்பாட்டினை யார் சொன்னாலும் அதை ஆய்வகத்தில் நிரூபித்துக் காட்ட வேண்டும். அதன்மூலம் ஆய்வாளர் எதைக் கண்டறிந்தார் என்று விளக்கியாக வேண்டும். ‘வலவன் ஏவா வானூர்தி’ என்ற சொற்றொடர் தமிழிலக்கியத்தில் இருக்கிறது என்று ஒரு கலையாளுமை சொன்னால் அது எப்படிப்பட்ட வானூர்தி? எந்தத் தொழில் நுட்பத்தில் பறந்தது? எந்தக் காலகட்டம் சார்ந்தது என்று அறிவியல் அறிஞர்கள் வினவுவர். எந்தக் கோட்பாட்டையும் அறிவியல் அறிஞர்கள் நிறுவாமல் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

அறிவின் இயலே அறிவியல். அறிவியலும் தொழில் நுட்பமும் பிரிக்க இயலாதது. தஞ்சை சுற்றுப் பகுதியில் எங்கும் மலைகள் இல்லாவிட்டாலும் மிகப் பெரிய கற்களைக் கொண்டு வந்து ஒன்றன் மீது ஒன்றாய் அடுக்கி மாபெரும் பெரிய கோயிலை மாமன்னர் இராஜராஜ சோழரால் உருவாக்கி முடிந்தது என்றால் மிகத் தேர்ந்த கல் தொழில்நுட்பத்தை 1000 ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் அறிந்திருந்தனர் என்பது புலனாகிறது. உயிர்களைப் பற்றியும் மனத்தைப் பற்றியும் பழந்தமிழர்களுக்குத் தெளிவு இருந்தது என்பதைச் சித்தர் பாடல்களில் இருந்து நம்மால் புரிந்து கொள்ளமுடிகிறது.

**அறிவியல் தமிழ்**

இன்றைய தேவை அறிவின் அடுத்தடுத்த படிநிலைகளே. கலையும் அறிவியலும் அறிவின் நீட்சியாய் மொழிவழி விரிவது கலை என்றும், கண்டுபிடிப்புகளின் வழி விரிவது அறிவியல் என்றும் அழைக்கப்படுகிறது. கலையில் உணர்ச்சிக்கு இடமுண்டு. அறிவியலில் அறிவுக்கு மட்டுமே இடமுண்டு. கலையும் அறிவியலும் சேரும் புள்ளியே சிந்தனைத்தளம். மனித சிந்தனையின் வெவ்வேறு தளங்களில் கலையும் அறிவியலும் பயணித்தாலும், நோக்கம் மனிதகுரல் மேம்பாடு என்பது தான். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ‘அறிவியல்’ எனும் சொல்லாக்கம் பரவலாகப் பேசப்பட்டாலும் தமிழ் தொன்றுதொட்டு அறிவின் மொழியாக, அறிவியலின் மொழியாகவே திகழ்கிறது.

சங்க இலக்கியம் வெகுநுட்பமான அறிவியலைச் சொன்னது. இயற்கை சார்ந்த அறிவியலைப் பழந்தமிழ் இலக்கிய இலக்கண நூல்கள் மொழிந்தன. அறிவியலைப் போல் தெளிந்த வகை தொகைகள் தமிழ் இலக்கியத்திலும் உண்டு. திணை சார்ந்த வகை தொகைப்பாடு அதில் இன்றியமையாதன சூரியனின் இருப்பைக் கொண்டு காலத்தைக் கணித்து சொன்ன நாழிகைக் கணக்கரை சிலப்பதிகாரம் காட்டுகிறது. நப்பூதனாரின் முல்லைப்பாட்டுப் பாடலில் நாழிகைக் கணக்கருக்கான சான்று உண்டு. மணவை முஸ்தபா போன்ற அறிவியல் தமிழறிஞர்கள் சங்கப் பாடல்களிலிருந்து அரிய கலைச் சொற்களை உருவாக்கி அறிவியல் தமிழ் அகராதிகளை உருவாக்கினர்.

**அறிவியல் தமிழ் முன்னோடிகள்**

அறிவியலும் தமிழும் ஒன்றாகக் கலந்து அறிவியல் தமிழ் எனும் புதிய துறை தமிழில் உருவானது. அணுவியலையும் வானியலையும் அலங்காரச் சொற்கள் கலவாமல் தமிழில் தரலாம் என இந்த நூற்றாண்டு நமக்கு உணர்த்தியது. அது தாய் மொழி வழிக்கல்விக்கு அடித்தளமிட்டதாய் அமைந்தது.

**பெ.நா. அப்புசாமி**

மனித உடல் குறித்தும் நோய்கள் குறித்தும் தமிழில் தோன்றிய சித்த மருத்துவ நூல்கள் பழந்தமிழரின் மருத்துவ அறிவியலின் தொன்மைச் சான்றுகளாகத் திகழ்கின்றன. பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழில் பெயர்க்கச் சொன்ன மகாகவி பாரதியார், தாய்மொழியில் அறிவியலையும் மருத்துவத்தையும் வானியலையும் கணிதத்தையும் கற்பிக்கலாமென்றார். வடநூலின் வழியிலின்றித் தமிழில் பாடங்களை நடத்த முடியும் என்கிற நம்பிக்கையால் அறிவியல் தமிழ் இந்த நூற்றாண்டின் புதுவரவாகத் தோன்றியது.

**நா. வானமாமலை**

மார்க்சிய அறிஞர் நா. வானமாமலை பிறநாட்டு வானியல் நூல்களைத் தமிழுக்குத் தந்தார். கீற்று இணையதளத்தில் ‘‘இருபதாம் நூற்றாண்டில் அறிவியல் தமிழ்’’ எனும் கட்டுரையில் நா.வா. குறித்து இளங்கோ, ‘‘நா. வானமாமலை 1960-ல் விண்யுகம் என்ற பெயரில் மொழிபெயர்த்தார். தொடர்ந்து உடலும் உள்ளமும், உயிரின் தோற்றம், உடலியல் மருத்துவ வரலாறு முதலான நூல்களை மொழி பெயர்த்துத் தமிழ் அறிவியல் வளர்ச்சிக்குப் பணியாற்றினார். புதின எழுத்தாளர் தி. ஜானகிராமன் பூமி என்னும் கிரகம் என்ற தலைப்பில் நூலை மொழிபெயர்த்து 1966-ல் வெளியிட்டார்’’ என்று குறிப்பிட்டுள்ளார்.

**சுஜாதா**

எஸ். ரங்கராஜன் எனும் இயற்பெயரையுடைய பொறியாளர். சுஜாதா எனும் புனைப்பெயரில் அறிவியல் தமிழ்க் கட்டுரைகளையும் நூல்களையும் எழுதினார். மரபணுக்களைப் பற்றியும், கணினியின் நவீன வளர்ச்சி நிலைகளைப் பற்றியும், நானோ டெக்னாலஜி எனும் மீநுண் தொழில்நுட்பம் குறித்தும் தலைமைச் செயலகம் எனும் தலைப்பில் மூளை குறித்தும், அவர் எழுதிய நூல்கள் வாசகரை வெகுவாகக் கவர்ந்தன.

**நெல்லை சு. முத்து**

விண்வெளி மைய முதல் நிலை ஆய்வறிஞராகப் பணியாற்றிய நெல்லை சு. முத்து விண்வெளி குறித்தும் ஐன்ஸ்டீனும் அண்டவெளியும் குறித்தும் எழுதினார். அவர் எழுதி மூன்று பாகங்களாக வெளியிடப்பட்டுள்ள ‘அறிவியல் வரலாறு’ குறிப்பிடத்தக்க அறிவியல் தமிழ்ப் பதிவாகத் திகழ்கிறது.

**அறிவியல் தமிழ் சவால்கள்**

எழுபதுகளில் தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் வெளியிட்ட அறிவியல் தமிழ்நூல் முயற்சிகள் அதன்பின் கல்விப் புலங்களில் தொடரப்படவில்லை. மணவை முஸ்தபா போன்றோர் யுனெஸ்கோ கூரியர் போன்ற இதழ்கள் மூலம் தெடங்கி வைத்த அறிவியல் தமிழ்ச் செயலாக்கம் அதன்பின் குறிப்பிடத்தக்க முறைமையோடு தொடரப்படவில்லை. மீநுண் தொழில்நுட்பம் என்று நானோ தொழில்நுட்பம் தமிழில் வழங்கப்பட்டாலும் இன்றும் பொறியியற் கல்லூரிகளில் தமிழ் வழியில் கற்பிக்கும் வகுப்புகள் தொடங்கப்படவில்லை.

குணபாடம், சித்தர் நாடிநூல், சித்த ரகசியம் போன்ற அரிய சித்த மருத்துவ நூல்களும் அரிய சுவடிகளும் தமிழில் இருந்தாலும் அவற்றை மொழிபெயர்த்து உலகின் முன் கொண்டு செல்லும் முயற்சிகள் அதிகமாய் நடைபெறவில்லை.

96 உடல் தத்துவங்களாகப் பிரித்து உடற்கூறியலும் நோயியலும் கண்டு 4448 நோய்கள் மனிதர்களுக்கு வரும் என்று வரையறுத்து சித்த மருத்துவத்தைக் கற்பிக்கும் சித்த மருத்துவக் கல்லூரிகள் தமிழகத்தில் அதிகமாகக் தொடங்கப்படவில்லை.

காந்தவியல், மின்னியல், ஒளியியல், இயற்பியல், பொறியியல் போன்ற துறைகளிலும் சிறந்து விளங்கி அவற்றைத் தமிழில் சொன்ன டாக்டர் வ.செ. குழந்தைசாமி போன்ற அறிவியல் தமிழறிஞர்கள் தமிழில் குறைந்து வருகின்றனர்.

மண்வேதியியல், புவிவேதியியல், நச்சியல், அணுக்கரு வேதியியல், கரிம வேதியியல், கனிம வேதியியல், வளிமண்டல வேதியியல், கூழ்ம வேதியியல் போன்றவற்றை எளிய தமிழில் சொல்ல அறிவியல் தமிழ் நூல்கள் எழுதப்பட வேண்டும்.

அல்கிமியா எனும் இரசவாதம் குறித்த இலக்கியப் பதிவுகள் தமிழில் இருந்தாலும், திருமூலர் போன்ற சித்தர்கள் இரசவாதம் குறித்து எழுதியிருந்தாலும் அறிவியல் முறையில் அக்கருத்தை நிலைநிறுத்தும் ஆய்வுகளுக்கான முன்முயற்சிகள் எடுக்கப்படவில்லை.

காலம், நிலம் குறித்த தெளிவான பார்வையோடிருந்த தமிழர்களின் அறிவியல் சிந்தனைகளை இன்றைய நவீன அறிவியலின் துணை கொண்டு நிறுவ வேண்டும். துமிழரின் தொழில் நுட்ப அறிவு வியக்கவைப்பது, இன்றைய அறிவியல் கோட்பாடுகளுக்குச் சற்றும் குறைவு இல்லாதது.

## 6. கலையும் பண்பாடும்

கலை நுண் உணர்வின் வெளிப்பாடு, பண்பாடு நீண்ட நெடிய செழுமைமரபின் வெளிப்பாடு. பண்பாடு இல்லாமல் கலை இல்லை. கலை இல்லாமல் பண்பாடு இல்லை. அருங்கலைகளைத் தெளிவாகக் கற்ற தமிழர்கள் அவற்றை உலகம் முழுக்கக் கொண்டு சென்றனர்.

**தஞ்சை பெரியகோவில்**

பல் ஆயிரம் ஆண்டுகள் கடந்த கோவில் கட்டடக் கலையைத் தமிழ் நாடெங்கும் காணமுடிகிறது. 645 மீட்டர் உயரத்தில் எகிப்து பிரமிடு போன்ற கலையமைப்போடு தஞ்சை பெருவுடையார் திருக்கோவில் திருக்கோபுரம் வானுயர்ந்து நிற்கிறது. சூரியன் எத்திசைக்கு நகர்ந்தாலும் கோபுர கலச நிழல் நிலத்தில் விழுவதே இல்லை. கலச நிழல் கூடப் பக்தர்கள் காலில் படக்கூடாது என்பது பண்பாடு. வானுயர் ராஜகோபுரம் தமிழர் வளர்த்த அருங்கலை.

**சித்தன்னவாசல் ஓவியங்கள்**

புதுக்கோட்டையில் இருந்து அன்னவாசல் செல்லும் வழியில் கி.பி. 7-8-ம் நூற்றாண்டு சார்ந்த மூலிகைச் சாற்றில் வரையப்பட்ட குடைவரை ஓவியங்களைப் பார்க்கும்போது சமணர் பண்பாடு நமக்குப் புலப்படுகிறது.

**மாமல்லபுரக் கடற்கரைக் கோயில்**

தமிழ்ப் பண்பாட்டின் அடையாளமாக 440 புராதன சின்னங்களைத் தமிழ்நாடரசின் தொல்லியல் துறை காப்பாற்றி வருகிறது. அவை யாவும் தமிழ்ப் பண்பாட்டின் அடையாளமாகத் திகழ்கின்றன. மாமல்லபுரக் கடற்கரைக் கோவில் கி.மு. 700 - 728 காலம் சார்ந்தது. நரசிம்மவர்ம பல்லவனின் கட்டுமானத் தொழில் நுட்பத்திற்குச் சான்றாகத் திகழ்கிறது. 2004-ம் ஆண்டு சுனாமியில் இக் கோவில் அதிக சேதமாகவில்லை. அர்ஜூனன் தவம் செய்யும் காட்சி படைப்புச் சிற்பமாக மாமல்லபுரத்தில் செதுக்கப்பட்டுள்ளது. வராகமூர்த்தி சிற்பமும் கோவத்தன மலைச் சிற்பமும் மகிஷாசுரமர்த்தினி சிற்பமும் தமிழ்ப் பண்பாட்டின் சாட்சியாகத் திகழ்கிறது.

## 7. பகுத்தறிவு இயக்கங்கள்

ஒன்றை வைத்து ஒன்றின் உட்பொருளைத் தெளிவாகப் புரிந்து கொள்வதே பகுத்தறிவாகும். ஏன்? எதற்கு? எப்படி? எங்கு? எதனால்? எனும் வினாக்களே பகுத்தறிவின் அடிப்படையாக அமைகின்றன. ஒரு பொருளைக் கண்ணால் கண்டு நம்புவதை விட அது சமூகத்தில் ஏற்படுத்தப்போகும் விளைவுகளை வைத்து நம்புவதே பகுத்தறிவாகும்.

**ஆறாம் அறிவு**

பார்க்கும் அறிவு, கேட்கும் அறிவு, தொடும் அறிவு, நுகர்ந்துணரும் அறிவு, ருசித்துப் பார்க்கும் அறிவு எனும் அறிவுகளோடு எது உண்மை? என்று ஆராய்ந்து தெரிந்துணரும் அறிவு பகுத்தறிவு ஆகும்.

ஒரு செயல் நடக்கிறதென்றால் ஏன் நடக்கிறது? எப்படி நடக்கிறது? இச்செயல் நடக்காமல் இருந்தால் என்ன நிலை ஏற்படும் என்று ஆராய்ந்து பார்க்கும் அறிவே பகுத்தறிவாகும்.

**“எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு”**

எனும் குறட்பாவில் வள்ளுவர் மெய்யாதல் அதாவது சொல்பவரது இயல்பு நோக்காது, அப்பொருளின் பயன்நோக்கிக் கொள்ளுதல் அறிவு என்கிறார் திருவள்ளுவர்.

### 1. சுயமரியாதை இயக்கம்

சமூகத்தில் பின் தங்கிய மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வியல் உரிமைக்காகவும் சமத்துவத்திற்காகவும் அனைவருக்கும் சமநீதி கிடைப்பதற்காகவும் உருவாக்கப்பட்ட இயக்கம்தான் சுயமரியாதை இயக்கம்.

1925-ம் ஆண்டு சென்னை ராஜதானி என்று அழைக்கப்பட்ட சென்னையில் பெரியார் ஈ.வெ. ராமசாமியால் தொடங்கப்பட்ட இயக்கமே சுயமரியாதை இயக்கம் எனும் பகுத்தறிவு இயக்கம். பெரியார் தொடங்கிவைத்த இப்பகுத்தறிவு இயக்கம் உலகெங்கும் பரவியது. தமிழ்வேள் ஜி. சாரங்கபாணி சிங்கப்பூரில் இவ்வியக்கத்தை உருவாக்கினார்.

மரபுசார் வைதீக முறைத் திருமணத்திற்கு மாற்றாகத் தாலியில்லாமல் திருக்குறளைச் சொல்லி மண உறுதியேற்கும் சுயமரியாதைத் திருமணங்கள் நடைபெறத் தொடங்கின. இவ்வியக்கம் 1944-ம் ஆண்டு முதல் திராவிடர் கழகம் என்று பெயர் மாற்றப்பட்டது.

### திராவிடர் கழகம்

சாதி மறுப்பு, தீண்டாமை ஒழிப்பு, சமூக நீதி, ஆண் பெண் சமத்துவம், பெண் உரிமை, மூட நம்பிக்கை எதிர்ப்பு, இறை மறுப்பு ஆகியவற்றிற்காக பெரியார் ஈ.வெ. ராமசாமியால் ஏற்படுத்தப்பட்ட சமூகமே திராவிடத் கழகம். கி.வீரமணி தற்போதைய தலைவராக உள்ளார்.

கடவுளை மற, மனிதனை நினை என்று இக்கழகம் வலியுறுத்துகிறது. உலகமே ஒரு குடும்பம் எனும் உயரிய நிலையே இக்கழக நோக்கம்.

## 8. இக்காலத் தமிழ் மொழி

### கணினித் தமிழ்

எண்பதுகளில் கணினி தமிழ்நாட்டில் பரவலாகியது. பல கணினித் தயாரிப்பு நிறுவனங்கள் மேசைக் கணினிகளை உருவாக்கித் தந்தன. 1983-84-ல் தமிழ்க் கணினி அறிஞர்கள் தமிழைக் கணினியில் கொண்டு வரும் முயற்சியில் இறங்கினர். தமிழுக்கென்று தனித்துவமான இயக்குதளங்கள் (ழுிநசயவபைெ ளுலளவநஅ) தேவைப்பட்டன.

கனடாவில் வாழும் முனைவர் ஸ்ரீ வாசன் 1984-ம் ஆண்டு கணினியில் தமிழில் எழுதும் ஆதமி எனும் மென் பொருளை உருவாக்கினார். அதைத் தொடர்ந்து ஆதமின் மென்பொருள் உருவானது. இதே காலத்தில் பாரதி எனும் மென்பொருள் சிங்கப்பூர், மலேசியா நாடுகளில் பயன்பாட்டில் இருந்தது. 1984-ம் ஆண்டிலேயே ஆப்பிள் கணினியில் பேராசிரியர் ஜார்ஜ் ஹார்ட் தமிழ் எழுத்துருக்களை அறிமுகப்படுத்தினார்

**ஒருங்குறி**

தமிழ்நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு எழுத்துரு பயன்படுத்தப்பட்டது. இதைச் சரி செய்ய சோ பெக்கர், லீ காலின்ஸ், மார்க் இடேவிஸ் மூவரும் இணைந்து கலிபோர்னியாவில் யூனிகோட் எனும் ஒருங்குறிக் கூட்டமைப்பை உருவாக்கி ஒருங்குறிக்குள் உலக மொழிகளை அடக்கினர். தமிழ் ஒருங்குறி நடைமுறையில் வந்தது.

மைக்ரோசாப்ட் நிறுவனம் ஆபிஸ் 2003-ல் தமிழ் விண்டோசை அறிமுகப்படுத்தியது. செல்பேசிகளில் ஜாவா தொழில்நுட்பம் ஒருங்குறிக்கான ஆதரவை வழங்குவதால் செல்பேசிகளில் தமிழில் தட்டச்சு செய்வது எளிமையாயிற்று. தட்டச்சுப் பலகை இல்லாமலேயே செல்பேசியில் பேசினால் தட்டச்சிடும் முறையும் விரலால் எழுதினால் அச்சாகும் வசதியும் பரவலானது. உத்தமம் நிறுவனத் தலைவர் முத்து நெடுமாறன் போன்றோர் கணினித் தமிழ் வளர உதவினர்.

**கணினிக் களஞ்சியம்**

யுனெஸ்கோ கூரியர் ஆசிரியராக இருந்த மணவை முஸ்தபா, கணினிக் கலைச் சொல் களஞ்சிய அகராதியையும், கணினி களஞ்சியப் பேரகராதியையும் தொகுத்துத் தந்தார்.

**தமிழ்ப் பிழைதிருத்தி**

நீச்சல்காரன் எனும் இணையதளம், ஓவன்-ஒருங்குறி மாற்றி, இணையமில்லாமல் விண்டோஸ் 7 மேசைக் கணினியில் செயல்படும் தமிழிணையப் பிழை திருத்தியைத் தந்துள்ளது. தமிழ் எண்களைப் பிழையில்லாமல் எழுதவும் எவ்வகை எண்கள் தந்தாலும் அவற்றைத் தமிழ் எண் குறியீடுகளாக மாற்ற உதவும் உதவியையும் நீச்சல்காரன் செய்கிறது. நாவி எனும் சந்திப்பிழை திருத்தி நாம் தரும் தொடரில் உள்ள ஒற்றுப்பிழை, மரபுப் பிழைகளைத் திருத்தித் தருகிறது.

**பேச்சுத்தமிழ் ஆய்ந்த பேரறிஞர்**

திராவிட மொழிக் குடும்பத்தின் தாயாகத் தமிழை நிறுவ 1856-ல் ‘‘திராவிட மொழிகள்ன ஒப்பிலக்கணம்’’ என்ற அரியநூலைத் தந்த ராபர்ட் கால்டுவெல்லைப் போன்று, தமிழ்ப் பேச்சு மொழிகள் குறித்து குறிப்பிடத்தக்க ஆய்வுகளை மேற்கொண்ட அமெரிக்க அறிஞர் பெர்னார்ட் பேட், திராவிட மேடைகளில் அழகியல் என்ற புகழ்பெற்ற ஆங்கிலநூலைத் தந்து தமிழகத்தில் இல்லாத மேடைப்பேச்சு தமிழ்நாட்டின் அரசியலையே புரட்டிப்போட்ட உந்துசக்தியாக எப்படித் தமிழ்ச் சூழலுக்குள் வந்தது என்ற கேள்வி அமெரிக்கரான அவருக்குள் பேச்சுக்கலை குறித்த ஆய்வுக்குத் தூண்டியது.

பராசக்தி திரைப்படத்தில் நீதிமன்றக்காட்சியில் சிவாஜிகணேசன் பேசும் உணர்வுப்பூர்வமான தமிழ்வீச்சும் தமிழகத்தின் பட்டிதொட்டியெல்லாம் மக்களின் பேச்சோடும் மூச்சோடும் கலந்து வழிவதைக் கண்டார். மூவாயிரம் ஆண்டுப் பழமையான செவ்வியல்மொழியின் மரபுநீட்சியாக அது அவர்களையும் அறியாமல் அவர்களின் மரபணுக்களில் தொடர்ந்து வருதையும் அத்தமிழில் புறநானூறு குறித்தும் மனோன்மணியம் குறித்தும் திராவிட இயக்கத்தலைவர்கள் அழகாக எடுத்துச்சொல்வதை கண்கொட்டாமல் பார்த்து ரசித்ததையும் அவர் ஒன்றாக இணைத்துப் பார்த்தார்.

நீண்ட பண்பாட்டின் தொடர்ச்சியாகத் திகழும் கிரேக்க மக்கள் பழமையே தங்கள் பலம் என்று பழமையின் வேர்களில் தங்கள் தற்கால மொழியைக் கட்டமைத்ததையும் பேராசிரியர் பெர்னார்ட் பேட் சுட்டிக்காட்டினார். வெறும் கோட்பாட்டு ஆய்வாக அதை முன்னெடுக்காமல் வைகோ போன்ற அரசியல் தலைவர்களின் மேடைப்பேச்சின் நிகழ்வில் நேரடியாகப் பங்கேற்று தொண்டர்களின் உணர்வு எந்தத் தருணங்களில் தூண்டப்பட்டு தன்னிலை மறக்க வைக்கிறது என்பதை அவர் தெளிவாகத் தெரிந்துகொண்டு அதைப் பல ஆய்வுக்கட்டுரைகளின் வழியே உலகின் பார்வைக்குக் கொண்டுசென்றார். அருட்பா மருட்பா விவாதம் தமிழ்ச்சூழலில் நடைபெற்ற பதிவுகளைப் பார்க்கும்போது யாழ்ப்பாணத்து ஆறுமுகநாவலர், வள்ளலார், அவருக்கு ஆதரவாகத் தமிழ்நாட்டுக் கோவில்களில் முழங்கிய சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர் போன்றோர் உரைகள் உணர்வுப்பூர்வமான தாக்கத்தைத் தந்திருக்கிறது. இந்திய சுதந்திரப் போரில் நம் மக்களை ஒன்றிணைக்க அனல்தெறிக்கப் பேசிய பாரதியார், வ.உ. சிதம்பரனார், சுப்ரமணிய சிவா, ஜி.சுப்பிரமணிய ஐயர் போன்றோரின் பேச்சுக்கள் பெரும்பங்கு வகித்ததை பேராசிரியர் பெர்னார்ட் பேட் பதிவுசெய்துள்ளார். அண்ணா, கலைஞர், ஈ.வி.கே., சம்பத் போன்றோர் திராவிட அரசியலை முன்னெடுத்ததே கவர்ந்திழுக்கும் பேச்சால்தான் என்று கருதியவர் அவர்கள் பயன்படுத்திய தொல்காப்பிய, சங்க இலக்கிய வரிகள், வீரவாள் பரிசளிப்புகள், பொன்னாடை போர்த்தல்கள், சூளுரைகள் போன்றவற்றை திராவிட செவ்வியல் நீட்சியாக அவர் கண்டார். தமிழ்மொழியை உணர்வு நோக்கில் ஆராயாமல் முப்பது ஆண்டுகள் கள ஆய்வில் ஈடுபட்டு மக்களின் புழங்குமொழியை தலைவர்களின் மேடைமொழியோடு ஒப்பிட்டு மொழியியல், மானுடவியல், உளவியல் நோக்கில் தமிழ்ப் பேச்சு மொழியின்

தனித்தன்மையை நிறுவிய அமெரிக்க மானுடவியல் அறிஞர் பேராசிரியர் பெர்னார்ட் பேட் குறித்து அஞ்சலிக் கட்டுரை வெளியிட்டு இந்து நாளிதழ் அவருக்கு நீங்கா நினைவோடு அஞ்சலி செய்துள்ளது.

## 9. தமிழ்நாட்டில் சமூகப் பொருளாதார முன்னேற்றம் மற்றும் தமிழக அரசின் நலத்திட்டங்கள் (பெண்கள், விவசாயிகள்)

சுதந்திரத்திற்குப் பின் அரசின் பல்வேறு திட்டங்களால் சமூகப் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மத்திய மாநில அரசுகளின் திட்டங்கள் ஊரக ஏழை மக்கள் முன்னேற்றத்தை வேகப்படுத்தியுள்ளன. தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் ஜூலை 2017 முதல் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்பட்டு வெற்றியடைந்துள்ளது.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையிலான குழுக்கள் சமூக பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய இலக்கு மக்களைக் கண்டறிந்து அவர்களுக்காகச் சுய உதவிக்குழுக்கள் தொடங்கப்பட்டு வங்கிக் கடன்கள் பெற முயற்சிகள் எடுக்கப்பட்டன.

பல இலட்சரூபாய் சுழல் நிதி அவர்களுக்கு வழங்கப்பட்டு அவர்கள் தொழில் தொடங்க வழிவகை செய்யப்பட்டது. மாவட்ட அளவில் இயங்கும் சுய உதவிக் குழுக்களை ஒருங்கிணைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டன. அந்ததக் கூட்டமைப்புகளுக்கு அமுதசுரபி நிதி வழங்கப்பட்டது.

கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. பல்வேறு மக்கள் அமைப்புகளின் செயல்பாடுகளைக் கண்காணிக்க சமூக தணிக்கைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன. வாங்கிய கடனை தவணை தவறாமல் முறையாகக் கட்டும் சுய உதவிக் குழுக்களுக்கு வட்டி மானியத் திட்டத்தின் கீழ் பல கோடி ரூபாய் உதவித்தொகை தரப்பட்டுள்ளது.

அந்தந்த ஊர்களில் வாழும் மக்களைத் தொழில் முனைவோராக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டது. வட்டார அளவில் வறுமை ஒழிப்புச் சங்கங்களைச் சங்கப் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்து நிதிகள் யாவும் தணிக்கை செய்யப்படுகின்றன. சரியான திட்டமிடல், கண்காணிப்பின் காரணமாக நம் தேசத்தின் பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாட்டின் கங்களிப்பு 9.1மூ -ஆக உயர்ந்துள்ளது.

இந்திய ரிசர்வ் வங்கியின் புள்ளிவிவரப்படி தமிழ்நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பு (ஜிஎஸ்டிபி) 2023-24 நிதியாண்டில் ரூ. 23.64 இலட்சம் கோடியாக இருந்தது. தமிழ்

நாட்டின் நபர் வாரி வருமானம் ரூ. 2,42,131 என்று இந்திய ரிசர்வ் வங்கியின் புள்ளிவிவரம் தெளிவுப்படுத்துகிறது. கிராமங்களில் இன்னும் அதிகமாகத் தொழில்கள் தொடங்கப்பட்டால் தமிழ்நாட்டு மக்கள் நகரங்களை நோக்கிப் படையெடுக்க மாட்டார்கள். தமிழ்நாடு இன்னும் அதிகமாகச் சமூக, பொருளாதார வளர்ச்சியடையும் மாநிலமாக மாறும். அரசின் நலத்திட்ட உதவிகள் பெண்களையும் விவசாயிகளையும் இன்னும் அதிகமாகச் சென்றடையவேண்டும்.

## 10. சமூக நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் சமூக சீர்திருத்த இயக்கங்களின் பங்கு (இடஒதுக்கீடும் அதன் பயன்களும்)

தமிழ்நாடு அரசு, தாழ்த்தப்பட்ட, விளிம்புநிலை மக்களுக்கான நலத்திட்ட உதவிகளைச் செயல்படுத்தி வருகிறது. வங்காளத்தில் பிறந்த ராஜாராம் மோகன்ராய் அக்காலத்தில் நடைமுறையில் இருந்த சதி அல்லது உடன்கட்டை ஏறுதலை ஒழிக்கப்பெரும் பாடுபட்டார்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் தேவதாசி ஒழிப்பு இயக்கத்தை நடத்தினார். 1989-ம் ஆண்டு கலைஞர் மு. கருணாநிதி தலைமையிலான தமிழ்நாடு அரசு 8-ம் வகுப்பு வரை படித்த இளம்பெண்களின் திருமண நிதித் தொகையை ரூ.5000-திலிருந்து ரூ. 15000-ஆக உயர்த்தியது. இத்திட்டம் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித்திட்டம் என்ற பெயரில் தமிழ்நாட்டரசால் வழங்கப்படுகிறது.

2009-ல் ரூ.25000-ஆக உயர்த்தி வழங்கப்பட்டது. 2011-ல் செல்வி ஜெயலலிதா முதல்வரான பின் ரூ. 30000 தொகையோடு 4 கிராம் தங்கமும் சேர்த்துத் தரப்பட்டது. 2016-ம் ஆண்டு 8 கிராம் தங்கமாக உயர்த்தப்பட்டது. 2022-ல் தமிழ்நாடு முதல்வர் திரு. மு.க. ஸ்டாலின், பெண் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித்திட்டமாக இத்திட்டம் மாற்றியமைக்கப்பட்டு, உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ. 1000 கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண உதவித் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், டாக்டர் தருமாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித்திட்டம், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம் போன்ற திட்டங்களைப் பெண்கள் முன்னேற்றத்திற்காகத் தமிழ்நாடரசு செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடரசின் முதியோர் உதவித் தொகை திட்டம், நலிவுற்ற கலைஞர்களுக்கான நிதியுதவித் திட்டம், இலவச மதிய உணவுத் திட்டம், கிராம தன்னிறைவுத் திட்டம்,

தமிழ்நாடு அரசு நலிந்தோர் குடும்ப நல உதவித்திட்டம், தொட்டில் குழந்தைத் திட்டம் ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

**இடஒதுக்கீடும் அதன் பயன்களும்**

தமிழ்நாட்டில் வரலாற்று ரீதியாகப் பின்தங்கிய பிரிவினரின் கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில் 1954-ம் ஆண்டில் இடஒதுக்கீடு 41சூ வழங்கப்பட்டது. 1990-ம் ஆண்டு முதல் அது 60சூ-ஆக உயர்ந்தது. 1994-ம் ஆண்டு 69 சதவீத இடஒதுக்கீடு ஒன்பதாவது அட்டவணையில் சேர்க்கப்பட்டது. அதன் படி தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வி முடித்து கல்லூரிக் கல்விக்கு வருவோர் சதவீதமும் அரசுப் பணிக்கு வருவோர் சதவீதமும் அதிகரித்துள்ளது.

## 11. தமிழ் நாட்டில் சமூகப் பொருளாதார வளர்ச்சியில் சமூக நீதி மற்றும் சமூக ஒற்றுமையின் பங்கு

தமிழ்நாட்டில் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு சமூக நீதி மற்றும் சமூக ஒற்றுமை மிக முக்கியமானவை. சமூக நீதி அனைவருக்கும் சமமான வாய்ப்புகள் மற்றும் உரிமைகள் வழங்குவதைக் குறிக்கிறது. சமூக ஒற்றுமை, சமூகத்தில் உள்ள அனைவரும் ஒருவருக்கொருவர் புரிந்து கொண்டு, ஒருமித்து வாழ்வதைக் குறிக்கிறது. இவை இரண்டும் இணைந்து, அனைத்து தரப்பு மக்களும் பயனடையும் ஒரு நிலையான பொருளாதார வளர்ச்சியைச் சாத்தியமாக்குகின்றன.

அனைவருக்கும் சமமான அரசியல், பொருளாதார, சமூக உரிமைகள் மற்றும் வாய்ப்புகள் கிடைப்பதை சமூக நீதி என்கிறோம். மதம், மொழி, சாதி, நிறம் போன்ற பாகுபாடுகளின்றி அனைவருக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும் என்பது இதன் பொருள்.

## 12. சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக

### 1. பொருள் வேறுபாடு அறிதல்

1. **இலவு காத்த கிளிபோல**

   மழை வரும், நிலம் செழிக்கும் என்று இலவு காத்த கிளிபோல விவசாயிகள் காத்திருந்து ஏமாற்றமடைந்தனர்

2. **கொடிகட்டிப் பற**

   பூங்குழலி தணிக்கைத் துறையில் கொடிகட்டிப் பறக்கிறார்

3. **ஆயிரங்காலத்துப் பயிர்**

திருமணம் எப்போதும் ஆயிரங்காலத்துப் பயிர்தான்

4. **ஏறிய ஏணியை எட்டி உதைப்பவன்**

ஏறிய ஏணியை எட்டி உதைப்பவனிடம் கவனமாக இருக்க வேண்டும்.

5. **ருசி கண்ட பூனை**

ருசி கண்ட பூனை எலி பிடிக்காமல் விடாது

6. **கடலில் கரைத்த பெருங்காயம்**

நீட் தேர்வுக்குத் தயாரித்து தோல்வியடைந்த ஓராண்டு கடலில் கரைத்த பெருங்காயம் கழிந்தது

7. **அகலக் கால் வைத்தல்**

வங்கிகள் இலட்சக்கணக்கில் கடன் தருகிறார்கள் என்பதற்காக அகலக் கால் வைத்து மாட்டிக் கொள்ளக்கூடாது

8. **புற்றீசசல் போல**

குடிமைப்பயிற்சித் தேர்வு மையங்கள் புற்றீசல் போலப் பெருகிவிட்டன.

9. **கண்துடைப்பு**

அரசியல் கட்சிகள் தேர்தல் காலத்தில் கண்துடைப்பைப் போன்ற நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை வாரி வழங்குகின்றன.

10. **ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போல்** மேடைப் பேச்சாளர் தமிழோடு பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்தியதைக் கேட்டது ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போல் இருந்தது.

11. **நகமும் சதையும் போல**

கணவரும் இணையரும் நகமும் சதையும் போல ஒன்றாக இருக்க வேண்டும்

12. **சிறகு இழந்த பறவை போல**

தந்தையை இழந்த குடும்பம் சிறகு இழந்த பறவை போல சிதிலமானது

13. **சூரியனைக் கண்ட பனிபோல்**

உழைக்கத் தொடங்கிய மகனால் சூரியனைக் கண்ட பனிபோல் குடும்ப வறுமை நீங்கிளது.

14. **நீர்க் குமிழி போல**

நீர்க் குமிழி போல இவ்வுலக வாழ்க்கை நிலையற்றது

15. **அத்தி பூததாற் போல**

அந்த மாணவன் அத்தி பூததாற் போல எப்போதாவது வகுப்புக்கு வருவான்

16. **ஒழுக்கம்**

ஒழுக்கம் உயிரைவிட உன்னதமானது

17. **இலக்கிய வடிவம்**

சிறுகதை தமிழின் முக்கியமான இலக்கிய வடிவம் ஆகும்.

18. **தமிழ் நூல்கள்**

யாழ்பாணம் பொதுவன நூலகத்தில் மூன்றரை இலட்சம் தமிழ் நூல்கள் உள்ளன.

19. **குற்றம்** குற்றம் பார்த்தால் சுற்றம் இல்லை

20. **ஆயகலைகள்** ஆயகலைகள் அறுபத்து நான்கு

## 2. பிரித்தெழுதுதல்

1. பாலூறும் - பால் + ஊறும்
2. வானொலி – வான் + ஒலி
3. கஃறீது – கல் + தீது
4. கலமேறி – கலம் + ஏறி
5. பெயரறியா – பெயர் + அறியா
6. நீளுழைப்பு – நீள் + உழைப்பு
7. பாடாண்திணை – பாடு + ஆண் + திணை
8. கைப் பேசி – கை + பேசி
9. கண்டெடுக்கப்பட்டுள்ளன – கண்டு + எடுக்கப்பட்டு + உள்ளன
10. சிற்றோடை – சிறுமை + ஓடை
11. ஆடியாது – ஆடு + யாது

**இதில் நிலைமொழியீற்றில் உள்ள குற்றியலுகரம் வருமொழி முதலில் யா என்னும் எழுத்து வரும்போது இகரமாகத் திரிந்தது.**

வீடியாது – வீடு + யாது

எருதியாது – எருது + யாது

**வருமொழி முதலில் யகரம் வரும்போது நிலை மொழி இறுதியில் உள்ள குற்றுகரம் திரிந்து வந்த இகரம் தனக்குரிய மாத்திரையில் குறைந்து ஒலிக்கும். இது குற்றியலிகரம் ஆகும்.**

குற்றியலிகரம் - குறுமை + இயல் + இகரம்

போலி – போல் + இ

ஒன்றைப்போல் இருப்பது போலி

12. ஊரான் - ஊர் + ஆன்
13. செய்தான் - செய் + த் + ஆன்
14. நமது – நம் + அது
15. படிக்கிறான் - பாடி + கிறு + ஆன்
16. பாடினாள் - பாடு + இன் + ஆள்
17. புளயங்காய் - புளி + அம் + காய்
18. மரத்தில் - மரம் + அத்து + இல்

19. பொற்குடம் - பொன் + குடம்

20. மணியடி – மணி + அடி

21. கடலாழம் கடல் + ஆழம்

22. பனை மரம் - பனை + மரம்

23. அல்வழிப் புணர்ச்சி – அல் + வழி + புணர்ச்சி

24. கருங்கல் - கருமை + கல்

(கருமை ஆகிய கல் - வேற்றுமையல்லாத வழியில் பண்புருபும் உவமையுருபும் மறைந்து தொகையாக வந்தன)

25. மலரடி – மலர் போன்ற அடி

26. புலி பெரிது – புலி + பெரிது

(நிலை மொழியும் வரு மொழியும் எந்த மாறுபாடும் அடையாமல் இயல்பாகவே நின்று புணர்ந்தன என்பதால் இது இயல்பு புணர்ச்சி ஆகும்)

27. பாடமெழுது – பாடம் + எழுது

28. புகழடைந்தான் - புகழ் + அடைந்தான்

(நிலைமொழியீற்றில் நின்ற மெய்யுடன், வருமொழி முதலில் வந்த உயிர் சேர்ந்து உயிர்மெய்யெழுத்தாகிப் புணர்ந்தன. இது இயல்பு புணர்ச்சி ஆகும்.

**விகாரப் புணர்ச்சி**

வாழைக் காய் - வாழை + காய்

புளயம்பழம் - புளி + பழம்

பொற்குடம் - பொன் + குடம்

மரவேர் - மரம் + வேர்

தீயெரிந்தது – தீ + எரிந்தது

பலாவிலை – பலா + இலை

திருவருள் - திரு + அருள்

படியரிசி – படி + அரிசி

நீயெடு – நீ + எடு

மலையாடு – மலை + ஆடு

பூவிதழ் - பூ + இதழ்

நன்றேயது – நன்றே + அது

உலகறியும் - உலகு + அறியும்

அஃதியாது – அஃது + யாது

பலாக்காய் - பலா + காய்

தீயடுப்பு – தீ + அடுப்பு

முட்பாதை – முள் ூ பாதை

திருவருள் - திரு ூ அருள்

உலகுணரும் - உலகு ூ உணரும்

எக்குடம் - எ ூ குடம்

எந்தப் பலகை – எந்த ூ பலகை

அப்படிச் செய் - அப்படி ூ செய்

எங்குச் சென்றார் - எங்கு ூ சென்றார்

என்னைப் பார் - என்னை ூ பார்

திருக்குளம் - திரு ூ குளம்

தீப் பொறி – தீ ூ பொறி

ஈக்கால் - ஈ ூ கால்

நகர்ப்புறம் - நகர் ூ புறம்

கீழ்ப் பக்கம் -கீழ் ூ பக்கம்

சுடுசோறு – சுடு ூ சோறு

### 3. எதிர்ச்சொல்

1. நல்லறிவு ஒ கெட்டறிவு
2. இரத்தல் ஒ ஈதல்
3. ஓங்கியது ஒ தாழ்ந்தது
4. ஆடூஉ ஒ மகடூஉ
5. அந்தம் ஒ ஆதி
6. ஆக்கம் ஒ தேக்கம்
7. அரிது ஒ எளிது
8. இகழ்ந்து ஒ புகழ்ந்து
9. இளமை ஒ முதுமை
10. ஒளி ஒ இருள்
11. பழமை ஒ புதுமை
12. வீரன் ஒ கோழை
13. உயர்வு ஒ தாழ்வு
14. இடும்பை ஒ இன்பம்
15. நகை ஒ அழுகை
16. பெருக்கம் ஒ சுருக்கம்
17. இயற்கை ஒ செயற்கை
18. நன்மை ஒ தீமை
19. சிறுமை ஒ பெருமை

20. வாய்மை ஒ பொய்மை
21. மலர்ந்து ஒ கூம்பி
22. உறவு ஒ பகை
23. வன்மை ஒ மென்மை
24. நஞ்சு ஒ அமிழ்தம்
25. வாழ்த்து ஒ வீழ்த்து
26. உறவு ஒ பகை
27. அருகு ஒ பெருகு
28. நண்பன் ஒ பகைவன்
29. இறத்தல் ஒ பிறத்தல்
30. சிறப்பு ஒ சிறப்பற்ற
31. துயரம் ஒ மகிழ்ச்சி
32. மாலை ஒ காலை
33. நன்மை ஒ தீமை
34. நோதல் ஒ தணிதல்
35. பள்ளம் ஒ மேடு
36. பண்பிலான் ஒ பண்புடையான்
37. ஓய்வு ஒ உழைப்பு
38. நிறை ஒ குறை
39. மறைதல் ஒ தோன்றல்
40. பைய ஒ விரைந்த
41. இணங்கு ஒ பிணங்கு
42. தேவர் ஒ அரக்கர்
43. அரிய ஒ எளிய
44. எட்டா ஒ எட்டிய
45. பாலை ஒ சோலை
46. மடி ஒ சுறுசுறுப்பு
47. வளமை ஒ வறுமை
48. புகழ்தல் ஒ வளமை
49. இகல் ஒ நட்பு
50. எதிர்த்தார் ஒ வரவேற்றார்
51. வெளிப்படும் ஒ மறையும்
52. நெடுந்தொகை ஒ குறுந்தொகை
53. செலவு ஒ வரவு
54. இசை ஒ வசை
55. தண்ணீர் ஒ வெந்நீர்

56. தட்பம் ஒ வெப்பம்
57. குறை ஒ நிறை
58. இம்மை ஒ மறுமை
59. புறம் ஒ அகம்
60. மன்னிப்பு ஒ ஒறுப்பு
61. அகடு ஒ முகடு
62. முதுமை இளமை
63. இல்லன ஒ உள்ளன
64. கேண்மை ஒ பகைமை

**4. எதிர்மறை வாக்கியம் மற்றும்**

**5. பிழை நீக்கி எழுதுதல்**

ஒருவன் ஒரு தொழிலைச் செய்ய உடன்படா நிலையைக் கூறும் வாக்கியம் **எதிர்மறை வாக்கியம்** எனப்படும்.

நான் வாரேன்
(நான் வரமாட்டேன் என்பது பொருள்)
நான் இதைச் செய்யேன்
(நான் இதைச் செய்யமாட்டேன்)
அவன் அதைச் செய்யான்
(அவன் அதைச் செய்ய மாட்டான்)

வாக்கியத்தில் உள்ள வினைச் சொல்லுடன் இல்லை என்பதைச் சேர்ப்பதன் மூலம் எதிர்மறை வாக்கியம் உருவாகிறது.

எனக்கு இனிப்பு பிடிக்காது
அவள் அப்படிப் பேசியிருக்கக் கூடாது
என்னால் எங்களுக்கு உதவ இயலாது
நான் சென்னை சென்றபோது அங்கு மழை பொழியவில்லை
கலையரங்கில் யாரும் இல்லை
உன்னால் இது முடியாது
நான் இப்போது படம் பார்க்கும் மனநிலையில் இல்லை
அவன் சென்றிலன்
நத்தைகள் வேகமாக ஓடா
புலி புல் தின்னாது

ஒரு செயல் அல்லது தொழில் திகழாமையைக் குறிப்பது எதிர் மறை வாக்கியம் ஆகும்.

# 13. கொடுக்கப்படும் தலைப்புகளில் கட்டுரை எழுதுதல் (எ.கா. திருக்குறள்)

## அ. திருக்குறள் மதச் சார்பற்ற தனித்தன்மையுள்ள இலக்கியம்

மனிதவாழ்வின் பொருள், பொருளோடு வாழ்வதேயன்றி பொருளை ஈட்டுவதன்று என்று வாழ்ந்தவர் வள்ளுவர். தனி மனித ஒழுக்கமும் புலனடக்கமும் வீடுபேற்றுக்கு இட்டுச்செல்லும் என்று நம்பியர் வள்ளுவர். எல்லா உயிர்களிடமும் இரக்கமும் ஒழுக்கமும் வள்ளுவர் வலியுறுத்திய உயர் அறங்கள். திருவள்ளுவர் கடவுள் எனும் சொல்லைப் பயன்படுத்தவில்லை. இறை, இறைவன், தெய்வம், தனக்குவமை இல்லாதான் போன்ற பொதுச் சொற்களை வள்ளுவர் பயன்படுத்தினார்

**மதச் சார்பற்ற பொதுமை இலக்கியம்**

அணங்கு, அலகை, இந்திரன், இமையோர், காமன், கூற்றம், செய்யாள், தாமரைக் கண்ணன், தாமரையினாள், தேவர், வானோர் என்று பல தெய்வங்களை வள்ளுவர் திருக்குறளில் பயன்படுத்தி இருந்தாலும் திருக்குறள் மதச் சார்பற்ற பொதுமை இலக்கியமாகவே திகழ்கிறது. திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தில் ஒரு குறிப்பிடட சமயம் சார்ந்தே இலக்கியங்கள் படைக்கப்பட்டாலும் அவர் அவ்வாறு இலக்கியம் படைக்கவில்லை. சமய வெறியை வள்ளுவத்தில் எந்த இடத்திலும் பார்க்க இயலாது. உயரிய வெறியை வள்ளுவத்தில் எந்த இடத்திலும் பார்க்க இயலாது. உயரிய விழுமியங்களோடு வாழ்ந்தால் இம்மையிலும் மறுமையிலும் ஆகச் சிறந்த பலன் பெறலாம் என்பது வள்ளுவரின் உயர்நெறி.

**ஒழுக்கமும் குடிப்பிறப்பும்**

ஒழுக்கமுடைமை குடிமை என்று வரையறை செய்த திருவள்ளுவர் குடிமை எனும் அதிகாரத்தில், ஒழுக்கத்தைக் குடிப்பிறப்போடு இணைத்துப் பார்க்கிறார். நல்ல குடியில் பிறந்தவர்கள் தம் குடிக்கு உரிய நல்ல ஒழுக்கங்கள், வாய்மை காத்தல், பழிக்கு அஞ்சி நாணுதல் எனும் மூன்றிலும் ஒருபோதும் தவறமாட்டார்கள் என்பதை,

**“ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்**
**இழுக்கார் குடிப்பிறந் தார்”**

எனும் குறளில் தெளிவாக விளக்கியுள்ளார். ஒழுக்கமுடையவர்கள் பலவாக அடுக்கிக் கோடி ரூபாய் பெற்றாலும் தன் குடிப்பெருமைக்குக் குறைவான அந்தச் செயலையும் செய்யமாட்டார்கள் எனும் பொருளில் வள்ளுவர்,

**"அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்**
**குன்றுவ செய்தல் இலர்"**

என்று அதற்கும் விலைபோகாத விலைமதிப்பற்ற உயர்ந்த மனிதர்களின் ஒழுக்கத்தை வள்ளுவர் வியந்து போற்றுகிறார்

**ஒழுக்கத்தின் வாயில், வாய்ச்சொற்களே**

ஒழுக்கத்தை ஒரு மனிதன் கூறும் வாய்ச்சொற்களை வைத்து குடிமை அதிகாரத்தில் வள்ளுவர் மதிப்பிடுகிறார். அதற்கு வள்ளுவர் விளக்கும் உவமை அழகானது. நிலத்தின் இயல்பை அதனிடம் முளைத்த முளை காட்டும், அதுபோல் நல்ல குடியில் பிறந்தவர்களின் இயல்பை அவர்களின் வாய்ச் சொற்கள் எடுத்துக்காட்டுத் என்று ஒருவரின் ஒழுக்கத்தை அவர் பேசும் வாய்ச் சொற்களை வைத்துக் கண்டுபிடித்துவிடலாம் என வள்ளுவர் உணர்த்துகிறார்.

**"நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் காட்டும்**
**குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்"**

இதுதான் அறம் என்று நாம் முன்னோர் வகுத்த அறமே ஒழுக்கம் ஆகும். அதை மீறுதல் தனிமனிதனுக்கும் நல்லதன்று. சமூகத்திற்கும் நல்லதன்று. வள்ளுவரின் ஒழுக்கமுடைமை ஒழுக்கத்தின் உயர்வை அழுத்தமாக விளக்குகிறது.

**"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்"**

ஒழுக்கம் எல்லோருக்கும் சிறப்பைத் தருவதால் அவ் ஒழுக்கம் உயிரினும் பாதுகாக்கப்படும் என்று பரிமேலழகர் விளக்கம் தந்துள்ளார். பரிமேலழகர் விழுப்பம் என்பதற்கு சிறப்பு என்று பொருள் தருகிறார். மணக்குடவர் அதற்கு சீர்மை என்று பொருள் தருகிறார். காளிங்கரோ இம்மை மறுமை எனும் இருமைக்கும் நன்மை தருவது என்று பொருள் தருகிறார்.

**கொல்லாமை எனும் அறம்**

கொல்லாமை எனும் தலையாய அறத்தைப் போற்றி முன்மொழிந்தவராக வள்ளுவர் திகழ்கிறார். கொல்லாமை எனும் அதிகாரத்திற்கு விளக்கம் தரும் பரிமேலழகர்,

**"ஐயறிவுடையன முதல் ஓரறிவுடையன ஈறாய உயிர்களைச்**

**சோர்ந்தும் கொல்லுததலைச் செய்யாமை”**

என்று கூறுகிறார். ‘‘ஒன்றாக நல்ல துயிரோம்பல்’’ என்று (அறநெறி, 62) எனும் இலக்கியம் உயிர்களைக் காப்பதை உயர்ந்த அறம் என்கிறது.

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய வள்ளலார், ‘‘அப்பா நான் வேண்டுதல் கேட்டருள்புரிதல் வேண்டும் ஆருயிர்க்கெலாம் நான் அன்பு செயல்வேண்டும்’’ என்று பாடினார். ‘‘பரம்பொருள் ஒருவரே, அதில் வேறுபாடு கொள்ளற்க, வெயிலுக்கு ஒதுங்கும் விருட்சம் அழிக்காதே என்று கூறுகிறார்.

கொல்லாமை எனும் கோட்பாட்டினைத் தம் வாழ்நாள் முழுக்கப் பின்பற்றியவர் வள்ளுவர். கொல்லாமையை எயர்ந்த வாழ்வியியல் அறமாக வலியுறுத்துகிறார்.

**‘‘தன்உயிர் நீப்பினும் செய்யற்க, தான்பிறிது**

**இன்னுயிர் நீக்கும் வினை’’.**

தன் உயிர் உடம்பிலிருந்து நீங்கிப் போவதாக நேர்ந்தாலும், அதை தடுப்பதற்காக தான் வேறோர் உயிலை நீக்கும் செயலைச் செய்யக்கூடாது என்றுரைக்கும் வள்ளுவரின் குறளுக்கு விளக்கம் தந்த பரிமேலழகர், ‘‘தன்னை அது கொல்லினும் தான் அதனைக் கொல்லற்க’’ என்று விளக்கமளித்ததைக் காணமுடிகிறது.

வாழ்க்கைக் கடலைக் கடக்க உதவும் தோணியாக வள்ளுவர் அறநெறியைக் கருதினார். சக உயிர்களைக் கொல்லாமல் அன்பு செய்யவேண்டும் என்ற நெறியின் விளக்கமாகக் கொல்லாமை எனும் அதிகாரத்தைக் காணமுடிகிறது. ‘‘அறவினை யாதெனின் கொல்லாமை கோறல்’’ என்று விளக்கிய வள்ளுவர், அடுத்த குறட்பாவில் ‘‘பகுத்துண்டு பல்உயிர் ஓம்புதலைத்” தலையாய அறமாகக் கருதுகிறார்.

‘‘மேற்கதி வீடுபேறுகட்கு நல்ல நெறி என்று சொல்லப்படுவது யாது என்று வினவின், யாதோர் உயிரையும் கொல்லாமையாகிய அறத்தினைக் காக்கக் கருதும் நெறி’’ என்று பரிமேலழகர் விளக்கும்

**‘‘நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றும்**

**கொல்லாமை சூழும் நெறி’’**

புலால் உண்ணாதவர்களையும், அதற்காக உயிர்களைக் கொல்லாதவர்களையும் எல்லா உயிரினங்களும் வணங்கி வாழ்த்தும்

**‘‘கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**

**எல்லா உயிருந் தொழும்**

எனும் குறள் வள்ளலாரின் குரலுக்கு நெருக்கமாகத் திகழக் கூடியதாய் அமைகிறது.

‘‘பசி ஏழைகளின் உடலில் பற்றி எரியும் தீ, பசி ஏழைகளின் அறிவாகிய விளக்கை அணைக்க முயலும் வி‘க்காற்று, பசி ஏழைகளின் உடலின் மீது பாய்ந்துதாக்கிக் கொல்லப்பாயும் கொடிய புலி, பசி உச்சி முதல் பாதம் வரை பாய்ந்து உயிரெடுக்கும்

கொடிய விடம். பசி என்னும் நோய் கொடியது. அதன் வெம்மை தாங்காதவர்கள் எந்தப் பாவத்தையும் செய்யத் துணிவர்'' என்று வள்ளலார் கருதினார்.

**வள்ளுவர் வலியுறுத்திய அன்பு**

வள்ளுவர் அன்பைப் போதித்தவர். ''அன்பிற்கும் உண்டோ அடைக்கும்மாதழ்?'' என்று கேட்டவர் வள்ளுவர்.

**''அன்பிலார் எல்லாந் தமக்குரியவர் அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு''.**

அன்பு இல்லாதவர்கள் பிறர்க்குப் பயன்படாமையின் எல்லாப் பொருளானும் தமக்கே உரியவர். அன்பு உடையார் அவற்றானேயன்றித் தம் உடம்பானும் பிறர்க்கு உரியர் என்று பரிமேலழகர் இக்குறளுக்கு விளக்கம் தருகிறார். உடலுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பே அன்புக்கும் ஆருயிர்க்கும் உள்ள தொடர்பு.

**''அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு**
**என்போடு இயைந்த தொடர்பு''**

அன்பு பற்றிய திருவள்ளுவரின் கருத்து ஆழமானது. அன்பு மனித வாழ்வில் மாற்றம் உண்டாக்குகிறது. அன்பு உயர்வானது. அன்பு உயர்த்துவது. அன்பு தன்னலமற்றது. அன்பு எதையும் எதிர்பார்க்காதது.

திருவள்ளுவர் அன்பை ''நாடாச் சிறப்பு தரும்'' அற்புதமாகக் காண்கிறார். அன்பை உடலோடு உயிரைப் பிணைத்து வைக்கும் பிணைப்பாக வள்ளுவர் கருதுகிறார். அன்பு ஆர்வமென்று சொல்லப்பட்ட ஞானநேயத்தைக் கொடுக்கும் என்று பரிதியார் விளக்குகிறார். வள்ளுவரின் பார்வையில் அறத்திற்கு அன்பு சார்பாக அமைகிறது என்பதாகும்.

மனிதத்தைப் புனிதமாக்க முயன்றவர், பொய்யற்ற முப்பாலைத் தந்த திருவள்ளுவர் மனத்தூய்மையே எல்லாவற்றிற்கும் அடிப்படை என்று உரைத்தார்.

காலம், இடம், சமயம் கடந்த தமிழ்மறையாகத் திருக்குறள் திகழ்கிறது. திருக்குறள் கருத்துகள் யாராலும் கருத்து ரீதியாக எதிர்க்கப்படவில்லை. அறம், பொருள், இன்பம் பேசிய வள்ளுவர் வீடு பேற்றுக்கென்று தனியே பால் அமைத்து குறட்பாக்கள் இயற்றவில்லை. தனிமனித ஒழுக்கத்தோடு சமுதாய ஒழுக்கத்தைப் பேண வழிசொன்ன வள்ளுவர்.

**''தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்**
**மனக்கவலை மாற்றம் அரிது''**

என்று சொன்னவர் வள்ளுவர்.

**''மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**
**ஆகுல நீர பிற''.**

மனம் தூய்மையாக இருப்பதே அறம், மற்றவை ஆரவாரமன்றி வேறில்லை என்ற திருவள்ளுவரின் நெறி முன்னுதாரணமற்றது.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்கிறார் வள்ளுவர்.

எந்த மன்னவன் முறை செய்து மக்களைக் காக்கிறானோ அவன் மக்கட்கு இறை என்று வைக்கப்படும் என மனிதனைப் புனிதனாக்கும் உத்தியைச் சொன்னவர் வள்ளுவர்.

சமய அடையாளமின்றி வள்ளுவர் சொன்ன முப்பால் உலகப் பொதுமறை என்று புகழப்படுகிறது. இருவரும் மனம் குறித்து தெளிவாகப் பேசியவர்கள். வள்ளுவரின் செய்யுள் நடை அழகானது, எளிமையானது, மனித நேயம் சார்ந்தது. இறைவன் எல்லாவற்றிற்கும் முதன்மையானவன் என்ற கருதாக்கம் வள்ளுவருக்கு உகந்தது என்றாலும் எந்தச் சமயம் என்று அவர் திருக்குறளில் அழுத்தமாகக் கூறவில்லை. இம்மை வாழ்வு முறையாக இருந்தால் மறுமை வாழ்வு சரியாக இருக்கும் என்று தெளிவுபடுத்தியவர் வள்ளுவர். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் இந்த நான்கினையும் இருவரும் விலக்கச் சொன்னவர் வள்ளுவர். கொல்லாமையையும், புலால் உண்ணாமையையும் நெறியாகக் கொள்ள அறிவுறுத்தியவர். ஈகையை உயர்வாகப் பேசியவர். தவறான உணவுப்பழக்க வழக்கமே நோய் வருவதற்கான காரணிகள் என்று மீளவழி சொன்னவர். ஐம்புலனடக்கம் நல்வாழ்வின் அடிப்படை என்று அறிவுறுத்தியவர் திருவள்ளுவர்.

**“பிறவிப் பெருங்கடல் நீத்துவர், நீத்தார்**
**இறைவனடி சேரா தார்”**

என்ற வள்ளுவரின் நோக்கம் பிறப்பறுத்தல் என்பதாகும்.

**“பற்றுக பற்றற்றான் பற்றினை, அப்பற்றைப்**
**பற்றுக பற்று விடற்கு”**

என்ற கருத்தை வள்ளலாரின் நூற்கருத்துகளிலிருந்து அறியமுடிகிறது.

## ஆ. அன்றாட வாழ்வியலோடு தொடர்புத் தன்மை

ஒழுக்கநெறி சார்ந்த சமண பௌத்த சமயங்களின் வரவால் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் தமிழில் தோன்றின. அப்பதினெட்டு நூல்களில் பதினோரு நூல்கள் நீதிநூல்களாய் அமைந்தன. கொல்லாமை, கள்ளுண்ணாமை, பொய்யாமை, காமம் இன்மை, கள்ளாமை எனும் பஞ்சசீலக் கொள்கைகள் இவ்விலக்கியங்களால் புதிய கருத்தாக்கமாய் முன்நிறுத்தப்பட்டன. அக்காலப் புலவர்கள் மருத்துவர்களாகவும் இருந்ததால் உடல்நோய், உள்ள நோயை நீக்குவதற்கு இலக்கியத்தையே மருந்தாகக் கருதினர். பரத்தன்மை ஒழுக்கம், கள் அருந்துதல், அளவுக்கதிகமாய் உணவு அருந்துதல், போன்றவற்றை நோய்க்கன காரணங்களாகக் கண்டு, எளிமையான யாப்பமைப்பில் வாதம் பித்தம், கபம் எனும் மூன்றே நோய்களுக்குக் காரணமாய் அப்புலவர்கள் கண்டனர்.

**“ஊணப்பா உடலாச்சு உயிருமாச்சு**

**உயிர் போனார் பிணமாச்சு உணிர்போ முன்னே**
**பூணப்பா வாத பித்த சேத்து மத்தாற்**
**பூண்டெடுத்த தேகவளம் புகலுவேனே''**

என்று நாடி நூல்கள் கூறுவதை இலக்கியமாகத் தமிழில் தந்தனர். பஞ்சபூதங்களில் வாயுவின் கூறாக வாதமும், தேயுவின் கூறானப் பித்தமும், அப்புவின் கூறாகக் கபமும் வருவதாகக் கூறிய முனிவர்கள் நோய் நீக்கும் மருந்துப் பெயர்களைச் சிறுபஞ்சமூலம், ஏலாதி, திரிகடுகம் என்று பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுக்கு வைத்தனர். குறிப்பாகத் திருவள்ளுவரின் மருத்துவச் சிந்தனைகளை விளக்க முயல்கிறது.

திருக்குறளின் மருத்துவச் சிந்தனைகள்.

''நல்ல மருத்துவம் என்பது நோயை நீக்குவது அன்று, நோயே வராமல் தடுப்பது'' என்ற கருத்தாக்கமே, திருவள்ளுவரின் மருத்துவச் சிந்தனையாக அமைகிறது.

முன்வேளை உண்ட உணவு செரித்தபின் அடுத்த வேளை உணவு உண்பவனுக்கு மருந்தே வேண்டாம் என்பது வள்ளுவரின் அற்புதமான மருத்துவச் சிந்தனையாய் அமைகிறது.

**''மருநதென் வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது**
**அற்றது போற்றி யுணின்''.**

**உணவு செரிக்கும் குடலை,**

1. இரைக்குடல் (அமர்வாசயம்) உண்ட அன்னசாரம் அமருமிடம்
2. செரிகுடல் (பகிர்வாசயம்) அன்னம் சீரணித்தப்பின் சாரம் வேறு திப்பி வேறாகப் பிரியுமிடம்
3. நீர்க்குடல் (சலவாசயம்) நீர் குழியும், நீர் இறங்குமிடமும்
4. மலக்குடல் மலக்குழியும் மலமிறங்குமிடமும்
5. வெண்ணீர்க்குடல் (சுக்கிலவாசயம்) வெண்ணீர் பிரியுமிடம்

என்று ஐந்து வகைகளாகப் பிரித்த சித்த மருத்துவம், உடலுக்கு ஒவ்வாத உணவுகளை உண்ணக் கூடாது என்கிறது. அதிவேக உலகில் கிடைக்கும் பீசா போன்ற உணவுகள், நெய்யில் பொரித்த உணவுகள், குடலையும் உடலையும் கெடுக்கும் உணவுகளாகக் கருதவேண்டியிருக்கிறது. தேவையற்ற வாயு தொடர்பான நோய்களைத்தரும் உணவுப் பொருட்கள் குறிப்பாக உருளைக் கிழங்கில் செய்யப்பட்ட பொருட்களால் வயிறு கெட்டு நோய்கள் உண்டாகும்.

**''அற்றா வளலறிந் துண்க வ.'.துடம்பு**
**பெற்றா னெடிதுய்க்கும் மாறு''**

முன்புண்டது அற்றால் பின்னுண்பதனை அளவு அறறிந்து உண்பவன் உடல் நெடுநாள் நீடித்து வாழும் என்கிறாா் திருவள்ளுவா.

‘‘அனைத்து நோய்களின் பிறப்பிடம் தவறான உணவுப் பழக்கவழக்கமே’’ என்பது வள்ளுவப் பேராசானின் கருத்தாக அமைகிறது. உணவே மருந்து எனும் கொளகை உடையவர்களாகத் தமிழர்கள் இருந்தனர். சமையலறையில் அஞ்சறைப் பெட்டியை மருத்துவரின் நோய் நீக்கும் பெட்டியைப் போன்று தமிழர்கள் கருதினர்.

**“தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்**
**நோயள வின்றிப் படும்’’**

உடல்நிலை கெட்டுப் பசித்தீ குறைந்து செரிப்புத்தன்மை இழந்த காலத்திலும் முன்பு உண்டதைப்போல் அதிகமாக உண்டால் நோய் பெருகும் என்கிறார் திருவள்ளுவர். அண்டகத்தில் உள்ளதே பிண்டம், பிண்டத்தில் உள்ளதே அண்டம் என்ற நிலையில் வாழ்ந்த சித்தர்கள் உடல்நலம் பேணினால்தான் உள்ள நலம் பேணமுடியும் என்றனர். அதனால்தான் திருமூலமாமுனிவா்,

**“உயிரை வளர்க்கும் உபாயம் அறிந்தே**
**உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே’’**

என்கிறாா். குழந்தை அளவுக்கதிகமாகப் பால் உண்டோ, பிற காரணங்களால் மாந்தமோ ஏற்பட்டால்,

**“சீர்சிறந்த மாசிக்காய் திப்பிலி கோரோசனமும்**
**கார்சிறந்த கோட்டம் கருஞ்சீரகம் - பேர் சிறந்த**
**அக்கார காரம் அரைத்துமுலைப் பாலிலிட**
**இலக்கணமே தீரும் இது’’**

என்று குணபடா நூல்’ கூறுகிறது.

வாளி, அழல், ஐயம் ஆகிய முக்குற்றங்களும் மாறுபாடில்லாதபடி தடுக்க வேண்டியதைத் தடுத்தும் வேண்டுவனவற்றைக் கூட்டியும் உணவுப் பொருட்களின் பண்பினை அறிந்து உண்டால் நோயுண்டாகாது என்று கூறும் வள்ளுவர்,

**“மாறுபாடில்லாத உண்டி மறுத்துண்ணின்**
**ஊறுபாடில்லை உயிர்க்கு’’**

என்கிறாா்.

காயம் (உடல்) அழியாதிருக்கக் காயம், கல் போலாக்கும் முறையைத் திருமூலா் மணி, மந்திரம், அவிழ்தம் என்கிறாா்.

**“மறுப்ப துடல்நோய் மருந்தென லாகும்**
**மறுப்ப துளநோய் மருந்தெனச் சாலும்**
**மறுப்ப தினிநோய் வாரா திருக்க**

**மறுப்பது சாலையு மருந்தென லாமே"**

என்று திருமூலா் கூறும் செய்தியை ஒத்துத் தேரையா்

**"தணியாத நோயுந் தணியப் புரியும்**

**மணிமந்திர வவிழ்த மார்க்கப் - பிணியை**

**உசாவி யியற்றும் அறிவுள்ளவரைக் கண்டால்**

**மசாவும் பயப்படு மம்மா" என்கிறார்.**

உடலுக்கு ஏற்றபடி உணவைக் குறைத்து வாழ்வதைத் திருவள்ளுவா், நோய் வராமல் தடுக்கும் உயா்ந்த முறையாகக் கருதுகிறாா்

**இழிவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்**

**கழிபோ் இரையான்கண் நோய்"**

அளவு தெரியாமல் உண்பது விலங்குகளின் இயல்ப்பு அளவறிந்து உண்ணுதலே யோகிகளின் இயல்ப்பு உண்டால் மட்டும் போதாது உண்டதை அவ்வப்போது வெளியேற்ற வேண்டும் ˙ என்பதை ''மும்மலம் அறுநீா்'' அதாவது மும்முறைக் கழிவை வெளியேற்றும் செயலும், அறுமுறைச் சிறுநீா் கழிக்கவும் வேண்டுமென்று சித்த மருத்துவ நூல்கள் விளக்குகின்றன.

**உடல்தீயை**

1. சமாக்கினி
2. வி'மாக்கினி
3. தீ'ணாக்கினி
4. மந்தாக்கினி

என்று சித்த மருத்துவம் நான்கு வகையாகப் பிரிக்கிறது.

1. **சாமாக்கினி:** ஒருவன் வேண்டும் அளவு உட்கொள்ளுகின்ற உணவு நீா் எல்லாம் முறைப்படி, கால அளவுக்கு மாறுபடாமல் நன்றாகச் சீரணிக்கச் செய்யும் தீயே சாமாக்கினி என அறியவும்.
2. **வி'மாக்கினி:** இ∴து உண்ணப்பட்டவைகளை உடனே சீரணிக்காமல் நெடுநேரம் கழித்துச் செரிப்பிக்கும். அப்படிச் செரிப்பித்தாலும் அவை வி'மச் சீரணமாகும்.
3. **தீ'ணாக்கினி:** வெந்ததும் வேகாததுமான உணவுப் பொருட்களைப் புசித்தாலும் அதனை இரசத்தோடும் (சாரம்) கூடவே செரிப்பிக்கும்.
4. **மந்தாக்கினி:** விருப்பத்தோடு உண்ட பாகமான உணவுப் பொருட்கள் உடனே செரிப்பிக்காமல் வாயுவால் வயிற்றிரைச்சல், குடலிரைச்சல், வயிற்றுப்புசம், உடல் கனத்தல் என்னும் இவைகளை உண்டாக்கி நெடுநேரத்திற்குப் பிறகுச் செரிப்பிக்கும்'' (சித்த மருத்துவ நோய் நாடல் நோய் முதனாடல் திரட்டு பாகம்-1) என்ற நூல் குறிப்பிடுகிறது.

இந்நான்கு தீயும் உணவினால் உண்டாகிறது என்பதால், திருவள்ளுவா் நோய் நீக்குதலை 'மருந்து' என்ற அதிகாரத்தில் உணவைக் கட்டுப்பாட்டில் வைக்கச்

சொல்கிறார். நோய்க்குக் காரணம் வாய் என உரைக்கும் திருவள்ளுவர் நோயை நீக்குவதைவிட, நோய் வரும் காரணத்தைக் கண்டறிந்து நீக்குதல் மேலானது என்கிறார்.

**“நோய்நாடி நோய் முதனாடி அதுதணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் செயல்”**

தலைவலி வருகிறது என்றால், தலைவலிக்கு மருந்து தராமல் தலைவலி உருவாகிற காரணத்திற்கு மருந்து தருவதைத் திருவள்ளுவர் வலியுறுத்துகிறார்.
வள்ளுவம் வாழ்க்கை நெறி, வள்ளுவர் உளவியல் அறிந்த மாமருத்துவர்.

**“புல்லும் மரனும் ஓரறிவினமே!**
**பிறவும் உளவே! அக்கிளைப் பிறப்பே”**

என்று மனிதர்கள் உள்ளிட்ட உயிரினங்களுக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியர் முதல் வள்ளுவப் பேராசான்வரை அனைவருமே உடல், உளநோய் நீக்கும் சித்தர்களே.

**“உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்**
**றப்பானாற் கூற்றே மருந்து”**

என நோயுற்றவன், அதை தீர்ப்பவன், அவனுக்குக் கருவியாகிய மருந்து செய்பவன், அம்மருந்தைச் செலுத்துவோன் ஆகிய நால்வரும், ஒரு மனத்தோடுகூடி ஒத்துழைத்தால் நோய் தீரும் என்கிறார் வள்ளுவர். உணவைக் கட்டுப்படுத்துதலே உண்மையான நோய்க் கட்டுப்பாடு எனும் வள்ளுவரின் பார்வையே உலகில் உன்னதமான மருத்துவப் பார்வை.

**அன்றாட வாழ்வியலோடு தொடர்புத் தன்மை வாழ்க்கைத் துணைநலம்**

1812-ம் ஆண்டு உலகத் திருமுறையாம் திருக்குறள் அச்சிடப்பட்டது. அன்று முதல் இன்றுவரை உலகமொழிகளில் பலவற்றிலும் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டு வாழும் நெறியாய் உலகம் முழுக்க கொண்டாடப்படுகிறது. ‘‘வாழ்க்கைத் துணை என்றதனால், மனைவி மணாளனது வாழ்க்கையில் அறத்திற்குத் துணையாகின்றாள், பொருளுக்கும் துணையாகின்றாள், இன்பத்திற்கும் துணையாகின்றாள் என்பதுதானே போதருகின்றது, இதற்கு மேலும் பெண்களுக்கு உரிமை கொடுத்தவர் யாரே என அறிய விரும்புகின்றோம்’’ என்று வாழ்க்கைத் துணைநலம் குறித்து அறிஞர் தெ.பொ.மீ கருத்துரைத்துள்ளார்.

**துணையாய் ஒளிரும் மனைவிளக்கு**

வாழ்வெனும் நீண்டபயணத்தில் துணையாக நின்று நலம் தருபவள் பெண். இல்லறம் எனும் நல்லறம் மனைவளக்காகத் திகழும் மனையாளைச் சார்ந்தே அமைகிறது. மனைமாட்சி பெண்களால்தான் வருகிறது. அம் மனைமாட்சி இல்லை என்றால் எந்தச் சிறப்பும் வருவதே இல்லை. ஆண்பெண் சமனிலையைக் குறள் வலியுறுத்துகிறது. அறன்

எனப்பட்டதே இல்வாழ்க்கை என்கிறார் வள்ளுவர். வாழ்வெனப்படுவது அகமும் புறமும் சார்ந்தது. அகவாழ்க்கை இல்லறம் சார்ந்தே அமைகிறது. அகமும் புறமும் சார்ந்தது, அகவாழ்க்கை இல்லறம் சார்ந்தே அமைகிறது.

**வாழ்க்கைத் துணைநலம் சிறப்புகள்**

பெண்ணிற் பெருந்தக்க யாவுள? என்று பெண்மையை வள்ளுவர் போற்றுவது, வாழ்க்கைத் துணைநலம் அதிகாரத்தில்தான். பண்புடைய குடும்ப வாழ்வுக்கு வாழ்க்கைத் துணை நலம் அமைவது இன்றியமையாதது.

உயர்பண்புகளையும் அன்பையும் விதைப்பது வாழ்க்கைத் துணை நலத்தின் நோக்கம் என்பதை உணரமுடிகிறது. நாட்டுநலன் வீட்டு நலனிலிருந்தே தொடங்குகிறது. அந்த வீட்டு நலனும் பெண்ணின் பெருமையிலிருந்தே தொடங்குகிறது. ஆண்பெண் கூட்டுறவே ஒரு சமூகத்தின் ஒழுக்கநெறியை உறுதிசெய்கிறது. குடும்பநெறியை உறுதிசெய்கிறது. அந்த நெறியைக் கடைபிடிப்பவரே வையத்தில் வாழ்வாங்கு வாழத் தகுதிபெற்றவர்கள். மக்கட்பயிர் வளர்க்கும் மகத்தான நாற்றங்கால் குடும்பம்தான்.

**குடும்ப அமைப்பின் நுண்வேர்**

“பிறப்பின்பம் தூயது, அதனை நுகரும் நெறியும் தூயதாதல் வேண்டும்” என்று வள்ளுவம் நூலில் வ.சு.ப. மாணிக்கனார் குறிப்பிடுகிறார். எந்த இன்பத்தையும் வரையறைக்குட்பட்டே நுகரவேண்டும் என்பது வள்ளுவத்தின் உயர்நோக்கம். அந்த வரையறையை கற்றுத்தரும் அமைப்பு குடும்ப அமைப்பே, அதன் நுண்வேர் வாழ்க்கைத் துணைநலமே.

**இல்லறம் என்னும் அன்புக்கூட்டம்**

‘‘மலரினும் மெல்லிது காமம்’’ எனவுரைத்து இன்பநெறியைக் கற்புநெறிக்குள் கொண்டுவந்த வள்ளுவம், அதை ஒழுக்கநெறி கொண்டே ஒழுகவேண்டும் என்று வரையறுத்தது. பரத்தையர் பிரிவு மேற்கொண்ட சங்க இலக்கிய ஒழுக்கத்திற்கு மாற்றுக்குரலாக வள்ளுவம், ஒரு மனை வாழ்க்கையை முன்னிறுத்தியது. தலைவனும் தலைவியும் கூடிப்பெறும் கூட்டுப்பேரின்பம் குடும்பத்தை உருவாக்கி அதன் அடுத்தடுத்த படி நிலையாய் சமுதாயத்தை உருவாக்கி உலகத்தை உருவாக்குவதில் பெருந்துணைபுரிகிறது. இல்லறம் என்பது வள்ளுவர் கண்ட அன்புக்கூட்டம். தலைவன் தலைவி ஒத்திசைந்து வாழும் அன்புக்கூடம்.

**குடும்பம் எனும் கூட்டுப்பண்ணை**

ஊடலும் கூடலும் வாழ்க்கைத் துணையை மென்மேலும் வலுவூட்டுவதாய் அமையும் என்பது வள்ளுவர் கருத்து. வாழ்க்கைத் துணைநலம் அதிகாரத்தைப் புரிந்துகொள்ள இன்பத்துப்பாலை முழுமையாய் கற்றல் அவசியம். ‘‘கற்புடைய ஆண்பெண் முதல்கூட்டு ‘‘குடி’’ எனப் பெயர்பெறும். காதலர் இருவரும் குடும்ப முதலுறுப்பினர் ஆகுவர். குடும்பச்

சுமைதாங்கிகள் எனப்படுவர். குடும்பம் கணவன் மனைவியின் கூட்டுப்பண்ணை, பொறுப்பு வாழ்க்கை, கையெழுத்திட்டார் இருவருள் வலுவுடையானைக் கடன் சார்தல்போலக் குடிக்கடனும் ஆண்பெண்ணுள் ஆற்றல் உடையாரைச் சாரும்'' என்று அறிஞர் வ. சு.பு. மாணிக்கம் குறிப்பிடுகிறார்.

**வாழ்வெனும் கடல்**

இல்லறம் எனும் நல்லறம் இல்லையென்றால் இவ்வுலக வாழ்வு எனும் கடலைக் கடத்தல் அரிது. வாழ்க்கைப் பயணத்தை வாழ்க்கைத் துணையில்லாமல் தொடங்குதலும் தொடர்தலும் நிறைவு செய்தலும் கடினம்.

**வாழ்க்கைத்துணை நலத்தின் உயர்பண்புகள்**

குறைகளைப் பெரிதுபடுத்தாமல் எல்லாவற்றையும் இயல்பாக ஏற்றுக்கொள்ளும் பொறுமைக் குணமும், ஒருவரையொருவர் அன்பு பாராட்டுவதும், இன்பதுன்பங்களில் எப்போதும் துணைநிற்பதும், ஒருவர் வளர்ச்சியில் மற்றவர் உறுதுணையாக இருப்பதும், வாழ்க்கைத் துணை நலத்தின் ஒப்பற்ற பண்புகளாய் அமைகின்றன. ஒருவருக்கொருவர் உறுதுணையாய் தோழமையோடு வாழ்தல் எளிதன்று. உயிர் வாழ்கின்றோம், உயிர்த்துடிப்போடு வாழ்கிறோமா? என்று நம்மை நாமே கேட்டுப்பார்த்தால் வாழ்வின் உயர்நோக்கம் நமக்குத் தெளிவாகப் புலப்படும்.

**யார் வாழ்க்கைத் துணைநலம்?**

வாழ்க்கைத் துணையின் பொறுப்புகளை வள்ளுவர் குறட்பாக்களில் வகுத்தளித்துள்ளார். யார் வாழ்க்கைத் துணை? என்பதற்கு வள்ளுவர் வாழ்க்கைத் துணைநலம் அதிகாரத்தின் முதல் குறளிலும் ஆறாம் குறளிலும் மிகத்தெளிவாக வரையறுத்துள்ளார்.

**"மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்**
**வனத்தக்காள் வாழ்க்கைத் துணை"**

இல்வாழ்க்கைக்கு ஏற்ற நற்பண்பு உடையவளாகித் தன் கணவனுடைய பொருள் வளத்துக்குத் தக்க வாழ்க்கை நடத்துகின்றவளே வாழ்க்கைத் துணையாவாள் என்று வள்ளுவர் விளக்குகிறார். உரையாசிரியர் பரிமேலழகர், இக்குறட்பாவுக்கு விளக்கம் அளிக்கும்போது, மனைத்தக்க மாண்புடையவளின் நற்குணங்களாய்த் துறந்தார்ப் பேணலும், விருந்து அயர்தலும், வறியார் மாட்டு அருளுடைமையும்'' என்று விளக்கம் தந்துள்ளார்.

**அறநெறியின் இல்வாழ்க்கை**

ஒருவன் அறநெறியில் இல்வாழ்க்கையைச் செலுத்தி வாழ்வானானால் அத்தகையவன் வேறு நெறியில் சென்று பெறத்தக்கது என்ன? எனும் வினாவை அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின்….. எனத் தொடங்கும் குறளில் வள்ளுவர்

முன்வைப்பதன் காரணத்தை வாழ்க்கைத் துணைநலம் அதிகாரத்தில் பதில் அறிந்துகொள்ளமுடியும்.

**மனைமாட்சியுடையவள் பெண்**

இல்லாளுக்குரிய மனைமாட்சி மாட்சிகளாகத் தன்னைக் கற்பால் காத்தல், எந்தப் பழிக்கும் ஆட்படாது புகழுக்குரியவளாய் வாழ்தல், கணவனின் பண்பறிந்து உணவு முதலியவற்றால் ஆற்றுவன் ஆற்றல் இருவரின் புகழ்நிலைபெறக் காத்தல் ஆகிய உயர்பண்புகளை வள்ளுவர் வரையறுத்துள்ளார்.

**“மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை**
**எனைமாட்சித் தாயினும் இல்”**

**வான் தரும் கற்பினர்**

எந்தச் சூழலிலும் நெறிதவறாப் பெண்டிரை ”வான் தரும் கற்பினர்'' என்று மணிமேகலைக் காப்பியம் போற்றுகிறது. அத்தகைய கற்புநெறி வழுவாமல் தன்னையும் காத்து, தன்னைக் கொண்ட தன் கணவனையும் பாதுகாத்து, இருவர்மட்டும் நன்மை அமைந்த புகழ்நீங்காமல் காத்து, உறுதி தளராமல் வாழ்கின்றவளே பெண் என்று தளர்வில்லாதவளாக ஆண், பெண் இருவருக்கும் பழிதரும் சொல்லை நீக்கிப் பாதுகாப்பவளாகப் பெண்ணை வள்ளுவர் விளக்குகிறார்.

**தளர்வில்லாதவள் பெண்**

மனைவி நற்பண்பு உடையவளானால் வாழ்க்கையில் இல்லாதது என்ன? அவள் நற்பண்பு இல்லாதவளானால் வழ்க்கையில் இருப்பது என்ன?

**“இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்**
**இல்லவெள் மாணாக் கடை”**

இக்குறப்பாவின் முதலடியில் வரும் இல்லவள் எனும்சொல், மாண்புடையள், மனையறத்திற்குரிய இயல்புடையவள் எனும் பொருளிலும், அடுத்த அடியில் வரும் இல்லவள், மாண்பற்ற கடையவள் என்ற பொருளிலும் வந்துள்ளது. மாண்புடைய இல்லவள் வீட்டிற்கும் நாட்டிற்கும் நலம் பயக்கும் வகையில் நற்பண்புகளின் புகலிடமாகத் திகழ்கிறாள். இல்லாளை நற்குண நற்செய்கையளாகப் பரிமேலழகர் காண்கிறார். மாட்சிமையுடையவளாக மணக்குடவர் காண்கிறார். நற்பண்பு உடையவளாக மு.வ. காண்கிறார்.

**சிறந்த பேறு**

**“பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்**
**திண்மைஉண் டாகப் பெறின்”**

இந்த உலகில் ஒருவன் பெறும் பெரும்பேறுகளுள் கற்புடைய இல்லாளைக் காட்டிலும் சிறந்தபேறு ஏதுமில்லை. கற்பு என்பதற்கு, நேர்மையினின்று வழுவாமையும் வழுவ நேர்ந்தக்கால் வாழாமையும் என்றும், திண்மை எனும் சொல்லுக்கு உள்ளத்தே தோன்றி வேர் ஊன்றியுள்ள வலிமை என்றும் உரையாசிரியர்கள் விளக்கம் தந்துள்ளனர்.

**நன்மக்கட் பேறு பெறுதல்**

''அன்பர் பணிசெய்ய எனை ஆளாக்கிவிட்டுவிட்டால் இன்ப நிலைதானே வந்தெய்தும் பராபரமே'' இல்லறமல்லது நல்லறமன்று என்று தமிழ் மூதாட்டி ஔவையார் கூறுகிறார். வாழ்க்கைத் துணை நலம் பெற்றதன் அடுத்தபடிநிலை, நன் மக்கட்பேறு பெறுதல்தான். அதனால்தான் திருவள்ளுவர், அறத்துப்பாலில் இல்லறவியலில் மக்கட்பேறு எனும் அதிகாரத்தில் நன் மக்கட்பேறின் இன்றியமையாமையை வலியுறுத்துகிறார். பழியில்லாத நல்ல பண்புடைய மக்களைப் பெற்றால் ஒருவனுக்கு ஏழு பிறவியிலும் தீவினைப் பயன்கள் வந்துசேரா என்று ''எழு பிறப்பும் தீயவை தீண்டா…'' எனத் தொடங்கும் திருக்குறளில் விளக்கியுள்ளார்.

**வாழ்க்கைத்துணைநல வலிமை**

வள்ளுவம் ஆண் பெண் சமத்துவத்தை முன்வைக்கிறது. நிறைவான வாழ்வே வள்ளுவர் விரும்பும் உயர் இலக்கு. ''வள்ளுவம் மனிதனின் நெடிய வாழ்க்கைப் பயணத்திற்குத் துணையாக இல்லை, துணைநலமாகப் பெண்ணைக் கூறுகிறது. சிலர் பெண்ணைப் பேய் என்றும், காதல் ஆண்டவனின் சாபம் என்றும் கூறுவர். இல்லற வாழ்க்கையையும் துன்பம் நிறைந்த கடல் என்றும் கூறுவர். இயற்கைக்கு மாறான இந்தக் கருத்துக்களை வள்ளுவம் ஏற்பதில்லை. இந்திய தத்துவஞானமும் ஏற்பதில்லை. மனையறத்தைத் துறத்தல் என்ற கொள்கை, பெண்ணின்பால் ஏற்பட்ட வெறுப்பால் தோன்றியதன்று. தமது ஆற்றலை ஒரு சிறு எல்லைக்குள் முடக்கிக் கொள்ளாமல் பெரிய எல்லையில் வாழ்ந்திட எடுத்துக்கொண்ட உத்தி என்று வாழ்க்கைத்துணை நலம் குறித்து வாழ்க்கை நலம் எனும் நூலில் குன்றக்குடி அடிகளார் விளக்கியுள்ளார்.

**கற்பின் வலிமை**

கணவனோடு கருத்தொருமித்து வாழும் பெண், தெய்வத்தைக் கூடத் தொழாமல் தன் கணவனையே எப்போதும் மனமொன்றி நினைத்து வாழ்கிறாள். கற்புடைய பெண் மழையைக்கூட வரவழைக்கும் பேராற்றல் உடையவளாக வள்ளுவரால் காட்டப்படுகிறாள். அப்படிப்பட்ட கற்புக்கரசி, பேய் என்று சொன்னால் மழைகூடப் பெய்யும் என்பதை,

> **"தெய்வம் தொழாஅள கொழுநன் தொழுதெழுவாள்**
> **பெய்யெனப் பெய்யும் மழை"**

என்று கற்புடைய பெண்களின் ஆற்றலை வள்ளுவர் ஆழமாக உணர்த்துகிறார்.

**காப்பவள் பெண்**

தன் கற்பையும், தன் கணவரின் தகுதிவாய்ந்த புகழையும் காப்பாற்றுபவளே பெண் என்று வள்ளுவர்,

**"தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற**
**சொற்காத்துச் சோர்விலாள் பெண்"**

நற்பண்புடைய பெண்ணே வாழ்க்கைத் துணை என்று வள்ளுவர் புதியநோக்கில் விளக்கம் தருகிறார். இன்ப துன்பங்களில் துணையாய் இருப்பதால் பெண்ணுக்கு வாழ்க்கைத் துணை என்கிற சிறப்புப் பெயரைத் தருகிறார் வள்ளுவர்.

**ஏன் சிறைவைக்க வேண்டும்?**

''ஆருயிர்கட்கெல்லாம் நான் அன்பு செய்ய வேண்டும்'' என்று வள்ளல் பெருமான் சொன்னதற்கேற்ப இல்லறத்தின் நோக்கம் எல்லோரையும் அன்புசெய்தல்தான். மாறாக இல்லத்தரசியை அடிமைப்படுத்துவதோ வீட்டிற்குள் அடைத்து வைப்பதோ அறமாகாது என்று வள்ளுவர் கருதினார். மகளிரைக் காவல்வைத்துப் பாதுகாக்கும் காப்புமுறை என்ன பயனை உண்டாகும்? அவர்கள் நிறை என்னும் பண்பால் தம்மைத் தாம் காக்கும் கற்பே சிறந்தது எனும் பொருளில்,

**"சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்**
**நிறைகாக்கும் காப்பே தலை"**

என்று வள்ளுவர் மாறுபட்ட கோணத்தில் பெண்விடுதலையை அணுகுகிறார்.

**ஈருலகிலும் சிறப்பு**

கணவனைப் போற்றிக் கடமையைச் செய்யப்பெற்றால் மகளிர் பெரிய சிறப்பை உடைய தேவர்கள் வாழும் மேலுலக வாழ்வைப் பெறுவர்.

**"பெற்றார் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்**
**புத்தேளிர் வாழும் உலகு"**

இக்குறட்பாவில் "பெறின்" எனும் சொல் வணங்கப் பெறின் என்று உள்ளுறையாகச் சொல்லப்பட்டதாக உரையாசிரியர்கள் உரை வகுத்துள்ளனர்.

**ஆண்மகனின் பெருமிதம் பெண்**

புகழ்வதற்குரிய மனையாளைப் பெறாத இல்வாழ்வார்களுக்குத் தம்மை இகழ்ந்து பேசும் பகைவர்முன்னே ஆண்சிங்கம் போன்ற பெருமிதமான நடை இல்லை எனும் பொருளில் வள்ளுவர்,

**"புகழ் புரிந்த இல்லிலோக்கு இல்லை இகழ்வார்முன்**

**ஏறுபோல் பீடு நடை"**

ஆண் மகனின் கம்பீரம் அவனது இலலாள்தான் என்பது வள்ளுவர் வாக்கு.

**மங்கலம் என்ப மனைமாட்சி**

இல்லாளின் சிறப்பை ஒன்பது குறட்பாக்களால் விளக்கிய வள்ளுவர், பத்தாம் குறட்பாவில் மனைவியின் நற்பண்பே இல்வாழ்க்கைக்குமங்கலம் என்று கூறுவர். நல்ல மக்களைப் பெறுதலே அதற்கு நல்லணிகலம் என்று கூறுவர் எனும் பொருளில்

**"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்**

**நன்கலம் நன்மக்கட் பேறு"**

மனைவியின் நற்குண நற்செயல்களை இல்லறத்தின் மங்கலமாகக் கூறினாலும் அந்த மங்கலத்திற்கு நன்மக்களைப் பெறுதலை அணிகலனாய் வள்ளுவர் கருதுகிறார்.

எனவே, தன்னையும் காத்து, தன் குடும்பத்தைக் காக்கும் வலிமை பெண்ணுக்கு உண்டு. இல்லறம் எனும் நல்லறம் குடும்பப் பொறுப்புகளைத் திறனுடன் செயல்படுத்தும் ஆளுமைப்பண்பு சார்ந்து அமைகிறது. கற்பையும் அன்பையும் ஒழுக்கத்தையும் பேணி எல்லா செயல்களிலும் கணவருக்குத் துணையாய் நின்று நலம்பயக்க வாழ்வாங்கு வாழ்பவள் பெண். அப்பெண் இனத்தின் சிறப்புகளைத் தெளிவாக விளக்கி, பெண்களைப் பெருமைப்படுத்தும் அதிகாரமே வாழ்க்கைத் துணைநலம். அறிவறிந்த மக்கட்பேறு இல்லற வாழ்வை முழுமையாக்குகிறது. நல்ல பெண் நல்ல குடும்பத்தைப் பல்கலைக்கழகமாக்குகிறாள். அன்பின் வழியில் குடும்பத்தை நடத்திப் பண்பை விதைத்து உயரிய பண்பாட்டினை உருவாக்கும் பணியை வாழ்க்கைத் துணைநலம் சிறப்பாகச் செய்கிறாள்.

## இ. மானுடத்தின் மீதான திருக்குறளின் தாக்கம்

மானுடம் வென்றதம்மா என்றார் கம்பர். மானுடம் செழிக்க திருக்குறள் வழி வழி சொன்னவர் திருவள்ளுவர். மானுட வளர்ச்சியில் திருக்குறளின் தாக்கம் அதிக அறிவியல் அறிஞர் ஆல்பர்ட் ஜன்ஸ்டீனின் மூளையைத் தூண்டி உலகின் மிகச்சிறந்த கண்டுபிடிப்பான பொருண்மை ஆற்றல் சமன்பாட்டினைக் கண்டுபிடிக்குமளவு அவரைத் தூண்டியது. அவர் எப்படி இவ்வளவு பெரிய அறிவாளியாகத் திகழ்ந்தார்? என்பதை ஆராயும்பொருட்டு அவர் இறந்து ஏழுமணி நேரம் கழித்து அவர் மூளை அறுத்து எடுக்கப்பட்டு பென்சில்வேனியா பல்கலைக்கழகத்திலும் பிரிஸ்டன் மருத்துவமனையிலும் மருத்துவ அறிஞர்களால்

ஆய்வுசெய்யப்பட்டது. ஐன்ஸ்டீனின் மூளையில் எண், வெளி சார்ந்த செயலாக்க மூளையின் பகுதிகள் பெரிதாக இருந்தன. பேச்சு, மொழி சார்ந்த பகுதிகள் சிறிதாக இருந்தன என்று ஆய்வு முடிவுகளை ஆய்வறிஞர்கள் தெரிவித்தனர். ஐன்ஸ்டீன் பெரிய பேச்சாளர் இல்லை. அவர் சிந்தனையாளர், பேச்சு குறைந்தால் ஆழ்ந்த சிந்தனையாளராய் அவரால் மாறமுடிந்தது. செயல் அதுவே சிறந்த சொல். குறைவாகப் பேசி அதிகமாகச் செயல்படவேண்டும என்பதே வள்ளுவத்தின் கருத்து.

**கலாம் அவர்களின் வெற்றிக்குக் காரணம் வள்ளுவம்**

தன் உயர்வுக்கு வள்ளுவமே காரணமாகத் திகழ்ந்தது என்று நம் மேனாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே அப்துல் கலாம் என்று குறிப்பிட்டார். திருக்குறளின் சிறப்பை உணர்ந்து தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா, தமிழா எங்கும் வெல்லடா, தரணி எங்கும் செல்லடா என்று தமிழின் சிறப்பை உலகத் தமிழர்கள் கொண்டாடி வருகின்றனர்.

**நம்மை நமக்கு உணர்த்தும் வள்ளுவம்**

**“உன்னை அறிந்தால் நீ உன்னையறிந்தால்**
**உலகத்தில் போராடலாம்,**
**உயர்ந்தாலும் தாழ்ந்தாலும்**
**தலைவணங்காமல் நீ வாழலாம்”**

என்று சொன்ன கவியரசு கண்ணதாசன், ‘‘மாபெரும் சபைதனில் நீ நடந்தால் உனக்கு மாலைகள் விழவேண்டும் ஒருமாற்று குறையாத மன்னவன் உள்ளுக்குள் என நுட்பமாய் பாடினார்.

**“ஒன்றானும் தீச்சொற் பொருட்பயன் உண்டாயின்**
**நன்றாகா தாகி விடும்”**

தீய சொற்களால் உண்டாகும் தீமை ஒன்றாயினும் ஒருவனிடம் உண்டானால், அதனால் மற்ற அறங்களாலும் நன்மை விளையாமல் போகும். எனவே நாவை அடக்கிவாழ்வதே நல்ல வாழ்க்கையின் அடிப்படை.

**மாசற்றார் கேண்மை**

நாம் கசப்பென்று கைகழுவி விட்ட வேப்பம்பூவில்கூடத் தேனுண்டு என்று தெரிந்துகொண்டு தேனீக்கள் தேன் எடுத்துக் கொண்டிருக்கின்றன. வயதாகும்போது தோல்கள் சுருங்கும், சொற்களும் சுருக்கினால் நாம் பக்குவம் அடைந்துவிட்டோம் என்று வாழ்க்கை நமக்கே புரியவைக்கிறது. நம் வெற்றிக்கு மாசுமருவற்ற நம் நண்பர்கள் ஒருவகையில் காரணமாக அமைகிறார்கள் என உணர்த்த, மாசற்றார் கேண்மையை வள்ளுவர், இரு குறட்பாக்களில் முன் வைக்கிறார். குற்றமற்றவர்களின் உறவை என்றும்

மறக்கலாகாது, துன்பம் வந்த காலத்தில் உறுதுணையாய் உதவியவர்களின் நட்பை எப்போதும் விடலாகாது எனும் பொருளின் செய்ந்நன்றி அறிதல் அதிகாரத்தில் வள்ளுவர்,

**“மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க**

**துன்பத்துள் துப்பாயார் நட்பு”**

நட்பாராய்தல் அதிகாரத்தில் குற்றம் அற்றவர்களோடு நட்பு கொள்க, ஒத்து வராதவர்களின் நட்பை விலை கொடுத்தாவது விட்டுவிடுக எனும் பொருளில் மாசற்றார் கேண்மையை மீண்டும் நினைவுபடுத்துகிறார்.

**“மருவுக மாசற்றார் கேண்மைஒன்றீ த்தும்**

**ஒருவுக ஒப்பிலார் நட்பு”**

கூட இருந்தே குழி பறிக்கும் கூட்டத்தாரிடம் கவனமாய் இருக்கச்சொல்கிறார் வள்ளுவர்.

**எப்படியும் படிக்க வேண்டும்**

கற்றவர்கள் மேன்மை நிலை அடைவர் என்ற கருத்து நிலவியதால் திருமணத்திற்குப் பிரிந்து சென்று கல்வி பயின்றுள்ளான் என்பதைத் தொல்காப்பியரும் ‘‘ஓதிற் பிரிவே ஓராண்டு’’ என்கிறார். இல்லறத்தை நல்லறமாகும் மனமுதிர்ச்சியைக் கல்வியே தந்தது என உணரலாம். கல்வி உயர்வு தாழ்வுகளை அகற்றும் வலிமையுடையது என்று நம்பிய சங்ககால மக்கள் எப்பாடு பட்டாயினும் கல்வி கற்றனர் என்று சங்க இலக்கிய நூலான புறநானூறு விளக்குகிறது.

கற்கவேண்டும் என்று முடிவெடுத்துவிட்டால் தமக்குப் பாடம் கற்பிக்கும் ஆசிரியருக்கு உதவிகள் பல செய்தும், மிகுந்த பொருளைக் கொடுத்தும், பணிவோடு வெறுப்பின்றி கல்வி கற்பவர் உயர்ந்தோர். எக்குலத்தவன் கற்றவனாயினும் வேறுபாடு பார்க்காமல் உயர்குலத்தவர்களும் கல்வி கற்கச் செல்வர் என்று புறநானூறு இலக்கியத்தில் ஆரியப்படை கடந்த பாண்டியநெடுஞ்செழியன் பாடல்மூலமாக அறியமுடிகிறது.

**“உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்**

**பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே**

**பிறப்போர் அன்ன உடன்வயிற் றுள்ளும்**

**சிறப்பின் பாலால் தாயும் மனம் திரியும்**

**ஒருகுடி பிறந்த பல்லோர் உள்ளும்**

**மூத்தோன் வருக உண்ணாது அவருள்**

**அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்**

**வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்**

**கீழ்ப்பால் ஒருவன் கற்பின்**

**மேற்பால் ஒருவனும் அவன் கண் படுமே”**

பாடிய பாடல் சங்ககாலத்திலேயே கல்வி முக்கியத்துவத்தோடு சிறப்புற்றிருந்ததை அழகாக விளக்குகிறது. செல்வந்தரிடம் உதவிகேட்டுச் செல்லும் எளியவர் எவ்வாறு பணிந்து நிற்கிறாரோ அவ்வாறு ஆசிரியரிடம் பணிந்து கற்பவரே சிறந்தவர். அவ்வாறு கல்லாதவர் இழிந்தவர் எனும் பொருளில்,

**“உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்**
**கடையரே கல்லா தவர்”**

திருவள்ளுவர், கல்வி எனும் அதிகாரத்தில் விளக்கியுள்ளார்.

திருக்குறள் தாக்கமில்லாத வாழ்க்கை இல்லை. திருக்குறள் தாக்கத்தால் உயராதவர்கள் யாருமில்லை.

## ஈ. திருக்குறளும் மாறாத விழுமியங்களும்

**யாகாவார் ஆயினும் நாகாக்க…**

தேவையில்லாதவற்றைத் தேவையில்லாத நேரத்தில் பேசி வீண் வம்பை விலைகொடுத்து வாங்கி அதனால் விளையும் துன்பத்தை மனத்தில் போட்டு குழப்பி ஏன் நம் வாழ்வைச் சீரழித்துக்கொள்ள வேண்டும். அதனால்தான் அடக்கமுடைமை அதிகாரத்தில் திருவள்ளுவர் யாகாவார் ஆயினும் நாகாக்க… எனும் குறளை முன்வைத்தார்.

**“யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்**
**சோகாப்பர் சொல்இழுக்குப் பட்டு”**

இக்குறள் வாழ்வில் எதைக் காக்கவேண்டும் என்பதை மிகத்தெளிவாக எடுத்துரைக்கிறது. தம்மால் காக்கப்படுவன எல்லாவற்றையும் காக்கமாட்டாராயினும் நா ஒன்றனையும் காக்க, அதனைக் காவாராயின் சொற் குற்றத்தின்கட் பட்டுத் தாமே துன்புறுவர் என்று உரையாசிரியர் பரிமேலழகர் விளக்கவுரை எழுதியுள்ளார்.

அப்படி நாவைக் காக்காவிட்டால் சோகத்தின் மாட்டே பிணிக்கப்படுவர் என்று மணக்குடவர் விளக்கம் தருகிறார். 13-வது அதிகாரமான அடக்கமுடைமை அதிகாரத்தில் எவ்வாறு பேசக்கூடாது என்று அறிவுறுத்திய வள்ளுவர், 19-வது அதிகாரமாகப் புறங்கூறாமை எனும் அதிகாரத்தை முன்வைத்து அதன்பின்னும் மனநிறைவடையாத வள்ளுவர், 20-ஆவது அதிகாரமாகப் பயனில் சொல்லாமை எனும் அதிகாரத்தைப் படைத்துள்ளார்.

பிறப்பு என்கிற பக்கத்திற்கும் இறப்பு என்கிற பக்கத்திற்கும் இடையே மகிழ்ச்சி மனநிறைவு, பக்குவம் என்கிற பக்கங்களை எழுத வந்துள்ளோம் என்று நினைத்தால்

எப்போதும் எதிலும் துன்பம் வராது. அடுத்தடுத்து அடுக்கிவரும் சோதனைகள் சிறப்பான வாழ்வு நோக்கி நம்மை ஆற்றுப்படுத்துகின்றன. நம்மைப் பக்குவப் படுத்துகின்றன. அவையே நம்மைப் பண்படுத்தும் பண்பாடாகவும் மாறுகிறது.

**தீச் சொல்லின் தீமை**

**தீயினால் சுட்டபுண் உள்ஆறும் ஆறாதே**
**நாவினால் சுட்ட வடு''**

தீய சொற்களை வள்ளுவர், தீயினால் சுட்ட புண்ணுடன் இணைத்துப் பார்க்கிறார்.

நாம் என்கிற அகந்தை நம் செயல்களை மமதையோடு செய்யச் செய்கிறது. தடித்த சொற்களை அடுத்தவரை நோக்கிப் பேசச் செய்கிறது. எல்லாம் இறைவன் நடத்துகிறான்! நாம் வெறும் கருவிதான் என்கிற எண்ணம் நம்மிடம் வந்துவிட்டால் நமக்கு எப்போதும் மகிழ்ச்சிதான். நடப்பதெல்லாம் நன்மைக்கே! என எண்ணத் தொடங்கிவிட்டால் சொற்களில் சூடு குறைந்து அமைதியாக அடக்கமாக வாழத் தொடங்குவோம். சுடாத செங்கலால் கட்டடம் கட்டமுடியாது. சூளையில் நன்றாகச் சுடப்பட்ட கல்தான் உறுதியாகக் காலம் கடந்து கட்டடமாக உருப்பெறுகிறது. அதைப்போல் ஒவ்வொரு நாளும் நாம்பெறும் அனுபவங்கள் நம்மை அடுத்தடுத்து பக்குவமாய் வாழ வழிகாட்டுகின்றன.

**பயனில சொல்லாமை**

சொற்களின் ஆற்றல் மகத்தானது. ஒரு சொல் வெல்லும் ஒரு சொல் கொல்லும் எனும் உண்மையை உணர்ந்தவர்கள் பயனற்ற சொற்களை ஒருநாளும் பயன்படுத்தவே மாட்டார்கள். நாம் விதைத்ததைத் தான் நாம் அறுவடை செய்வோம். நல்லதையே விதைப்பவருக்கு நல்லதையே இறைவன் அருளுகிறான். தங்கள் சொற்களாலும் மனிதர்கள் தங்களையே இப்பூமியில் விதைத்துக் கொள்கிறார்கள். அவரவர் விதைத்தவையே அவரவர்க்கும் கிடைக்கிறது. அதனால் ஒருபோதும் பயனற்ற சொற்களை பயன்படுத்தக்கூடாது என்று வள்ளுவர் பயனில சொல்லாமை அதிகாரத்தில் பயன்படுத்துகிறார்.

**"நயன்இல சொல்லினும் சொல்லுக சான்றோர்**
**பயன்இல சொல்லாமை நன்று''**

**வசைபாடி வாழவேண்டுமா?**

கொலை கொள்ளை மட்டும் குற்றம் என்பதைத் தாண்டி, பயனில சொற்களைப் பயன்படுத்துவதும் குற்றமே என்கிறார் வள்ளுவர். கண்ணதாசன் தன் வாழ்வில் தான் பயன்படுத்திய தேவையற்ற சொற்களால் பெற்ற துன்பத்தையும் துயரத்தையும் மன உறுதியால் தாங்கிக்கொண்டு இப்படி எழுதினார்.

‘‘பாாக்கத் தெரிந்தால் பாதை தெரியும், பார்த்து நடந்தால் பயணம் தொடரும், பயணம் தொடர்ந்தால் கதவு திறக்கும். கதவு திறந்தால் காட்சி கிடைக்கும். காட்சி கிடைத்தால் கவலை தீரும். கவலை திறந்தால் வாழலாம்’’ என்று வாழ நினைத்தால் வாழலாம் என்று உறுதி தருகிறார். ‘‘நாளைப் பொழுதை இறைவனுக்களித்து, நடக்கும் வாழ்வில் அமைதியைத் தேடு’’ என்று அதனால்தான் கவியரசரால் சொல்ல முடிந்தது. எப்போதும் யாரையாவது வசைபாடிக் கொண்டே வாழ்வதைவிட எல்லாம் அவன் செயல் என்று எண்ணி, ‘‘உனக்கும் கீழே உள்ளவர் கோடி நினைத்துப் பார்த்து நிம்மதி தேடு’’ என்பது எத்தனை இயல்பான உண்மை!

**‘‘அறம்கூறான் அல்ல செயினும் ஒருவன்**
**புறம்கூான் என்றல் இனிது’’**

புறம்கூறாமை உயர்வானது என்கிறார் வள்ளுவர்.

**பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்**

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று சகோதரத்துவம் பேசிய மூவாயிரம் ஆண்டுகள் ஆன தமிழ்ப பண்பாடு பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலை விருந்தோம்பல் பண்பாடாக முன்வைத்தது.

**‘‘பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாந் தலை’’**

கிடைத்ததைப் பகுத்துக் கொடுத்துத் தானும் உண்டு. பல உயிர்களையும் காப்பாற்றுதல் அறநூலார் தொகுத்த அறங்களில் தலையாய அறமாகும் என்கிறார் வள்ளுவர். கொல்லாமை எனும் அதிகாரத்தில் வள்ளுவர் இக்கருத்தை முன்வைக்கிறார்.

**இன்மை என ஒரு பாவி**

நல்குரவு அதிகாரத்தில் வறுமை எனும் பாவி ஒருவனை நெருங்கினால் அவனுக்கு மறுமையின்பமும் இன்மை இன்பமும் இல்லாமல் போகும் நிலைமை வரும் என்கிறார் திருவள்ளுவர்.

**‘‘இன்மை எனவொரு பாவி மறுமையும்**
**இம்மையும் இன்றி வரும்’’**

என்று இம்மையையும் மறுமையையும் கெடுக்கும் பாவியாக வறுமையை வள்ளுவர் முன்வைக்கிறார்.

இக் குறளுக்கு விளக்கம் தரும் பேராசிரியர் சாலமன் பாப்பையா, ‘‘இல்லாமை என்ற ஒரு பாவி ஒருவனிடத்தில் சேர்ந்தால், அவன் பிறர்கும் கொடுக்க இல்லாதவன்

ஆவதால் அவனுக்கு மறுமை இன்பமும் இல்லை. தானே அனுபவிக்க ஏதும் இல்லாததால் இம்மை இன்பமும் இல்லை'' என விளக்கம் தருகிறார்.

**விருந்தோம்பல்**

ஏழையின் பசியைப் போக்குவோரிடத்தில் தான் உயர்வான அறவாழ்வு அமைந்துள்ளது. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலே உயரிய அறம் என்பதை வள்ளுவர்,

**“இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**

**வேளாண்மை செய்தற் பொருட்டு”**

இல்லறத்தைப் போற்றி வாழ்வது, விருந்தினரை வரவேற்று அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்காகவே என்று விருந்தோம்பல் அதிகாரத்தில் விளக்குகிறார்

நூறு வீரர்கள் சேர்ந்து ஒரு முகாமை அமைக்கலாம். ஆனால் ஒரு நல்லறம் அமைய ஒரு பெண் வேண்டும் என்றார் கவிஞர் ஹோமர். இல்லறம் எனும் நல்லறம் சிறக்கப் பெண்களின் சிறப்பைப் பாடினார் வள்ளுவர்.

**“விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா**

**மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று”**

விருந்தினர் வீட்டின் வெளியே இருக்க தான் மட்டும் தனியே உண்பது சாவா மருந்தாகிய அமிர்தமே ஆனாலும் அது விரும்பத்தக்கது இல்லை என்று வள்ளுவர் விளக்குகிறார்.

தன் உடம்பில் உள்ள முட்களால் வாழும் மீன் ஒரேயொரு முள்ளில் தன் உயிரைத் துறக்கிறது. எதார்த்தமே வாழ்க்கை.

**நன்றிமறவாமை எனும் உயர்பண்பு**

ஒருவர் செய்த உதவிக்கு அவருக்குத் தம் நல்லுணர்வையும் மகிழ்ச்சியையும் கடன்பாட்டையும் தெரிவித்தலே நன்றியாகும்.

**“காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்**

**ஞாலத்தின் மாணப் பெரிது”**

நமக்கு நெருக்கடியான நேரத்தில் ஒருவர் செய்த உதவியானது அளவில் சிறியது என்றாலும் அது உலகத்தைவிடப் பெரிதாக மதிக்கப்படும். இதையே பாரதவெண்பா.

**“முன்னொருவன் செய்த உபகாரம் மூவுலகும்**

**தன்னைக் கொடுத்தாலும் சாலுமே”**

என விளக்குகிறது. ஒருவர் தமக்குச் செய்யும் தினையளவு நன்மையைக் கூட பனையளவாக நினைத்துப் பார்க்கும் உயர் எண்ணம் கொண்டவர்களும் இவ்வுலகில் வாழத்தான் செய்கிறார்கள். நாலடியாரும் இதே கருத்தை இவ்வாறு அழகாக விளக்குகிறது. ''தினையனைத்தே ஆயினும் செய்நன்றுண்டால் பனையனைத்தா உள்ளுவர் சான்றோர'' என்கிறது.

**"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்**

**கொள்வர் பயன்தெரி வார்"**

**கல்வியே உயர்வானது**

கல்வியின் இன்றியமையாமையை உணர்ந்த வள்ளுவர், கல்வி, கல்லாமை, கேள்வி எனும் அதிகாரங்களில் அழுத்தமாக ஆழமாக எடுத்துரைத்துள்ளார். கல்வி அதிகாரத்தின் முதல் குரளில் திருவள்ளுவர்,

**"கற்க கசடற கற்பவை கற்றபின்**

**நிற்க அதற்குத் தக"**

எனும் குறட்பாவின் முதல் சொல்லில் கற்க என்று ஆணையிடும் வள்ளுவர், கற்கத் தகுந்த நூல்களைக் கசடு, குற்றம் நேரா வண்ணம் குற்றமறக் கற்க வேண்டும், அவ்வாறு கற்றபின் தான் கற்ற நூல்களில் எவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறதோ அவ்வாறு நடக்கவேண்டும் என்று அறிவுறுத்துகிறார். அதாவது உண்மையான கல்வியின் நோக்கம் என்பது தன்னைச் சீரமைத்தல், கல்வியால் பெற்ற உயர்ந்த மதிப்பீடுகளின்படி வாழ்க்கை வாழுதல் என்பதாக வள்ளுவர், கல்வி அதிகாரத்தின் முதல் குறளின் ஈற்றடியாக நிற்க அதற்குத் தக என்று எழுதியுள்ளார். 13-ம் நூறறாண்டைச் சார்ந்த முனைப்பாடியார் இயற்றிய அறநெறிச்சாரம் எனும் நீதிநூலில் இதே கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

**"எப்பிறப்பாயினும் ஏமாப் பொருவதற்கு**

**மக்கட் பிறப்பில் பிறிதில்லை – அப்பிறப்பில்**

**கற்றலும் கற்றவை கேட்டலும் கேட்டதன்கண்**

**நிற்றலும் கூடப் பெின்"**

எந்தப் பிறப்பானாலும் மனிதர்களுக்கு நிலைத்த, நீடித்த பாதுகாப்பு என்பது கற்பதும் கற்றவர்களிடம் பாடம் கேட்டலும் கேட்டலும் கேட்டபடி வாழ்வில் வாழ்ந்து நிற்பதும் சாலச்சிறந்தது என்று திருவள்ளுவருக்கு வெகுகாலம் கழித்து வந்த அறநெறிச்சாரத்திலும் கருத்துரைத்துள்ளது. வள்ளுவரின் கருத்தியல் காலம் கடந்தும் வாழ்வதையும் தொடர்வதையும் உணரமுடிகிறது.

கற்றவர்களுக்கு எல்லா நாடும் சொந்தநாடுதான். எல்லா ஊரும் சொந்த ஊர்தான். அப்படி இருப்பதைத் தெரிந்தும் கூட ஏன் அவன் இறக்கும் வரையில் ஏன் கல்லாமல் இருக்கிறான்? என வினவுகிறார். கல்வி, கண்டம் கடந்து நாடு கடந்து ஊர் கடந்து நம்மை உலகனாக மாற்றுகிறது. கற்றோர்களை நாடுகளின் எல்லைக்கோடுகள் சுருக்கி விடாது, விசாலமான உயர் மதிப்பைக் கல்வி நமக்குப் பெற்றுத் தருகிறது.

**"யாதானும் நாடாமால் ஊராமால் என்ஒருவன்**

**சாம்துணையும் கல்லாத வாறு"**

இதேகருத்தைப் பழமொழி நானூறு எனும் இலக்கியம்,

**"ஆற்றவும் கற்றார் அறிவுடையார் அ.்.துடையார்**

**நாற்றிசையும் செல்லாத நாடில்லை அந்நாடு**
**வேற்றுநாடாகாதமவே யாம் ஆயினால்**
**ஆற்றுணா வேண்டுவதில்”**

என்று குறிப்பிடுகிறது.

## உ. சமூக அரசியல் பொருளாதார நிகழ்வுகளில் திருக்குறளின் பொருத்தப்பாடு

### அன்றாட வாழ்வியல் சிக்கல்களும் வள்ளுவத் தீர்வுகளும்

அறிவியல் வளர்ச்சியால் இவ்வையம், மகத்தாக வளர்ச்சியைப் பெற்றுவரும் இந்நாளில் அதற்குச் சற்றும் குறையாமல் சிக்கல்களும், குழப்பங்களும் தீவிரவாதத்தாலும் கடும்நோயின் தாக்குதல்களாலும், வறுமையாலும், பொருளாதாரச் சிக்கல்களாலும், சாதி சமய இன வேறுபாடுகளாலும், போர் வெறியாலும், உலக நாடுகள் தாக்குண்டுச் சீரழிவைச் சம்பாதித்துக் கொண்டிருக்கின்றன. கலாச்சாரச் சீர்கேடு, பொருளைத் தேடிப் பேராசையோடு இரவுபகலாகப் பணியாற்ற வேண்டிய நெருக்கடிகள் அவற்றால் ஏற்படும் மனச்சிதைவுகள் கூட்டுக் குடும்ப அமைப்புகள் உலகமயமாதலால் உடைந்து தனிக் குடும்ப அமைப்புகளானதன் விளைவாக ஏற்படும் மணமுறிவுகள், மது போதைப் பொருட்களை நாடிச் சென்று தற்காலிக மனநிம்மதி பெற வேண்டியதால் பெற்ற நோய்கள், பொருளாதாரம் உள்ளோரே உயர்கல்வி பெற முடியும் என்ற நிலையில், கல்வி பெறமுடியாமல் போன நிகழ்வுகள், குடும்பச் சிதைவால் பெருகிவரும் பரத்தமைகள், ஒழுக்கச் சீர்கேட்டில் உதித்த எய்ட்ஸ் போன்ற நோய்கள், அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத்தறித்த குறளின் தேவையை, அதன் வழிகாட்டலாப் பெரிதும் நாடுகின்றன. ஜி.யூ. போப் கிண்டர்ஸ்லி, எல்லிஸ், ட்ரூ, கோவர், ராபின்சன், லாசரஸ், ஸ்காட், வீரமாமுனிவர் போன்றோரால் உலகின் பார்வைக்குக் கொண்டு செல்லப்பட்ட உலகப் பொதுமறையாம் திருக்குறள், வையகச் சிக்கல்களுக்கெல்லாம் தீர்வுகளை உலகத்தாருக்கு வழங்கிக் கொண்டிருக்கிறது.

**“எல்லாப் பொருளும் இதன்பால்உள இதன்பால்**
**இல்லாத எப்பொருளும் இல்லையால்”**

என்ற மதுரைத் தமிழ்நாகனாரின் வரிகளுக்கேற்ப எல்லாப் பொருள்களையும் தன்னுள்ளே பெற்ற நம் தன்னிகரற்ற வள்ளுவம், உலகின் சிக்கல்களுக்கான தீர்வுகளையும் உள்ளுக்குள் வைத்திருக்கிறது என்று இக்கட்டுரை விளக்குகிறது.

### தீவிரவாதம் தீர வழி சொன்ன வள்ளுவம்

வஞ்ச மனம் கொண்ட ஒருசில மனிதர்களின் கடுஞ்சினத்தால் கொடூரமான இரு உலகப் போர்களை உலகம் எதிர்கொண்டது. உலகின் உயர்ந்த நிலையிலிருந்த தலைவர்களாக மகாத்மா காந்திஜி, இந்திரா காந்தி, ராஜிவ் காந்தி, கென்னடி, பூட்டோ போன்றோரைத் தின்று செரித்த தீவிரவாதம் இன்னும் தீர்ந்தபாடில்லை. வஞ்ச மனத்தோர் செய்யும் தீச்செயல்களைப் பார்த்து அவர்களுக்குள்ளிருக்கும் ஐம்புலன்களாக நிற்கும் அப்பூதங்களே சிரிக்கும் என்கிறார் வள்ளுவர்.

**"வஞ்ச மனத்தான் படிற்றுஒழுக்கம் பூதங்கள்**
**ஐந்தும் அகத்தே நகும்"**
**"உலகின் அனைத்து நாடுகளும் இன்று சேர்த்து**
**வைத்திருக்கும் அணு ஆயுதங்களைக் கொண்டு**
**ஏழுமுறை இவ்வுலகை மீண்டும் மீண்டும்அழிக்கலாம்"**

என்ற கருத்து நமக்கு அதிர்ச்சி தருவதாக அமைகிறது. கோடானு கோடி மக்கள் ஒருவேளை உணவுக்குக்கூட வழியில்லாமல் இறந்து கொண்டிருக்க, உலக நாடுகள் இராணுவத்திற்காகச் செலவிடும் தொகையோ பல கோடிகள், நாடு வல்லரசாக வள்ளுவர் வழி சொல்லவில்லை.

**"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்**
**சேரா தியல்வது நாடு"**

என்று பசியும் பகையுமற்ற நாட்டினை வள்ளுவர் காண விழைகிறார்.

**"தீபத்தை வைத்துக் கொண்டு திருக்குறளும் படிக்கலாம்**
**தீயைக் கொண்டு மூடரெல்லாம் ஊரைக்கூட எரிக்கலாம்**
**கோபம் மட்டும் அடங்கிவிட்டால் கோபுரத்தில் ஏறலாம்**
**குணமிருந்து மனமிருந்தால் உடவுளாக மாறலாம்".**

என்ற கண்ணதாசனின் கருத்துக்கேற்பச் சேர்ந்தாரைக் கொல்லும் நெருப்பான சினத்தை விட்டொழித்தால் தீவிரவாதம், வன்முறை, சண்டைகள் இருக்காது.

**"சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்**
**ஏமப் புணையைச் சுடும்"**

**வறுமை நோய் தீர வழி சொன்ன வள்ளுவம்**

உலகம் தீர்க்க இயலாத கொடிய நோயாகக் திகழ்வது வறுமை உண்ண உணவு, உடுக்க உடை, வசிக்க வசிப்பிடம் ஆகியன இல்லாமல் உலகில் தோன்றிய மனதிர்களில் 30மூ பேர் வாடி வதைப்பட்டு வருகின்றனர். சோமாலியா போன்ற நாடுகளில் உண்ண உணவின்றி இலட்சக்கணக்கான மக்கள் இறப்பினைத் தழுவினர். தாது வருடபஞ்சம் இந்தியாவையே ஆட்டிப் பார்த்தது. பசிக் கொடுமையை நன்கறிந்த மதுரைக்

கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார். பசியை அகற்ற அமுதசுரபியேந்திய மணிமேகலையைக் காப்பியத் தலைவியாகப் படைத்தார். தீவதிலகையைக் கொண்டு மணிமேலைக்குப் பசியின் கொடுமையை உணர்த்தினர்.

**"ஆற்றுநர்க் களிப்போர் அறவிலை பகர்வோர்**
**ஆற்றா மக்கள் அரும்பசி களைவோர்**
**மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை**
**மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தேரே"**

என்று உணவு கொடுத்தோரை உயிர் கொடுத்தோராக உணர்த்தினார். பசி வந்தால் பத்தும் பறந்து போகும் என்று "நல்வழி"யில் ஔவை உணர்த்துகிறார்.

**"மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை**
**தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை தேனின்**
**கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் - பத்தும்**
**பசிவந் திடப்பறந்து போம்"**

பசியின் கொடுமையை அறிந்த அருட்பிரகாச இராமலிங்க வள்ளலார், வடலூரில் உணவிடும் சத்திரத்தை அமைத்தார். "விருந்தோம்பல்" எனும் அதிகாரத்தில் "விருந்தினருக்கு உணவிட்டவர் வீட்டில் திருமகள் மனம் மகிழ்ந்து செல்வத்தைப் பெருக்கி வாழ்வாள்" என்று திருவள்ளுவர் கருத்துரைக்கிறார்.

**"அகனமர்ந்து செய்யான் உறையும் முகனமர்ந்து**
**நல்விருந் தோம்புவான் இல்"**

வறுமையின் கொடுமையில் வாழ்வது. "நெருப்பினுள் துஞ்சுவதைப் போன்றது" என்று ஒப்புமைப்படுத்துகிறார் வள்ளுவர்.

**"நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்**
**யாதொன்றும் கண்பாடு அரிது"**

நெருப்பில்கூடத் தூங்கலாம். வறுமையிலிருப்போர் சிறிதும் கண்மூட இயலாது என்று கூறும் வள்ளுவார், வறுமை நோய்தீர ஈகையை மருந்தாகத் தருகிறார். எல்லாரும் எல்லாமும் பெறும்போது, அங்கு இல்லாமை என்பது இல்லாது போகும். ஏழைகளின் பசியைப் போக்கச் செல்வந்தர்கள், வாரி வழங்கிய செல்வம், பின் அவர்களுக்கே உதவும் என்று வறுமை தீர வள்ளுவர் வழி சொல்கிறார்.

**“அற்றார் அழிபசி தீர்த்தல் அ·:தொருவன்**

**பெற்றான் பொருள்வைப் புழி”**

வறியவர்களுக்கு வாரி வழங்கும்போது வறுமை அழியும் என்பது வள்ளுவரின் தீர்வு.

## ஊழலை ஒழிக்க வழிசொன்ன வள்ளுவம்

உலகினை பொருளாதாரத்தைக் கெடுக்கும் தீயசக்தியாக ஊழல் திகழ்கிறது. ஏழை மக்களின் வியர்வையில் விளைந்த பணம், கறுப்புப் பணமாகக் கிடக்கிறது.

**“1948-லிருந்து 2008 வரை முறையற்ற வகையில்**

**சேர்த்த செல்வம் ஏறத்தாழ ரூ. 213 பில்லியன்**

**டாலர்கள் (ரூ.9.7 லட்சம் கோடி)”**

என்று வாசிங்டனிலிருந்து செயல்படும் பொருளாதார நடைமுறைகளுக்காகச் செயல்படும் அமைப்பு புள்ளிவிவரத்தை வெளியிட்டுள்ளது. ஊழலின் ஊற்றுக்கண், கண்காணிப்பு இல்லாத பெரு சுதந்திரநிலையே ஆகும்.

**“வினையைச் செய்து கொண்டிருக்கிறானா என்றும்**

**செயல் ஒழுங்காக நடக்கிறதா என்றும் அரசன்**

**தினந்தோறும் பார்த்துக் கொள்ளவேண்டும்”**

என்று வள்ளுவர் கருத்துரைக்கிறார். ஊழலை ஒழிக்க அதையே நாம் தீர்வாக எடுத்துக் கொள்ளலாம்.

**“நாடோறு நாடுக மன்னன் வினைசெய்வான்**

**கோடாமை கோடா துலகு”**

‘‘செங்கோன்மை’’ எனும் அதிகாரத்தில் தன் கீழ்வாழ்வார் குற்றஞ்செய்தால் அக்குற்றத்தை நாடி, யாவர் மட்டுங் கண்ணோடாது, நடுவுநிலைமையைப் பொருந்தி அக்குற்றத்திற்குச் சொல்லிய தண்டத்தை வழங்குவதே அரசின் கடமை என்கிறார் வள்ளுவர்.

**“ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டுந்**

**தேர்ந்துசெய் வ·:தே மறை”**

தவறு செய்வோர் யாராக இருந்தாலும் அதைச் சரிசமமாகப் பாவித்து நடுநிலையோடு அரசன் ஆராய்ந்தால், அதரற்குரிய தண்டனையை வழங்கினால் ஊழல் ஒழியும்.

### கல்வியறிவற்ற சிக்கலுக்கு வழி சொன்ன வள்ளுவம்

எழுத்தறிவின்மை உலகம் எதிர்நோக்கியிருக்கும் மிகப் பெரிய சிக்கலாக அமைந்துள்ளது. இந்தியா விடுதலை பெற்று 64 ஆண்டுகளைக் கடந்து பின்னும் அனைவருக்கும் கல்வி என்பது கானல் நீராகவே உள்ளது. இந்தியாவில் உயர்கல்வி பெறுவோரின் விழுக்காடு 12மூ மட்டுமே. அனைவருக்கும் கல்வியைத் தருவதற்காக

உலகின் அனைத்து நாடுகளும் போராடி வருகின்றன.  திருக்குறள் உட்பட அனைத்து நீதி இலக்கியங்களும் கல்வியின் பெருமையைப் போற்றியுள்ளன.

**“எம்மை உலகத்தும் யாம்காணோம் கல்விபோல்**

**மம்மர் அறுக்கும் மருந்து”**

என்று நாலடியார் வாழ்வின் மயக்கம் போக்கும் அருமருந்தாகக் கல்வியை காட்டுகிறது. ‘‘கல்வி’’ எனும் அதிகாரத்தில் கல்வியைத் திருவள்ளுவர் வலியுறுத்திய அளவு வேறெந்த இலக்கியமும் வன்மையாக வலியுறுத்தவில்லை.

**“கண்ணுடைய ரென்பவர் கற்றுறோர் முகத்திரண்டு**

**புண்ணுடையர் கல்லா தவர்”**

என்று வள்ளுவர் கற்றோரையும் கல்லாதவரையும் வேறுபடுத்துகிறார்.

**“ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்**

**கெழுமையும் ஏமாப் புடைத்து”**

இப்பிறவியில் நாம் கற்கும் கல்வி, ஏழு பிறவிகளுக்கும் நம்முடன் வந்து உதவும் என்கிறார்.

**வள்ளுவர் விலக்க விரும்பிய மதுவும் விலை மாதுவும்**

உலகை அச்சுறுத்தும் கொடிய எய்ட்ஸ்நோய் உயிர்க்கொல்லி நோயாகக் கோடிக்கணக்கான விலை மதிப்பில்லா மனிதர்களைப் பலிவாங்கிக் கொண்டுள்ளது. ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 1-வது நாளை உலக எய்ட்ஸ் நோயாளிகள் தினமாக உலகம் அனுசரித்து வருகிறது.  சங்ககாலம் பரத்தையர் பிரிவை ஒழுக்கமாகக் கருதி அனுமதித்தமைக்கு எதிராக வள்ளுவர் ‘‘வரைவின் மகளிர்’’ அதிகாரத்தைப் படைத்துப் பரத்தமை ஒழுக்கத்தைச் சாடுகிறார்.

**”பொருளை விரும்பும் விலைமகளின் தழுவல்**

**இருட்டறையில்பிணத்தைத் தழுவியது போன்றது”**

என்று அதனை விளைவைப் புரிய வைக்கிறார்.

**“பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையுள்**

**ஏதில் பிணந்தழீஇ அற்று”**

எய்ட்ஸ் நோய்க்கு எதிராக இதைவிடச் சிறந்த விளம்பர வாசகத்தைத் தந்துவிட முடியாது.

உலகை இன்று ஆட்டிப்படைத்து வருவது ‘‘மது’’ எனும் அரக்கன்.

**“தமிழகத்தில் இப்போதுமு தினசரி மது அருந்துவோரின்**

**எண்ணிக்கை 49 லட்சம் என்பதும், அவர்களின்**

**சராசரி வயது 28 லிருந்து 13-ஆக குறைந்துள்ளது**

**என்பதும் அதிர்ச்சியளிக்கும் தகவல். மேலும்**
**தற்கொலைக்கு முயல்வோரில் 37 சதவீதத்தினர்**
**மதுபழக்கம் உள்ளவர்களே''**

எனும் ஆய்வாளர் முத்துக்குமாரின் கருத்து உண்மையை உணர்த்துகிறது. வரைவின் மகளிர் அதிகாரத்திற்கு அடுத்து ''கள் உண்ணாமை'' அதிகாரத்தை வைத்து மது அருந்துவதற்கு எதிராக வள்ளுவர் கருத்துரைக்கிறார்.

''உறங்குபவர் இறந்தவரைப் போலாவார், மது, அருந்துபவர் நஞ்சுண்பவரைப் போலாவார்'' என்ற பொருளில்,

**''துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்**
**நஞ்சுண்பார் கள்ளுண் பவர்''**

கொடிய நஞ்சாம் மதுவும் நோய்தரும் விலைமாதுவும் அடுத்தடுத்து வள்ளுவரால் விலக்கச் சொன்ன தீமைகள்.

**''மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**
**ஆகுல நீர பிற''**

என்று சுருக்கமாகவும் சுருக்கென்று தைக்கும் வகையிலும் வாழ்வியல் நெறி சொன்ன இலக்கியம் திருக்குறள்.

**''பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்''**

என்று சாதி மத இன மொழி பேதங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்த அற்புத இலக்கியம் திருக்குறள்.

கொல்லாமை, கள் அருந்தாமை, பிறனில் விழையாமை, புலால் உண்ணாமை, புறங்கூறாமை, இன்னா செய்யாமை, பயனில் சொல்லாமை எனும் ஆமைகளை நம்முள் புகவிடாமல் அறக்கருத்துக்களைக் கூறியவர் திருவள்ளுவர். வையகத்தின் எல்லாச் சிக்கல்களுக்கும் வள்ளுவத்தில் தீர்வினை நம்மால் தேடியெடுத்துவிட முடியும். வள்ளுவம் தனிமனித ஒழுக்கத்தை உயர்வாகக் கருதியது. உலகப் பார்வையோடு எக்காலத்துக்கும் எல்லோர்க்கும் எப்போதும் பொருந்தும் உயரிய விழுமியங்களை உலகப் பொதுமறை திருக்குறள் ஈராயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகத் தந்து வருகிறது.

## ஊ. திருக்குறளில் தத்துவக் கோட்பாடுகள்

**ஊழ்வினை**

வள்ளுவர் முன்வைத்த தத்துவக் கோட்பாடு தர்க்கம் சார்ந்தது. எக்காலத்திற்கும் மாறாதது. ஊழ்வினை வேறு, விதி வேறு என்று வள்ளுவர் வேறுபடுத்திப் பார்க்கிறார். முற்பிறவியில் நாம் செய்த நல்லது கெட்டது அடுத்தடுத்த பிறவிகளுக்கும்

ஊழ்வினையாகத் தொடரும் என்பது வள்ளுவரின் தத்துவக் கோட்பாடு. தவறு செய்பவனுக்கு அவன் செய்த தவறு, கர்மாவாகப் பின்தொடர்கிறது.

**“அவ்விய நெஞ்சத்தா னாக்கமுஞ் செவ்வியான்**

**கேடும் நினைக்கப் படும்”**

பொறாமை கொண்ட நெஞ்சத்தானின் ஆக்கமும், பொறாமையற்ற சிறந்தவனுடைய கேடும், மக்களால் எப்போதும் நினைக்கப்படும் என்று வள்ளுவர் கூறுவதன் காரணம் இதுதான்.

**மனம் மாசில்லாமல் வாழ்வதே சிறந்த அறம்**

மனம் தூய்மையாக இருப்பதே அறம், மற்றவை ஆராவாரமின்றி வேறில்லை என்ற திருவள்ளுவரின் நெறி.

**இறைவழிபாடு ஒன்றே கவலையை மாற்றும்**

தனக்குவமை இல்லாதவன் பாதத்தைச் சரணாகதி அடைந்தவர்களுக்கு மனக்கவலை ஏன் வரப்போகிறது? என்று வள்ளுவர் வினவுகிறார்.

**“தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்**

**மனக்கவலை மாற்றல் அரிது”**

**நற்பொருள்**

அறம், பொருள், இன்பம் பேசிய வள்ளுவர், வீடுபேற்றுக்கென்று தனியே பால் அமைத்து குறட்பாக்கள் இயற்றவில்லை. அதாவது இம்மூன்றையும் ஒன்றாகக் கடைப்பிடித்தால் நான்காவதாக அமையும் வீடுபேறு கட்டாயமாய் கிடைக்கும் என்கிறார் வள்ளுவர்.

**பசி வந்தாலும் தவறு செய்யக்கூடாது**

**“ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை**

**மாற்றுவார் ஆற்றலின் பின”**

இக் குறளுக்கு விளக்கம் தரும் மணக்குடவர், பெரியாராது பெருமை பசியைப் பொறுத்தல் என்கிறார். பரிமேலழகர், “தாமும் புசித்துப் பிறரையும் அது தீர்க்கமாட்டாதார் ஆற்றலின், தாமும் பசியாது பிறரையும் அது தீர்ப்பார் ஆற்றல் நன்று என்பதாம்” என்றுவிளக்கம் தருகிறார். “உண்ணாது நோற்பார் பெரியார்” என்று பெரியாரின் உயர்பண்பாக, உண்ணாமையை வள்ளுவர் விளக்குகிறார். பெற்ற தாயின் பசியைக் கண்டு வருந்த நேர்ந்தாலும், சான்றோர் பழிப்பதற்குக் காரணமாக இழிவுற்றச் செயல்களைச் செய்யக்கூடாது என்று பொருளில்,

**“ஈன்றாள் பசிகாண்பான் ஆயினுஞ் செய்யற்க**

**சான்றோர் பழிக்கும் வினை”**

என்ற குறளில் வள்ளுவர் அறத்தைப் பசியைவிட உயர்வானதாய் காட்டுகிறார். உடலையும் மனதையும் அடக்கும் ஆயுதமாக உண்ணா நோன்பினைக் கருதிய தத்துவத்தின் குரலாகத் திருவள்ளுவாரின் பசி குறித்த குறட்பாக்களைக் கருத

இடமிருக்கிறது. பசி வந்தால் தன்மானம் பறந்துவிடும், தனது குலம் என்ற நினைப்பு போய்விடும். கல்வி கரைந்துவிடும், வாக்குறுதிகள் வலிமை இழந்துவிடும். அறிவுடைமை பெறுமதி அற்றதாகிவிடும். ஆனாலும் தன்னிலை மாறாது வாழவேண்டும் என்கிறார் திருவள்ளுவர்.

**அறிவுடையார் எல்லாமுடையார்**

எல்லோருக்குள்ளும் இயற்கை அறிவு புதைந்து கிடக்கிறது. கற்றலின் மூலமாகவும் கேட்டலின் மூலமாகவும் நாம் பெறும் அறிவு செயற்கையறிவு ஆகும். கண்ணால் கண்டும், காதால் கேட்டும், உணர்வால் ஓர்த்தும் நூல் பல கற்றும் நாம் அறிவைப் பெறலாம். அதனால்தான் வள்ளுவர், அறிவுடையார் எல்லாமுடையார் என்கிறார். வேறு எதுவும் இல்லாவிட்டாலும் அறிவுடையோர் எல்லா நன்மைகளையும் பெற்றவராவார். அறிவில்லாதவர் எதனை உடையவராயினும் அவர் ஒன்றும் இல்லாதவராகவே கருதப்படுவார் என்கிற உண்மையை வள்ளுவர் தெளிவுபடுத்துகிறார்.

**"அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார்**
**என்னுடைய ரேனும் இலர்"**

பஞ்சிலிருந்து உருவாகின்ற மெல்லிய இழையை நாம் நூல் என்கிறோம். பஞ்சும் ராட்டையும் இருந்தால்தான் நூல் வரும். அதைப்போல் கல்வி நூலை நூற்க அறிவும் சிந்தனையும் மிக அவசியம்.

**கண் பெற்றது கல்வி கற்கவே!**
**செவிகள் பெற்றது கேள்வி கேட்கவே!**

அதனால்தான் கற்றலின் கேட்டலே நன்று என்றனர் பெரியோர். அறிவின் சுவையில் அறம் வளர்கிறது என்றார் அறிஞர் கோல்டுஸ்மித். அறிவு எப்போதும் ஆற்றல் காக்கும் கருவிதான்.

திருவள்ளுவரின் தத்துவம் உலகப் பொதுமையானது. எப்போதும் கடைப்பிடிக்கக் கூடியது.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | தமிழ் நாட்டின் சமூகப் பொருளாதாரமுன்னேற்றம் குறித்தெழுதுக. | K2 | CO2 | PO4 |
| 2 | எதிர்மறைவாக்கியம் என்றால் என்ன? எவையேனும் ஐந்துஎதிர்மறைவாக்கியங்களைஎழுதுக. | K4 | CO3 | PO5 |
| 3 | திருக்குறளில் தத்துவக் கோட்பாடுகள் எவ்வாறுஎடுத்தாளப்பட்டுள்ளது? | K1 | CO4 | PO1 |
| 4 | சுற்றுச்சூழல் தூய்மைமனிதவாழ்வினஉரிமைவிளக்குக. | K5 | CO5 | PO2 |
| 5 | கலையும் பண்பாடும் குறிப்புவரைக. | K3 | CO4 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | மதச்சார்பற்றதனித்தன்மையான இலக்கியம் திருக்குறள் கட்டுரைக்க. | K3 | CO4 | PO4 |
| 2 | இந்தியப் பணவீக்கத்திற்கானகாரணங்களைவிவரி. | K4 | CO2 | PO6 |
| 3 | இக்காலதமிழ்மொழியின் வளர்ச்சிநிலைகளாகஎவற்றையெல்லாம் கூறலாம்? | K1 | CO1 | PO5 |
| 4 | அறிவியலும் தொழில் நுட்பமும் குறித்துஎடுத்துரைக்க. | K5 | CO5 | PO6 |
| 5 | பகுத்தறிவு இயக்கங்கள் குறித்துகட்டுரைவரைக. | K6 | CO3 | PO3 |

# அலகு – 5 (UNIT – V)

## வினா வகைகளும் - மாதிரி வினாத் தாள் பயிற்சியும்

1. **போட்டித் தேர்வுகளுக்கான தமிழ் வினா வங்கி**
2. **பிரித்து எழுதுதல்**
3. **சேர்த்து எழுதுதல்**
4. **எதிர்ச்சொல்லை எடுத்தெழுதுதல்**
5. **பொருந்தாச் சொல்லைக் கண்டறிதல்**
6. **பிழைதிருத்தம்**
    1. சந்திப்பிழைகள்,
    2. மரபுப் பிழைகள்,
    3. வழுவுச் சொற்களை நீக்குதல்
    4. பிறமொழிச் சொற்களை நீக்குதல்
7. **ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லைக் கண்டறிதல்**
8. **ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான பொருளையறிதல்**
9. **ஒரு பொருள் தரும் பல சொற்கள்**
10. **வேர்ச்சொல்லைத் தேர்வு செய்தல்**
11. **வேர்ச்சொல்லைக் கொடுத்து,**
    1. வினைமுற்று,
    2. பெயரெச்சம்,
    3. வினையெச்சம்
    4. வினையாலணையும் பெயர்,
    5. தொழிற்பெயர் - உருவாக்கல்
12. **அகர வரிசைப்படி சொற்களைச் சீர்செய்தல்**
13. **சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடராக்குதல்**
14. **இருவினைகளின் பொருள் வேறுபாடு அறிதல்**
15. **விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்தல்**

**16. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல்**

**17. உவமையால் விளக்கப் பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெழுதுதல்**

**18. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைக் கண்டறிதல்**

**19. ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுதல்**

**20. நிறுத்தற் குறிகளை அறிதல்**

**21. பேச்சு வழக்கு – எழுத்து வழக்கு**

**22. சொற்களை இணைத்துப் புதிய சொல் உருவாக்குதல்**

**23. பொருத்தமான காலம் அமைத்தல்**

**24. சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடுத்தல்**

**25. சரியான இணைப்பு சொல் தேர்ந்தெடுத்தல்**

**26. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்த்தல்**

**27. இருபொருள் தருதல்**

**28. குறில் - நெடில் மாற்றம், பொருள் வேறுபாடு**

**29. கூற்று, காரணம் - சரியா? தவறா?**

**30. கலைச் சொற்களை அறிதல்**

**31. பொருத்தமான பொருளைத் தேர்வு செய்தல்**

**32. சொற்களின் கூட்டுப் பெயர்கள்**

**33. சரியான தொடரைத் தேர்ந்தெடுத்தல்**

**34. பிழை திருத்துதல்**

**35. சொல் பொருள் - பொருத்துதல்**

**36. ஒருமை – பன்மை பிழை**

**37. பத்தியிலிருந்து வினாவிற்கான சரியான விடையைத் தேர்ந்தெடுத்தல்**

விரித்துரைக்கும் வகை வினாவிற்கான தலைப்புகள்

1. மொழிபெயர்த்தல்
2. சுருக்கி வரைதல்
3. பொருள் உணர்திறன்
4. சுருக்கக் குறிப்பிலிருந்து விரிவாக்கம் செய்தல்
5. கட்டுரை வரைதல்

6. கடிதம் வரைதல் (அலுவல் சார்ந்தது)
7. தமிழ் மொழி அறிவு

**38. மாதிரி வினா**

# அலகு – 5 (ருஜேவு – ஏ)

## வினா வகைகளும் - மாதிரி வினாத் தாள் பயிற்சியும்

## 1. போட்டித் தேர்வுகளுக்கான தமிழ் வினா வங்கி

**அனைத்து வினாக்களுக்கும் சரியான விடைதருக (1 ஒ 30 ஞீ 30)**

1. ‘‘புலன் நன்கு உணர்ந்த புலமையோர்’’ எனும் வரி இடம்பெறும் நூல் எது?

அ) நன்னூல் ஆ) சிலப்பதிகாரம்

இ) தொல்காப்பியம் ஈ) தண்டி

2. ‘‘பளிங்கு அடுத்தவற்றைக் காட்டும் பான்மையால் இவள் முகத்தில் உளம் கடுத்தவற்றை ஓர்ந்த கபிரியேல் உறுதிசொல்வான்’’ எனும் வரிகள் இடம்பெற்ற இலக்கியம் எது?

அ) ரட்சண்ய யத்திரகம் ஆ) தேவ அருள் வேதபுராணம்

இ)அருட்காவியம் ஈ) தேம்பாவணி

3. தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் உள்ள இயல்கள் எத்தனை?

அ) 8 ஆ) 7

இ) 6 ஈ) 9

4. இரா. ஆரோக்கியசாமி அவர்களின் கிறித்தவ இலக்கிய வரலாறு நூல் எத்தனை கிறித்தவ இலக்கியங்கள் உள்ளன என்று பட்டியலிடுகிறது?

அ) 93 ஆ) 88

இ) 43 ஈ) 71

5. ‘மனாமியங்கள்’ எனும் நாவலை எழுதியவர் யார்?

அ) பாமா ஆ) திலகவதி

இ) வாஸந்தி ஈ) சல்மா

6. வண்ணநிலவனின் புகழ்பெற்ற புதினம் எது?

அ) வாடிவாசல் ஆ) சுதந்திரதாகம்

இ) கடல்புறத்தில் ஈ)நாஞ்சில் மண்

7. சாகித்ய அகாதமி விருது பெற்ற எஸ்.ரா.வின் நாவல் எது?

அ) யாமம் ஆ) உபபாண்டவம்

இ) சஞ்சாரம் ஈ)துணை எழுத்து

8. பருத்திப் பெண்டிர் பனுவல் அன்ன எனும் வரி இடம்பெற்ற இலக்கியம் எது?

அ) சிலம்பு ஆ) சீவகசிந்தாமணி

இ) புறநானூறு ஈ) அகநானூறு

9. காந்த;ர்ச்சாலை கலமறுத்தருளி எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தி யாருடையது?

அ) விக்கிரமசோழன் ஆ) கரிகாலன்

இ) பூரிக்கோ ஈ) இராஜராஜ சோழன்

10. அகர், புகர், அகழ், புகழ் முதலானவை

அ) வினைத்தொகை ஆ) தொடர்மொழி

இ) தனிமொழி ஈ) புறமொழி

11. யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்… என்று தொடங்கும் குறட்பா இடம்பெற்றுள்ள அதிகாரம் எது?

அ) கல்வி ஆ) துறவு

இ) ஒழுக்கமுடைமை ஈ) ஈகை

12. யானை டாக்டர் கதையை எழுதியவர் யார்?

அ) ஜெயகாந்தன் ஆ) ஜெயமோகன்

இ) ஜெகசிற்பியன் ஈ) ஜெகவீரன்

13. மொழிப்போராட்டத்தை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட தமிழவன் நாவல் எது?

அ) வார்சாவில் ஒரு கடவுள் ஆ) முஸல்பனி

இ) ஆடிப்பாவை போல ஈ) ஏற்கனவே சொல்லப்பட்ட மனிதர்கள்

14. கரிசல் காட்டு எழுத்தாளர் யார்?

அ) கி. ராஜநாராயணன் ஆ) சமயவேல்

இ) பாரததேவி ஈ) ராஜன்

15. நன்னூலுக்கு முதன் முதலில் உரை எழுதிய உரையாசிரியர் யார்?

அ) மயிலைநாதர் ஆ) பேராசிரியர்

இ) பரிமேலழகர் ஈ) சேனாவரையர்

16. ‘குருதிப்புனல்’ ஆசிரியர் யார்?

அ) இந்திரா பார்த்தசாரதி ஆ) எஸ்.ரா.

இ) ஜெயமோகன் ஈ) சாருநிவேதா

17. தமிழின் முதல் நிகண்டு எது?

அ) பிங்கலந்தை ஆ) சூடாமணி

இ) திவாகர ஈ) உரிச்சொல்

18. பொருள் இலக்கணத்தை ஒரு முக்கோணம் மூலம் விளக்கிய அறிஞர்கள் யாவர்?

அ) எமினோவும் பரோவும் ஆ) ஆக்டெனும் ரிச்சார்ட்சும்

இ) தொல்காப்பியரும் திவாகரரும் ஈ) தேவநேயப்பாவணரும் ஞானப்பிரகாசரும்

19. ‘அஞ்சு வண்ணம் தெரு’ எனும் படைப்பின் ஆசிரியர் யார்?

அ) அர்ரீயா ஆ) சல்மா

இ) தோப்பில் முகம்மது மீரான் ஈ) பிரதெளஸ் ராஜகுமாரன்

20. திருமங்கை ஆழ்வார் அருளிய நூல் எது?

அ) திருப்பாவை ஆ) நாச்சியார் திருமொழி

இ) பெரிய திருமொழி ஈ) திருமாலை

21. வரகவி என்று அழைக்கப்படுபவர் யார்?

அ) பாரதிதாசன் ஆ) பத்ரகிரியார்

இ) நீலமேகம் ஈ) திருமாலினியன்

22. ஐயனாரிதனார் இயற்றிய நூல் யாது?

அ) கல்லாடம் ஆ) நீதி நூல்

இ) புறப்பொருள்வெண்பா மாலை ஈ) தத்துவநூல்

23. ஆலன் டண்டிஸ் யார்?

அ) தத்துவஞானி ஆ) நீதிநூலறிஞர்

இ) அமைப்பியல் நாட்டுப்புறவியலாளர் ஈ) இலக்கண அறிஞர்

24. தொன்னூல் விளக்கம் எனும் நூலின் ஆசிரியர் யார்?

அ) கால்டுவெல் ஆ) ஜி.யூ. போப்

இ) வீரமாமுனிவர் ஈ) தத்துவநாதர்

25. பத்மாவதி சரித்திரத்தின் ஆசிரியர் யார்?

அ) வேதநாயகம் பிள்ளை ஆ) மாதவையா

இ) பிரபஞ்சன் ஈ) நாஞ்சில் நாடன்

26. சீறாப்புராணத்தில் உள்ள காண்டங்கள் எத்தனை?

அ) 6 ஆ) 3

இ) 4 ஈ) 7

27. பாரதியின் அறிவியல் பார்வை எனும் நூலின் ஆசிரியர் யார்?

அ) வா.செ. குழந்தைசாமி ஆ) கண்ணன்

இ) பாரதிபாலன் ஈ) கு.ம. சாமி

28. உலகம் சுற்றும் தமிழன் பயணநூல் ஆசிரியர் யார்?

அ) சோமலே ஆ) தமிழ்வாணன்

இ) ஏ.கே. செட்டியார் ஈ) மணியன்

29. ந.பிச்சமூர்த்தியின் புகழ்பெற்ற கவிதைத் தொகுதியின் பெயர் என்ன?

அ) காட்சிகள் ஆ) ரணம்

இ) பாலைவனம் ஈ) காட்டுவாத்து

30. சொல்லின் செல்வர் யார்?

அ) ரா.பி. சேதுபிள்ளை ஆ) வல்லிக்கண்ணன்

இ) கோணங்கி ஈ) கு. அழகிரிசாமி

**எவையேனும் இருவினாக்களுக்கு மூன்று பக்க அளவில் விடை எழுதுக. (2 ஒ 10 ஸ்ரீ 20)**

1. சமூக ஊடகங்களில் தமிழ் குறித்துஎழுதுக.
2. தற்காலப் பண்கவிஞர்களின் படைப்பு மொழி குறித்து எழுதுக.
3. தற்காலப் புதினங்களில் விளிம்பு நிலை மக்களின் வாழ்வியல் சிக்கல்களை விளக்குக.
4. பல்வேறு கோட்பாடுகளின் அடிப்படையில் தமிழ் இலக்கியத்தை அணுகும்போது ஏற்படும் சாதகபாதகங்கள் குறித்து எழுதுக.

**விடைகள்**

1. (இ) தொல்காப்பியம்
2. (ஈ) தேம்பாவணி
3. ஈ) 9
4. இ) 43
5. ஈ) சல்மா
6. இ) கடல்புறத்தில்
7. இ) சஞ்சாரம்
8. இ) புறநானூறு
9. ஈ) இராஜாராஜ சோழன்
10. ஆ) தொடர்மொழி
11. ஆ) துறவு
12. ஆ) ஜெயமோகன்
13. இ) ஆடிப்பாவை போல
14. அ) கி. ராஜநாராயணன்
15. அ) மயிலைநாதர்
16. அ) இந்திரா பார்த்தசாரதி

17. அ) திவாகர நிகண்டு
18. ஆ) ஆக்டெனும் ரிக்சார்ட்சும்
19. இ) தோப்பில் முகம்மது மீரான்
20. இ) பெரிய திருமொழி
21. அ) பாரதிதாசன்
22. இ) புறப்பொருள்வெண்பா மாலை
23. இ) அமைப்பியல் நாட்டுப்புறவியலாளர்
24. இ) வீரமாமுனிவர்
25. ஆ) மாதவையா
26. ஆ) 3
27. அ) வா.செ. குழந்தைசாமி
28. இ) ஏ.கே. செட்டியர்
29. ஈ) காட்டுவாத்து
30. அ) ரா.பி. சேதுபிள்ளை

## கொள்குறி வினாவிற்கான தலைப்புகள்

## பிரித்து எழுதுதல் ∴ சேர்த்து எழுதுதல்

## 31. பிரித்து எழுதுதல்

1. **சிற்றோடை**

அ) சிற்று ͵ ஓடை ஆ) சிறுமை ͵ ஓடை

இ) சிறு ͵ ஓடை ஈ) சிற் ͵ ஓடை

**விடை: டீ. சிறுமை ͵ ஓடை**

2. **கண்டெடுக்கப்பட்டுள்ளன**

அ) கண்டு ͵ எடுக்கப்பட்டு ͵ உள்ளன ஆ)கண்டு ͵ எடுக்கப்பட்டுப் உள்ளன

இ) கண்டெடுக்க ͵ பட்டுள்ளன ஈ) கண்டெடுக்க ͵ பட்டுள்ளன

**விடை: யு) கண்டு ͵ எடுக்கப்பட்டு ͵ உள்ளன**

3. **கற்கோயில்**

அ) கல் ͵ கோயில் ஆ) கறி ͵ கோவில்

இ) கல் ͵ கோயில் ஈ) கல்க் ͵ கோவில்

**விடை: யு) கல் ͵ கோயில்**

நிலைமொழி இறுதியில் உள்ள லகர மெய், வேற்றுமைப் புணர்ச்சியில் வருமொழி வல்லினம் வந்தால் (க, ச, த, ப) ற கர மெய் ட கர மெய்யாகத் திரியும்

4. **காற்பெரிது**

அ) கால் ͵ பெரிது ஆ) கல் ͵ பெரிது

இ) கல் ् பெரியது ஈ) காற்ப் ् பெரிது

**விடை: அ) கால் ् பெரிது**

அல்வழிப் புணர்ச்சியில் வருமொழி முதலில் வல்லினம் வந்தால் லகர மெய் ற கர மெய்யாக மாறும்.

5. **கொல் ् யானை**

அ) கொல் ् யானை ஆ) கொள் ् யானை

இ) கொல் ् வானை ஈ) கொல் ् வானை

**விடை: அ) கொல் ् யானை**

அல்வழிப் புணர்ச்சியில் வருமொழி முதலில் இடையினம் வந்தால் லகர மெய் இயல்பாகும்.

6. **வில் ् வளைத்தான்**

அ) வில் ् வளைத்தான் ஆ) விற் ् வளைத்தான்

இ) வில் ् ஐ ् வளைத்தான் ஈ) வில் ् ளைத்தான்

**விடை: அ) வில் ् வளைத்தான்**

வேற்றுமைப் புணர்ச்சியில் வருமொழி முதலில் இடையினம் வந்தால் ‘ல்’ எனும் லகர மெய் இயல்பாகும். (வில் - வளைத்தான் - வில்லை வளைத்தான் இணைடாம் வேற்றுமைத் தொகை.

7. **வேறீது**

அ) வேல் ् தீது ஆ) வோ் ् தீது

இ) வேல் ् டீது ஈ) வேல ् றீது

**விடை: ஆ) வோ் ् தீது**

அலவழிப் புணர்ச்சியில் தனிக் குறிலைச் சாா்ந்த வராத லகர மெய். வருமொழியின் முதலில் வந்த நகரம் திரிந்த பின் தாமும் கெடும். அதாவது லகரத்தின் முன்வரும் நகரம் றகரமாய் மாறும்.

8. **கால்க்கை**

அ) கா் ् கை ஆ) கால் ् கை

இ) கால்க் ् கை ஈ) கால் ् க்கை

**விடை: ஆ) கால் ् கை**

வருமொழி முதலில் வல்லின மெய் வந்தால் லகர மெய் அல்வழிப் புணர்ச்சியில் இயல்பாகும்.

9. **கால்பிடித்தான்**

அ) காற் ‸ பிடித்தான் ஆ) கால் ‸ பிடித்தான்

இ) கால்ப் ‸ பிடித்தான் ஈ) கால் ‸ படித்தான்

**விடை ஆ) கால் ‸ பிடித்தான்**

கால் ‸ பிடித்தான் - காலைப் பிடித்தான் (இரண்டாம் வேற்றுமைத் தொகை) வேற்றுமையில் வல்லினம் வர லகர மெய் இயல்பானது.

10. **இல்லாப்பொருள்**

அ) இல் ‸ ஆ ‸ பொருள் ஆ) இல்லை ‸ பொருள்

இ) இற் ‸ பொருள் ஈ) இல் ‸ பொருள்

**விடை: அ) இல் ‸ ஆ ‸ பொருள்**

இல் பொருள் சொல்லோடு ஆகாரச் சாரியை வந்து சேர்ந்தால் வருமொழி வல்லினம் மிகும்.

இல் ‸ ஆ என்பது இல்லா என மாறியது. வருமொழி வல்லினம் மிகுந்த இல்லாப் பொருள் என ஆனது.

11. **வாடீது**

ெ) வள் ‸ தீது ஆ) வாள் ‸ தீது

இ) வாள் ‸ டீது ஈ) வா ‸ டீது

**விடை ஆ) வாள் ‸ தீது**

வருமொழி முதலில் உள்ள நகர மெய் டகர மெய்யாகத் திரிந்த பின் நிலை மொழி இறுதியில் உள்ள ளகர மெய் கெட்டது.

## 32. சேர்த்துஎழுதுதல்

1. நீரோட்டம் - நீர் ‸ ஓட்டம்
2. காசோலை – காசு ‸ ஓலை
3. ஏட்டுக் கல்வி – ஏடு ‸ கல்வி
4. செங்கதிர் - செம்மை ‸ கதிர்
5. நாட்டுப் பற்று – நாடு ‸ பற்று
6. சமவெளி – சமம் ‸ வெளி
7. தென்மேற்கு – தெற்கு ‸ மேற்கு
8. பூச்சூடினாள் - பூ ‸ சூடினாள்
9. ஈரநிலம் - ஈரம் ‸ நிலம்
10. இளவேனில் - இளமை ‸ வேனில்
11. இரண்டாயிரம் - இரண்டு ‸ ஆயிரம்
12. பருவ மழை – பருவ ‸ மழை

13. மாவிலை – மா ͅ இலை

14. தமிழ்ச் சங்கம் - தமிழ் ͅ சங்கம்

15. ஓட்டு வீடு – ஓடு ͅ வீடு

16. பகற்களவு – பகல் ͅ கனவு

17. மட்குடம் - மண் ͅ குடம்

18. தொடக்கவுரை – தொடக்கம் ͅ உரை

19. வானொலி – வான் ͅ ஒலி

20. காதணி – காது ͅ அணி

21. மாவிலை – மா ͅ இலை

22. வாழைக் கனி – வாழை ͅ கனி

23. வேலையாள் - வேலை ͅ ஆள்

24. சமையற்கலை – சமையல் ͅ கலை

25. பெருஞ்செல்வம் - பெருமை ͅ செல்வம்

26. பண்புடைமை – பண்பு ͅ உடைமை

27. அது வின்றேல் - அது ͅ இன்றேல்

28. இவ்விரணம் - இ ͅ இரண்டும்

29. மக்கட் பண்பு – மக்கள் ͅ பண்பு

30. என்றெண்ணி – என்று ͅ எண்ணி

31. மடைத் தலை – மடை ͅ தலை

32. வருமளவும் - வரும் ͅ அளவும்

33. கடலலை – கடல் ͅ அலை

34. மரங்கொத்தி – மரம் ͅ கொத்தி

35. வாழை மரம் - வாழை ͅ மரம்

36. மின்னஞ்சல் - மின் ͅ அஞ்சல்

37. செய்தித் தாள் - செய்தி ͅ தாள்

38. அழைப்பிதழ் - அழைப்பு ͅ இதழ்

39. விதைத் திருவிழா – விதை ͅ திருவிழா

40. படைத்தளபதி – படை ͅ தளபதி

41. வீரக் கலைகள் - வீரம் ͅ கலைகள்

42. சிலப்பதிகாரம் - சிலம்பு ͅ அதிகாரம்

43. தானியங்கி – தான் ͅ இயற்கி

44. தாய்நாடு – தாய் ͅ நாடு

45. செயலிழக்க – செயல் ͅ இழக்க

46. மருத்துவத் துறை – மருத்துவம் ͅ துறை

47. நெலவென்று – நிலவு ே என்று

## 33. எதிர்ச்சொல்லை எடுத்தெழுதுதல்

1. அழிப்பமு ஓ ஆக்குவது
2. அண்மை ஓ சேய்மை
3. அரியது ஓ எளியது
4. அடிமைத்தனம் ஓ சுதந்திரம்
5. அன்பு ஓ பகை
6. அறிவிலி ஓ அறிவாளி
7. அடைத்தல் ஓ திறத்தல்
8. அகம் ஓ புறம்
9. அறம் ஓ மறம்
10. அல்லும் ஓ பகலும்
11. அல்லவை ஓ நல்லவை
12. அவலம் ஓஇன்பம்
13. ஆதி ஓ அந்தம்
14. ஆக்கம் ஓ அழிவு
15. இன்பம் ஓ துன்பம்
16. இழிவு ஓ உயர்வு
17. இகழ்ச்சி ஓ புகழ்ச்சி
18. இளமை ஓ முதுமை
19. இயற்கை ஓ செயற்கை
20. இன்சொல் ஓ வன்சொல்
21. இம்மை ஓ மறுமை
22. இன்னா நாற்பது ஓஇனியவை நாற்பது
23. இரப்பது ஓ ஈவது
24. இறப்பு ஓ விறப்பு
25. உறவு ஓ பகை
26. உள் ஓ வெளி
27. உண்மை ஓ பொய்
28. உண்டு ஓ இல்லை
29. கழுச்சி ஓ வீழ்ச்சி
30. ஏற்றம் ஓ இறக்கம்
31. ஒளி ஓ இருள்
32. ஒற்றுமை ஓ வேற்றுமை
33. ஓட்டி ஓ விலக்கி

34. ஓங்கிய ஓ தாழ்ந்த
35. கனவு ஓ நனவு
36. காய் ஓ கனி
37. காத்தல் ஓ அழித்தல்
38. குழு ஓ தனி
39. குழி ஓ மேடு
40. கூடி ஓ பிரிந்து
41. கேடு ஓ நலம்
42. சில ஓ பல
43. சிற்றரசர் ஓ பேரரசர்
44. சிற்றாறு ஓ பேராறு
45. சிற்றூர் ஓ பேரூர்
46. செங்கோல் ஓ கொடுங்கோல்
47. செல்வோம் ஓ செல்வோம்
48. தலைவர் ஓ பணியாளர்
49. தன்னலம் ஓ பிறர்நலம்
50. தனியாக ஓ கூட்டாக
51. தண்மை ஓ குளிர்மை
52. தீயவர் ஓ நல்லவர்
53. தொன்மை ஓ புதுமை
54. தொடக்கம் ஓ முடிவு
55. தோன்றி ஓ மறைந்து
56. நட்பு ஓ பகை
57. நண்பன் ஓ பகைவன்
58. நல்லவர் ஓ தீயவர்
59. நல்வினை ஓ தீவினை
60. நல்லது ஓ கெட்டது
61. நாடி ஓ வெறுத்து
62. நீதி ஓ அநீதி
63. நீளம் ஓ அகலம்
64. பழி ஓ புகழ்
65. புதிய ஓ பழைய
66. பயனுடையார் ஓ பயனிலார்
67. பாவம் ஓ புண்ணியம்
68. பாராட்டு ஓ ஏச்சு
69. பிரிந்து ஓஇணைந்து

70. பிழை ஓ திருத்தம்
71. பூசல் ஓ நட்பு
72. பெருந்தொகை ஓ சிறுதொகை
73. பெருமை ஓ சிறுமை
74. போற்றுதல் ஓ தூற்றுதல்
75. மகிழ்ச்சி ஓ வருத்தம்
76. மழை ஓ வெயில்
77. முதல் ஓ இறுதி
78. மேலே ஓ கீழே
79. வரவு ஓ செலவு
80. வளர்ச்சி ஓ தளர்ச்சி
81. வாழ்தல் ஓ தாழ்தல்
82. விருப்பு ஓ வெறுப்பு
83. வீரர் ஓ கோழை
84. வெற்றி ஓ தோல்வி

**மாதிரி வினா**

1. நாட்டுப்புறம் என்னும் சொல்லின் எதிர் சொல்லை தேர்வு செய்க.

   அ) நகர்புறம் ஆ) நாட்டகம் ஆ) ஊர் இ) கிராமம்

   **விடை: அ) நகர்புறம்**

## 34. பொருந்தாச் சொல்லைக் கண்டறிதல்

(தரப்பட்டிருக்கும் வினாவுக்குக் கீழ் உள்ள நான்கு சொற்களில் மூன்று சொற்கள் அதற்குத் தொடர்பற்றதாக அமைந்திருக்கும். ஒன்றுமட்டும் அதற்குத் தொடர்புடையதாக இருக்கும். அதை தேர்ந்தெடுக்க.

1. ஐம்பெரும் காப்பியங்கள்

   அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை

   இ) சீவக சிந்தாமணி ஈ) பெரிய புராணம்

**விடை: ஈ) பெரிய புராணம்**

மற்ற மூன்றும் ஐம்பெரும் காப்பியங்கள் பட்டியலில் இடம் பெறுகிறது. பெரியபுராணம் அதில் இடம்பெறாது.

1. **நாற்பொருள்**: அறம், பொருள், இன்பம், வீடுபேறு
2. **முத்தமிழ்**: இயல், இசை, நாடகம்
3. **முப்பால்**: அறம், பொருள், இன்பம்
4. **ஈருலகு**: இம்மை, மறுமை

5. **மும்மூர்த்திகள்**: பிரம்மா, வி'ணு, சிவன்
6. **முப்பெரும் தேவியர்**: அலைமகள், கலைமகள், மலைமகள்
7. **முக்கனிகள்**: மா, பலா, வாழை
8. **மூவேந்தர்கள்**: சேர, சோழ, பாண்டியர்
9. **முக்காலம்:** இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம்
10. **இருதிணைகள்**: உயர்திணை, அஃறிணை
11. **தமிழ் அளவை:** முக்கால், அரைகால், கால், நாலு மா, மூன்று வீசம், இருமா, மாகாணி, ஒரு மா, முக்கால் வீசம், முக்காணி, அரைவீசம், கால் வீசம், காணி, அரைக் காணி, முந்திரி, கீழ்முந்திரி, இம்மி, மும்மி, அணு, குணம், பந்தம், பாகம், விந்தம், நாகவிந்தம், சிந்தை, கதிர் முனை, குரல் வளைப்படி, வெள்ளம், நுண்மணல், தேர்த்துகள்.
12. **அறுசுவை:** இனிப்பு, கசப்பு, புளிப்பு, உவர்ப்பு, கார்ப்பு, துவர்ப்பு
13. **இருசுடர்:** ஞாயிறு, திங்கள்
14. **ஈரெச்சம்:** பெயரெச்சம், வினையெச்சம்
15. **மூவிடம்:** தன்மை, முன்னிலை, படர்க்கை
16. **முந்நீர்:** ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர்
17. **முப்பகை:** காமம், வெகுளி, மயக்கம்
18. **முக்குடை**: சந்திராதித்தம், சகலா பாசனம், நித்த விநோதம்
19. **திரிபாலா:** நெல்லிக்காய், கடுக்காய், தான்றிக்காய்
20. **நான் மறை**: ரிக், யஜுர், சாமம், அதர்வணம்
21. **நாற்குணம்**: அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு
22. **நாற்றிசை**: கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு
23. **நாற் கரணம்:** மனம், புத்தி, சித்தம், அகங்காரம்
24. **பஞ்ச பூதங்கள்:** நிலம், நீர், காற்று, நெருப்பு, வானம்
25. **ஐம்புலன்கள்**: ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை
26. **ஐம்பொறிகள்:** மெய், வாய், கண், செவி, மூக்கு
27. **ஐந்திலக்கணம்:** எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி
28. **ஐம்பால்கள்:** ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்
29. **ஐந்திணைகள்**: குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை
30. **நாற்படை**: தேர், யானை, குதிரை, காலாள்
31. **ஐவகைப் பாக்கள்:** வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா
32. **ஐஞ்சிறு காப்பியங்கள்:** நாககுமார காவியம், உதயணகுமார காவியம், யசோத காவியம், சூழாமணி, நீலகேசி

## 35. பிழைதிருத்தம்

### 1. சந்திப்பிழை

அ, இ, எ

அந்த, இந்த, எங்கு

அப்படி, இப்படி, எப்படி, இவ்வகை, எவ்வகை

அத்துணை, இத்துணை, எத்துணை

இனி, தனி, மற்று, அன்றி, இன்றி, மற்ற, மற்றை, நடு, பொது, அணு, முழு, புது, திரு, அரை, பாதி, எட்டு, பாதி, முன்னா், பின்னா், ஆகிய சொற்களுக்குப் பின் வல்லெழுத்து (க், சி, ட், த், ப், ற்,) மிகும்.

1. அ ৃ குடம் - அக்குடம்
2. இ ৃ செடி - இச்செடி
3. எ ৃ பக்கம் - எப்பக்கம்
4. அந்த ৃ செடி – அந்தச் செடி
5. இந்த ৃ குழந்தை - இந்தக் குழந்தை
6. எந்த ৃ பாடல் - என்தப் பாடல்
7. எங்கு ৃ கேட்டாய் - எங்குக் கேட்டாய்
8. எப்படி ৃ தந்தாய் - எப்படித் தந்தாய்
9. அவ்வகை ৃ கொடி – அவ்வகைக் கொடி
10. இவ்வகை ৃ கொடி - இவ்வகைப் பூங்கா
11. இனி ৃ பேசேன் - இனிப் பேசேன்
12. தனி ৃ குன்று – தனிக்குன்று
13. மற்ற ৃ பிள்ளைகள் - மற்றப் பிள்ளைகள
14. நடு ৃ கடல் - நடுக் கடல்
15. முழு ৃ பக்கம் - முழுப் பக்கம்
16. புது ৃ பொருள் - புதுப் பொருள்
17. அரை ৃ பக்கம் - அரைப் பக்கம்
18. பாதி தூக்கம் - பாதித் தூக்கம்
19. எட்டு ৃ குடங்கள் - கட்டுக் குடங்கள்
20. பத்து ৃ செடிகள் - பத்துச் செடிகள்
21. முன்னா் ৃ கண்டேன் - முன்னா்க் கண்டேன்
22. பின்னனா் ৃ பேசுவேன் - பின்னா்ப் பேசுவேன்
23. பூ ৃ பறித்தோம் - பூப் பறித்தோம்
24. தீ ৃ பிடிக்குமா? தீப் பிடிக்குமா
25. கை ৃ குழந்தை – கைக் குழந்தை
26. பூ ৃ பந்தல் - பூப் பந்தல்

**ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின்னால் வரும் வல்லெழுத்து மிகும்**

27. அறியா ৃ பிள்ளை – அறியாப் பிள்ளை

28. காணா ு காட்சி – காணாக் காட்சி

**இரண்டாம் வேற்றுமை உருபின் பின்னரும் நான்காம் வேற்றுமை உருபின் பின்னரும் வல்லெழுத்து மிகும்**

29. பூனையை ு பார்த்தான் - பூனையைப் பார்த்தான்

30. கடைக்கு ு போனான் - கடைக்குப் போனான்

**பண்புத் தொகையில் வல்லெழுத்து மிகும்**

31. வெள்ளை ு தாள் - வெள்ளைத் தாள்

**உவமைத் தொழுகையில் வல்லெழுத்து மிகும்**

32. தாமரை ு கண் - தாமரைக்கண்

33. முத்து ு பல் - முத்துப் பல்

**ஓரெழுத்து ஒரு மொழிக்குப் பின் வல்லெழுத்து மிகும்**

ஆ, ஈ, கா, கை, சா, தா, தீ, மா, கு, தை, நா, பா, வா, ஊ, ஏ, பூ, க, நு, பே, சே, சோ, த, போ, மை, மூ, தூ, பை, வை, மீ, மே, தெு, வீ ஆகிய ஓரெழுத்து ஒரு மொழிக்குப் பின் வல்லெழுத்து மிகும்.

அகர இகர ஈற்று வினையெச்சத்தின் பின்னும் ஆய், போய், ஆக, என, என்னும் **வினையெச்சங்களின் பின்னும் வலி மிகும்.**

34. வர ு சொன்னான் - வரச் சொன்னான்

35. மெல்ல ு பேசினார் - மெல்லப் பேசினார்

36. ஓடி ு போனார் - ஓடிப் போனார்

37. கேட்பதாய் ு கூறினாள் - கேட்பதாய்க் கூறினாள்

38. போய் ு தேடினார் - போய்த் தேடினார்

39. இருப்பதாக ு கூறு - இருப்பதாகக் கூறு

40. என ு கேட்டான் - எனக் கேட்டான்

**வன்தொடர்க் குற்றியலுகரத்தின் பின் வரும், வலி மிகும்**

41. எட்டு ு கட்டுகள் - எட்டுக் கட்டுகள்

42. பத்து ு செய்யுள்கள் - பத்துச் செய்யுள்கள்

43. கற்று ு கொடு – கற்றுக் கொடு

44. விட்டு ு செல் - விட்டுச் செல்

45. வைத்து ு போனான் - வைத்துப் போனான்

46. கொக்கு ு பறந்தது – கொக்குப் பறந்தது

## 2. மரபுப் பிழைகள்

காலம் காலமாய் நம் முன்னோர் எச் சொல்லால் வழங்கி வநதனரோ அதுவே மரபு எனப்படும். அதைத் தவறாக எழுதுவதே மரபுப் பிழையாகும். தொல்காப்பியர் இளமைப் பெயர்கள் எனும் பகுதியில் இதைக் குறிப்பிடுகிறார்.

**தாவரங்களின் உறுப்புப் பெயர்கள்:**

1. **ஈச்சஇலை** இது மரபுப் பிழை ஈச்சஓலை என்று குறிப்பிடுவதே சரியானது.
2. **தென்னை இலை** என்பது மரபுப் பிழை தென்னையோலை என்பதே சரியானது.
3. **பலாக்கீற்று** என்பது மரபுப் பிழை பலாவிலை என்பதே சரியானது.
4. **வேப்பவோலை** என்பது மரபுப் பிழை வேப்பந்தழை என்பதே சரியானது
5. **மாவோலை** என்பது மரபுப் பிழை மாவிலை என்பதே சரியானது
6. **பனை இலை** என்பது மரபுப் பிழை பனையோலை என்பதே சரியானது
7. **வெங்காய இதழ்** என்பது மரபுப் பிழை வெங்காயத் தாள் என்பதே சரியானது
8. **மூங்கில் ஓலை** என்பது மரபுப் பிழை மூங்கிலை என்பதே சரியானது மூங்கிலை
9. **தென்னை ஓலை** என்பது மரபுப் பிழை தென்னங்கீற்று என்பதே சரியானது
10. **முருங்கை தாள்** என்பது மரபுப் பிழை முருங்கைக் கீரை என்பதே சரியானது

**சான்று வினா:** மரபுப் பிழையற்ற தாவரத்தின் உறுப்புப் பெயர் இது.

அ) வாழையோலை ஆ) மாத்தாள்

இ) பனைஇலை ஈ) முருங்கைக் கீரை

**விடை: ஈ) முருங்கைக் கீரை**

**செடிகள், கொடிகள், மரங்களின் தொகுப்பிடம்**

11. பூஞ்சோலை
12. பூந்தோட்டம்
13. வாழைத் தோட்டம்
14. ஆலங்காடு
15. நெல் வயல்
16. மாந்தோப்பு
17. தென்னந்தோப்பு
18. முந்தரித் தோப்பு
19. வேலங்காடு
20. பனங்காடு

**மாதிரி வினா:** மரபுப் பிழையற்ற தொகுப்பிடம் இது

அ) பனந்தோப்பு ஆ) நெல்காடு

இ) மாந்தோப்பு ஈ) தென்னஞ்சோலை

**விடை: இ) மாந்தோப்பு**

**பறவை – விலங்குகளின் வாழ்விடங்கள்**

21. எலி வளை
22. குருவிக் கூடு
23. கோழிப் பண்ணை
24. யானைக் கூட்டம்
25. மாட்டுத் தொழுவம்
26. குதிரைக் கொட்டில்

**சான்று வினா**

மரபுப் பிழைகளற்ற விலங்குகளின் வாழிடத்தைத் தேர்வு செய்க

அ) குதிரை வீடு ஆ) மாட்டுக்கொட்டில்

இ) யானை இல்லம் ஈ) குருவி கூடு

**விடை: ஈ) குருவி கூடு**

**தொகுப்பு**

1. ஆட்டுமந்தை
2. பசு நிரை
3. கற்குவியல்
4. சாவிக்கொத்து
5. யானைக் கூட்டம்
6. மக்கள் கூட்டம்
7. வீரர் படை
8. எறும்புச் சாரை
9. விறகுக் கட்டு
10. வைக்கோற் போர்
11. திராட்சைக் குலை

**மாதிரி வினா**

**மரபுப் பிழையற்றதைக் கண்டறிக:**

அ) வீரர் குழுமம் ஆ) விறகுக் கொத்து

இ) சாவிக் கூட்டம் ஈ) ஆட்டுமந்தை

**விடை: ஈ) ஆட்டு மந்தை**

## 3. வழூஉச் சொற்களை நீக்குதல்

பேசுவதைப் போலத் தமிழ்ல் எழுத இயலாது. வழு என்றால் குற்றம். குறறமற்று அதாவது வழுவற்று எழுதுவதே மொழிக்குச் செய்யும் நன்றி. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையப் பொதுத் தமிழ் தாளில் வழுவுச் சொற்களை நீக்கி எழுதுதல் சிறப்பிடம் பெறுகிறது.

| வழுவுச் சொல் | - | சரியான தமிழ்ச் சொல் |
|---|---|---|
| 1. தாவாரம் | - | தாழ்வாரம் |
| 2. அடமழ | – | அடைமழை |
| 3. முழுங்காதே | – | விழுங்காதே |
| 4. ரொம்ப | – | நிரம்ப |
| 5. அருகாமை | – | அருகில் |
| 6. எடஞ்சல் பண்ணாதே | - | இடைஞ்சல் செய்யாதே |
| 7. கடப்பாறை | – | கடப்பாரை |
| 8. கைமாறு | – | கைம்மாறு |
| 9. வலது பக்கம் | - | வலப்பக்கம் |
| 10. ஒருத்தன் | - | ஒருவன் |
| 11. கோடாலி | – | கோடரி |
| 12. தலகாணி | – | தலையணை |
| 13. பதட்டம் | - | பதற்றம் |
| 14. தேனீர் | - | தேநீர் |
| 15. பேரன் | - | பெயரன் |
| 16. முயற்சித்தார் | - | முயன்றார் |
| 17. சுவற்றில் | - | சுவரில் |
| 18. மனதில் | - | மனத்தில் |
| 19. இடதுபக்கம் | - | இடப்பக்கம் |
| 20. அதுகள் | - | அவை |
| 21. அருகாமையில் | - | அருகில் |
| 22. துவக்க விழா | – | தொடக்க விழா |
| 23. அடமழ | – | அடைமழை |
| 24. உசிரு | – | உயிர் |
| 25. இன்னிக்கி | - | இன்றைக்கு |
| 26. துகை | – | தொகை |

27. சிகப்பு – சிவப்பு
28. கட்டிடம் - கட்டடம்
29. மாங்கா மரம் - மாமரம்
30. வெட்டிப் பேச்சு – வெற்றுப் பேச்சு
31. தங்கச்சி – தங்கை
32. எளனீ - இளநீர்
33. அவுங்க – அவர்கள்
34. ஆச்சு – ஆயிற்று
35. கெடிகாரம் - கடிகாரம்
36. எகனைமுகனை – எதுகை மோனை
37. உரிச்சி வச்சிருக்கு – உரித்து வைத்துள்ளது
38. ஒசத்தி – உயர்வு
39. விடிகால – விடியற்காலை
40. நாகரீகம் - நாகரிகம்
41. அம்மாசி – அமாவாசை
42. சம்மந்தம் - சம்பந்தம்
43. பாவக்காய் - பாகற்காய்
44. வேர்வை – வியர்வை
45. வயசு – வயது
46. அமக்களம் - அமர்க்களம்
47. தின்னீரு – திருநீறு
48. வெயல் - வெயில்
49. ஆம்பிளை – ஆண்பிள்ளை
50. அளகு – அழகு
51. சாயங்காலம் - சாயுங்காலம்
52. இத்துப் போச்சி – இற்றுப் போயிற்று
53. எலிமிச்சம்பழம் - எலுமிச்சை பழம்
54. வவுறு – வயிறு
55. நாத்து – நாற்று
56. சிலவு – செலவு
57. நொங்கு – நுங்கு
58. மானம் பாத்த பூமி – வானம் பார்த்த பூமி
59. அத்தக்காரி – அத்தை
60. ஆம்படையான் - அகமுடையான்

61. இஸ்துகினு போறான் - இழுத்துக் கொண்டு போகிறான்

62. மெனக்கெட்டு – வினை கெட்டு

**மாதிரி வினா**

வழு நீக்கப்பட்ட தூய தமிழ்ச் சொல்லைக் கண்டறிக

அ) நோம்பு ஆ) வயசு ஆச்சு இ) உயிர் போனது ஈ) பதட்டம்

**விடை: இ) உயிர் போனது**

**4. பிறமொழிச் சொற்களை நீக்குக**

அருசியல் கற்கள் கலந்திருப்பதைப் போலத் தமிழ் மொழியில் பிற மொழிச் சொற்களின் கலப்பைக் காண வேண்டியிருக்கிறது. வட மொழிச் சொல்லையும், பாரசீகச் சொல்லையும், உருதுச் சொல்லையும் நாம் தமிழ்ச் சொல்லென்று பயன்படுத்திக் கொண்டிருப்பது பெருந்தவறு.

| | **பிறமொழிச் சொல்** | - | **தமிழ்ச் சொல்** |
|---|---|---|---|
| 1. | அதிபர் | - | தலைவர் |
| 2. | அக்கணம் | - | அப்பொழுது |
| 3. | அந்தரங்கம் | - | மறைபொருள் |
| 4. | அபிப்ராயம் | - | கருத்து |
| 5. | அபிஷேகம் | - | திருமுழுக்கு |
| 6. | அபூர்வம் | - | புதுமை |
| 7. | அதிர்ஷ்டம் | - | ஆகூழ் |
| 8. | அநேகம் | - | பல |
| 9. | அர்த்தம் | - | பொருள் |
| 10. | அர்ப்பணம் | - | படையல் |
| 11. | அவசரம் | - | விரைவு |
| 12. | அனுபவம் | - | பட்டறிவு |
| 13. | அனுமதி | - | இசைவு |
| 14. | அங்கீகாரம் | - | ஒப்புதல் |
| 15. | ஆதி | – | முதல் |
| 16. | ஆயுதம் | - | கருவி |
| 17. | ஆராதனை | – | வழிபாடு |
| 18. | ஆனந்தம் | - | மகிழ்ச்சி |
| 19. | இஷ்டம் | - | விருப்பம் |
| 20. | இராத்திரி | - | இரவு |
| 21. | இராணுவம் | - | படை |

22. இரத்தம் - குருதி
23. உச்சரிப்பு – மொழியோசை
24. உத்தரவு – கட்டளை
25. உற்சாகம் - ஊக்கம்
26. ஐதீகம் - சடங்கு
27. ஔடதம் - மருந்து
28. கா்மம் - விதிப்பயன்
29. க‘டம் - துன்பம்
30. கரம் - கை
31. கட்டில் - மஞ்சம்
32. கடிகாரம் - நேரங்காட்டி
33. கீா்த்தனை – பாடல்
34. கோ‘ம் - ஒலி
35. ஞாபகம் - நினைவு
36. சகலம் - எல்லாம்
37. சகஜம் - வழக்கம்
38. சகி – தோழி
39. சதம் - நூறு
40. சந்தேகம் - ஐயம்
41. சம்பிரதாயம் - மரபு
42. சரணாகதி – அடைக்கலம்
43. சாதம் - சோறு
44. சாகசம் - துணிவு
45. சாயந்திரம் - மாலை வேளி
46. சிநேகிதம் - நட்பு
47. சுலபம் - எளிது
48. சேவை – நற்பணி
49. சௌகா்யம் - வசதி
50. தத்துவம் - நன்மொழி
51. தற்காலிகம் - நிலையற்ற
52. தம்பதியா் - இணையா்
53. தரிசனம் - காட்சி
54. தாபம் - வேட்கை
55. தினம் - நாள்
56. துரிதம் - விரைவு

| | | |
|---|---|---|
| 57. தேசம் | - | நாடு |
| 58. தைரியம் | - | துணிவு |
| 59. நாசூக்கு | – | நயம் |
| 60. நிஜம் | - | உண்மை |
| 61. நீதி | – | அறநெறி |

**சான்றுவினா**

**பிறமொழிச் சொல் கலவாத தமிழ்ச் சொல்லைத் தேர்வு செய்க**

அ) பரிகாசம் பண்ணாதே

ஆ) பாதம் பணி

இ) நிழலுரு விழும்

ஈ) பிரகாசமான வதனம்

**விடை: இ) நிழலுரு விழும்**

## 36. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லைக் கண்டறிதல்

| **ஆங்கில சொல்** | **-** | **தமிழ்ச் சொல்** |
|---|---|---|
| 1. ஹேர் கட்டிங் சலூன் | - | முடிதிருத்தகம் |
| 2. ஓட்டல் | - | உணவகம் |
| 3. மெடிக்கல் 'ாப் | – | மருந்தகம் |
| 4. பஸ் ஸ்டாண்டு | – | பேருந்து நிலையம் |
| 5. பஸ் ஸ்டாப்பு | – | பேருந்து நிறுத்தம் |
| 6. லேட் | - | காலம் கடந்து |
| 7. மீட்டிங் ஸ்டார்ட் ஆயாச்சு | - | கூட்டம் தொடங்கிவிட்டது |
| 8. கம்பெனி | – | குழுமம் |
| 9. ஸ்டேசனரி 'ாப் | - | எழுதுபொருள் அங்காடி |
| 10. டீ ஸ்டால் | - | தேநீர் அங்காடி |
| 11. நாலெட்ஜ் | - | அறிவு |
| 12. ஹாஸ்டல் | - | விடுதி |
| 13. போஸ்ட் ஆபீஸ் | - | அஞ்சல் நிலையம் |
| 14. பர்ஸ்ட் கிளாஸ் | - | முதல் வகுப்பு |
| 15. சூப்பர் | - | சிறப்பு |
| 16. அட்மி'ன் | - | சேர்க்கை |
| 17. ஜெராக்ஸ் | - | ஒளிப்படி |
| 18. பிளாட்பார்ம் | - | நடைபாதை |

| | | |
|---|---|---|
| 19. அட்டெண்டன்ஸ் | - | வருகைப் பதிவு |
| 20. ஆட்டோமொபைல் | - | தானியங்கி |
| 21. பைண்டிங் | - | கட்டமைப்பு |
| 22. சக்ஸஸ் | - | வெற்றி |
| 23. மதராஸ் சிட்டி | – | சென்னை மாநகரம் |
| 24. கலெக்டர் சார் | - | மாவட்ட ஆட்சித் தலைவர் |
| 25. சேஞ்ச் இருக்குமா? | - | சில்லறை இருக்குமா? |
| 26. மெடிக்கல் ‘ாப் | - | மருந்துக்கடை |
| 27. ஐடன்டிபிகேசன் சர்ட்டிபிகேட் | - | ஆளறி சான்றிதழ் |
| 28. டெவலப் அடைந்தான் | - | வளர்நிலை அடைந்தான் |
| 29. நோட்புக் | - | குறிப்பேடு |
| 30. லாண்டரி | – | வெளுப்பகம் |
| 31. பிளாஸ்டிக் | - | நெகிழி |
| 32. டைப்பிஸ்ட் | - | தட்டச்சர் |
| 33. காரீயர் | - | காசாளர் |
| 34. காலேஜ் | - | கல்லூரி |
| 35. பாஸ்போாட்ஸ் | - | கடவுச் சீட்டு |
| 36. விசா | – | நுழைவிசைவு |
| 37. பேரண்ட்ஸ் | - | பெற்றோர் |
| 38. சப்ஸ்க்ரிப்சன் | - | உறுப்பினர் கட்டணம் |
| 39. லாபி | – | ஓய்வரை |
| 40. பிக்சன் | - | புனைவு |
| 41. பயோகிராபி | – | வாழ்க்கை வரலாறு |
| 42. டிப்ஸ் | - | சிற்றீகை |
| 43. சபிக்ஸ் | - | பின்னொட்டு |
| 44. வவ்வல் | - | உயிரெழுத்து |
| 45. ரீஜினல்லிட்ரேச்சர் | - | வட்டார இலக்கியம் |
| 46. டிஸ்க‘ன் | - | கலந்துரையாடல் |
| 47. டவுன்லோட் | - | பதிவிறக்கம் |
| 48. வீடியோ கான்ப்ரன்ஸ் | - | காணொலிக் கூட்டம் |
| 49. கான்வர்சே‘ன் | - | உரையாடல் |
| 50. செக்அவுட் | - | வெளியேறல் |
| 51. மினி மீல்ஸ் | - | சிற்றுணவு |
| 52. ரயில்வே சிக்னல் | - | சிற்றுணவு |
| 53. பிபிலியோகிராபி | – | நூல் நிரல் |

| | | |
|---|---|---|
| 54. ஐஸ்கிரீம் | - | பனிக்கூழ் |
| 55. புரூட் சாலட் | - | பழக்கூட்டு |
| 56. ஆபீஸ் | - | அலுவலகம் |
| 57. காலனி | – | குடியிருப்பு |
| 58. காபி | – | குளம்பி |
| 59. நம்பர் | - | எண் |
| 60. பிஸ்கட் | - | ஈரொட்டி |
| 61. பேக்கரி | – | அடுமனை |
| 62. ஜோக் | - | வேடிக்கை |
| 63. கோர்ட் | - | நீதிமன்றம் |

**மாதிரி வினா**

ஆங்கிலச் சொல் கலவாத தமிழ்ச் சொல்லைக் கண்டறிக

அ) டவுள் புரோமசன் ஆ) பஸ் கிளம்பியது

இ) ஏர்போர்ட் போகிறேன் ஈ) தேநீர் எடுத்து வா

**விடை: ஈ) தேநீர் எடுத்து வா**

## 37. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான பொருளை அறிதல்

1. ஒலி வெறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க

| **மருப்பு** | **–** | **மறுப்பு** |
|---|---|---|
| அ) தந்தம் | - | எதிர்ப்பு |
| ஆ) வியப்பு | – | ஆர்வம் |
| இ) மகிழ்ச்சி | - | இயக்கம் |
| ஈ) நிசப்தம் | – | பொறுமை |

**விடை: அ) தந்தம் - எதிர்ப்பு**

2. ஒலி வேறுபாடு அறிந்து எது சரியானது எனத் தேர்க

அ) இராமர் இராவணனை அளித்தார்

ஆ) வட்டாட்சியர் சான்றழித்தார்

இ) கர்ணன் குடை அலிப்பதில் வல்லவன்

ஈ) சிவபெருமான் வரமளித்தார்

**விடை: ஈ) சிவபெருமான் வரமளித்தார்**

3. ஒலி வேறுபாடு அறிந்து சரியாக பொருளைத் தேர்க.

| **அலை** | – | **அழை** |
|---|---|---|
| அ) கடலில் எப்போதும் தோன்றுவது | - | அழைத்து வருக |
| ஆ) நரகம் | - | எதிர்ப்பு |
| இ) நிலை | – | விலை |
| ஈ) மகிழ்ச்சி | – | மலர்ச்சி |

**விடை: அ) கடலில் எப்போதும் தோன்றுவது – அழைத்து வருக**

## 38. ஒரு பொருள் தரும் பல சொற்கள்

**(ஒரு பொருளைக் குறிக்க தமிழில் பல சொற்கள் உண்டு)**

1. **வயல்** - செய், பழனம், கழனி
2. **பெண்** - நங்கை, வனிதை, மங்கை
3. **செய்யுள்** - பா, கவிதை, யாப்பு
4. **அன்பு** – கருணை, நேசம், ஈரம், பரிவு, பற்று
5. **அச்சம்** - பயம், பீதி
6. **துன்பம்** - இன்னல், அல்லல், இடும்பை
7. **தீ** – அக்கினி, நெருப்பு, தழல்
8. **அழகு** – அணி, வடிவு, பொலிவு, எழில்
9. **அரசன்** - கோ, வேந்தன், கொற்றவன், ராஜா, கோன்
10. **ஞாயிறு** - சூரியன், கதிரவன், வெய்யோன், பகலவன், பரிதி
11. **மலர்தல்** - அவிழ்தல், அலர்தல், நெகிழ்தல், விள்ளல், விரிதல்
12. **சொல்** - பதம், மொழி, கிளவி
13. **தவறு** – மாசு, குற்றம், பிழை
14. **அறிவுரை** – புத்திமதி, நல்லுரை
15. **அறிவு** – உணர்வு, ஞானம், மதி, விவேகம், புத்தி
16. **அடி** – பாதம், தாள், கால்
17. **இரவு** - இராத்திரி, நிசி, இருள்
18. **உண்மை** – மெய், வாய்மை, சத்தியம்
19. **ஒளி** – வெளிச்சம், சுடர், கதிர், பிரகாசம்
20. **குழந்தை** – மகவு, குழவி, சேய், சிசு, மழலை, பிள்ளை
21. **கணவன்** - கொழுநன், தலைவன், நாயகன்
22. **காற்று** – வளி, மாருதம், தென்றல், ஊதை, பவனம
23. **கேடு** – நாசம், அழிவு, சேதம், சிதைவு
24. **ஆதி** – தொடக்கம், முதல்
25. **குடித்தல்** - அருந்துதல், பருகுதல், சுவைத்தல்

26. **ஒலி** – ஓசை, அரவம், தொனி, சப்தம்

27. **உடல்** - அடவி, கானகம், வனம், ஆரண்யம்

28. **அபாயம்** - பேரிடாத், இடையூறு

29. **பாடு** – அடவி, கானகம், வனம், ஆரண்யம்

30. **கல்வி** – கலை, வித்தை, படிப்பு

31. **சோலை** – கா, தண்டலை, பூங்கா, பொழில், நந்தவனம்

32. **கல்வி** – கலை, வித்தை, படிப்பு

33. **நீதி** – அறம், நெறி, நியாயம், நடு

34. **உதயம்** - வைகறை, காலைப் பொழுது, விடியல், தோற்றம்

35. **குதிரை** – பரி, புரவி, அயம், அகவம்

36. **மேகம்** - கொண்டல் - கார், முகில்

37. **வண்டு** – அறி, மதுரகம்

38. **சத்தியம்** - ஆணை, சபதம்

39. **சிங்கம்** - அரி, ஆழி, கேசரி, கோளரி, சீயம்

40. **தேன்** – மது, நறவு, தேறல், கள்

41. **வண்ணம்** - சாயல், நிறம், வர்ணம்

**சான்று**

ஒரு பொருளைத் தரும் இரு சொற்களைத் தேர்வு செய்க (வண்ணம்)

அ) தேறல், கள்

ஆ) நிடபம், துளா

இ) சாயல், நிறம்

ஈ) துளி, இபா

**விடை: இ) சாயல், நிறம்**

## 39. வேர்ச் சொல்லைச் தேர்வு செய்தல்

ஒரு சொல்லின் வேராக அமையும் மூலச்சொல் அச்சொல்லின் வேர்ச்சொல் எனப்படும். வேர்ச்சொல்லைப் பிரிக்க இயலாது. எந்தச் சொல் கட்டளை பிறப்பிக்கும் சொல்லாக அமைந்திருக்கிறதோ அதுவே வேர்ச் சொல்லாகும்.

நினைத்தேன் என்பதில் நினை என்பது வேர்ச் சொல்லாகும்.

அகன்றேன் என்பதில் அகல் என்பது வேர்ச் சொல்லாகும்

பாடினேன் என்பதில் பாடு என்பது வேர்ச் சொல்லாகும்

கேட்டேன் என்பதில் கேட்டு என்பது வேர்ச் சொல்லாகும்

கண்டனன் என்பதில் காண் என்பது வேர்ச் சொல்லாகும்

**சொல்** - **வேர்ச்சொல்**

| | | |
|---|---|---|
| அகன்று | – | அகல் |
| அறுவடை | – | அறு |
| பற்றினால் | - | பற்று |
| கேட்க | – | கேள் |
| ஓடாதே | – | ஓடு |
| கெடுத்தான் | - | கெடு |
| ஒட்டுவிரிப்பு | – | ஒட்டு |
| மலைத்து | – | மலை |
| உற்ற | – | உறு |
| இயக்கிடு | - | இயக்கு |
| கற்றேன் | - | கல் |
| பேசினேன் | - | பேசு |
| ஓடினேன் | - | ஓடு |
| நிற்கிறேன் | - | நில் |
| பறப்பாய் | - | பற |
| இருக்கிறாய் | - | இரு |
| மிதக்கிறாய் | - | மித |
| இசைக்கிறார் | - | இசை |

**மாதிரி வினா**

பாடல் பாடினேன்: வேர்ச் சொல்லைக் கண்டறிக

அ) பாடு ஆ) பாடிய இ) பாடும் ஈ) பாட

**விடை: அ) பாடு**

## 40. வேர்ச்சொல்லைக் கொடுத்து வினைமுற்று, வினையெச்சம், வினையாலணையும் பெயர், தொழிற்பெயரை உருவாக்குதல்

### 1. வினைமுற்று

ஒரு வினைச்சொல்லின் பெருள் முழுமையாக இருக்கும்போது அது வினைமுற்று ஆகும். ஒரு வினைமுற்று வாக்கியத்தின் இறுதியில் வந்து எழுவாயின் செயல் நிலையைக் காட்டி வாக்கியம் முடிக்கும்.

**வினைமுற்றின் வகைகள்.**

1. தெரிநிலை வினைமுற்று: கண்ணன் பாடுகிறான்
2. குறிப்பு வினைமுற்று: அவர் நல்லவர்
3. ஏவல் வினைமுற்று: செல், வா

4. வியங்கோள் வினைமுற்று: வாழ்க! வெல்க!

## 2. பெயரெச்சம்

ஒரு வினைச்சொல்லானது பெயர்ச் சொல்லைக் கொண்டு முடிந்தால் அது பெயரெச்சம் எனப்படும்.

**பெயரெச்ச வகைகள்**

பெயரெச்சம் இரு வகைப்படும்.

1. தெரிநிலைப் பெயரெச்சம்
2. குறிப்புப் பெயரெச்சம் என்று இருவகைப்படும்

**அ) தெரிநிலைப் பெயரெச்சம்**

காலத்தை வெளிப்படையாகக் காட்டி அச்சொல் முடியாமல் நின்று, பெயர்ச் சொற்களைக் கொண்டு முடிந்தால் அது தெரிநிலைப் பெயரெச்சமாகும். இது மூன்று காலங்களிலும் வரும்.

**படி எனும் வேர்ச் சொல்லைக் கொண்டு,**

படித்த மாணவன்

படிக்கின்ற மாணவன்

படிக்கும் மாணவன்

என்று சொற்றொடரை அமைக்கலாம்.

**ஆ) குறிப்புப் பெயரெச்சம்**

காலத்தை வெளிப்படையாகக் காட்டாமல், ஒரு செயலை உணர்த்தாமல், பண்பினை மட்டும் உணர்த்தி பெயர்ச் சொல்லாக முடிந்தால் அதுவே குறிப்புப் பெயரெச்சம் எனப்படுகிறது.

**சான்று**

நல்ல பையன், கூரிய உருவம் படி எனும் வேர்ச்சொல்லைப் படித்த மாணவன் என்று வாக்கியமாக்கலாம்.

அதேபோல் வா எனும் வேர்ச் சொல்லை,

வந்த வாகனம் என்று சொற்தொடராக்கலாம்.

**சான்று வினா**

படி எனும் வேர்ச்சொல்லைக் கொண்டு பெயரெச்சமாகுக.

அ) படித்த மாணவன்

ஆ) படித்து மாணவன்

இ) படிக்க மாணவன்

ஈ) படி மாணவன்

**விடை: படித்த மாணவன்**

படி எனும் வேர்ச்சொல் படித்த எனும் பெயரெச்சமாக இச்சொற்றொடரில் மாற்றப்பட்டுள்ளது.

தா எனும் வேர்ச் சொல்லை,

தந்த பணம் எனும் பெயரெச்ச வாக்கியமாக்கலாம்.

காண் எனும் வேர்ச்சொல்லைக் கொண்டு

கண்ட கனவு எனும் பெயரெச்ச வாக்கியமாக்கலாம்.

செல் எனும் வேர்ச்சொல்லைக் கொண்டு

சென்ற நாட்கள் எனும் வாக்கியமாக்கலாதம்.

### 3. வினையெச்சம்

ஒரு வினைமுற்றினை ஏற்று முடிவு பெறும் எச்ச வினைச்சொல் வினையெச்சம் எனப்படுகிறது.

**இரு வகைகள்**

வினையெச்சம் இருவகைப்படும்.

#### அ) தெரிநிலை வினையெச்சம்

காலத்தையும் செயலையும் உணர்த்தி நின்று, ஒரு வினைமுற்றினைக் கொண்டு முடிவுறும் எச்ச வினை சொல் தெரிநிலை வினையெச்சம் எனப்படும்.

பாடி ஓடு எனும் வேர்ச் சொல்லைப் படித்துத் தேறினான், படிக்கச் சென்றான், ஓடி வருவான் என்று வினையெச்ச வாக்கியமாக்கலாம்.

#### ஆ) குறிப்பு வினையெச்சம்

காலத்தை வெளிப்படையாக உணர்த்தாமல் பண்பினை மட்டும் உணர்த்தி நின்று, ஒரு வினைமுற்றினைக் கொண்டு முடிவுறும் எச்சவினைச் சொல் குறிப்பு வினையெச்சம் எனப்படும்.

**சான்று**

மெல்ல நடந்தான், நோயின்றி வாழ்ந்தான்.

**முற்றெச்சம்**

ஒரு வினைமுற்றுச் சொல் எச்சப் பொருளில் வந்து மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிவது முற்றெச்சம் ஆகும். கற்று எனும் வேர்ச்சொல்லை,

கற்றனன் மகிழ்ந்தான் - கற்று மகிழ்ந்தான் (கற்று மகிழ்ந்தான்) என்று சொற்றொடர் ஆக்கலாம்.

பாடு எனும் வேர்ச்சொல்லை

சிறுவர் பாடினர் மகிழ்ந்தனர் (சிறுவர் பாடி மகிழ்ந்தனர்) என்று வாக்கியமாக்கலாம்.

படி எனும் வேர்ச்சொல்லைப் படித்தனர் தேறினர் (படித்துத் தேறினர்) என்று முற்றெச்ச வாக்கியமாக்கலாம்.

## 4. வினையாலணையும் பெயர்

வினையாலணையும் பெயர் வினையைக் குறிக்காது. வினை செய்தவரைக் குறித்து வரும். வினையாலணையும் பெயர் வினைமுற்றுத் தன்மையைக் கொண்டிருக்கும். இது வேற்றுமை உருபை ஏற்றும் ஏற்காதும் வரும்.

இது தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்களிலும் வரும். இது காலம் உணர்த்தி வரும்.

**சான்று**

படித்தவன், ஓடிவந்தவர், வாழ்வான், உடையோன், உரவோர், அகழ்வார்

அகழ் என்னும் வேர்ச்சொல் அகழ்வார் என்றும், படி என்னும் வேர்ச்சொல் படித்தவன் என்றும், வாழ் எனும் வேர்ச்சொல் வாழ்வான் என்றும் வினையாலணையும் பெயராக மாறியது.

### 5. தொழிற்பெயர் - உருவாக்குதல்

செயல்பாட்டினை உணர்த்தும் பெயரைத் தொழிற்பெயர் என்கிறோம். சொற்புணர்ச்சியின் அடிப்படையில் தொழிற் பெயரை இருவகையாகப் பிரிப்பர்

இருவகைத் தொழிற்பெயர்

**அ) முதனிலைத் தொழிற்பெயர்**

விகுதி பெறாமல் வினைப் பகுதியே தொழிற்பெயர்தல் முதனிலைத்தொழிற் பெயராகும்.

சான்று: உரை, அடி, இசை, வாழ்த்து, வணங்கு, பாராட்டு

**ஆ) முதனிலை திரிந்த தொழிற் பெயர்**

தோசையின் சூடு குறையவில்லை எனும் வாக்கியத்தில் சுடு என்னும் பகுதியின் முதலெழுத்து நீண்டு, சூடு என்று திரிந்து தொழிற் பெயராக மாறியது. இவ்வாறு முதல் நிலை திரிவதால் உருவாகும் தொழிற் பெயரே முதனிலை திரிந்த தொழிற்பெயர் எனப் பெயர் பெறும்.

## 41. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்தல்.

தமிழ் மொழியில் உள்ள எழுத்துகளை நம் மொழியியலாளர்கள் வகுத்துள்ள முறைப்படி அடுக்கப்பட்ட எழுத்துகளின் வரிசை ஆகும். அகரம் முதலாவதாக உள்ளதால்.

**உயிர் எழுத்துகள்**

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ

**ஆய்த எழுத்து: ∴**

**மெய் எழுத்துகள்**

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்

**உயிர்மெய் எழுத்துகள் வரிசை**

இவற்றின் வரிசை அடிப்படையில் அகர வரிசைப்படி எழுத்துகளைச் சீர் செய்யலாம்.

1. முதலில் அகர வரிசைப்படி உயிர் எழுத்துகளை வரிசைப்படுத்த வேண்டும்.
2. பின்பு முதல் எழுத்தை ஒட்டி மெய் எழுத்து வந்தால் அதை வரிசைப்படுத்த வேண்டும்.
3. பின்னர் க, கா, கி, கீ என்று வரிசைப்படுத்த வேண்டும.

**சான்று**

அகர வரிசைப்படி சரியாக அமைந்ததைத் தேர்வு செய்க.

அ) ஒட்டகம், அவல், எலி, உரல், ஏணி

ஆ) கிண்ணம், கண்கள், கீழே காப்பாற்று, குழாய்

இ) பணி, பிணி, பாடல், புதன், பீடு

ஈ) தார், தெரு, தை, தொடு, தோல்

**42. சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடராக்குதல்**

(எழுவாய் - செயப்படுபொருள் - பயனிலை என்ற முறைப்படி அமைவதே சரியான தமிழ்ச் சொற்றொடர் முறைமை ஆகும்.

நான்கு அல்லது ஐந்து சொற்கள் மாறி மாறி தவறான சொற்றொடராக அமைக்கப்பட்டிருக்கும். அந்நான்கு அல்லது ஐந்து சொற்களை முன்பின்னாக மாற்றி சரியான, முற்றுப்பெற்ற சொற்றொடரும் இருக்கும். அதைக் கண்டறிந்து குறியிடுவதே இப்பகுதியின் நோக்கமாகும்.

1. அ) வேண்டும் சிந்தனை தமிழ் மொழியில் சிறக்க

   ஆ) சிந்தனை மொழியில் தமிழ் சிறக்க வேண்டும்

   இ) மொழியில் தமிழ் சிறக்க வேண்டும் சிந்தனை

   ஈ) தமிழ் மொழியில் சிந்தனை சிறக்க வேண்டும்

   **விடை: ஈ) தமிழ் மொழியில் சிந்தனை சிறக்க வேண்டும்**

2. அ) பரணியைக் கலிங்கத்துப் பாடியவர் செயங்கொண்டார்

ஆ) கலிங்கத்துப் பரணியைப் பாடியவர் செயங்கொண்டார்

இ) பாடியவர் செயங்கொண்டார் கலிங்கத்துப்பரணியை

ஈ) கலிங்கத்துப் பரணியைச் செயங்கொண்டார் பாடியவர்

**விடை: ஆ) கலிங்கத்துப் பரணியைப் பாடியவர் செயங்கொண்டார்**

### சில சரியான சொற்றொடர்கள்

1. நிலத்தடி நீர் வளமான வாழ்க்கைக்கு ஆதாரமாகும்.
2. மரம் செடி கொடிகள் மழை பெய்வதற்கு முக்கியக் காரணிகள்
3. பத்துப் பருவங்களாக வகுத்துப் பாடுவது பிள்ளைத் தமிழ் என்னும் இலக்கியம்
4. எண்ணியார் எண்ணம் இழப்பர்
5. உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல்
6. கம்பன் வீட்டு கட்டுத் தறியும் கவிபாடும்
7. பாரத நாடு பார்கெலாம் திலகம்
8. ஈதல் இசைபட வாழ்தல்
9. தோன்றலின் தோன்றாமை நன்று
10. உவகைத் தேன் உண்டான் அனுமன்
11. மழை மண்ணைத் தைக்கும் தண்ணீர் ஊசி
12. கயிலைக்கு நிகரான மலை திரிகூடமலை
13. உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்
14. யார் மாட்டும் கொள்ளாமை வேண்டும் பகை
15. இளமைப்பருவத்தில் கல்லாமை குற்றம்
16. பசிபெரிது ஆயினும் புல் மேயாதாகும் புவி
17. உயர்சால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்
18. என்புதோல் போர்த்த உடம்பு
19. கனி இருப்பக் காய் கவர்ந்தற்று
20. குளத்துக்கு அணி என்ப தாமரை
21. நல்லவே எண்ணல் வேண்டும்
22. தகுதி உடையன தள்ளாமை வேண்டும்
23. நலம்பெறும் நன்னாள் கொண்டே
24. தீதும் நன்றும் பிறர் தர வாரா
25. சென்னை மாநகரம் சாலச் சிறந்தது.

### 43. இருவினைகளின் பொருள் வேறுபாடு அறிதல்

**1. குவிந்து – குவித்து**

ஆற்றில் அடித்து வந்த மணல் குவிந்தது. அடித்து வந்த மணலை வீட்டின் முன் குவித்து வைத்தோம்.

**2. பணிந்து – பணித்து**

ஆசிரியர் வந்தவுடன் பணிந்து நின்றோம், எல்லோரும் கட்டுரை தாருங்கள் என்று பணித்தார்.

**மாதிரி வினா: சரியான இணையைத் தேர்ந்தெடு**

1. அளி – கொடு
2. ஆழி – குளம்
3. களி – துன்பம்
4. விளி – கருவி

விடை: 1. அளி – கொடு

## 44. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்தல்

ஒரு சொற்றாடர் தரப்பட்டிருக்கும், அதற்கு கீழே நான்கு வினாக்கள் இடம் பெற்றிருக்கும். மூன்று வினாக்கள் தவறாகவும் ஒரு வினா சரியான வினாவும் அமையும். அதைக் கண்டறிந்து எழுத வேண்டும்.

1. ஔவையார் ஆத்திச்சூடி பாடினார்

1. ஔவையார் எதைப் பாடினார்

ய. ஆத்திச்சூடியை ஔவையார் பாடினாரா?

இ) ஔவையார் பாடிய நூல்கள் யாவை?

ஈ) யார் ஔவையார் பாடினார்

**விடை: அ) ஔவையார் எதைப் பாடினார்**

2. உடல்நலம் சார்நதே மனநலம் அமைகிறது

அ) எதைச் சார்ந்து மனநலம் அமைகிறது?

ஆ) மனநலம் என்பதென்ன?

இ) உடல்நலம் எப்படி அமையும்?

ஈ) உடல் நலமும் மனநலமும் எவ்வாறு அமையும்?

**விடை: அ) எதைச் சார்ந்து மனநலம் அமைகிறது?**

3. சாலை விதிகளை மதித்து நடப்பதே அனைவருக்கும் நல்லது

அ) ஏன் சாலை விதிகள் உள்ளன?

ஆ) சாலைக்கும் விதிக்கம் என்ன தொடர்பு?

இ) சாலை விதிகள் சமுதாய விதிகளா?

ஈ) சாலை விதிகளை மதித்து நடப்பது யாருக்கு நல்லது?

**விடை: ஈ) சாலை விதிகளை மதித்து நடப்பது யாருக்கு நல்லது?**

4. தமிழ் மிகப் பழமையான மொழி

அ) எது மிகப் பழமையான மொழி?

ஆ) தமிழ் எம்மொழி?

இ) தமிழ் என்றால் என்ன?

ஈ) பழமை என்பதென்ன?

**விடை: அ) எது மிகப் பழமையான மொழி?**

## 45. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல்

**வாக்கியம் என்பதென்ன?**

சொற்கள் தொடர்ந்து நின்று பொருள் தரும் சொற்றொடரே வாக்கியம் என அழைக்கப்படும்.

**செய்தி வாக்கியம்**

ஒரு செய்தியை உணர்த்தும் வாக்கியம் செய்தி வாக்கியம் எனப்படும்.

**சான்று:** தமிழமுதன் பரிசு பெற்றான்.

முத்தழகி சிறப்பாகச் சொற்பொழிவாற்றினாள்.

**வினா வாக்கியம்**

ஒரு சொற்றொடர் வினாப் பொருளை உணர்த்துகின்ற வகையில் அமைவது வினாவாக்கியம் எனப்படுகிறது.

**சான்று:** விளையாட்டுப் போட்டியில் வென்றவர் யார்?

மகாகவி பாரதியார் எங்கு இதழாசிரியராகப் பணியாற்றினார்?

**உணர்ச்சி வாக்கியம்**

உவகை, அவலம், அச்சம், இரக்கம், இழிவு, வெகுளி, வியப்பு போன்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் வாக்கியமே உணர்ச்சி வாக்கியம் ஆகும்.

பாபநாச அருவியின் அழகுதான் என்னே!

ஐயகோ! கவிஞர் வாலியின் மறைவு ஈடு செய்யவியலுமா!

**ஏவல் வாக்கியம்**

பிறரை ஏவுதல் அல்லது பிறருக்குக் கட்டளையிடும் முறையில் வாக்கியம் அமைவது ஏவல் வாக்கியம் எனப்படும்.

**சான்று:** திருக்குறளைப் படி. மூத்தோர் சொல் கேள்

**உடன்பாட்டு வாக்கியம்**

தொழில் நிகழ்வதை உணர்த்தி வரும் வாக்கியம் உடன்பாட்டு வாக்கியம் எனப்படும்.

மணிவண்ணன் தமிழகம் சென்றான்

கயல்விழி தின்பண்டம் தின்றாள்

**எதிர்மறை வாக்கியம்**

தொழில் நிகழாமையை உணர்த்தும் வாக்கியம் எதிர்மறை வாக்கியம் எனப்படும்.

**சான்று**

மணிவண்ணன் தமிழகம் சென்றிலன்

கந்தன் உணவு உண்டிலன்

**தனி வாக்கியம்**

தமிழில் தனி வாக்கியமானது சிறு வாக்கியமாகவும் இருக்கும். பல பக்க அளவிற்கு வரக்கூடிய நெடும் வாக்கியமாக இருக்கலாம்.

ஓர் எழுவாயே பல எழுவாய்களோ ஒரே பயனிலையைப் பெற்று வருவது தனி வாக்கியமாகும்.

**சான்று:** திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார்.

இது ஒரு எழுவாய். ஒரு பயனிலையைப் பெற்று வந்த தனிவாக்கியம்.

திருவள்ளுவர் திருக்குறளையும், செயங்கொண்டார் கலிங்கத்துப் பரணியையும், திருத்தக்க தேவர் சீவக சிந்தாமணியையும் இயற்றினார்கள்

இது பல எழுவாய்கள் ஒரே பயனிலையைப் பெற்று வந்த தனிவாக்கியம்.

**தொடர் வாக்கியம்**

ஒன்றுக்கும் மேற்பட்ட வாக்கியங்கள் அதனால், இதனால், ஆகையால், ஏனென்றால் எனும் இணைப்புச் சொற்களால் இணைக்கப்பட்டு வந்தால் அது தொடர் வாக்கியம் எனப்படும். ஒரே எழுவாய் பல பயனிலைகளைக் கொண்டு முடிவதும் தொடர் வாக்கியமாகும்.

**சான்று:**

கதிரவன் தோன்றியது ஆகையால் பனி மறைந்தது

**கலவை வாக்கியம்**

கலவை வாக்கியம் என்பது பல வாக்கியங்களை இணைத்து ஒரு வாக்கியமாக அமைவது. இதில் ஒன்று முதன்மை வாக்கியமாக இருக்கும். மற்றது சார்பு வாக்கியமாக இருக்கும்.

வாழ்க்கை பூந்தோட்டமும் போராட்டமும் என்றும், எல்லாவற்றையும் புன்னகையோடு எதிர்கொள்ள வேண்டும் என்று அறிஞர் அறிவுரை கூறுவர்.

**சான்று**

கயல்விழியும், மான்விழியும் இணைபிரியாது எங்கு சென்றாலும் ஒன்றாகவே சென்றர்.

அ) செய்தி வாக்கியம்

ஆ) தொடர் வாக்கியம்

இ) தனி வாக்கியம்

ஈ) கலவை வாக்கியம்

**விடை: ஈ) கலவை வாக்கியம்**

பாவேந்தர் பாடல்களின் இனிமைதான் என்னே!

அ) செயதி வாக்கியம்

ஆ) உணர்ச்சி வாக்கியம்

இ) வினா வாக்கியம்

ஈ) தனி வாக்கியம்

**விடை ஆ) உணர்ச்சி வாக்கியம்**

வகுப்பில் மாணவர்கள் அமர்ந்திருந்தனர்

அ) உடன்பாட்டு வாக்கியம்

ஆ) நேர்கூற்று வாக்கியம்

இ) கட்டளை வாக்கியம்

ஈ) தொடர் வாக்கியம்

**விடை: அ) உடன்பாட்டு வாக்கியம்**

நீ ஓடு

அ) தனி வாக்கியம்

ஆ) வினா வாக்கியம்

இ) கட்டளை வாக்கியம்

ஈ) அயற்கூற்று வாக்கியம்

**விடை:** இ) கட்டளை வாக்கியம்

நாள்தோறும் உடற்பயிற்சி செய்

அ) உணர்ச்சி தொடர்

ஆ) கட்டளை தொடர்

இ) செய்தி தொடர்

ஈ) உடன்பாட்டு தொடர்

**விடை: ஆ) கட்டளை தொடர்**

ஐயகோ அப்துல் கலாம் ஐயா மறைந்தாரே!

அ) உணர்ச்சி வாக்கியம்

ஆ) நேர்கூற்று வாக்கியம்

இ) கட்டளை வாக்கியம்

ஈ) அயற்கூற்று வாக்கியம்

**விடை:** அ) உணர்ச்சி வாக்கியம்

## 46. உவமையால் விளக்கப் பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்து எழுதுதல்

தரப்பட்டிருக்கும் உவமை அல்லது பழமொழித் தொடரில் இடம் பெறும் உவமை கூறும் பொருளையும் அந்த உவமை எதைக் குறிக்கிறது என்பதையும் வினாவாகப் போட்டித் தேர்வுகளில் கேட்கிறார்கள்.

1. அத்திப் பூத்தார் போல – எப்போதாவது
2. அனலில் இட்ட மெழுகு போல் - உருக்கம் கடும் துன்பம்
3. அங்காடி நாய் போல – வீண் அலைச்சல்
4. அரைக்கிணறு தாண்டியது போல் - முழுமையின்மை
5. ஆற்றில் கரைத்த புளி போல – வீண்
6. இலை மறை காய் போல் - தெரிந்தும் தெரியாமல்
7. எலியும் பூனையும் போல் - தீராப் பகை
8. இடிவிழுந்த மரம் போல – நொறுங்கிப் பொதல்
9. இரும்பை இழுக்கும் காந்தம் போல - ஈர்ப்பு
10. இரு தலைக் கொள்ளி எறும்பு போல – நிலைதடுமாறித் துடித்தல்
11. உயிரும் உடம்பும் போல - இணை
12. உள்ளங்கை நெல்லிக்கனி போல – தெளிவு
13. கண் கெட்டபின் சூரிய வழிபாடு செய்வது – வீண்
14. கடல் மடை திறந்தாற் போல – ஆற்றொழுக்கான பேச்சு
15. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போல் - புரியாமை
16. மழை மேகம் கண்ட மயில் போல – மகிழ்ச்சி
17. கிணற்றுத் தவளை போல – ஏதும் தெரியாமல் இருத்தல்
18. குன்றின் மேலிட்ட விளக்கு போல – தெளிவு
19. சிறகு இழந்த பறவை போல - இழப்பு
20. சேற்றிலே முளைத்த செந்தாமரை போல – தவறான இடத்தில் சிறப்பான ஒன்று இருத்தல்

21. குரங்கு கை பூமாலை போல – நாசம்
22. தாமரை இலை மேல் தண்ணீர் போல – ஒட்டாமல் இருத்தல்
23. திருடனுக்குத் தேள் கொட்டியது போல – திடுக்கிடும் சம்பவம்
24. நகமும் சதையும் போல – ஒற்றுமை
25. பசுமரத்து ஆணி போல – ஆழம்
26. புற்றீசல் போல – பல்கிப் பெருகுதல்
27. மலையைக் கெல்லி எலி பிடிப்பது போல – நடக்காத ஒன்று
28. மாலுமி இல்லாத மரக்கலம் போல – திசையில்லாப் பயணம்

**சான்று வினா**

வயநாடு நிலச்சரிவு சம்பவம் கேள்விப்பட்டு அனலில் விழுந்த புழுபோல ஆனோம்.

அ) துன்பம்

ஆ) மகிழ்ச்சி

இ) ஆறாத் துயரம்

ஈ) சினம்

விடை: இ) ஆறாத் துயரம்

## 18 அலுவல் சார்ந்த கலைச்சொற்கள்

தமிழ்நாடரசின் தமிழ் வளர்ச்சித் துறை 17, 161 சொற்கள் கொண்ட அலுவல் சார் ஆட்சிச் சொல் அகராதியை 2015-ல் அச்சிட்டு அனைத்து அலுவலகங்களுக்கும் அனுப்பியுள்ளது. இந்த அகராதியை ாவவி.ஃ.வயஅடைஎயடயசஉாவைாரசயஉ.ஊழஅ இணைய தளத்தில் தமிழ் வளர்ச்சித் துறை பதிவேற்றம் செய்துள்ளது.

1. யுடிடைவைல – திறமை, ஆற்றல்
2. யுடிதரசந – ஆணையிட்டுக் கைவிடுக
3. யுடிழரவ – குறித்து
4. யுடிளநஉந - இராத, வராத
5. யுஉயனநஅஉையெ – கலைக் கழக உறுப்பினர்
6. யுஉநிவ – ஏற்றுக் கொள்
7. யுஉயனநஅல – கலைச் சாலை
8. யுஉஉநிவயஉந ழக டியடை – பிணை ஏற்பு
9. யுஉஉநளளழச – உதவியாளர்
10. யுஉஉழசன - இசைவு
11. யுஉஉழரவெயவெ – கணக்கர்

12. யுஉஉரளயவழைெ – குற்றச்சாட்டு

13. யுஉஉரளநன – குற்றம் சாட்டப்பட்டவர்

14. யுஉஙரளைவைழைெ – கையகப்படுத்து

15. யுஉவ – சட்டம்

16. யுஉவபை ீநசளழுெநட - மாற்றான் முறைப் பணியாளர்

17. யுஉவழைெ ஊழஅஅவைவநந – நடவடிக்கைக் குழு

18. யுனயிவயவழைெ ழக டுயற – சட்டத் தழுவல்

19. யுனனநனெரஅ – பின் இணைப்பு

20. யுனாநசந – கடைப்'பிடி

21. யுனதரனஉையவழச – தீர்ப்பாளர்

22. யுஅைைளைவசயவந ர்நயன – ஆட்சித்தலைவர்

23. யுனஅளைளபைடந – ஏற்கத்தக்க

24. யுனஎயஉந ஊழில – முன் படி

25. யுனஎநவெ – வருகை

26. யுனஎநசளந சுநஅயசமள – குறைக் குறிப்புரைகள்

27. யுனஎளைழசல டீழயசன – அறிவுரைக் குழுமம்

28. யுககனையஎவை – ஆணை உறுதி வாக்குமூலம்

29. யுபநஉெல – முகமை

30. யுபநனெய – பொருள் நிரல்

31. யுபவையவழைெ – கிளர்ச்சி

32. யுபசநநஅநவெ டீழனெ – உடன்படிக்கைப் பிளைமுறி

33. யு டநவவநச வழ வாளை நககநஉவ - இவ்வகையாக ஒரு கடிதம்

34. யுடடநபயவழைெ – குறை கூறல்

35. யுடடழஉயவழைெ – ஒதுக்கீடு

36. யுடடழவ – பங்கிட்டு அளி

37. யுரெயட ஐஉெசநஅநவெ – ஆண்டுக்கான ஊதிய உயர்வு

38. யுழெஅயடல – முரண்பாடு

39. யுவெந னுயவநன – முன்னாவிட்ட

40. யிநஒ – தலைமை

41. யிீநயட – மேல் முறையீடு

42. யிீடஉையடிடந – பொருந்தக் கூடிய

43. யிீடல - இடு

44. யிீழவைெ – பணியில் அமர்த்து

45. யிீசயளைநச – மதிப்பீட்டாளர்

46. யீசழஎயட – ஏற்பு

47. யுசநயெ – செயற்களம்

48. யுசசநயச – நிலுவை

49. யுள ய அயவவநச ழக ீழடஉைல – கோட்பாட்டின் படி

50. யுளளநஎெ – ஒப்புதல்

**சான்று வினா**

யுவ வாந ஆழளவ என்பதை எவ்வாறு அலுவலகக் குறிப்பில் தமிழில் எழுதுவது?

அ) மிக உயர்ந்த அளவு

ஆ) தேவை

இ) தணிக்கை

ஈ) ஒப்புதல்

**விடை:** அ) மிக உயர்ந்த அளவு

## 19 விடை வகைகள்

அறிதல், தெரிதல், புரிதல், உணர்தல், பகுப்பாய்வு செய்தல் எனும் ஐந்து படி நிலைகளில் நம் அறிவு வலுப்படுகிறது. ஏன்? எதற்கு? எங்கு? எதனால்? எனும் வினாக்கள் புதிய தேடலைத் தந்தன. அந்த வகையில் வினாக் கேட்டலும், அதற்கு விடை தருவதும் இன்றியமையாதது. விடை எட்டு வகைப்படும்.

**"சுட்டு மறை நேர் ஏவல் வினாதல்**
**உற்றது உரைத்தல் உறுவது கூறல்**
**இன மொழி எனும் எண் இறையுள் இறுதி**
**நிலவிய ஐந்தும் பொருண்மையின் நேர்ப"**

என்று நன்னூல்-386 நூற்பா விடை வகைகளைப் பட்டியலிடுகிறது.

**1. நேர்விடை:**

கேட்கப்படும் வினாவுக்குச் சுற்றி வளைக்காமல் நேரடியாக வழங்கப்படும் விடையே நேர் விடையாகும்.

திருமலை நாயக்கர் மகால் எங்கே உள்ளது? எனும் வினாவுக்கு மதுரையில் உள்ளது என்று நேரடியாகக் கூறினால் அது நேர் விடை ஆகும்.

**2. சுட்டு விடை**

திருநெல்வேலிக்கு வழி யாது? என்ற வினாவுக்கு இது என்று சாலையைச் சுட்டிக் சுறும் விடையே சுட்டு விடை ஆகும்.

**3. மறை விடை**

இதை எதிர் மறுத்துக் கூறும் விடை என்பர். இச்செயலைச் செய்வாயா? என்ற வினாவுக்கு இச்செயல் செய்யேன் என்று எதிர் மறுத்துக் கூறுதலே இவ்வகை விடையாகும்.

**4. நேர்விடை**

உடன்பாட்டுப் பதில் தருதல் என்று நேர் விடையை அழைக்கலாம். இச் செயலைச் செய்வாயா? என்று கேட்டால் செய்வேன் என்று உடன்பட்டுக் கூறுவது நேர் விடையாகும்.

**5. ஏவல் விடை**

வினாக் கேட்பவரையே அந்தச் செயலைச் செய்ய ஏவுவது ஏவல் விடை எனப்படும். நீ மாவு அரைத்து வருவாயா? என்று கேட்பவரையே நீங்களே அரைத்து வாருங்கள் என ஏவுவது ஏவல் விடையாகும்.

**6. வினா எதிர்வினாதல் விடை**

கேட்கப்படும் வினாவுக்கு விடையாக மற்றொரு வினாவையே கேட்பது வினா எதிர் வினாதல் எனப்படும். தமிழ் மகனே நீ பாடுவாயா? எனும் கேள்விக்கு இனியனே நான் பாடாமல் இருப்பேனா? என்று கேட்பது வினா எதிர் வினாதல் விடை ஆகும்.

**7. உற்றது உரைத்தல் விடை**

உன்னால் இதைச் செய்ய இயலுமா? முத்தழகன், எனும் வினாவுக்கு கை வலி தாங்க இயலவில்லை பொன்னழகன் என்று தனக்கு நடந்ததைக் (உற்றதை) கூறுதல் உறுவது கூறல் விடை எனப்படும்.

**8. இனமொழி விடை**

நீ ஆடுவாயா? தமிழ் அழகி எனும் வினாவுக்கு, ஆடுதலுக்கு இனமாகிய பாடுதலைக் குறிப்பிட்டு ‘‘ஐயா! நான் பாடுவேன்’’ என்று பதில் சொல்வது இனமொழி விடையாகும்.

**சான்று வினா**

கடைக்காரரே! உளுந்தம்பருப்பு இருக்கிறதா? என்று வாடிக்கையாளர் கேட்டதற்குப் பதிலாக, துவரம்பருப்பு இருக்கிறது என்றுபதில் கூறுவது எவ்வகை விடை?

அ) இனமொழி விடை

ஆ) .உறுவது கூறல் விடை

அ) நேர் விடை

ஈ) ஏவல் விடை விடை

**விடை: அ) இனமொழி விடை**

## 20. பிறமொழிச் சொற்களுக்கு இணையாக தமிழ்ச் சொற்களைக் கண்டறிதல்

**தெலுங்கு – தமிழ்**

| | | |
|---|---|---|
| 1. ஆஸ்தி | – | செல்வம் |
| 2. எக்கச்சக்கம் | - | மிகுதி |
| 3. கச்சிதம் | - | ஒழுங்கு |
| 4. சந்தடி | - | இரைச்சல் |
| 5. சொகுசு | – | நேர்த்தி |
| 6. சொச்சம் | - | மிச்சம் |
| 7. சோலி | – | வேலை |
| 8. தாறுமாறு | – | ஒழுங்கின்மை |
| 9. தெம்பு | – | ஊக்கம் |
| 10. தொந்தரவு | – | தொல்லை |
| 11. நிம்மதி | – | கவலையின்மை |
| 12. ரீதி | – | ஒழுங்கு |
| 13. எச்சரிக்கை | – | விழிப்பாக இருத்தல் |
| 14. வாடிக்கை | – | வழக்கம் |
| **கன்னடம்** | **-** | **தமிழ்** |
| 15. அதற்கோசரம் | - | அதற்காக |
| 16. அக்கறை | – | கவனம் |
| **அரபுச் சொல்** | **-** | **தமிழ்** |
| 17. சவால் | - | அறைகூவல் |
| 18. சிபாரிசு | – | பரிந்துரை |
| 19. சிப்பாய் | - | படை வீரர் |
| 20. ஜனாப் | - | மேன்மையான |
| 21. ஜமீன்தார் | - | நிலக்கிழார் |
| 22. குலாம் | – | அடிமை |
| 23. கைதி | – | சிறையாளி |
| 24. சரசம் | - | எல்லை |
| 25. ஐவேஜ் | - | உடைமை |
| 26. இனாம் | - | நன்கொடை |
| 27. கடுதாசி | – | மடல் |
| 28. அலாதி | – | தனி |
| 29. காஜி | – | நீதிபதி |
| 30. கசாப் | - | இறைச்சி |
| 31. கஜானா | – | கருவூலம் |
| 32. கம்மி | – | குறைவு |

| | | |
|---|---|---|
| 33. சாமான் | - | பண்டம் |
| 34. சோதா | – | சோம்பேறி |
| 35. நபர் | - | மனிதர் |
| 36. தபா | - | காலம் |
| 37. பல்லாக்கு | – | சிவிகை |
| 38. பதில் | - | மறுமொழி |
| 39. பாக்கி | – | நிலுவை |
| 40. பூரா | – | முழுவதும் |
| 41. முகாம் | - | தங்குமிடம் |
| 42. மைதானம் | - | திடல் |

**பாரசீகச் சொல் - தமிழ்ச சொல்**

| | | |
|---|---|---|
| 43. சிப்பந்தி | – | வேலையாள் |
| 44. ஜோடி | - | இணை |
| 45. அம்பாரம் | - | குவியல் |
| 46. கரம் | - | சூடு |
| 47. கமாஸ்தா | – | பணியாளர் |
| 48. சர்க்கார் | - | அரசாங்கம் |
| 49. ஜதை | - | இணை |
| 50. தஸ்தாவேஜு | - | ஆவணம் |
| 51. தாசில்தார் | - | வட்டாட்சியர் |
| 52. நாதர் | - | ஏழை |
| 53. பெ்‘ | - | நன்று |
| 54. வாபஸ் | - | திரும்பப் பெறல் |
| 55. ோ‘க் | - | பகட்டு |

**சான்று வினா**

சவால் எனும் அரபுச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்

அ) அறைகூவல்

ஆ) சேலஞ்ஜ்

இ) எதிர்கேள்வி

ஈ) ஆகட்டும் பார்க்கலாம்

**விடை: அ) அறைகூவல்**

## 19. ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுதல்

1. தஞ்சாவூர் - தஞ்சை
2. புதுக்கோட்டை – புதுகை
3. திருச்சிராப்பள்ளி – திருச்சி
4. உதகமண்டலம் - உதகை
5. கோயம்புத்தூர் - கோவை
6. நாகப்பட்டினம் - நாகை
7. புதுச்சேரி – புதுவை
8. கும்பகோணம் - குடந்தை
9. திருநெல்வேலி – நெல்லை
10. மன்னார்குடி – மன்னை
11. சைதாப்பேட்டை – சைதை
12. மயிலாப்பூர் - மயிலை

**சான்று வினா: ஊர்ப் பெயரின் மரூஉவை எழுதுதல்**

திருநெல்வேலி எனும் ஊர் பெயரின் மரூ உவை எழுதுக

அ) நெல்லை

ஆ) திருநெல்வேலி

இ) அல்வா நகரம்

ஈ) பாளை

**விடை: அ) நெல்லை**

## 20. நிறுத்தற் குறிகளை அறிதல்

காற்புள்ளி, அரைப்புள்ளி, முற்றுப்புள்ளி, உணர்ச்சிக் குறி வினாக்குறி, இவற்றையே நாம் நிறுத்தற்குறிகள் என்கிறோம்.

ஒரு நூலைக் குழப்பமில்லாமல் கற்றுத் தேர நிறுத்தற்குறிகள் அவசியமாக இருக்கின்றன. தொல்காப்பியம் நிறுத்தற் குறிகளை விளக்கவில்லை. ஆங்கில மொழியிலிருந்து நிறுத்தற் குறிகள் தமிழுக்கு வந்தன.

காற்புள்ளியை உம்மையுடன் சேர்த்துத் தவறாக எழுதக் கூடாது

அண்ணனும், தம்பியும் என்று காற்புள்ளியை எணணும்மைக்குப் பின்னர் போட்டு தவறாக எழுதுவதைக் கடிந்துரைக்கிறார் தமிழறிஞர் அ.கி.பரந்தாமனார்.

காய், கறிகள் என்று காற்புள்ளி இட்டு எழுதுவதையும் அவர் தவறு என்கிறார்.

1. **காற்புள்ளி** (,) என்பதைக் கமா என்று அழைப்பர்.

**சான்று வாக்கியங்கள்**

எழுத்து, சொல், பொருள் என்பன தொல்காப்பிய அதிகாரங்கள். சிலப்பதிகாரம் இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழையும் பேசுகிறது.

2. **அரைப்புள்ளி** ;() என்பதை செமி கோலன் என்று அழைப்பரி. ஒரு வாக்கியத்தில் ஒரே எழுவாயானது பல பயனிலைகளைக் கொண்டால் இடையில் உள்ள பயனிலைகளுக்கு அரைப்புள்ளி (:) இடலாம்

**சான்று:** மனித வாழ்வு, பெருங்கடல், சிறு குட்டையன்று

3. **முக்காற் புள்ளி** (:) என்பதைக் கோலன் என்று அழைப்பர். ஒரு வாக்கியத்தில் கூறிய தொன்றை விரித்துக் கூறும் போது முக்காற் புள்ளியிடலாம்

சான்று: விளக்கம் தருக: அறிவு, ஞானம்

4. **முற்றுப்புள்ளி(.)** என்பதை குரடட ளுவழி என்று ஆங்கிலத்தில் சொல்வர். பொருள் முடிந்திருப்பதைக் கண்களுக்கு எடுத்துக் காட்டுவது முற்றுப் புள்ளியாகும். வாக்கிய முடிவில் முற்றுப் புள்ளியிடுகிறோம்.

**சான்று:** நீ நாளை வரலாம்.

சொற் குறுக்கத்தில் முற்றுப் புள்ளி இடலாம்

**சான்று**: திரு. உயர்திரு. கி.மு. கி.பி.

5. **வினாக் குறி:** வினாவுக்குப் பின்னால் வரும் குறியை (?) வினாக்குறி அதாவது ஞரநளவழைெ ஆயசம என்று சொல்வர்.

**சான்று:** நீ தான் அவனா?

6. **உணர்ச்சிக் குறி:** உணர்ச்சி வாக்கியத்தில் நாம் பயன்படுத்தும் குறியை உணர்ச்சிக் குறி (!) அதாவது ஐவெநசதநஉவழைெ ஆயசம என்பர்.

**சான்று:** ஆ! தஞ்சை பெரிய கோவில் என்னே அழகு!

7. **இரட்டை மேற்கோள்**: மற்றவர் கருத்தை நம் நூலில் பயன்படுத்தும் போது அதை இரட்டை மேற்கோள் குறியிட்டு (" ") னுழரடிடந ஞரழவயவழைெ இட்டு நாம் வேறுபடுத்துவோம்.

"செய் அல்லது செத்து மடி" என்று சொன்னார் நம் தேசப்பிதா மகாத்மா காந்திஜி

## 21. பேச்சுவழக்கு – எழுத்து வழக்கு

பேசுவதை அப்படியே எழுதுவதைப் பேச்சு வழக்கு என்றும், பேசும் போது நாம் பயன்படுத்தும் கொச்சைச் சொற்களை நீக்கி அழகு தமிழில் எழுதுவதை எழுத்து வழக்கு என்றும் நாம் அழைக்கிறோம்.

1. அட மழ பெஞ்சிச்சு – பேச்சு வழக்கு

   அடை மழை பெய்தது – எழுத்து வழக்கு

2. என்ன ஆச்சி? - பேச்சு வழக்கு

   என்ன ஆயிற்று – எழுத்து வழக்கு

3. சட்ட இத்துப் போச்சி – பேச்சு வழக்கு

   சட்டை இற்றுப் போய் விட்டது – எழுத்து வழக்கு

4. உத்தரவு இல்லாம உள்ள வராதிய - பேச்சு வழக்கு

   உத்தரவு இன்றி உள்ளே வராதீர் – எழுத்து வழக்கு

5. ஒருவள் வந்தா - பேச்சு வழக்கு

   ஒரு பெண் வந்தாள் – எழுத்து வழக்கு

6. ஒனக்கு அவன்னா உசத்தி தான் - பேச்சு வழக்கு

   உனக்கு அவன் எப்போதும் உயர்வு தான் – எழுத்து வழக்கு

7. கண்ணாலத்துக்குக் கூப்பிடுவியா? - பேச்சு வழக்கு

   திருமணத்திற்கு அழைப்பாயா? – எழுத்து வழக்கு

8. கதவச் சாத்து, குளிருது - பேச்சு வழக்கு

   கதவைச் சாத்து குளிர்கிறது – எழுத்து வழக்கு

9. சீக்காய் போட்டுக் குளிச்சா நல்லது - பேச்சு வழக்கு

   சிகைக் காய் போட்டுக் குளிப்பது நலம் பயக்கும் – எழுத்து வழக்கு

10. சுவத்தில ஆணி அடிக்காதிக - பேச்சு வழக்கு

    சுவரில் ஆணி அடிக்காதீர் – எழுத்து வழக்கு

## 22. சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குதல்

தரப்படும் சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்க வேண்டும். அச்சொல் பொருள் பொதிந்த சொல்லாய் அமைய வேண்டும்.

1. நாற்றம், பூ, நாதர் - இச்சொற்களை இணைத்து வரும் புதிய சொற்களில் எது சரியானது எனக் கண்டறிக

   அ) நாற்றப்பூ

   ஆ) நாற்றம்

   இ) நாறும்பூநாதர்

   ஈ) நறும்பூநாதர்

   **விடை: ஈ) நறும்பூநாதர்**

2. தேன், துளி, நல்லது, கெடாது இச் சொற்களை இணைத்து புதிய சொற்களை உருவாக்குக.

அ) தேன் துளி

ஆ) நல்லது கெடாது

இ) துளித் தேன்

ஈ) தேன் துளி கெடாது, நல்லது

**விடை: ஈ) தேன் துளி கெடாது, நல்லது**

3. ஆழ், வயல், கடல், நாடு, விண், வளி – சொற்களை இணைத்துப் புதிய சொல்லை உருவாக்குக

அ) ஆழ்கடல்

ஆ) ஆழ்வயல்

இ) விண் வளி

ஈ) நாடு வளி

**விடை: அ) ஆழ்கடல்**

## 23. பொருத்தமான காலம் அமைத்தல்

இறந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் என்று காலம் காட்டும் குறியீடுகள் வாக்கியத்தில் இருக்கும். அவற்றைச் சரியாகப் புரிந்து கொண்டு விடைதர வேண்டும்.

1. சிறுகதையாசிரியர் நாளை கதை

அ) எழுதினார்

ஆ) எழுதுவார்

இ) எழுதுகிறார்

ஈ) எழுதிக்டகொண்டு இருக்கிறார்.

**விடை: ஆ) எழுதுவார்**

2. எஸ்.பி. பாலசுப்ரமணியம் நேற்று பாடல்

அ) பாடினார்

ஆ) பாடுவாா

இ) பாடுகிறார்

ஈ) பாடிக் கொண்டிருக்கிறார்

**விடை: அ) பாடினார்**

3. நடி எனும் சொல்லின் நிகழ்காலத்தைத் தேர்ந்தெடுக்க

அ) நடித்தான்

ஆ) நடிக்கிறான்

இ) நடிப்பான்

ஈ) நடிக்கான்

**விடை: ஆ) நடிக்கிறான்**

## 24. சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடுத்தல்

வினா சரியாக இருந்தால் விடை சரியாக இருக்கும். அதற்குச் சரியாக வினாச் சொல்லைத் தேர்வு செய்தல் அவசியம்.

1. சரியான வினாச் சொல் அமைந்த வாக்கியத்தைத் தேர்வு செய்க.

அ) கவிதை எழுதியது என்ன?

ஆ) தமிழ்நாட்டின் முதலமைச்சர் யார்?

இ) திருவள்ளுவர் என்றை எழுதினார்?

ஈ) இளங்கோ எவற்றைப் பிறந்தார்,

**விடை: ஆ) தமிழ்நாட்டின் முதலமைச்சர் யார்?**

2. சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு?

மக்கள் வாழ்வியலை உயர்த்தியதில் அறிவியலின் பங்கு

அ) ஏன்

ஆ) எப்படிப்பட்டது

இ) எதனால்

ஈ) எங்கு

**விடை: ஆ) எப்படிப்பட்டது**

## 25. சரியான இணைப்புச் சொல்லைத் தேர்ந்தெடுத்தல்

இரு வாக்கியங்களை இணைக்க ஆதலால், எனவே, அதனால், அது போல போன்ற இணைப்புச் சொற்களைப் பயன்படுத்துகிறோம். ஒரு வாக்கியம் இரு துண்டுகளாக இருக்க கீழே தரப்படும் நான்கு இணைப்புச் சொற்களில் ஒன்றைத் தேர்வு செய்ய வேண்டும்.

1. பெற்றோரிடம் உயிரைப் பெற்று உற்றாரிடம் அன்பைப் பெற்று இந்த உலகத்திற்கு வருகிறோம்… மற்றவர்களுக்குத் தருவது நம் கடமை.

அ) ஆகையால்

ஆ) இன்ன பிற

இ) ஆனால்

ஈ) இருக்கும்

**விடை: அ) ஆகையால்**

2. திருக்குறளைப் போன்ற உலகப் பொதுமறை வேறு எதுவுமில்லை… அதைப் பின்பற்றுவது நம் கடமை.

A. எனவே

B. இருப்பதால்

C. ஆனால்

D. அதனை

**விடை: யு) எனவே**

3. இன்று காலை முதல் மழை கொட்டி வருகிறது…இனி தண்ணீர்ப் பஞ்சம் பராது

A. எனவே

B. அப்படி

C. இப்போது

D. ஆனால்

**விடை: யு)** எனவே

## 26. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்த்தல்

**1. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க (மூத்த)**

அ) தமிழ்க் குடி ……..

ஆ) ……. மொழி நம் தமிழ் மொழி

இ) கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே ….... தோன்றிய மூத்த குடி நம் தமிழ்க்குடி

ஈ) …………… ஊரே யாவரும் கேளிர்

**2. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க (கல்வி)**

அ) ……………. கரையில, கற்பவர் நாள் சில

ஆ) கல்வியால் மட்டுமே …………. கரமுடியும்

இ) பிச்சைப் புகினும் …… நன்றே

ஈ) கற்க ………………

## 27. இருபொருள் தருதல்

இரு பொருள் தரும் சொற்கள் தமிழில் நிறைய உள்ளன. ஒரு சொல் தந்து அதற்கு இணையான இரு பொருள் தரும் இரு சரியான சொற்களைத்தேர்வு செய்ய வேண்டும்.

1. அக்கு – எலும்பு, கங்குமணி
2. அகண்டம் - எல்லாம், முழுவதும்
3. அகந்தை – கர்வம், செருக்கு
4. அகரம் - ஊர், முதல் எழுத்து
5. அகலம் - அளவு, மாயம்
6. அங்கணம் - முற்றம், மூன்றில்
7. அங்காடி - கூடை, கூலம்

8. அச்சம் - பீதி, பயம்

9. அசதி – களைப்பு, சோர்வு

10. அஞ்சுதல் - வெருவுதல், பயப்படல்

11. அஙஞர் - துன்பம், வருத்தம்

12. அட்டில் - அடுக்களை, மடைப்பள்ளி

13. அடங்குதல் - தணிதல், குறைதல்

14. அண்ணை – அறிவிலான், பேய்

15. அணு – நுட்பம், ஆய்வு

16. அதிசயம் - அற்புதம், வியப்பு

17. அம்பு – அத்திரம், தோணி

18. அயர்தல் - சோர்தல், தளர்தல்

19. அரிவாள் - கூர்வாள், இரும்பு

20. அருள் - இரக்கம், கருணை

21. அரைத்தல் - தேய்த்தல், அழித்தல்

22. அல்லி – குமுதம், ஆம்பல்

**மாதிரி வினா**

அவ்விடம் - இரு பொருள் தருக.

A. ஆங்கு, அவண்

B. கோட்டி, பிளிறல்

C. அணி, பிணி

D. ஈகை, இனிப்பு

விடை: யு) ஆங்கு, அவண்

## 28. குறில் நெடில் மாற்றம் - பொருள் வேறுபாடு

குறுகி ஒலிப்பது குறில் எனவும், நீண்டு ஒலிப்பதை நெடில் எனவும் அழைப்பர்.

1. குறில், நெடில் மாற்றம் அறிந்து பொருள் வேறுபாடு சரியானதைக் கண்டறிக. (சிலை – சீலை)

A. இறைவனின் திருவுரு – துணி

B. ஓவியம் - பாடல்

C. மண் - மழை

D. மறை – வேதம்

விடை: யு) இறைவனின் திருவுரு – துணி

2. தழை – தாழை பொருள் சரியாகப் பொருந்திய இணையத் தேர்க

A. இலை – மலர்வகை

B. மலர் - மடல்

C. புவி – பூமி

D. மண் - மணம்

விடை: னு) மண் - மணம்

## 29. கூற்று காரணம் - சரியா? தவறா?

**ஒரு கூற்று தரப்பட்டிருக்கும், அதற்குக் கீழ் ஒரு காரணம் தரப்பட்டிருக்கும்.**

A. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி

B. கூற்று சரி காரணம் தவறு

C. கூற்றுதவறு, காரணம் சரி

D. கூற்று, காரணம் இரண்டும் தவறு என அமையும்.

**சான்றாக**

**கூற்று:** சிலப்பதிகாரம் பிரபலமான அளவு வளையாபதியும் குண்டலகேசியும் மக்களிடம் சென்று சேரவில்லை.

**காரணம்:** அவற்றின் கதை மக்களுக்குப் புரியவில்லை

A. கூற்றும் காரணமும் சரி

B. கூற்று சரி காரணம் தவறு

C. கூற்று தவறு, காரணம் சரி

D. கூற்று, காரணம் இரண்டும் தவறு என அமையும்.

**சான்றாக**

**கூற்று:** சிலப்பதிகாரம் பிரபலமான அளவு வளையாபதியும் குண்டலகேசியும் மக்களிடம் சென்று சேரவில்லை.

**காரணம்:** அவற்றின் கதை மக்களுக்குப் புரியவில்லை

A. கூற்றும் காரணமும் சரி

B. கூற்று சரி, காரணம் தவறு

C. கூற்று தவறு, காரணம் சரி

D. இரண்டும் தவறு

விடை: யு) கூற்றும் காரணமும் சரி

## 30. கலைச் சொற்களை அறிதல்

வுழரஉா ளுஉசநநெ - தொடு திரை

ஐவெநசநெவ - இணையம்

யுசவகைஉயைட ஐவெநடடபைநஉந – செயற்கை நுண்ணறிவு

| | | |
|---|---|---|
| சுநளநயசஉா | – | ஆய்வு |
| ளுயவநடடவைந | – | செயற்கைக் கோள் |
| ீடயநெவ | – | கோள் |
| ந-டடைிசயசல | – | மின் நூலகம் |
| ஊாிளை | – | சில்லுகள் |
| ஊழளைரஅநச | – | நுகர்வோர் |
| ர்நசவையபந | – | மரபு |
| டுழபளைவைஉள | – | மொழியியல் |
| டுழசசல | – | சரக்குந்து |
| ஆநனயை | – | ஊடகம் |
| ீாழெடழபல | – | ஒலியியல் |
| ீயசயடிடந | – | உவமை |
| நுடழஉரவழைெ | – | பேச்சாற்றல் |
| ருெவைல | – | ஒற்றுமை |
| ளுவழசஅ | – | புயல் |
| புரனையஉெந | – | வழிகாட்டல் |
| ஐளெஉசipவழைெ | – | கல்வெட்டு |
| ஆயரௌஉசipவள | – | கையெழுத்துப் பிரதி |
| குழடமளஉசipவள | – | நாட்டுப்புறவியல் |
| யுஅடிவைழைெ | - | இலக்கு |
| ளுைெஉநசவைல | – | வாய்மை |
| ஏழறநட | – | உயிரொலி |
| நிபைசயிா | – | கல்வெட்டு |
| ீாழநெஅந | – | ஒலியன் |
| டீரன | – | மொட்டு |
| ர்நசடிள | - | மூலிகை |
| ஆடைடநவள | – | சிறுதானியங்கள் |
| புநநெ | – | மரபணு |
| ளுயபைந | – | ஞானி |
| டுநஒைஉழெ | – | பேரகராதி |
| னுழறடெழயன | – | பதிவிறக்கம் |
| ஏனைநழ ஊழகெநசநஉெந | – | காணொலி கூட்டம் |
| வுசநயளரசல | – | கருவூலம் |
| குழவெ | – | எழுத்துரு |

ளலடடயடிரள – அசை

சுாலஅந - இயைபுத் தொடை

ஆநவயிாழச – உருவக அணி

ளுைஅடைந – உவமை அணி

ஊழளெழயெவெ – மெய்யெழுத்து

ஊழளெநசளயவழைெ – உரையாடல்

யிைை டவைநசயவரசந – நவீன இலக்கியம்

வுாநளளை – ஆய்வேடு

ஆலவா – தொன்மம்

யுநளவாநவைைள – அழகியல்

துழரசயெடளைவ - இதழாளர்

யுசவ ஊசவைைை – கலை விமர்சகர்

**சான்று வினா**

நுவாெைை புசழரி என்பதன் கலைச் சொல் தருக

அ) இனக்குழு

ஆ) இனவரைவு

இ) வாழ்வு

ஈ) வரலாறு

**விடை: அ) இனக்குழு**

## 31. பொருத்தமான பொருளைத் தேர்வு செய்தல்

1. யாதும் ஊரே யாவரும் கேளிர் - என்ற சொற்றொடரின் பொருள் யாது?

அ) சகோதரத்துவம்

ஆ) வேற்றுமை

இ) பிரிவினை

ஈ) சுயம்

**விடை: அ) சகோதரத்துவம்**

2. இடுக்கண் வருங்கால் நகுக - இதில் இடுக்கண் என்பதென்ன?

அ) துன்பம்

ஆ) இன்பம்

இ) வியப்பு

ஈ) உணர்வு

விடை: அ) துன்பம்

## 32. சொற்களின் கூட்டுப் பெயர்கள்

**விலங்குகளின் இருப்பிடம்**

1. கோழிப் பண்ணை
2. ஆட்டுப் பட்டி
3. மாட்டுத் தொழுவம்
4. குதிரைக் கொட்டில்
5. யானைக் கூடம்

**செடி கொடி மரங்களின் தொகுப்பிடம்**

6. பூஞ்சோலை
7. பூந்தோட்டம்
8. வாழைத் தோட்டம்
9. வெற்றிலைத் தோட்டம்
10. தேயிலைத் தோட்டம்
11. கம்பங் கொல்லை
12. சோளக் கொல்லை
13. மாந்தோப்பு
14. முந்திரித் தோப்பு
15. சவுக்கு தோப்பு
16. தென்னந்தோப்பு
17. ஆலங்காடு
18. பலாத் தோப்பு
19. பனந்தோப்பு
20. வேலங்காடு
21. இலுப்பை மரத் தோப்பு

**பொருட்களின் தொகுப்பு**

22. மாட்டு மந்தை
23. ஆட்டு மந்தை
24. பசு நிரை
25. யானைக் கூட்டம்
26. வீரர் படை
27. சிறகுக் கட்டு
28. கற்குவியல்
29. சாவிக் கொத்து
30. திராட்சைக் குலை

**சரியான இணைத் தொடரைத் தேர்வு செய்க**

கூட்டுப் பெயரைக் குறிப்பிடுக.

அ) பூஞ்சோலை

ஆ) பூந் தோப்பு

இ) பூக்கொல்லை

ஈ) பூக்காடு

**விடை: அ) பூஞ்சோலை**

## 33. சரியான தொடரைத் தேர்ந்தெடுத்தல்

1. கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்
2. பாரத நாடு பழம் பெரும் நாடு
3. நல்லதே நடக்கும்
4. கெடுவான் கேடு நினைப்பான்
5. ஈதல் இசைபட வாதழ்தல்
6. தர்மத்தின் வாழ்வு தன்னை சூது கவ்வும் தருமமே மறுபடி வெல்லும்
7. தகுதி உடையன தள்ளாமை வேண்டும்
8. நல்லவே எண்ணல் வேண்டும்
9. தொழிற்கல்வி வாழ்க்கைக்கு அவசியமான ஒன்று
10. ஊழ் வினை உறுத்து வந்து ஊட்டும்
11. நெற்றிக் கண் திறப்பினும் குற்றம் குற்றமே என்றார் நக்கீரர்
12. கல்வி கண் போன்றது

**கீழ்காணும் தொடர்களில் (ஒரு – ஓர்) சரியாக அமைந்த தொடர் எது?**

A. ஓர் ஊஞ்சல் ஆடுகிறது

B. ஒரு அம்மா உணவூட்டுகிறார்

C. ஓர் கனவான் சாலையில் நடந்தான்

D. ஒரு இலையில் உணவு படைத்தனர்

## 34. பிழைகளைத் திருத்தி எழுதுக

1. நான் மகான் அல்ல (பிழை) நான் மகான் அல்லன் (திருத்தம்)
2. தமிழரசி உணவு பரிமாறினான்
3. தாமரைப் பூத்த தடாகம்
4. பெயர் பலகை உடைந்தது
5. தான் செய்த தவற்றை உணர்த்துக் கொண்டார்
6. அதற்கு கொடுத்தாயா?

7. அழகியக் கலைகள்
8. நான்கு எருது ஒற்றுமையாய் நடந்தது
9. பல வீரர்கள் மடிந்தனர்
10. நான்கோவிலுக்குச் சென்றோம்

## 35. சொல் பொருள் - பொருத்துக

**திசைச் சொற்களைப் பொருத்துக**

A. அரபு – 1. ஜாங்கிரி

B. வடமொழி – 2. அல்வா

C. பாரசீகம் - 3. ஜலம்

D. உருது – 4. ஈது

விடை: யு-1, டீ-3, ஊ-1, னு-4

## 36. ஒருமை – பண்மை பிழைகளை நீக்குதல்

ஒன்றைக் குறிப்பது ஒருமை.

ஒன்றிற்கு மேற்பட்டவற்றைக் குறிப்பது பன்மை.

இலை, மரம், செடி, கொடி – ஒருமை

இலைகள், மரங்கள், செடிகள், கொடிகள் - பன்மை

எழுவாய் ஒருமையில் தொடங்கினால் பயனிலையும் ஒருமையில் முடிய வேண்டும்

1. இது என் உடையல்ல
2. இவை மாடுகள் அன்று
3. மாடு ஓடின
4. பூக்கள் பூத்தார்
5. பசு புல் மேய்ந்தனர்

## 37. பத்தியிலிருந்து வினாவிற்கான சரியான விடையைத் தேர்வு செய்தல்

**மாதிரிக் கட்டுரை**

உலகை வெல்வது சாதனையா? இல்லை! உண்மையில் தன் உடலை, தன் தடையை வெல்வதே சாதனை! இயற்கை தந்த சோதனையைத் தன் தளரா மனஉறுதியால் தீரத்துடன் எதிர்கொண்ட மாற்றுத்திறனாளிகள் தங்கள் விடாமுயற்சியாலும் தீவிரமான பயிற்சியாலும் நம்மை மலைக்க வைக்கிறார்கள். சக்கர நார்காலியிலிருந்தபடி மனம் நினைத்த வசந்த தினத்தை வசப்படுத்தித் தன் கனவை நிசப்படுத்தியிருக்கிறார்கள்.

‘‘வலி தந்த வலிமையால் வாழ்வுப் பயணத்திற்குப் புதிய வழி கண்டவர்கள் நாங்கள்! எங்கள் குறைகளை நினைத்து ஒருநாளும் வருந்தியதில்லை, எங்கள் நரம்புகளிலும் நம்பிக்கையுள்ளதால் குறையொன்றும் இல்லை! எங்களுக்குத் தேவை அன்பும் ஆதரவும்தானேயொழிய வேறொன்றுமில்லை’’ என்று நெஞ்சுறுதியோடு தடைகளை உடைத்து ஒவ்வொரு துறைகளையும் மார்தட்டிக்காட்டிய மாற்றுத்திறனாளிகளை நாம் போற்றிப் புகழ வேண்டாமா! ‘‘என்னிடமிருந்து எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ளுங்கள், நான் வெற்றியடைய என் நம்பிக்கை மட்டுமே எனக்குப் போதும்’’ என்று சொன்னார் மாவீரன் நெப்போலியன், அதே நெஞ்சுறுதியை மாற்றுத்திறனாளிகளிடம் நம்மால் காணமுடிகிறது.

**வாழ்ந்து காட்டிகள்**

முடக்க நினைத்த உடலின் தசைகளை மூச்சுப்பிடித்துக் கடக்க நினைப்பதுதான் உண்மையில் சாதனை! சிறகு பூட்டிச் சாதனைவானில் பறக்கும் மாற்றுத்திறனாளிகள் பலநேரங்களில் வியக்கவும், இன்னும் ஒருபடி மேலேறி நம்மை இயக்கவும் வைக்கிறார்கள். ஊக்கம் ஒன்றே ஆக்கம் தரும்! என்று உணர்ந்தவர்கள் மாற்றுத் திறனாளிகள். உள்ளுக்குள் உற்சாகம் பீறிட்டெழுந்தால் சோர்வும் தள்ளி நிற்கும் என்ற உண்மையைப் புரிந்தவர்கள் மாற்றுத்திறனாளிகள்!

**வென்ற மனங்கள்**

கோடைமழை பெய்து கோபுரங்கள் நனைவதுபோல் சோக மழையில் நனையும் வேடிக்கை மனிதர்களுக்கு மத்தியில், தங்கள் சோகத்தையும் மாற்றி உலகத்தின் சாதனைப் பக்கங்களையும் மாற்றிக்காட்டிய மாற்றுத் திறனாளிகள் மகத்தானவர்கள். ‘‘எங்கே வாழ்க்கை தொடங்கும் அது எங்கே எவ்விதம் முடியும், இதுதான் பாதை, இதுதான் பயணம் என்பது யாருக்கும் தெரியாது, பாதையெல்லாம் மாறிவரும், பயணம் முடிந்துவிடும், மாறுவதைப் புரிந்துகொண்டால் மயக்கம் தெளிந்து விடும்’’ எனும் கவியரசு கண்ணதாசன் வரிகளுக்கு ஏற்ப உலகம் மாறுவதைப் புரிந்து கொண்டு தங்கள் முயற்சியால் மாற்றுத்திறனாளிகள் சாதனையாளர்களாக மாறிவருகின்றனர். இவ்வுலகில் முழுமையானவர்கள் என்று யாரும் இல்லை. தங்கள் குறைகளை நிறைவுகளாக்கி முழுமையை நோக்கிப் பயணிக்கும் வசந்தகால அனுபவமே இந்த வாழ்க்கை என்று புரிந்து கொண்ட மாற்றுத்திறனாளிகள் சாதனையாளர்களாக மாறுகிறார்கள்.

**ஊக்கத்தால் தாக்கமேற்படுத்தியவர்**

தூக்கிவிடும் கரங்கள் அருகில் இருந்தால், யாருக்கும் எந்தக் குறையும் தெரியப்போவதில்லை. கையிழந்தும், நம்பிக்கை இழக்காத மாற்றுத் திறனாளிகள் நம் போற்றுதலுக்குரியவர்கள். கண்களிருந்தும் மற்றவர்கள் துன்பங்களைப் பாராதவர்களுக்கு மத்தியிலே கழுத்துக்குக் கீழே உறுப்புகள் செயல்படாதபோதும் சக்கர நாற்காலியில்

அமர்ந்தபடி நூற்றுக்கணக்கான மாற்றுத் திறனாளிகளின் திறன்களை ஊக்கப்படுத்தி, அவர்களைக் காக்கும் அமைப்பான ‘அமர்சேவா’ சங்கத்தைத் தென்காசிக்கு அருகில் உள்ள ஆயக்குடியில் நடத்தி நாடிவந்தோருக்குத் தேடிச் சென்று உதவிடும் ராமகிருஷ்ணன் வாழ்ந்து காட்டியல்லாமல் வேறு யார்?

**முடங்கிக் கிடப்பதா வாழ்க்கை?**

முன்றேுபவர்கள் ஒரு நாளும் வீட்டிற்குள் முடங்கிக் கிடப்பதில்லை! அவர்கள் மூச்சுப்பிடித்து முன்னேறிக்கொண்டே இருக்கிறார்கள். தடுமாறி விழுந்தவர்ளையும், தடம் மாறிச் சென்றவர்களையும் நேர்வழிப்படுத்தும் பேராசிரியர்களாக உலகப் புகழ் பெற்ற மாற்றுத்திறனாளிகள் இருக்கிறார்கள் என்பதற்குச் சான்று பேராசிரியர் ஸ்டீவன் ஹாக்கிங். இங்கிலாந்திலே பிறந்து ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகக் கல்லூரியில் கற்று எல்லோரையும்போல் இயல்பாய் வாழ்ந்துகொண்டிருந்தபோது 21 வயதில் இயக்கு நரம்பணு நோயால் பாதிக்கப்பட்டுக் கைகால்கள் செயலிழந்து வாய்பேசமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டார். இனி என்ன செய்யப்போகிறோம்? என்று மனம் தளர்வுற்றாலும், மனவுறுதியால் அதைப் புறந்தள்ளினார். கணினியைப் பயன்படுத்தி அவர் சொல்வதை மாணவர்கள் புரிந்து கொள்ளுமளவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தித் தன் குறையை அவர் துணிச்சலாக எதிர்கொண்டார். உடல் குறையை ஒரு பொருட்டாக எண்ணாமல் கடும் முயற்சி செய்து முனைவர் பட்டம் பெற்றார். உலக அளவில் பேசப்படும் ‘‘காலத்தின் ஒரு வரலாற்றுச் சுருக்கம்’’ எனும் நூலை எழுதிப் பெரும் பாராட்டைப் பெற்றார். இயற்பியல் ஆய்வுகளுக்காக உலகின் பல நாடுகளுக்குப் பயணிக்க அவருக்கென்று வடிவமைக்கப்பட்ட போயிங்க் விமானத்தில் பயணித்து ஆய்வுச் சொற்பொழிவுகளை வழங்கினார். என் வாழ்வின் இலக்கு விண்வெளிப் பயணம் மேற்கொண்டு நிலவைச் சுற்றிவருவதுதான் என்று மிகத் துணிச்சலாகக் கூறினார். உடலின் குறையை மனதில் கொள்ளாமல் ஒருநாளைக்கு பதினெட்டு மணிநேரம் உழைத்து 19 ஆய்வுநூல்களை உருவாக்கினார். ‘‘நடந்தால் நாடெங்கும் உறவு, படுத்தால் பாயும் பகை’’ எனும் சொல்வடையைக் கிராமங்களில் சொல்வார்கள். பேராசிரியர் ஸ்டீவன் ஹாக்கிங் தேனீயைப் போல் உலவிய அறிவியல் விஞ்ஞானி!

**பீறிட்டெழுந்த மாற்றுத்திறன்**

உலகின் மிகச் சிறந்த இசைமேதையான லுடுவிக் வான் பேத்தோவன் பியானோ இசைக்கலைஞராகத் தொடக்கத்தில் அறியப்பட்டார். புகழ்பெற்ற் இசையமைப்பாளராக அவர் உருவான காலத்தில் 26-வது வயதில் அவர் செவித்திறனை முற்றிலும் இழந்தார். இழந்த செவித்திறன் குறித்து அவர் வருந்தினார். தற்கொலை செய்துகொள்ளும் எண்ணம் கூட வந்தது. அவரது நண்பர்கள் தந்த ஊக்கத்தின் உதவியால் அதிலிருந்து மீண்டு இசையில் மூழ்கினார். உலகப் புகழ்பெற்ற நைன்த் சிம்பனி, பயலின் நோட்ஸ்கள்

ஆகியவற்றை உருவாக்கினார். அவரது இறுதி ஊர்வலத்தில் இருபதினாயிரம் பேர் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர். ஒரு திறன் குறைந்தால் மாற்றுத்திறன் உள்ளுக்குள்ளிருந்து பீறிட்டெழுந்தே தீரும் என்பதற்குச் சான்று பேத்தோவன்.

**நம்பிக்கையால் சிகரம் எட்டியவர்**

கைப்பந்தாட்ட வீரராகத் திகழ்ந்த அருணிமா சின்கா ஒரு தொடர்வண்டிப் பயணத்தின் போது ஓடும் வண்டியிலிருந்து திருடர்களால் தூக்கி எறியப்பட்டு இடது காலைத் தொடர்வண்டியின் சக்கரங்களில் இழந்தார். கால்களை இழந்தாலும் நம்பிக்கையை அவர் இழக்கவில்லை. மனம் தளராமல் ஒற்றைக் காலோடு மத்தியப் பாதுகாப்புப் படையில் தலைமைக் காவலரானார். எவரெஸ்ட் சிகரத்தில் ஏறியே தீருவேன்! என்று உடலை வருத்திக் கடும் முயற்சி செய்து 2013-ம் ஆண்டு மே மாதம் 21 அன்று அருணிமா சின்கா எவரெஸ்ட் சிகரத்தில் கால்பதித்து இந்திய தேசியக்கொடியை ஏற்றினார். எவரெஸ்ட் சிகரத்தில் கால்வைத்த இந்தியாவின் முதல் மாற்றுத்திறன் சாதனையாளர் என்ற பெயர் பெற்றார். எண்ணத்தில் திண்ணமிருந்தால் எவரெஸ்ட்டும் எட்டும் தூரம் தான் என்று காட்டிய இவருக்கு இந்திய அரசு 2015-ல் பத்மஸ்ரீ பட்டம் வழங்கிப் பாராட்டியது.

**தடையைத் தாண்டிய சாதனையாளர்கள்**

சிறுவயதில் வந்த மர்மக் காய்ச்சலால் பேசும் திறனையும் கேட்கும் திறனையும் இழந்த ஹெலன் ஹெல்லர் தடையை வென்று சைகை மொழியைக் கற்றுக் கொண்டு சிறந்த சிந்தனையாளராக, பலநூல்களை எழுதிய எழுத்தாளராக நாற்பது நாடுகளுக்குப் பயணித்த சொற்பொழிவாளராகத் தன்னை மாற்றிக்கொண்டார்.

புகழ்பெற்ற நடனக்கலைஞரான சுதாசந்திரன், 17 வயதில் விபத்தில் சிக்கி ஒரு காலை இழந்தார். ஆனால் நம்பிக்கை இழக்காமல் செயற்கைக் கால் மாட்டி நடக்கத் தொடங்கினார். தீவிர முயற்சியாலும் பயிற்சியாலும் மீண்டும் நடனமாடத் தொடங்கினார். இன்றும் பல தொலைக்காட்சி நாடகங்களில் நடத்து மகத்தான மாற்றுத் திறனாளியாகச் சாதித்து வருகிறார்.

தமிழ்நாட்டில் பிறந்த மாற்றுத்திறன் பெற்ற தடகள வீரரான மாரியப்பன் தங்கவேலு, ரெயோடிஜெனிராவில் நடைபெற்ற பாரா ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்று உயரம் தாண்டுதலில் டி 42 பிரிவில் தங்கப்பதக்கம் பெற்றார்.

இளமைக் காலத்தில் கண்பார்வை இழந்த கவிஞர் ஜான்மில்டன் ‘இழந்த சொர்க்கம் மீண்ட சொர்க்கம்’ எனும் உலகப் புகழ்பெற்ற படைப்புகளை இயற்றினார்.

கற்கும் திறனற்றவர் என்று பள்ளியை விட்டு வெளியேற்றப்பட்ட தாமஸ் ஆல்வா எடிசனை ஊக்கப்படுத்தி அவருக்குக் கல்வியைக் கற்றுத்தந்து அவரை ஆய்வாளராக்கியதில் அவர் தாய் நான்சி எடிசனுக்குப் பங்குண்டு. மூளை வளர்ச்சித்

திறனற்றவா் என்று முத்திரை குத்தப்பட்ட எடிசன், தன் மாற்றுத்திறனால் ஆயிரமாயிரம் கண்டுபிடிப்புகளைக் கண்டறிந்த ஆய்வறிஞராகத் திகழ்ந்தார்.

தொலைபேசியைக் கண்டுபிடித்த அலெக்ஸ்சாண்டர்கிரகாம்பெல் சிறு வயதில் கற்பதில் ஆர்வமற்றவராகவே இருந்தார். அவரது தாயாரும் அவரது துணைவியாரும் மாற்றுத்திறனாளிகள், அவர்கள் தந்த ஊக்கத்தால் உலகப்புகழ் பெற்ற ஆய்வறிஞராகத் திகழ்ந்தார்.

**நம்மால் முடியாவிட்டால் யாரால் முடியும்?**

"இப்போது முடியாதென்றாதல் எப்பொது முடியும்? நம்மால் முடியாதென்றால் யாரால் முடியும்?" எனும் தன்னம்பிக்கை வாசகம்தான் அணுகுண்டுத் தாக்கதல்களால் சின்னா பின்னமாக மாற்றப்பட்ட ஜப்பான் நாட்டை உயர்த்திய வாசகம். அந்தத் தன்னம்பிக்கைதான் எண்ணற்ற மாற்றுத் திறனாளிகளைச் சாதனையாளர்களாக்கி உலகை மாற்றும் கண்டுபிடிப்புகளைக் கண்டுபிடிக்குமளவு ஆக்கத்தையும் ஊக்கத்தையும் தந்துள்ளது. அள்ளக் குனிபவர்களுக்கு இந்த உலகம் வாரிவாரி வழங்குகிறது. கலங்கி நிற்கும் மனிதர்களுக்குக் கலங்கரை விளக்கே இந்த சமூகம்தான். மாற்றுத் திறனாளிகளின் சாதனைகளை ஊக்கப்படுத்துவதும் அவர்கள் தளரும்போது தட்டிக் கொடுப்பதும்தான் நாம் செய்யவேண்டியது. வாழ்வு வளமாக நாம் செய்யவேண்டியது அவர்களின் தாழ்வு மனப்பான்மையை நீக்குவதுதான். "நித்தமும் நிம்மதி, அனுதினமும் ஆனந்தம்" என்றிருக்க எப்போதும் மனதை உற்சாகமாக வைத்துக்கொள்வது ஒன்றுதான் ஒரேவழி! விழுவதன் வலியை அழுவதன் மூலமாக அல்ல, எழுவதன் மூலமாகத்தான் நாம் காட்டவேண்டும். மாற்றுத் திறனாளிகள் எழுவதற்காகப் பிறந்தவர்கள்.

**வினாக்கள்**

1. வலி தந்த வலிமையால் வாழ்விற்கு புதிய துடக்கம் கண்டவர்கள் யார்?
2. வெற்றியடைய எது மட்டும் போதுமானது?
3. எதைப் புரிந்து கொண்டால் மயக்கம் தெளிந்துவிடும்?
4. நம்பிக்கையால் சிகரத்தைத் தொட்டவர்கள் யார்?
5. தடையைத் தாண்டிய சாதனையாளர்கள் யார்?

**கட்டுரை வரைதல்**

கட்டுரை வரைதல் ஒரு கலை. ருீளுநு தேரிவிலும் வுீளுஊ தோ்விலும் கட்டுரைத் தாள் முக்கிய இடம் பிடிக்கிறது. நாள்தோறும் செய்தித் தாள்கள், வார, மாத இதழ்கள் வாசிப்பதன் மூலமும், தொலைக்காட்சி விவாதங்களைக் கவனிப்பதன் மூலமும் ஒரு நிகழ்வின் இரு பக்க நியாயங்களை நம்மால் புரிந்து கொள்ள முடியும்.

**இரு திறன்கள்**

தேர்வு எழுதும் தேர்வரின் எழுத்துத் திறன், ஒரு நிகழ்வைச் சமூகவியல், உளவியல், அரசியல் பார்வையில் எவ்வாறு பார்ப்பது எனும் பகுப்பாய்வுத் திறன் ஆகியவற்றைத் சோதிக்கும் தாளாகக் கட்டுரைத் தாள் அமைகிறது.

1. பரவலாக வாசிப்பு மிகச் செறிவாக எழுத வைக்கும்
2. எந்தத் தலைப்பு தரப்பட்டாலும் அத் தலைப்பைச் சரியாகப் புரிந்து கொண்டு தத்துவார்த்தமாக அதன் உட் கருத்துகளை அலசி ஆராய்ந்து வரிசைக் கிரமமாய் கட்டுரையாக எழுதப் பயிற்சி பெற் வேண்டும்.
3. உலக வரலாறு, உலக நாடுகளின் புவியியல் கூறுகள், உலக அரசியல் இவற்றைப் புரிந்து கொள்ளாமல் ஒரு சிக்கலின் ஆணிவேரை நம்மால் அடைய முடியாது.
4. எளிய இலக்கணப் பயிற்சி, சரியான சொற்களைப் பயன்படுத்தும் பயிற்சி, பிளையில்லா வாக்கியப் பயிற்சி, நிறுத்தற்குறிகளைப் பயன்படுத்தும் பயிற்சி ஆகியன கட்டுரைத் தாளில் சிறப்பாய் வெற்றி பெற அவசியமான கூறுகள்.
5. அகராதியைத் தினமும் பயன்படத்துவதன் மூலம் ஒரே பொருள் தரும் பல்வேறு சொற்களை அறிந்து கொள்ளவும் அவற்றைக் கட்டுரைத் தாளில் பயன்படுத்தவும் முடிகிறது.
6. கட்டுரை எழுதும் முன் தலைப்பு, உட்தலைப்புகள், வரிசைக் கிரமமாய் நாம் சொல்ல வேண்டிய ருத்துகள், மேற்கோள்கள் அதன் வரைவுச் சட்டத்தை உருவாக்க வேண்டும்.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | ஒருபொருள் தரும் பலசொற்களைக் கூறு. | K4 | CO1 | PO4 |
| 2 | அலுவல் சார்ந்தகலைசொற்களைவிளக்கமாகஎழுது. | K5 | CO2 | PO5 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | பெயரெச்சம் என்றால் என்ன? | K3 | CO4 | PO1 |
| 4 | பேச்சுவழக்குஎழுத்துவழக்குவேறுபடுத்துக. | K5 | CO2 | PO2 |
| 5 | சந்திப்பிழைகள் மற்றும் மரபுப் பிழைகளைஎவ்வாறுநீக்கலாம்? | K3 | CO4 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | வினைமுற்று,வினையெச்சம்,யெரெச்சம் விணையாலணையும் பெயர் இவற்றைஉருவாக்குக. | K2 | CO5 | PO4 |
| 2 | இணைப்புசொல் என்றால் என்ன? இணைப்புசொல்லைசரியாகபயன்படுத்தஎன்னசெய்யலாம்? | K3 | CO3 | PO6 |
| 3 | எவ்வகைவாக்கியம் எனகண்டறிந்துஎழுதும் முறைகளைஎடுத்தெழுதுக. | K2 | CO5 | PO5 |
| 4 | போட்டித் தேர்வுகளுக்கானதமிழ் வினாவங்கிகுறித்துகட்டுரைக்க. | K5 | CO3 | PO6 |
| 5 | இருவினைகளின் பொருள் வேறுபாடுஅறியும் முறைகளைஎழுதுக. | K3 | CO3 | PO3 |

| Reference Books |
|---|
| **தமிழ் இலக்கிய வரலாறு, சோம. இளவரசு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.** |
| **பன்முக நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, கா. வாசுதேவன், தேவன் பதிப்பகம், திருச்சிராப்பள்ளி.** |

| | |
|---|---|
| | தமிழ் இலக்கிய வரலாறு, அடைக்கலசாமி, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை |
| | தமிழ் இலக்கிய வரலாறு, மு.வரதராசனார், சாக்திய அகாதெமி, சென்னை |

| Related Online Contents [MOOC, SWAYAM, NPTEL, Websites etc.] |
|---|
| Web Sources |
| • Tamil Heritage Foundation- www.tamilheritage.org <http://www.tamilheritage.org><br>• Tamil virtual University Library- www.tamilvu.org/ library http://www.virtualvu.org/library<br>• Project Madurai - www.projectmadurai.org.<br>• Chennai Library- www.chennailibrary.com <http://www.chennailibrary.com>.<br>• Tamil Universal Digital Library- www.ulib.prg <http://www.ulib.prg>.<br>• Tamil E-Books Downloads- tamilebooksdownloads. blogspot.com<br>• Tamil Books on line- books.tamil cube.com<br>• Catalogue of the Tamil books in the Library of British Congress archive.org<br>• Tamil novels on line - books.tamilcube.com |

| Expected Course Outcomes | | |
|---|---|---|
| On the Sucessful completion of the Course,Students will be able to | | |
| இப்பாடத்தைக் கற்பதால் பின்வரும் பயன்களை மாணவர்அடைவர் | | |
| CO 1 | சங்க இலக்கியம் தொடங்கி, இக்கால இலக்கியம் வரை பல்வேறு இலக்கிய வகைகளின் அமைப்புமுறைகளைக் கற்பர் | |

| | | |
|---|---|---|
| | | K3, K4 |
| CO 2 | **தமிழ்  இலக்கிய வகைகளின் பாடுபொருள், உள்ளடக்கச் செய்திப்போக்குகளைக் அறிந்து கொள்வர்.** | K2, K3 |
| CO 3 | **பல்வேறு இலக்கியப் படைப்பாளிகளின் படைப்புத் திறனையும், படைப்புக் கோட்பாடுகளையும் மாணவர்கள் அறிவர்.** | K5 |
| CO 4 | **போட்டித் தேர்வுகளை எதிர்கொண்டு வெற்றிபெற்று அரசுப்பணி பெறுவர்** | K3 |
| CO 5 | **தமிழின் இலக்கிய வளங்களைஅறிந்து கொள்வர்** | K2 |
| K1 - Remember; K2 - Undestand; K3 - Apply; K4 - Analyze; K5 - Evaluate; K6 - Create | | |

| | PO 1 | PO 2 | PO 3 | PO 4 | PO 5 | PO 6 | PO 7 | PO 8 | PO 9 | PO 10 | PSO 1 | PSO 2 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **CLO1** | **3** | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 | **1** | **3** |
| **CLO2** | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 2 | 3 |
| **CLO3** | 3 | **3** | 2 | 3 | 2 | 3 | 2 | 2 | 3 | 2 | **3** | **2** |
| **CLO4** | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | **2** | **3** |
| **CLO5** | 2 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 |

************